


# யாதுமானவன்

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமானவன்

அருட்பணி
மா.றேஜிஸ் இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | |
|---|---|
| பெயர் | : யாதுமானவன் |
| ஆசிரியர் | : அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம் |
| முதற்பதிவு | : டிசம்பர் 2020 |
| மொழி | : தமிழ் |
| பக்கங்கள் | : 184 + ix |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| அச்சுப்பதிப்பு | : அன்னை அச்சகம், யாழ்ப்பாணம். |
| விலை | : 300/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

"நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோவா. 15:4).

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம் அவர்களின் உழைப்பில் உருவான "யாதுமானவன்" என்னும் நூல் வெளி வருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவரின் ஆன்மீக பணி மென்மேலும் சிறக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

இவ் உலகமே கொரோனா என்கின்ற கண்ணுக்குத் தெரியாத தொற்று நோயின் தாக்கத்தினால் அனைத்து உலக, ஆன்மீக செயற்பாடுகளும் முடங்கிப் போன நிலையில் மக்கள் இறைவனை நோக்கி திரும்ப ஆரம்பித்து விட்டார்கள். வெளி ஆன்மீக செயற்பாடுகளில் கலந்து கொள்ள முடியாத நிலையிலும் தங்களின் உள்ளங்களிற்கு சென்று இறைவனை தேட முயற்சிக்கின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் அருட்தந்தை மா.றேஜிஸ்இராசநாயகம் அடிகளாரின் இந்நூல் இத்தகைய தேடலில் ஈடுபடுகின்றவர்களுக்கு உதவி புரிகின்றதாக இருக்கின்றது. சாதாரண மக்களும் புரிந்து கொள்கின்ற விதத்தில், தனது சொந்த அனுபவங்களையும் பகிர்ந்து அமைத்திருப்பது இந் நூலின் சிறப்பம்சமாகும்.

இவரையும், இவரது ஆன்மீகப் பணிகளையும், இவரின் அனைத்து முயற்சிகளையும் இறைவன் தொடர்ந்தும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,

+ Gnanapragasam

..............................................................................

**பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்,**
**யாழ். ஆயர்.**

Rt. Revd. Dr. Justin B. Gnanapragasam, Bishop of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



"யாதுமானவன்" என்ற தலைப்பிட்டு எல்லாம் வல்லவரான இறைவனிடம் மனிதனை மீண்டும் அழைத்துச் செல்லும் நோக்குடன் நூலாசிரியர் தனது ஆக்கங்கள் ஊடாக இந்நூலை அணி செய்கின்றார். இந்நூலின் ஆக்கங்களை அணிசெய்வது விவிலிய வார்த்தையும் நூலாசிரியரின் இறை அறிவுடன் இணைந்த இறை அனுபவமுமே.

இன்றைய உலகில் மனிதன் வாழ்வின் துயரங்களுக்கும் உலகின் நவீனங்களுக்கும் சிக்குண்டு திசை தடுமாறித் தவிக்கின்றான். மனித மாண்பிழந்து, மனித விழுமியங்களைத் தொலைத்த நிலையில், அதுதான் வாழ்வு என்று தனது போக்குகளை நியாயப்படுத்தி வாழ்கின்றான். மின்னுவதுதான் பொன் என்பதுபோல மனிதன் தனது விழுமியங்களை மாற்றி அமைத்து விட்டான். இந்நிலை இறை-மனித உறவு அறுந்திட்டதன் ஒரு வெளிப்பாடாகும்.

இளைஞர் உலகில் உள்ள எல்லா உறவுகளையும் விட நட்புத்தான் பெரியது என நம்புகின்ற காலம் இது. நன்மை, தீமையைக் கருத்தில் கொள்ளாது நட்பை வளர்க்கின்ற காலம் இது. அத்தகைய இளைஞருக்கு வழிகாட்டியாக சில ஆக்கங்கள் இந்நூலை அணி செய்கின்றன. இயேசுவின் வாழ்வின் பாதையில் பயணிக்க இயேசுவின் வாழ்வையும், வல்லமையையும், இரக்கத்தையும் வெளிக்கொணர்ந்து, நமது வாழ்வுப் பாதைக்கு ஊக்கிகளாக இந்நூலின் ஆக்கங்கள் இந்நூலை அணி செய்கின்றன. ஒவ்வொரு ஆக்கத்தின் உட்பொருளையும் இலகுவாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் உப தலைப்புக்களும் இந்நூலை அணி செய்கின்றன.

இறைவார்த்தையை முதன்மைப்படுத்தி, அத்துடன் அறிஞர்களின் அனுபவ வார்த்தைகளையும் இணைத்து, வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுக்களுடன் ஆக்கங்கள் அமைந்திருப்பதும் இந்நூலை அணி செய்கின்றது.

மனித வாழ்வில் உண்மையான தேடலை மேற்கொண்டு, வாழ்வை இறைவழியில் அர்த்தமுள்ளதாக்கிட இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது எனது கருத்தாகும். நூலாசிரியருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக் களும்!

நட்புடன்

**சுவாமி த.ஜெ.கிருபாகரன்**

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப அபார வளர்ச்சிகளுள் மூழ்கிப்போயிருக்கும் இன்றைய மனிதன், அனைத்தையும் தன் கைக்குள் அடக்கி விட்டதாகக் குதூகலிக்கிறான். வரவேற்கத்தக்கதுதான்! அறிவின் வளர்ச்சியிலே ஏறி நிற்கும் மனிதன், ஞானத்தை இழந்தவனாய் சிந்திக்கின்றான். அனைத்திற்கும் மேலான ஒரு சக்தி உண்டு என்பதை மறந்து மீண்டும் செயல்படத் தொடங்கிவிட்டான். இதனால், இறைவன் இல்லை, இறைவனுக்குக் கொடுப்பதற்கு நேரமில்லை என்ற எண்ணத்தோடு வாழ்கின்றான். இதனால்தானோ என்னவோ கண்ணுக்கே தெரியாத நுண்ணுயிர் கோவிட் 19 மனித குலத்துக்கே இன்று சவால்விட்டு மனிதனை நிலைகுலைய வைத்துள்ளதோ என எண்ணித் தோன்றுகிறது.

பயத்தினால் தூண்டப்பட்டு பலர் இன்று இறைவனிடம் ண்டியிட்டாலும்கூட, மனித இதயத்தின் அடி ஆழத்தில் இறை உறவின் அவசியம், அவ் உறவிலிருந்து மலரும் விழுமியங்களான அன்பு, நீதி, இரக்கம், புரிந்துணர்வு என்பன அருகிய நிலையே காணக்கிடக்கின்றன.

எனவே, மனித வாழ்வுக்கு எல்லாமே இறைவன்தான், அவனின்றி அணுவும் அசையாது என்ற பதத்தின் பொருளை உள்ளடக்கி, மனிதனின் ஒவ்வொரு அசைவிலும் உணர்விலும் அவனுக்கு யாதுமாய் இருந்து அவனை வாழ்வித்து, அவனுக்கு வழிகாட்டி, அவனது வாழ்வை ஒளிர்விக்கும் இறைவன் என்னும் அர்த்தத்தில் யாதுமானவன் என்ற தலைப்பில் இந்நூலை வெளியிட விரும்பினேன். விவிலியக் கருப்பொருளில் வெவ்வேறு இடங்களில் நான் ஆற்றிய உரைகள், வெவ்வேறு கத்தோலிக்க பிரசுரங்களில் வெளியான எனது ஆக்கங்கள் சிலவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளியாகின்றது.

எனது ஆக்கங்களை இப்படி ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்னும் எண்ணக்கருவை என் மனத்தில் வைத்த அருட்பணி.யே.திருச்செல்வம் அ.ம.தி அவர்களுக்கும், இந்நூலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை வழங்கி எனக்கு ஊக்கமளிக்கும் எமது பேரன்பிற்கும் பெரு மதிப்பிற்குமுரிய யாழ். ஆயர் பேரருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், இந்நூலுக்கு அணிந்துரை வழங்க வேண்டுமென்று கேட்டபோது இன்முகத்துடன் சம்மதித்து அணிந்துரை வழங்கிய அருட்பணி.த.ஜெ.கிருபாகரன் அவர் களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இந்நூல் அழகாக வரவேண்டும் என்பதற்காக ஆக்க பூர்வமான பல ஆலோசனைகளைத் தந்து பெரும் பங்காற்றிய திரு.S.A. அழகராசா அவர்களுக்கும், அன்னை அச்சகத்தாருக்கும், அழகிய அட்டைப்படம் வடிவமைத்துத்தந்த திரு.அ.பஸ்ரியன் அவர்களுக்கும், இந்நூல் வெளிவர நிதியுதவி மற்றும் ஏனைய அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி நவில்கின்றேன்.

மா.றேஜிஸ் இராசநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 01. | பொருட்செல்வத்தைத் தேடி அருட்செல்வத்தை இழப்பதா? | 01 |
| 02. | நிறைவாழ்வை நோக்கி... | 05 |
| 03. | நவீன சிலை வழிபாடு | 10 |
| 04. | இளைஞன் இயேசுவின் இறையரசுக் கனவுகள்... | 15 |
| 05. | இதயமில்லா உலகில் இதயமாக... | 28 |
| 06. | மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. | 32 |
| 07. | இயேசு பிறப்பார்... ! ...? | 40 |
| 08. | இயேசுவே மாதிரி | 46 |
| 09. | இயேசுவின் பணியைத் தொடர்தல் | 49 |
| 10. | இயேசுவின் உருவில் வளர்தல் | 60 |
| 11. | என் இதயத்திற்கு உகந்தவனாகக் கண்டேன் | 72 |
| 12. | மத்தேயு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார் | 81 |
| 13. | எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட | 88 |
| 14. | இறைவனின் திருவுளத்திற்கு கீழ்ப்படிதல் | 96 |
| 15. | ஆண்டவரே என் ஆயர் | 106 |
| 16. | கடவுள் மிகுந்த இரக்கமுடையவர் | 115 |
| 17. | நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள் | 122 |
| 18. | நீ இன்றி நிறைவு இல்லை | 126 |
| 19. | உள் அறைக்குள் செல்லுங்கள் | 131 |
| 20. | அம்மாவைக் காண முடியுமா?... | 135 |
| 21. | சமகாலத் துன்பியலில் ஓர் ஆன்மீகத் தேடல் | 139 |
| 22. | உயிர்ப்புத் தரும் புது வாழ்வு | 144 |
| 23. | சிலுவை விடுதலையின் சின்னம் | 148 |
| 24. | செபமாலையை நாம் எப்படி செபிக்கின்றோம்? | 152 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இயேசு இனி இயேசுக்களாக.... 154
26. மறைந்துள்ள உன் புதையல் எங்கே? 158
27. இளைஞர் மாபெரும் செல்வங்கள் 163
28. தூய ஆவிக்கு எதிராக வாழலாமா? 168
29. ஓ! இளைஞனே...! 173
30. இறைவனின் திட்டம் 176
31. இறைவனின் உடனிருப்பு 179



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# பொருட்செல்வத்தைத் தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

### முகவுரை

பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதைக் குறிக் கோளாகக் கொண்டுள்ள நுகர்வுக் கலாசாரத்தினால் இன்று பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றிவிட்டது. இச் சந்தை மனிதனையே இலக்காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவையான பொருளீட்டுவதிலேயே இரவு பகலாக தன் முழுக் கவனத்தையும் செலுத்தி தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

### மனிதன் பொருளுக்குச் சமமானவனா?

இன்றைய நுகர்வுக் கலாசாரத்தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப்படுகிறான். இன்று அரசுகளோ ஏனைய நிறுவனங்களோ பொருளைப் பயன்படுத்துவதுபோலவே மனிதனைப் பயன் படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு அதன்பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றி விடுகின்றன. இன்று வயோதிபர் இல்லங்களில் உள்ளவர்களோடு உரையாடினால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

### இரு பரிமாணங்கள்

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம், அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கைத் தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையும் கூட தேடாதுவிடுகிறான். அப்படித் தேடினாலும் சுயதேவைக்காகவே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித முன்னேற்றம்

"பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன்னிறைவுக்கும், மனித மாண்புக்கும் பெருந்தடையாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி" என்கிறது 'மனித முன்னேற்றம்' என்னும் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தை 6ம் பவுல் எழுதிய சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதைச் சுட்டி நிற்கிறது.

### அறிவற்ற செல்வன்

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. 'செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளை பொருட்களைச் சேர்த்துவைக்க இடமில்லையே! என் களஞ்சியங் களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட் களையும் சேர்த்துவைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப் பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து, மகிழ்ந்திரு என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" பலருடைய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்றுவிடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்றுவிடுகிறது.

### இறுதி வார்த்தைகள்

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்:

"உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை; அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைமட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்துவிட்டேன் என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங் களையும் நான் தேடியிருக்கவேண்டும்''. சொத்துக்களின் தொடர் தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்புசெய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல் களைத் தவிர வேறு எவை? ''அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?''

**இவர் யாரோ?**

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை?... காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்." இறப்பின்போது இந்த இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசிந்ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐ போன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டு பிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்துச் செல்லுகின்றன அல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமா?

இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது: ''வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்'' என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

''அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்'' என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதாவது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்கு புண்ணியத்தையும் இன்பத்தையும் தருகிறது. மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடியவேண்டி ஏற்படும்.

**மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?**

- எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடு வேண்டும்.
- நாம் மனித மாண்பை மதிக்கவேண்டும். எமது உடல், அறிவு, ஆன்மா என்பவை புனிதமானவை என்பதை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்கவேண்டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண்போடு நடத்த வேண்டும்.
- இந்த நுகர்வுக் கலாசாரத்தால் நாம் தொலைத்துவிட்ட கொடைகள், ஆசீர்வாதங்களை மீளக் கண்டு பிடிக்க வேண்டும். குறிப்பாக குடும்ப உறவுகளை நன்கு பேண வேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழ வேண்டும்.

  சமூக, சகோதர உதவிகளில் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்டோரின் நல்வாழ்வின் உயர்ச்சிக்காக தன்னல மற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்தனையோ எடுகோள்கள் வரலாற்றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# நிறைவாழ்வை நோக்கி...

## முகவுரை

கிறிஸ்துவைக் காணவும் அவரை நமக்குள் கொண்டுவரவும் கொல்கொத்தாவிலிருந்து பெத்லகேமுக்குச் செல்வதே ஒரே வழி. அவரது பிறப்பு முதல், பணி வாழ்வு, பாடுகள், சிலுவைக் கொலை வரைக்குமான காரணங்களான நமது பாவத்தின் காயங்கள், பாதிப்புகள், துன்ப, துயர, வேதனைகள், குற்ற உணர்வுகள் என்பவற்றோடு நாம் பயணிக்கின்றோம். தொடர்ந்தும் அடுத்தவர், அயலவர் மீதும் அதே வழிகளையே பின்பற்றுகிறோம். இந்நிலையில் கிறிஸ்துவைக் காணவும், அவரை நம் உள்ளங்களில் இருத்தவும் முடியாது. அதற்கு கொல் கொத்தாவின் கொலைக்கள மனநிலையிலிருந்து பெத்லகேமின் இறை ஒளியினதும், அமைதியினதும் மன நிலைக்குத் திரும்பி வரவேண்டும்.

"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" யோவேல் 2:13. நீங்கள் இருப்பதுபோல என்னிடம் வாருங்கள் என்கிறார் ஆண்டவர். எனவே, இந்த நாட்களில் கிறிஸ்து தரும் உண்மைகளை உணர்ந்து, நமது இதயங்கள் கிழிக்கப்பட்டு, திறக்கப்பட்டு, அதிலுள்ள கடினங்கள், காயங்கள், துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் வெளியே வெளிப்படையாய் கொட்டப்படவேண்டும். அவ்வாறு ஒவ்வொருவரும் அன்புக்குள், நீதிக்குள், சமாதானத் துக்குள், நுழைந்து பெத்லகேம் அனுபவத்துக்குள், இறை உறவுக்குள் நகர முடியும். எனவே, இதயங்களை இறுக்கி வைத்துக்கொண்டு போலித்தனமாக, வெளிவேடத்தனமாக வாழாமல், உண்மையின் மனமாற்றத்துக்குள் நுழையும் நாட்களாக இந்த நாட்கள் நமக்கு மாறவேண்டும்.

## அடையாளங்கள்

மனிதன் தனது உள்ளத்தில் இருப்பதை சொற்களால் வெளிப்படுத்த முடியாத போதெல்லாம் அடையாளங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தியிருக்கிறான். கிறிஸ்து மனிதன் மட்டில் கொண்டுள்ள அற்புதமானதும் நம்புவதற்கரியதுமான அன்பு பெரும்பாலும் அடையாளங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

### நம்பிக்கை

சாதாரண அன்றாட வாழ்வில் கிறிஸ்தவனுக்கு உயிர்ப்பு விழா தரும் அர்த்தமென்ன? அது நம்பிக்கை என்னும் அர்த்தத்தைத் தருகிறது. நம்பிக்கையில் வாழ்பவர்களுக்கே உலகம் சொந்தமானது.

எமது வாழ்வில் கிறிஸ்துவின் விழுமியங்களை நாம் வாழ வேண்டும். இதற்கு நற்செய்தியை மிகவும் காத்திரமாக நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். இவ்வாறு வாழும்போது ஏற்படும் காயங்கள் - பாதிப்புக்களை, உள்மனத் தாக்கங்களை மற்றவர் களுடன் பகிர்ந்துகொள்வது சிறந்தது. ஒரு கிறிஸ்தவன்/ள் கிறிஸ்துவின் போதனையை ஏற்று அதன் வியத்தகு உண்மையை எவ்வாறு வாழ்வது என்று ஒரு சில வார்த்தைகளில் கூறிவிட முடியாது.

### அவரைப்போல் நாமும்

இயேசு நேசித்ததது போல் நாமும் நேசிப்பதென்றால் அவரைப்போல் தாழ்ச்சியும் சாந்தகுணமும் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். இயேசு நிபந்தனையின்றி மன்னித்தது, மன்னித்துக்கொண்டிருப்பது நாம் மீண்டும் மீண்டும் மன்னிக்க வேண்டும் என்பதற்காகவே. மறுகன்னத்தைக் காட்டும் துணிவும் தாழ்ச்சியும் நமக்குத் தேவை. அவசியமானால் அவரைப்போல் எமது சகோதரருக்காக எமது உயிரையே தியாகம் செய்யத் தயங்கக்கூடாது. எந்த விதிவிலக்கோ, நியாயப்படுத்தலோ இருக்கலாகாது. நாம் நற்செய்தியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்று வாழ முடியாது; இவ்வளவு தூரம்தான், அதற்குமேல் போக மாட்டோம் என்று நாம் கடவுளிடம் கூற முடியாது.

### அப்பத்தினால் மட்டும்

இயேசு கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் முழுமையாக அதன் சாராம்சத்தோடு நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். நாம் அவரிடம் சரணாகதி அடையவேண்டும். ஏனெனில் அவரே லோகோஸ் (Logos), அதாவது தந்தையின் வார்த்தை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே நற்செய்தி. எமது தொழில்நுட்ப உலகுக்கு ஆவியைக் குறித்த விடயங்கள் நிறுக்க முடியாததாகவும் அளக்க முடியாத தாகவும் இருக்கின்றன. மனிதன் சந்திரன்மேல் நடந்திருந்தாலும் அவன் அப்பத்தினால் மட்டும் உயிர்வாழ முடியாது.

**பெத்லகேம் – கொல்கொத்தா**

மனுமகன் விண்ணேற்படைந்தார். நாமும் அவ்வாறே எடுத்துக்கொள்ளப்படுவோம். கிறிஸ்துவை நாம் உலகுக்குக் கொண்டுவர வேண்டுமானால் எமக்கு எமது சொந்த கொல்கொத்தா அல்லது "மண்டையோட்டின் ஸ்தலம்" இருக்கவேண்டும். அவரை எங்கே காணலாம் என்பதை நாம் காட்டவேண்டும். இறுதியில் அவரைச் சுலபமாகக் காணக்கூடிய இடங்கள் இரண்டு உள்ளன; அதாவது பெத்லகேம், கொல்கொத்தா என்பவை. அவற்றில் மனுவுருவெடுத்த இயேசுவை நாம் அனுபவிக்கலாம். அவர் பிறந்த குகைக்கு நாம் போகலாம். ஆனால், அதற்குமுன் கொல்கொத்தா வினூடாகச் செல்லவேண்டும். இதை நாம் உலகுக்குப் பிரதிபலிக்க வேண்டும். உண்மைக் கிறிஸ்தவ வாழ்வை, விழுமியங்களை நாம் நமதாக்கிக் கொள்ளும்போது நமது வாழ்வே ஒரு கொல்கொத்தாவாக மாறிவிடுகிறது.

கிறிஸ்து நாம் தனது முகத்தைப் பிறருக்கு காட்டவேண்டும் என்று விரும்புகிறார் என்ற எண்ணம் அநேக நாட்களாக எனது உள்ளத்தில் மிக வலுவாக இருந்துகொண்டிருந்தது. நாம் எம்மை கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டால் அவ்வாறு செய்யத்தான் வேண்டும். இது அத்தியாவசியமானது. நான் மற்றொருவருடைய கண்களில் அவ்வாறு தென்படாவிட்டால், நான் நேசிக்கப்படுகிறேன் அல்லது நேசிக்கப்படத்தக்கவன் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

**இன்றைய தோமையார்**

இன்று உலகில் தோமையாரைப்போல் சந்தேகப் படுபவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் கிறிஸ்துவின் காயங்களைக் காட்டுவது அவர்களுக்கு நன்மை பயக்கும், இல்லாவிட்டால் அவர்களை நாம் இழந்துவிடுவோம். கிறிஸ்தவ விழுமியங்களை நாம் வாழ்வதன் மூலம் நமக்கு ஏற்படும் காயங்களை அவர்கள் காணச் செய்வது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவர்களாகிய நாம் எப்பாடுபட்டும் எமது உயிரைக் கொடுத்தாவது உலகுக்கு கிறிஸ்துவின் உண்மையான முகத்தைக் காட்டவேண்டும். எம்மைச் சுற்றிவர தோமையாரைப் போன்றவர்கள் வாழ்கிறார்கள்; அவரைப்போல் இயேசுவின் காயங்களில் தமது விரலை வைத்துப் பார்க்காவிட்டால் நம்பமாட்டார்கள். ஆகவே, நாம் அக்காயங்களை எம்மிலே சுமப்பதை அவர்கள் பார்ப்பது அவசியம்.

எமக்கு அக்காயங்கள் எப்படி ஏற்படுகின்றன? அதை விளங்கிக்கொள்வது மிகவும் சுலபம். அவை நற்செய்தியை வாழ்வதன் மூலம் ஏற்படுகின்றன. ஏனெனில் சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரைப் பின்பற்றும் நாமும் விசுவாசம், அன்பு, சரணாகதி என்னும் சிலுவையில் அறையப்படவேண்டும். நாம் நமது கிறிஸ்துவ விழுமியங்களோடு வாழ்வதனால் எமக்கும் இவ் உலகப்போக்குகளுக்குமிடையில் நடந்துகொண்டிருக்கும் போராட் டத்தினால் நாம் சிலுவையில் அறையப்படுகிறோம். ஏனெனில், விட்டுக்கொடாமல் நற்செய்தியை வாழ்வது இறைவன் தரும் மதிப்பீடுகளுக்கும் மனிதனுக்குமிடையில் நிகழும் ஒரு பெரும் துன்பியல் நிகழ்வு.

**எம்மை வெறுமையாக்க வேண்டும்**

மனிதனது முழுமையான சரணாகதி மகிழ்ச்சியையும், அமைதியையும் கொண்டுவருகிறது. அதற்குமுன் நிகழும் சிலுவைப்பாடும் போராட்டமும் காயங்களை ஏற்படுத்தும். இக் காயங்களையே நாம் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும். நாம் கிறிஸ்துவிடம் சரணாகதி அடைந்து அவரது நற்செய்தியை முழுமையாக ஏற்றுக்கொண்டால், நாம் எம்மையே வறியோராக்கிக் கொண்டால், எம்மூலமாக அவர் தமது குணமாக்கும் பணியைச் செய்யக்கூடியதாயிருக்கும். மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்டிருக்கும் விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவற்றை எம்மூலம் அடைந்துகொள்வார்கள். கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்துவிட்டார் என்பதை அறிந்து கொள்வார்கள். கிறிஸ்துவ விழுமியங்களுக்கு மாறான ஒவ்வொரு சிறு விட்டுக்கொடுப்பையும் நியாயப்படுத்தலையும் குறித்து நாம் ஆத்துமசோதனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எல்லோரும் மிகத் துன்புறுகிறோம். எமது பலவீனங்களை, நற்செய்தியை வாழ்வதற்கு நாம் கொடுக்கும் விலையை பிறரிடமிருந்து மறைத்தலாகாது. உதாரணமாக எமது விருந்தினர் எம்மை மேலோட்டமாகத்தான் காண்கிறார்கள். நாம் பண்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறோம். விருந்தோம்பல் எமது வாழ்வில் ஓர் அம்சமாக இருப்பதால் அவர்களது வருகையையிட்டு சந்தோஷப்படுகிறோம், அவர்களை ஓர் ஆசீர்வாதமெனக் கருதுகிறோம். ஆனால் எமது காயங்களை ஒருபோதும் மறைக்கலாகாது. மற்றவர்கள் விரலால் தொட்டுப்பார்க்க வேண்டிய காயங்கள் கண்கூடாகத் தோன்றும்படியாக உண்மையாகவும், வெளிப்படையாகவும் இருத்தல் நன்று.

முடிவாக

பலருக்கு இல்லறம் ஒரு துன்பியல் வாழ்வு. வெவ்வேறு பின்புலங்கள், இனங்கள், சமூகப்படிநிலைகளிலிருந்து வருபவர்கள் ஒரு மனமாய் ஒன்றித்து வாழ முற்படுகின்றார்கள். இவ் ஒருமித்த வாழ்விலேதான் எத்தனை உரசல்கள், உராய்வுகள். ஆனால் இந்த உரசல்களும், உராய்வுகளும் கிறிஸ்து எம்மை நிரப்பும்படியாக எம்மைக் வெறுமையாக்கும் ஒரு உன்னத செயற்பாடாகின்றது. எம்மிடம் வரும் உறவுகளுக்கு நாம் ஒரு முழுமையான, நிறைவான வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற பொய்த் தோற்றத்தை பிறர் பார்க்கும்படி அல்லது நம்பும்படி விடக்கூடாது. அவர்கள் எமது காயங்களைத் தொட்டுப்பார்த்தால், தங்கள் காயங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாயிருப்பர். பல நேரங்களில் நாம் நம் துன்ப வாழ்வை மூடி மறைத்து வாழ்வதால் மற்றவர்கள் எம்மைப்போல் வாழமுடியாது என்று எண்ணுகிறார்கள். எம் எல்லோருக்கும் காயங்கள் உள்ளன. ஒருவரோடு ஒருவர் திறந்த மனம் கொண்டவர்களாய் வாழும்போது, இத்தகைய துன்பியலூடாக நாம் இவ்வளவு மகிழ்வுடனும் நிறைவுடனும் பயணித்து வாழ்வது அவர்கள் மனதில் ஏற்படுத்தும் ஓர் சாட்சிய வாழ்வாகும். ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டி நம்பிக்கையை ஏற்படுத்தும்போது ஒவ்வொருவரும் உயிர்ப்பின் நம்பிக்கையில் வாழ வழிபிறக்கின்றது. “ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள்” யாக்.5:16. இத்தகைய வாழ்க்கை முறை நாம் நிறைவாழ்வை நோக்கி நகர நம்மை உந்தித் தள்ளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

# நவீன சிலை வழிபாடு

### முகவுரை

விவிலியம் ஒரு விதத்தில் இறைமக்கள் எவ்வாறு மீண்டும் மீண்டும் சிலைவழிபாட்டிலிருந்து உண்மை இறைவனிடத்தில் திரும்பினர் என்பது பற்றிய கதை. தம் இறைவன் எந்தவொரு உருவத்தையும் தனக்கு நிகராக உருவாக்குவதை விரும்பாத இறைவன் என்பதை இஸ்ராயேல் மக்கள் பத்துக்கட்டளைகளின் மூலம் அறிந்திருந்தனர். ஏனெனில், ஆண்டவர் கூறுவது: "நானே உன் கடவுளாகிய ஆண்டவர். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்கவேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில், உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன். என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்" (வி.ப. 20:1-5). யாவே தன்னைத் தவிர வேறு எவரையும் மனிதன் ஏற்றுக்கொள்வதைச் சகிக்காத இறைவன். சிலை வழிபாடு என்பது கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை வேறொரு நபருக்கோ பொருளுக்கோ கொடுப்பது. இத்த கைய சிலை வழிபாட்டை பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இன்றும் வேறுபட்ட பரிமாணங்களில் நாம் பார்க்கிறோம்.

### பொற்கன்று

மனிதன் நம்பிக்கை இல்லாமல் வாழமுடியாது. ஒன்றில் அவன் உண்மைக் கடவுளை நம்புகிறான், அன்றேல் அவன் ஒரு பொற்கன்றை உருவாக்கி அதைத் தன் இறைவனாக்கி வழிபடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் எவ்வாறு தம் இறைவனைக் கைநெகிழ்ந்து சிலை வழிபாட்டுக்குள் சிக்குண்டார்கள் என்று விடுதலைப் பயண நூல் விபரிக்கிறது (வி.ப.32:7-11). நம்புவதற்குக் கடினமான கதையாக இது தோன்றலாம். எகிப்தின் அடிமைத் தளைகளிலிருந்து இஸ்ராயேலை இறைவன் காத்தார். இஸ்ராயேலைக் காப்பாற்ற புதுமைகளுக்குமேல் புதுமைகள் செய்தார். எகிப்தியர்மேல் கொள்ளை நோய் பரவச் செய்தார். செங்கடலை இரு கூறுகளாகப் பிரித்து இஸ்ராயேலைத் தப்புவிக்கச் செய்தார். பகலில் மேகத்தின் மூலமாகவும் இரவில் நெருப்புத் தூணின் மூலமாகவும் வழிநடத்தினார். வானத்திலிருந்து மன்னா பொழிந்து அவர்களை வாழ்வித்தார்.

"இப்படிக் கண்ணின் மணிபோலக் காத்த கடவுளை என்றுமே நம்புவர். கடந்த காலத்தில் கரம்பிடித்து நடத்திய கடவுள் எதிர்காலத்திலும் இவ்வாறே நம்மைக் காப்பார் என்று நம்புவர்" என்றுதானே நாம் எண்ணுவோம்? ஆனால், நடந்தது அப்படியல்ல, மோயீசன் சீனாய் மலையிலிருந்து இறங்குவதற்குத் தாமதமானதும் மக்களின் மனங்கள் பதறத்தொடங்கிவிட்டன. "ஒருவேளை மோயீசன், இறந்துவிட்டாரோ? அல்லது இறைவன் தம் மக்களைக் கைவிட்டுவிட்டாரோ?" என்ற எண்ணங்கள் அவர்கள் மனதில் அலை மோதத் தொடங்கின.

ஒரு பொற்கன்றுக் குட்டியைச் செய்துதரும்படி ஆரோனைத் தூண்டினர். அவர்கள் களியாட்டத்தில் இறங்கினர். விடுதலைப் பயண நூல் அழுத்திக்கூறும் வார்த்தையைக் கவனிப்போம். "களியாட்டத்தில் இறங்கினர்." அதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா? அவர்கள் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். மோயீசன் மலைக்குச் சென்று நாற்பதே நாட்களுள் இஸ்ராயேல் மக்கள் சிதறடிக்கப்பட்டுவிட்டனர்.

நம்ப முடியாத கதையாக உள்ளதல்லவா? மேலே கூறப்பட்ட இறைவனின் அற்புதச் செயல்கள் அனைத்தையும் இப் பொற்கன்றுக் குட்டியே தமக்குச் செய்யும் என்று நம்பி அதன் பாதத்திலே விழுந்து வணங்கினர். "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிசெய்வாயாக" என்று அலகைக்கு இயேசு சொன்னதைப் பொய்யாக்கிவிட்டனர். பழகிப்போனதால் வாசித்துக்கொண்டே வாழுகிறோம். நாமும் இறைவன் நமக்கு கடந்த காலத்தில் செய்தவை அனைத்தையும் கிஞ்சித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்காமல் வாழுகிறோமல்லவா? இன்று எனக்குத் தேவையானது எது என்பது மட்டும்தான் எனக்கு முக்கியம்.

பொற்கன்றுக் குட்டியின் கதையை நாம் வாசிக்கும்போது, அம்மக்கள் எவ்வளவு மதியீனர்களாக வாழ்ந்தார்கள் என்று மிக எளிதாக எடைபோட்டுவிடுகிறோம். அது மட்டுமல்ல இக் கதைக்கும் இன்று வாழும் நமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென முடிவு கட்டிவிடுகிறோம். நாமோ ஒருபோதும் சிலையை வழிபடமாட்டோம். எப்படி நாம் அவ்வாறு வழிபட முடியும் என்று நினைக்கிறோம்.

## நவீன சிலைகள்

நாம் நினைப்பதற்குமேலாக நம் வாழ்வில் நவீன சிலை வழிபாடு என்னும் சிக்கல் உண்டு. நாம் எதை நமது கடவுளாக நம்பி வழிபடுகிறோமென்று அறிய ஆவலா? எமது வியாபாரத்தை உற்று நோக்குவோம். எவ்வாறு பணத்தைப் பெற்றோம், எப்படிச் சேமித்தோம், எப்படிச் செலவு செய்தோம். இது நமக்குப் பணத்தின் மீதுள்ள அதீத அக்கறையை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

சிலை வழிபாடு என்றால் என்ன? என்ற தெளிவு நமக்கு வேண்டும். கடவுளின் இடத்தை ஒரு புனிதருக்குக் கொடுப்பதே சிலை வழிபாடு. உதாரணமாக புனித அந்தோனியாரே எம் கடவுள் என்று ஆராதிப்பது. நாம் புனிதரை வணங்குகின்றோம். ஏனென்றால், அவர்கள் எமக்காகப் பரிந்து பேசுபவர்களாகவும் இறைவனிடம் நாம் செல்ல எமக்கு வழிகாட்டுபவர்களுமாய் இருப்பதால். இது சிலை வழிபாடல்ல.

நவீன சிலைவழிபாடு பணத்தைவிட அதிகமானவற்றில் அடங்கியுள்ளது. அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும். 'நியூஸ் வீக்' என்னும் சஞ்சிகையில் எலென் குட்மன் என்பவர் தொடராக எழுதுபவர். அவர் எழுதும்போது இவ்வாறு குறிப்பிடுகிறார். "எமது முன்னோர் பேசும்போது ஆன்மாவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றிப் பேசினார்கள். நாமோ நமது உடலுக்கு ஏற்படும் ஆபத்துப் பற்றியே பேசுகிறோம். முன்னோர் தம் மரபில் விசுவாசம் வைத்தனர். நாமோ விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிலேயே நம்பிக்கை வைத்துள்ளோம்."

எலென் குட்மன் ஒரு மறைபோதகரல்ல, ஒரு கிறிஸ்தவரோ என்று கூட எமக்குத் தெரியாது. ஆனால், அவர் கூறும்போது பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் எமது உடல் நலம்தான் எமது தெய்வமாகிவிட்டது என்று கோடிட்டுக் காட்டுகிறார். எமது முன்னோர் இறைவன் நம்மைக் காப்பாற்றுவார் என்று நம்பினர். நாமோ நமது மருத்துவர் தான் நம்மைக் காப்பாற்றுவர் என்று நம்புகிறோம்.

இன்று சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர் எத்தனை பேர்? திருமணவிழா, வீடுகட்டுதல், வீடு குடிபுகுதல் போன்ற வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின்போது நாள், நட்சத்திரம் என்பவற்றைப் பார்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுப்போர் எத்தனைபேர்? இதில் என்ன பிழையென்று கேட்கலாம். விடுதலைப் பயண நூலில் கூறப்படும் பொற்கன்று வழிபாட்டிலும் என்ன தவறு? சோதிடம், நாள் நட்சத்திரம் பார்ப்பது கூட நவீன சிலைவழிபாடு தான். சோதிடம் நம் முடிவை விண்மீன்தான் தீர்மானிக்கிறது என்று கூறுகிறது. விவிலியமோ இறைவன் தான் நம் முடிவைத் தீர்மானிக்கிறார் என்கிறது.

இன்று சோதிடம், நாள், நட்சத்திரம் பார்ப்பதில் தவறில்லை என்று பலர் வாதிடுவர். பொற்கன்றை வழிபட்ட அன்றைய இஸ்ராயேல் மக்களும் தாம் செய்தது தவறில்லை என்றே நினைத்தனர். ஆனால், இறைவன் அது தவறில்லை என்று நினைக்கவில்லை. பொற்கன்றை வழிபட்டதற்காக இறைவன் அவர்களைத் தண்டித்தார். அதே இறைவன் நாம் செய்யும் நவீன சிலைவழிபாட்டை தவறற்றது என்று கருதுவார் என்று எப்படி நினைக்கமுடியும்?

**இறைவனுக்குப் பதில் மலிவான மாற்றுப் பொருள்**

பொருட்களுக்கு கூடிய மதிப்புக் கொடுக்கும்போது கடவுளுக்குரிய மதிப்பைக் குறைத்துவிடுகிறோம். பொருட்கள் எமது இதயத்திலிருந்து இறைவனை விலக்கும் பொழுது விளைவு விபரீதமாகிறது. இன்றைய மனிதன் நவீன சிலை வழிபாட்டில் விழுந்துவிடுகிறான். அவன் பொன்னாலான கன்றுக் குட்டியை விழுந்து வணங்கவில்லை. ஆனால், பணம், பதவி, சிற்றின்பம் என்பவற்றுள் சிக்குண்டுகிடக்கிறான். இதனால் அவனது உள்ளத்தில் இருக்க வேண்டிய உண்மைத் தெய்வத்துக்கு இடமில்லாமல் போகின்றது.

நவீன சிலை வழிபாடுபற்றி ஆராயும்போது மனிதனின் ஆழ்மனத்தில் 'நான்' என்னும் வலு அவனை ஆட்கொள்வதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். "நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது" (மத்.6:24) என்று இயேசு கூறும்போது 'செல்வம்' என்பது "ஒருவருள் இருக்கும் வலுவுள்ள சக்தியே" என்று இறையியலாளர் அலோசியஸ் பீரிஸ் அவர்கள் கூறுகிறார். இது இறைவனுக்கு நேர் எதிரான ஒரு சக்தி என்று மேலும் அவர் விளக்குகிறார். இதைத்தான் உளவியலாளர் "ஈகோ" என்று கூறுகின்றனர்.

**முடிவுரை:**

இன்று நாம் பணப்பேராசை, அதிகாரமோகம், சமூக இணையத்தளங்களின் அதீத ஈர்ப்பு என்பவற்றிற்குள்ளே சிக்குண்டு இவைதான் எம் தெய்வம் என்பதுபோல வாழ்வதை அப்பட்டமாகக் காண்கிறோம். குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டியோடு ஒட்டிக் கொண்டிருந்து குடும்ப செபம், செபமாலை, குடும்ப தொடர்பாடல் என்பவற்றைக் கைவிடுவது கிறிஸ்தவ வாழ்வின் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இவற்றிலிருந்து விடுபட்டு, மீண்டும் இறைவனுக்குரிய நேரத்தையும் மகிமையையும் கொடுக்கும் போதுதான் இன்று நாம் சாபங்களாகக் கருதும் அர்ப்பணமற்ற மேலோட்ட வாழ்வு, பாலியல் பிறழ்வுகள், குடும்பப் பிரச்சனைகள், பொருளாதார நெருக்கீடுகள், விரக்தி மனப்பான்மை, கால நிலை மாற்றங்கள் என்பன மாறும்.

மோயீசனின் வரலாற்றுக்குள் நாம் மீண்டும் செல்லும்போது அவர் தம் மக்களுக்காக இறைவனிடம் இரந்து மன்றாடுவதைக் காணலாம். அவர் இறைவனின் இதயத்துக்கு நெருக்கமான வராயிருந்ததால் இறைவனின் இரக்கத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருந்தது. "ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்" (வி.ப.32:14).

இன்று மோயீசன் போன்று பொதுநிலையினர், திருநிலை யினர் இரு சாராரிடத்திலிருந்தும் இறைவன் திருமுன் இருகரம் விரித்து மன்றாடும் இறை மனிதர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்சொன்ன சாபங்கள் நீங்கி இறைவனின் இரக்கம் மக்கள்மேல் பொழியப்பட்டு நாம் வாழும் வாழ்வு இறைவனின் ஆசீர்வாதமாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

# இளைஞன் இயேசுவின் இறையரசுக் கனவுகள்...

**அறிமுகவுரை**

கனவுகளே காரியமாகின்றன. கனவுகளைக் கண்டு கொள்ளாதவன் கடமை மறந்தவனாகின்றான். அடுத்த தலைமுறை அதிகமாகவே தலை நிமிர்ந்து ஆனந்தமாய் சுதந்திர ஆட்டம்போட இன்று எம் தலைமுறைக்கு இன்னும் உருப்படியான கனவுகளைத் தா! என்று வேண்டுகிறார் ஒரு பக்தன். பொற்காலக் கனவுகளைக் காணும் பாக்கியம் தா, கடவுளே! என்று தொடருகின்றார் அவர்.

புத்துலகு படைத்திட, புதிதாய்ப் பிறப்பெடுப்பவர்கள் அந் தந்தக் காலத்து இளையோர். ஏனெனில், அவர்கள் கனவுகளின் களஞ்சியம்! சாத்தியங்களின் சங்கமம்! உத்வேகங்களின் உச்சம்! படைப்பாற்றல்களின் பண்ணை! இவ்வாறு கனவுகண்ட இளைஞர் களின் வரிசையைச் சற்று வருடிப்பார்க்கும்போது, சர்வசமய பாராளுமன்றத்தில் புதுமொழி பேசிய விவேகானந்தருக்கு, அப்போது வயது 30. அரசியலில் புதுப்புயலாக வந்த சுபாஷ் சந்திரபோசுக்கு, அப்போது வயது 25. அறிவியல் வழுங்கிய ஐன்ஸ்டைனுக்கு, அப்போது வயது 25. கணிதச் சூத்திரங்களை வகுத்து தந்த நியூட்டனுக்கு, அப்போது வயது 21. இந்திய சுதந்திரப் போரில் 75 விழுக்காட்டினரின் இலட்சிய வயது 16 தொடக்கம் 26 வரை. ஈழத் தமிழரின் போராட்ட வரலாற்றை ஆரம்பித்தபோது வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு வயது 20.

இவ்வாறு இலட்சியக் கனவு கண்டவர்களில் இணையற்ற வரும் முதன்மையானவருமாக இயேசு விளங்குகின்றார். இளைஞன் இயேசுவைப்பற்றி விவிலியம் அதிகம் குறிப்பிட வில்லை. ஜெருசலேம் கோவிலில் சிறுவன் இயேசுவின் நிகழ்வுபற்றிக் குறிப்பிடும்போது "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்?" என்ற மரியாவின் வினாவிற்கு இயேசு விடையளிக்கும்போது "நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் (லூக்.2:49). அப்போது இயேசுவுக்கு வயது 12. 'தந்தையின் அலுவல்கள்' என்பது தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய இறையரசு எனக் கொள்ளலாம். அப்போது தொடங்கிய அவரது தேடல் அவரது திருமுழுக்கில் முக்கிய கட்டத்தைக் காண்கிறது. "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மாற்.1:11) என்பது இயேசுவின் இயல்புபற்றிய அறிக்கை மட்டும் அன்று, பணிக்குரிய அழைப்பும் ஆகும். 12 வயதில் இறையரசுபற்றிய தேடலில் ஈடுபட்ட இயேசு திரு முழுக்கின்போது ஒரு தெளிவைக் காண்கிறார். இறையரசை தந்தையின் வழியிலேயே தேடவேண்டும் என்ற தெளிவு அது. அதுமுதல் அவரது நோக்கும் போக்கும் அதுவாகவே இருந்தது.

**காலமும் பின்னணியும்**

மனிதர்கள் வரலாற்றில் வாழ்பவர்கள். அவர்களின் சமூகபொருளாதார - அரசியல் அமைப்புகள், காலத்தின் கட்டா யங்கள், பண்பாட்டுப் பார்வைகள், பழக்க வழக்கங்கள் போன்றவை அவர்களது ஆளுமை உளப்பாங்குகள், இலட்சியங்கள், ஈடுபாடுகளை நிர்ணயிக்கின்றன. உளவியலார் எரிக் எரிக்சன் கூறுவதுபோல், ஆளுமை என்பது ஒருவரது வளர்ச்சிப் பருவமும் அன்றைய வரலாற்றுக் கட்டமும் சந்திப்பதன் விளைவே.

இயேசு வரலாற்றில் வாழ்ந்தவர். அவரை நாம் நன்கு புரிந்து கொள்ளவும் அவருடைய இலட்சியத்தையும் ஈடுபாடு களையும் நமக்கு இன்று பொருள் உள்ளதாக்கிக் கொள்ளவும் அவரது காலத்தையும் பின்னணியையும் நாம் நன்கு புரிந்து கொள்வது இன்றியமையாதது.

**சாய்வு கண்ட ஒரு சமூகம்**

அரசியல் ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல் எனும் அநீதியான அமைப்புக்களைக் கொண்ட அன்றைய பாலஸ்தீனச் சமூகம் ஏற்றத்தாழ்வு மிகுந்ததாக இருந்ததில் வியப்பில்லை. அதில் குறிப்பிடத்தக்கவை ஏழைகள் பணக்காரர்களுக்கு இடையே நிலவிய வேறுபாடும் பிளவும். அன்றைய யூதச் சமூகத்தில் நடுத்தர வர்க்கம் என எதுவும் இல்லை என்பதே இன்றைய ஆய்வாளர் களுடைய கருத்து. உழைப்பவர்கள் அன்று பெரும்பாலும் ஏழைக் குடியானவர்களாக இருந்தனர். அவர்களை அடக்கி, சுரண்டி வாழ்ந்த வந்தேறு ஆட்சியாளர்களும் அவர்களுடைய உள்ளாட்சி ஆதரவாளர்களும் சார்பாளர்களும் பல்வேறு அளவுகளில் பணக்காரர்களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழ்வு மைய மக்கள் சமயம்

அன்றைய யூதச் சமயமும் பெருமளவிற்கு இந்தச் சமூகப் பிளவையும் ஏற்றத்தாழ்வையும் பிரதிபலிப்பதாகவும் உறுதிப் படுத்துவதாகவும் அமைந்திருந்தது. எனினும், நாட்டுப்புறக் குடியானவர்களின் சமயச் சிந்தனையும் செயல்பாடும் அவர்களது அன்றாட வாழ்வோடும் அனுபவங்களோடும் நெருங்கிய தொடர்புடையவையாய் இருந்தன. தங்கள் அன்றாட வாழ்வு நிகழ்வுகளே அவர்களுக்குப் பெரிதும் இறைனுபவங்களாக அமைந்தன.

### மக்களை மறந்த போலிச் சமயம்

சமயவாதிகள் பெரும்பாலும் எருசலேமிலுள்ள தலைமை அல்லது முக்கிய குருக்கள், ஆளும் பணக்கார சமூகத்தினர், அதன் சார்பாளர்களாகிய மறைநூல் அறிஞர் என்போரே. இவர்களது சமய வாழ்வின் மையம் சட்டமும் எருசலேம் கோயிலுமே. மோசேயின் சட்டம்தான் இவர்களுக்குக் கடவுளின் வார்த்தை. கோயில்தான் இவர்களுக்குக் கடவுளுடன் உறவாடும் இடம். சமயச் சடங்குகளைச் சரியாக நிறைவேற்றிவிடுவதாலும் சட்டங்களை நுணுக்கமாகக் கடைப்பிடிப்பதாலும் தூயவர்கள் எனத் தங்களையே இவர்கள் கருதிக் கொண்டனர். தங்கள் செல்வத்தையும் சுகவாழ்வையும் தங்கள் தூய வாழ்வுக்குக் கடவுள் தந்த பரிசு என நியாயப்படுத்திக்கொண்டனர்.

### ஆதிக்கத்துடன் ஒத்துழைத்தவர்கள்

'சதுசேயர்' என்றால் சாதோக்கின் மக்கள் என்பது பொருள். சாலமோன் காலத்தில் பெரிய குருவாக இருந்த சாதோக்கின் (காண்:1அர.1:8, 32-45) மக்கள் எனச் சதுசேயர் தங்களை அழைத்துக்கொண்டனர். இவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலரே, எனினும் ஆலயக் குருக்கள், பணியாளர்களுள் முக்கியமான வர்கள் இவர்களது சமூகத்தைச் சார்ந்தவர்களே. முக்கிய சதுசேய குடும்பங்களின் தலைவர்கள், மூப்பர்கள் எனப்பட்டனர். எருசலேமில் இருந்த யூதத் தலைமைச் சங்கத்திலும் சதுசேயரே செல்வாக்குப் பெற்றிருந்தனர். பழைய ஏற்பாட்டின் முதல் ஐம்பெரும் நூல்களை மட்டுமே இறைவார்த்தை என இவர்கள் ஏற்றனர். இவர்கள் ஏற்க மறுத்தவற்றுள் முக்கிமானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தோரின் உயிர்ப்பு, மறுமை வாழ்வு, வானதூதர்கள், சாத்தான்கள் உண்டு எனும் நம்பிக்கைகள்.

### சட்டம் பேசிய படிப்பாளிகள்

பரிசேயர்கள் எழுதப்பட்ட சட்ட நூல்களுடன் எழுதப்படாத முன்னோர் மரபுகளையும் ஏற்றுக்கொண்டனர். மரபுக் கோட்பாடுகளை மட்டும் அல்ல, உயிர்ப்பு, மறுமை, வானதூதர்கள் எனும் உண்மைகளையும் நம்பினர். ஆனால், சட்டங்கள் மரபுகளை சரியாகவும் நுணுக்கமாகவும் கடைப்பிடிக்கும் நோக்கில் இவர்கள் பல வேளைகளில் அவற்றின் மைய நோக்கங்களையும் உள்ளர்த்தங்களையும் உணரத் தவறினர். படிப்பாளிகள் அல்லது அறிஞர்கள் ஏனைய சமூகங்களில் பொதுவாகச் செய்வது போலவே பரிசேயர்கள் அன்று யூத சமூகத்தில் செயல்பட்டனர். அதாவது, சமூக - பொருளாதார நிலையில் தங்களைவிட உயர்ந்திருப்பவர்களுடன் தங்களை உள்ளூர ஒன்றுபடுத்திக்கொண்டு பாமர மக்களைத் தாழ்வாகவும் இழிவாகவும் கருதினர் (காண்: லூக்.18:9-14 யோவா.7:49).

எண்ணத்தளவில் இவர்கள் நாட்டின் விடுதலையையும் சமூக மாற்றத்தையும் விரும்பினர் எனலாம். ஆனால், தங்களது சமூக பொருளாதார உயர்நிலை பாதிக்கப்படாத வேளைகளில் அவர்கள் எந்தவித விடுதலை அல்லது சமூக மாற்ற முயற்சிகளிலும் ஈடுபடவில்லை.

### ஒதுங்கிக்கொண்ட அன்றைய துறவிகள்

அன்றைய சமயவாதிகளின் இன்னொரு குழுமத்தினர் எசீனியர்கள். இவர்களைப்பற்றி விவிலிய நூல்கள் எதுவுமே வெளிப்படையாகப் பேசவில்லை.

இறுதிக்காலம் அண்மையில் உள்ளது என இவர்கள் நம்பினர். விரைவில் வானதூதர் படைகளுடன் கடவுளின் தூதுவரான மெசியா வருவார், வரலாற்றில் குறுக்கிட்டுப் போராடி, தவறிப்போன யூதர்களையும் அந்நியரான உரோமையரையும் அழித்து இறையாட்சியை நிறுவுவார் என அவர்கள் எதிர்பார்த்தனர். இறுதி நாளில் ஒளியின் மக்களுக்கும் இருளின் மக்களுக்கும் இடையே நடக்கவிருக்கும் அப்போரில் தாங்களும் சேர்ந்திடத் தங்களையே எப்போதும் தயார் நிலையில் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதில் கருத்தாக இருந்தனர். அதற்கு அக, புறத் தூய்மை முக்கியமானது எனக் கருதி, துப்பரவு முறைமை சார்ந்த முழுக்குகளுக்கும் கழுவுதல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.

### நாளும் நலிவுற்ற மண்ணின் மக்கள்

பாமர யூத மக்கள் இத்தகைய குழுமங்கள் எதையும் சேர்ந்தவர் அல்லர், அவற்றில் அவர்கள் சேர்க்கப்படவும் இல்லை. அவர்கள் பெரும்பாலும் ஊர்ப் புறங்களைச் சார்ந்தவர்கள். குறு நில, குத்தகை அல்லது கூலித்தொழில் செய்த ஏழைக் குடியானவர்கள்.

இவர்கள் அந்நிய உரோமை ஆதிக்கவாதிகளால் அடிமை யாக்கப்பட்டவர்கள். அவர்களுடன் ஒத்துழைத்த உள்நாட்டுப் பணக்கார அதிகார வர்க்கத்தால் சுரண்டப்பட்டவர்கள். படிப்பாளி களால் தாழ்வாகக் கருதப்பட்டவர்கள். சமயவாதிகளால் பாவிகள் எனப் பழிக்கப்பட்டவர்கள்.

இந்நிலையில் அவர்கள் உரோமை ஆதிக்கவாதிகளையும் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட சதுசேயரையும் வெறுத்தனர். பரிசேயரை ஓரளவு மதித்தாலும் அவர்களையும் முழுமையாக நம்பவில்லை. சமயக்குருக்கள்மீதும் எசீனியர்மீதும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் நம்பியது கடவுள் ஒருவரையே. கடவுள் மக்களிடமிருந்து தம் மெசியாவை எழுப்புவார், அவர் அந்நிய ஆட்சியாளரையும் உள்நாட்டு ஆதிக்க வாதிகளையும் அழித்தொழித்து, தாவீது அரசரின் பாணியில் நீதியின் நல்லாட்சியை நிறுவுவார் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு.

### திருக்காட்சி இயக்கங்களும் தீவிரவாதக் குழுக்களும்

தங்கள் செயல்பாடு இன்றியே விண்ணிலிருந்து விடுதலை வரும் என திருக்காட்சி இயக்கங்கள் எதிர்பார்த்தன. விண்ணும் மண்ணும் அதிர வானமேகங்களிலிருந்து கடவுள் தமது வல்லமை யுடன் மிக விரைவில் இறங்கிவருவார், வரலாற்றில் பேராற்றலுடன் குறுக்கிட்டு தீயோரை அழித்து நல்லோரை மீட்பார் என்பது அவர்களது தீவிர நம்பிக்கை.

இவ்வாறு ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, ஆயரில்லா ஆடுகள்போல் வாழ்வுக்கு வழிகாட்ட யாருமின்றி நாளுக்கு நாள் நலிவுற்று, கடவுளைத் தவிர வேறு எவர்மீதும் நம்பிக்கை வைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த அன்றைய பாலஸ்தீன ஏழை மக்களே இயேசு சார்ந்திருந்த சமூகம். அவர்களே இயேசு இயக்கத்தின் பிறப்பிடம். மேற்குறிப்பிட்ட வெவ்வேறு இயக்கங்கள் அல்லது குழுமங்களின் தொலை நோக்கைக் கடந்து இயேசு இறையரசுபற்றிய ஒரு தொலை நோக்கைக் கொண்டிருந்தார்.

### இறையாட்சியே இளைஞன் இயேசுவின் இலட்சியம்

இயேசுவின் இலட்சியம் யாது எனும் கேள்வியை எங்குமே புதிய ஏற்பாடு வெளிப்படையாக எழுப்பவில்லை. ஆனால், அதில் பக்கத்திற்குப் பக்கம் அக்கேள்வியின் விடையே காணக் கிடக்கிறது. இயேசு நம்பியது, போதித்தது, வாழ்ந்து காட்டியது, உயிரையே தந்து உருவாக்கி வளர்த்தது எது? "மண்ணுலகில் தீ மூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்" (லூக் 12:49) என்கிறார் அவர். இவ்வாறு அவர் உள்ளத்தில் பற்றி எரிந்து, உலகெல்லாம் படர்ந்து பரவவேண்டும் என எண்ணியது, ஏங்கியது எது? அது இறையாட்சியே.

இறையாட்சி என்பது மானுடம்பற்றி இயேசு கண்ட இலட்சியக் கனவு. புதிய உள்ளங்கள், புதிய உறவுகள், புதிய உலகம் என்பதே அதன் அடிப்படை. மண்ணெல்லாம் மலர்ந்து, மனிதம் எல்லாம் வளர்ந்து, எங்கும் இறைமை ஒளிர்விடும் நிலையே அது. அதாவது மாந்தரின் மனங்கள் மாறவேண்டும். அவர்கள் இறை மையம் ஆகவேண்டும். இறைவனின் பண்புக ளாகிய அன்பு, உண்மை, நீதி என்பன உள்ளங்களிலும் வாழ்வுகளிலும் ஊறிப் பெருகவேண்டும், புதிய, புனித உறவுகளாக அவை மலரவேண்டும். ஆதிக்கம், சுரண்டல், அநீதிகள் நீங்கி மக்கள் அனைவரும் இறைவனின் மக்கள் எனும் உரிமையிலும் ஒருவருக்கொருவர் உடன் பிறப்புகள் எனும் உறவிலும் வாழ வேண்டும். இத்தகைய அன்புறவுகளால் பின்னப்பட்ட, அவற்றை உருவாக்கி வளர்க்கும் புதிய சமுதாயம் உதயமாக வேண்டும். அதில் எங்கும் அன்புமயம், அருள்மயம், எல்லாம் இறைமயம், இன்பமயம். இவ்வாறு இந்த மண்ணின், மனிதத்தின், சமூகத்தின் வாழ்வும் நிறைவும்பற்றி தாம் கண்ட எழிலான காட்சியை யூத மரபுவழி நின்று இறையாட்சி என இயேசு அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பார்வைகள்

இறையாட்சி என்பது இயேசு புனைந்த புதிய கருத்தாக்கமோ சொல்லோ அன்று. இச்சொல் பழைய ஏற்பாட்டில் அதிகம் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், இக்கருத்து அதில் பரவலாகக் காணக்கிடக்கிறது. படைப்பு அனைத்திற்கும், எல்லா நாடுகளுக்கும், குறிப்பாக, தேர்வு, அழைத்தல், உடன்படிக்கை என்பவற்றால், தனிப்பட்ட முறையில் இஸ்ராயேல் மக்களுக்கும், கடவுள் அரசர் என்பது பழைய ஏற்பாடு முழுவதும் இழையோடும் மையக் கருத்து. "நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடமையேயெனினும், நீங்கள் எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். மேலும், எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும் தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்" (விப 19:5-6) என்பது சீனாய் மலையில் இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கையின் சாரம். இவ்வாறு கடவுளின் ஆட்சியாக இருப்பது என்பது ஏனையச் சமூகங்களிலிருந்து வேறுபட்டு ஒரு மாற்றுச் சமூகமாகவும் அவற்றிற்கு ஒரு மாதிரியாகவும் விளங்குவதே. அதாவது எகிப்திய அல்லது ஏனைய மக்களினங் களிடையே அன்று நிலவிய ஆதிக்கங்கள், அநீதிகள் நீங்கி, நீதியும் இரக்கமும் நிறைந்து இறைவனுக்கு ஏற்ற புதிய சமூகமாக இருப்பது.

இயேசுவின் காலத்திலும் இறையாட்சி வரும் என்னும் எதிர்பார்ப்பு யூதமக்களிடம் மிக அதிகமாகவும் ஆழமாகவும் வேரூன்றி இருந்தது. உரோமானியரின் ஆதிக்க ஆட்சிக்கும் அடக்கு முறைகளுக்கும் அநீத வரிச் சுமைகளுக்கும் ஆளாகி வாடிக்கிடந்த அவர்கள் இறைவன் பழைய ஏற்பாட்டில் தந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி தம் மக்களிடம் தமது நிலையான, நிறைவான ஆட்சியை நிறுவுவார் என பேராவலுடன் காத்திருந்தனர். எனினும் இறையாட்சி எத்தகையது, எவ்வாறு வரும் என்பதில் அவர்களுடைய பார்வைகள் பலவகை. அவற்றுள் பரவலான ஒன்று திருக்காட்சியினரின் பார்வை. இறையாட்சி என்பது இந்த வையகத்தில் வளருவது அன்று. மாறாக, அது வானிலிருந்து வரும் வேறு புதியதோர் உலகம் என்பது அவர்களது நம்பிக்கை. இதற்கு நேர்மாறாக இருந்தது தீவிரவாதிகளின் கருத்து. உரோமையரை எதிர்த்து, தங்கள் நாட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரட்டியடித்து, ஏனைய நாட்டு அரசாட்சிகளைப் போன்று தங்கள் முயற்சியால் நிறுவப்படவேண்டிய ஒரு தேசிய சமய ஆட்சி என்பதே இறையாட்சிபற்றி அவர்கள் கொண்டிருந்த கண்ணோக்கு. இயேசுவின் இறையாட்சி இலட்சியம் இவற்றினின்று வேறுபடுகிறது. யூத மரபு எதிர்பார்ப்புகளில் வேரூன்றியிருந்தாலும், அது தனித் தன்மை வாய்ந்தது. மூன்று முக்கிய உறுதிப்பாடுகளில் இந்தத் தனித்தன்மை வெளிப்படுகிறது. அவை இறைவனை, மனித சமூகத்தை, தம்மைப்பற்றிய இயேசு கொண்டிருந்த உறுதிப்பாடுகள்.

### கடவுள் என்றால் அப்பா

இறையாட்சி எனும் இயேசுவின் இலட்சியத்திற்கு அடிப்படையாக இருந்தது இறைவன் அப்பா எனும் அனுபவமே. அந்த அப்பா அனுபவத்தில் இறைவன் எங்கோ தொலைவில் இருப்பவர் அல்லர். மாறாக, மனிதருக்கு உறவானவர், உயிரானவர், அவர்களுடன் உடனிருப்பவர், உரையாடுபவர். மேலும் இறைவன் அப்பா என்றால் இவர் அன்பு மயமானவர். "கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1யோவா 3:8, 16). அம்மை அப்பனாக இருந்து அனைத்து உயிர்களுக்கும் அன்புகாட்டி அருள்பாலிப்பதே அவரது இயல்பு. சிறப்பாக மாந்தர் அனைவரும் அவருடைய அன்புப் பிள்ளைகள், அருமைச் செல்வங்கள். அவர்கள் அவருடைய அடிமைகள் அல்ல, மாறாக, சுதந்திர மக்கள். அவர் அவர்களைப் படைத்தது தம்மைப் பாடிப் புகழவேண்டும், தமக்குப் பலிகளும் காணிக்கைகளும் கொணரவேண்டும், தமக்குக் கோயில்கள் எழுப்பி விழாக்கள் எடுக்கவேண்டும், தூபம் இட்டுத் துதிபாடவேண்டும் எனும் தன்னல நோக்கால் அல்ல, மாறாக தமது அன்பைப் பகிர்ந்து வாழவே. எனவே, இறைவனின் அன்பு வாழ்வளிப்பது, புதுப்புது வளர்ச்சிகளுக்கு இட்டுச் செல்வது.

உயிரளிக்கும் அப்பா இறைவன் சாவின் சக்திகளை ஒருபோதும் சகித்துக்கொள்பவர் அல்லர். மனித வாழ்வுக்கு எதிரானவை எல்லாம் அவருக்கும் எதிரானவையே. மனிதத்தை ஊனப்படுத்தும், அதன் மாண்பைச் சிதைக்கும், அதன் வளர்ச்சிக்கு விலங்கிடும் அனைத்தையும் உடைத்து எறிபவர் அவர். விடுதலைக் கடவுள் என்பதே அவரது இயல்பு. ஆதிக்கம் செலுத்துவோரை, அடுத்தவரைச் சுரண்டுவோரை அவர் எதிர்த்து நிற்பவர். ஏழை எளியவர்க்கு, தாழ்த்தப்பட்டோருக்கு, உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிக்கப்பட்டோர் ஒடுக்கப்பட்டோருக்கு, ஆதரவாக அவர் போராடுபவர். நலிந்தோருக்கு இரக்கம், பாவிகளுக்கு மன்னிப்பு என்பதே அவரது இயல்பு. அதேவேளையில், அவர் ஆணவத்தையும் தீமைகளையும் சுட்டெரிக்கும் தீப்பிழம்பு. இறைவனைபபற்றிய இயேசுவின் இப்பார்வையை ஷிலபெக் எனும் இறையியலாளர் பின்வருமாறு கூறுகிறார்: "மக்களைப் பேணி அவர்களுக்கு விடுதலை அளிக்கும் ஆற்றலாக இறைவனை அறிந்து உணர்ந்ததே இயேசுவின் அப்பா அனுபவம்." இத்தகைய அனுபவத்திலிருந்து பிறந்ததுதான் இயேசு மனித சமூகத்தைப் பற்றிக் கொண்டிருந்த உறுதிப்பாடு.

### சகோதரத்துவ சமூகமே இறையாட்சி

இறையாட்சி என்பது அப்பா இறைவனின் திட்டமும் திருவுளமும் நிறைவேறும் நிலை. அதில் அவரது ஆற்றல்மிகு அன்பு மனித வாழ்விலும், படைப்பு அனைத்திலும் பொங்கிப் பெருகி அவற்றை நிறைவளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. அதில் அவரது ஆற்றல் எங்கும் ஓங்குகிறது. அதனால் மனிதத்தின் வாழ்வையும் வருங்காலத்தையும்பற்றி அவர் கண்ட அன்பின் கனவுகள் எல்லாம் நிறைவேறுகின்றன.

இறைவன் அப்பா என்றால் மாந்தர் அனைவரும் அவருடைய பிள்ளைகள், ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகள். அவர்கள் ஒரு வீட்டுப் பிள்ளைகள், ஒரு கூட்டுப் பறவைகள். தம் பிள்ளைகள் எனும் மாண்பு உரிமையுடன் சகோதர சகோதரிகள் எனும் அன்பு உறவுடன் வாழவேண்டும் என்பதே அவரது விருப்பம். எனவே, இனம், நிறம், நாடு, மொழி, சமயம், பாலினம், படிப்பு, பதவி, பண்பாடு என்பவை வேறாகலாம். ஆனால் அவை ஏற்றத்தாழ்வு எதற்கும் காரணம் ஆகலாகாது. உடன்பிறப்புகள் எனும் அன்பும் அக்கறையும் பகிர்வும் பாதுகாப்பும் மன்னிப்பும் இரக்கமும் சமத்துவமும் ஒற்றுமையுமே அவர்களை உண்மை மனிதராக்குகின்றன. கடவுளின் மக்கள் எனும் மாண்பை அவர்களுக்குத் தருகின்றன.

### அன்பு, சுதந்திரம், நீதி

இறையாட்சிச் சமூகத்தின் முக்கிய இயல்புப் பண்புகள் மூன்று. அவை அன்புறவு, சுதந்திரம், நீதி என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையாட்சியைச் சார்ந்தவர்கள் அப்பா இறைவனின் அன்பைச் சுவைத்தவர்கள், அதில் ஊறித் திளைத்தவர்கள். இறைவனின் அன்பு அவர்களுடைய உள்ளங்களிலும் உறவுகளிலும் அன்பு ஊற்றுக்களைத் திறந்துவிடுகிறது. இதனால், அவர்கள் தம்மைப்போல பிறருக்கும் அன்பு காட்டுகின்றனர். எல்லாரையும் சகோதர சகோதரிகளாகக் கருதி, மனித நேயத்துடனும் மதிப்புடனும் அவர்களுடன் உறவுகொள்கின்றனர். எல்லாரையும் வாழவைக்கும் அவர்களது அன்பு கடவுளின் அன்புபோல், ஏழைகள், ஊனமுற்றோர், நோயாளர், தாழ்த்தப் பட்டோர், ஒடுக்கப்பட்டோர்மீது தனி அக்கறையும் ஈடுபாடும் காட்டுகிறது. இவ்வாறுதான் அது இறைவனுக்குப் பதிலன்பாகவும் அமைகிறது.

மக்கள் இறைவனுடைய பிள்ளைகள் எனும் சுதந்திரத் துடன் வாழும் இறையாட்சிச்சமூகத்தின் இன்னோர் இன்றியமை யாத பண்பு நீதி. இது எல்லா மனிதரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் எனும் உண்மையில் இருந்து பிறக்கும் சகோதர சமத்துவத்தின் நடைமுறைச் செயல்பாடு. அதாவது இறையாட்சிச் சமூகத்தில் எல்லாரும் இணையும் துணையும் ஆனவர்கள். அதில் இரண்டாம்தரக் குடிமக்கள் இல்லை. எவரும் எவர்மீதும் எவ்வித ஆதிக்கமும் செலுத்துவதில்லை. அதில் ஒரு சிலரிடம் செல்வம் குவிந்திருக்க ஏனையோர் வறுமையில் வாடுவதில்லை. படிப்போ பதவியோ, பணமோ உடையோர் ஏனையோரின் உழைப்பைச் சுரண்டிப் பிழைப்பதில்லை. அதில் ஆண்-பெண் எனும் பாகுபாடு இல்லை உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி எனும் வேறுபாடும் இல்லை (காண்:கலா. 3:28). மாறாக, இறையாட்சிச் சமூகத்தில் நிலமும் செல்வமும் சமமாகப் பகிரப்படுகின்றன. அதிகாரமும் பதவியும் பணியாகி, அறிவும் திறமைகளும் பொதுநலத்திற்கு உதவுகின்றன. சமத்துவம் இழந்த ஏழைகள், ஊனமுற்றோர், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் சமத்துவம் பெற்று வாழ அவர்களுக்குத் தனிச்சிறப்பான சலுகைகளும் வாய்ப்புகளும் கிடைப்பது இறையாட்சியின் சமநீதிச் செயல்பாடே.

**செத்தபின் கிடைக்கும் சொர்க்கமா?**

இறையாட்சி அகத்தை மட்டும் சார்ந்த வெறும் ஆன்மீக அமைப்பு அன்று. மனிதரது அக-புற, தனி-பொது, ஆன்மீக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகள் அனைத்தையும் தொடுவது. ஆன்மீகக் காரியங்கள் வேறு, உலகியல் காரியங்கள் வேறு எனும் பிளவு அதில் இல்லை. இறைவனைச் சார்ந்தவை வேறு, மனிதரைச் சார்ந்தவை வேறு எனும் பிரிவும் இல்லை. இதனால் இறையாட்சி என்பது ஆலயத்திற்குள் அடங்கிவிடும் ஆன்மீகம் அல்ல. சமூக வாழ்வைத் தொடாத வெறும் சமய வாழ்வும் அல்ல (காண்: மத். 5:23-24 12:7 25:31-46).

இறையாட்சி இவ்வுலகிலுள்ள ஏனைய அரசுகளுக்கு இணையான அல்லது போட்டியான அரசாட்சி அன்று. இதனால் தான் இயேசு, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" (யோவா 18:36) என்கிறார். இதனால் அது மறுமையை மட்டுமே சார்ந்தது, செத்தபின்பே கிடைக்கும் சொர்க்கம் எனப் பொருள் இல்லை. மண்ணக வாழ்விலேயே தொடங்கித் தொடர்ந்து மறுமையாக நிறைவு பெறுவது அது. இதனால்தான் இயேசு "இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது" (லூக் 17:21) என்கிறார். குழந்தைகள் மகிழ்வதில், ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதில், பகைமையை மறப்பதில், பகிர்வை வளர்ப்பதில், சமூகங்களின் ஒத்துழைப்பில், நாடுகளிடையே அமைதியில், இந்த மண்ணில் அரும்புவதே இறையாட்சி. அன்பிலும் நீதியிலும் இந்த மண்ணும் மக்களும் மனிதமயமாகி இறைமயமாகும்போது இங்கு மலருவதே அது (காண்: தி.வெ. 21:3-4, 22-27).

இந்த இறையாட்சி இறைவனின் கொடை. இதனால் நாம் வாளாவிருக்க அது வானத்திலிருந்து வந்து இறங்குவதன்று. "கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்?" (தி.ப.1:11). இறையாட்சி இறைவனது புதுப் படைப்பு எனினும், அது அவருடன் இணைந்து மனிதர் இவ்வுலகில் உருவாக்கவேண்டியது. இறையாட்சி இறைவனின் பரிசு. அதேவேளை அது மனிதரின் பணியும்கூட.

**இறையாட்சியின் பணியாளர் இளைஞன் இயேசு**

இறைவனின் இறையாட்சி இலட்சியத்தின் மூன்றாவது முக்கிய கூறு தாம் இறைவனின் மகன் என அவர் தம்மைப்பற்றிக் கொண்டிருந்த உறுதிப்பாடு. அவரது அப்பா அனுபவத்தின் மறு பக்கம் தாம் இறைவனின் அன்பு மகன் எனும் தன்னுணர்வே. தாம் இறைத் தந்தையின் தலைமகன், அவரின் மக்கள் அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த சகோதரன். எனவே, அவர்களது நிறைவாழ்வாகிய இறையாட்சியின் வரவிலும் வளர்ச்சியிலும் மூலைக்கல்லுக்கு உரிய முக்கிய இடம் தமக்கு உண்டு என்பது அவரது தான்மை யுணர்வின் மையம் (காண்:மாற். 12:1-10).

இறைமகன் என்பது இயேசுவின் பட்டமோ பதவியோ அன்று, மாறாகப் பணிக்கான அழைப்பு. தமது இயல்பு பற்றிய அறிவிப்பு என்பதைவிட, அதிகமாக தந்தை இறைவனின் ஆட்சியை இவ்வுலகில் நிறுவ அவர் தமக்கு விடுக்கும் அழைப்பு என்றே இயேசு அதனை ஏற்றுக்கொண்டார். இறையாட்சியை நிறுவவே தந்தை தம்மை மகனாக அழைத்து, ஆவியால் தம்மீது அருள்பொழிவு செய்து அனுப்பியுள்ளார் என்பது இயேசுவின் உறுதியான நம்பிக்கை. மேலும், தந்தை தம்முடன் இருந்து தம்வழியாகச் செயல்படுகிறார் எனவும் அவர் உணர்ந்தார். இறைவனின் பண்புகளே இறையாட்சியின் பண்புகள் எனும் வகையில் இறைவனின் பண்புகளைத் தமதாக்கி, தமது அன்றாட வாழ்விலும் உறவுகளிலும் ஈடுபாடுகளிலும் அவற்றை அவர் வெளிப்படுத்தினார். இறைவனின் செயல்பாடுகளே இறையாட்சியின் செயல்பாடுகள் எனும் அளவில் இயேசு தமது சமுதாயத்தில் இறைவனின் நிலைப்பாடுகளைத் தாமும் எடுத்து, அவருடைய செயல்பாடுகளையே தமது செயல்பாடுகளாகவும் ஆக்கினார். இறைத்தந்தையுடன் அவர் பெற்ற அப்பா-மகன் உறவு ஒன்றிப்பில் அவர் தந்தையின் உள்ளம், உணர்வுகள், அறிவு, ஆற்றல்கள், சிந்தனை, செயல்பாடுகளை அதிகமதிகமாகப் பெறுகிறார். அவரது மக்கள் ஈடுபாடுகளில் அவை அவர்களது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நிறைவுக்குமான சமூக மாற்றச் சக்திகளாக வெளிப்படுகின்றன, புத்துலகம் செய்யும் புரட்சிப் பிழம்புகளாகப் புறப்படுகின்றன.

**நிறைவாக**

அன்புக்குரிய என் இளைய சமூகமே!

இளைமையிலேயே இலட்சியக் கனவு கண்ட இளை யோரில் சிலரை இவ் ஆக்கத்தின் ஆரம்பத்திலே உங்கள் முன் நிறுத்தினோம். அதில் முன்நிற்கும் இளைஞன் இயேசு தனது 12வது வயதிலேயே இலட்சியக் கனவு கண்டவர். அது மட்டுமல்ல தொடர் தேடலிலே ஈடுபட்டவர். அதனால் அவருக்கு ஏற்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு. அத்தெளிவு செயலுக்கு வடிவம் கொடுத்தது. அது அவரை உந்தித் தள்ளிய உத்வேகக் கனவாக அமைந்தது. உலகமே வியந்தது. விடிவைக் கண்டது.

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு" என்று சொல்லிச் சென்றார் வள்ளுவர் பெருந்தகை. அதாவது, நீர்ப் பூக்களின் தாழினது நீளங்கள் நீரின் அளவினதாம். அதுபோல மக்கள் தம் உயர்ச்சி ஊக்கத்தின் அளவினதாம். நமது கனவுகள் நனவாக மாறுவதற்கு உள்ளத்தில் உத்வேக உணர்வு வேண்டும்.

குழந்தைகள், முதியோர் போன்றவர்கள் சாதனைகள் புரிவதற்கு உரிய கால வரையறை போன்றல்லாது இளை யோருக்கு வரையறையற்ற "முக்காலமும்" உள்ளது. இத்தகைய முக்காலத்தையும் கொண்டவர்கள் "நாட்டின் தீட்டிய முனைகள். முற்போக்குச் சிந்தனையாளர், முனைப்பு உள்ளவர்கள்" என்றார் அறிஞர் அண்ணா. எழில்மிகு ஏதேன்ஸ் நகரத்தின் ஏற்றமிகு வாலிபர்களே! நாற்றமெடுக்கும் சமுதாயத்தை நறுமணம் கமழும் சமுதாயமாக்க வாருங்கள்! வாருங்கள்!! என்று அழைத்தார் அறிஞர் சோக்கிறற்றீஸ் அன்று. இவ் ஆக்கத்தைப் படிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் இலட்சியக் கனவு காண, தொடர் தேடலிலே ஈடுபட, அதில் தெளிவைக் காண, வாழ்வுக்கு வளம் சேர்க்கும் வாய்க்கால்களாக மாற அன்புடன் உற்றுநோக்கி அழைக்கிறார் இளைஞன் இயேசு உங்களை இன்று.

புதிய சமுதாயம் மலர வைப்போம்!
புதிய திரு அவை விடியச் செய்வோம்!

"என் தலைவரே, நீரே என் நம்பிக்கை. ஆண்டவரே, இளமை முதல் நீரே என் நம்பிக்கை. கடவுளே, என் இளமை முதல் எனக்குக் கற்பித்து வந்தீர் இனிவரும் நாள்களிலும் உம் வியத்தகு செயல்களை அறிவிப்பேன்"
திபா 71:5,17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05

## இதயமில்லா உலகில் இதயமாக...

"இதயமில்லா உலகின் இதயமே சமயம்" என்றார் கார்ல் மார்க்ஸ். அவரது கூற்றை அப்படியே உண்மை என அறிவுறுதியாக நாம் ஏற்க இயலாது. இருப்பினும், "சமயம் மனிதரை வாழவைக்க உதவாது. கடவுளை வாழ்த்திக் கொண்டிருக்கும்போது, அவர்களது இவ்வுலக வாழ்வில் இழிநிலையைப் போக்கவும், அநீதிகளை எதிர்க்கவும் ஆற்றல் தராது. அவற்றை அவர்கள் பொறுமையுடன் ஏற்று வாழ்ந்தால் செத்தபின் அவர்களுக்குச் சொர்க்கத்தில் பேரின்பம் கிடைக்கும் எனும் வகையில் சமயம் போதிக்கவும் செயல்படவும் செய்யும் போது அது இதயம் அற்றுப் போன, மனித நேயம் வற்றிப்போன சமூகத்தின் வெளிப்பாடும் பிரதிபலிப்புமே" என்பதே அவரது விமர்சனம். அன்று, ஏன் இன்றுகூட, பல வகைகளிலும் வேளைகளிலும் சமயங்கள் அவ்வாறுதான் பெரிதும் செயல்பட்டு வருகின்றன என்பதையும் நாம் மறுக்க இயலாது.

கார்ல்மார்க்ஸ் விமர்சித்தது உலக சமயங்கள் எல்லாவற்றையுமே. இருப்பினும் உடனடியாக அவர் கண்முன் தென்பட்டது 19ஆம் நூற்றாண்டுக் கிறிஸ்தவம்தான். அதன் அன்றையச் செயல்பாடு அவரது வருணனைக்கு ஏற்றதாகவே பெரிதும் அமைந்திருந்தது. உலகில் வேறு எந்தச் சமயத்தையும் விட அதிகமாக அன்றும் கிறிஸ்தவம் ஏழைகளுக்கு உதவுவது, நோயாளிகளைக் கவனிப்பது, அனாதைகளையும் கைவிடப்பட்டோரையும் ஆதரிப்பது எனும் பணிகளைச் செய்து கொண்டிருந்தது என்பது வரலாற்று உண்மை. இருப்பினும் அன்று வறுமைக்கும் நோய்களுக்கும் பலர் அனாதைகளாகவும் கைவிடப்பட்டவர்களாகவும் இருப்பதற்கு முக்கிய காரணிகளாக இருந்த அன்றைய ஐரோப்பிய கொடுங்கோல் மன்னராட்சிகள், கட்டுப்பாடற்ற முதலாளித்துவம் என்பவற்றின் கோர முகங்களை அது கண்டு கொள்ளாமலேயே இருந்தது! இல்லை, கண்டும் காணாததுபோல் நடந்துகொண்டது.

மேற்கூறப்பட்ட கொடுமைகளை எதிர்த்து ஆங்காங்கே சில ஆயர்களும், அருட்பணியாளர்களும், பொதுநிலையினரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களும் குரல்கொடுக்கவும் போராடவும் முனைந்ததை எவரும் மறுக்க இயலாது. இருப்பினும் திருத்தந்தை 13ஆம் லியோ "புதிய மெய்மைகள்" எனும் சுற்றுமடல் வழியாகத் தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும்வரை அத்தகைய குரல்களும் முயற்சிகளும் அரிதாகவே இருந்தன. அதன் பின்புகூட மிகப் பெரும்பான்மையான கிறிஸ்தவ அருட்பணியாளர்களும், துறவியரும், பொதுநிலையினரும் சமூக உணர்வும் ஈடுபாடும் அதிகம் இன்றி வழிபாடு, பக்தி முயற்சிகள், மன்றாட்டு, அருட்சிந்தனை என்பவற்றை மட்டுமே ஆன்மீகச் செயற்பாடுகளாகக் கருதிக் கொண்டு, அவற்றின் வழியில் தங்கள் ஆன்மாக்களைக் காத்துக்கொள்ள முயன்றனர்.

**சமய மாயையா? சொகுசு ஆன்மீகமா?**

மேற்கூறிய பல்வேறு வகைகளில் இதயமற்றதாகியுள்ள சமூகச் சூழமைவில் சமயங்களின் பணி என்ன? இறைவனது அன்பையும் இரக்கத்தையும் அனுபவப்படுத்தி மனித நேயத் தையும் சகோதரத்துவத்தையும் சமநீதியையும் மக்களுடைய உள்ளங்களிலும் உறவுகளிலும் சமூகச் செயற்பாடுகளிலும் வளர்த்துவிடுவதே அவற்றின் பணி. ஆனால், அவற்றின் பெரும் பான்மையான செயற்பாடுகளைப் பார்க்கும்போது அவையும் இதயமில்லாதவையாக மாறிக் கொண்டிருக்கின்றனவோ என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், அவை கோடி கோடியாகக் கொட்டி வானுயர்ந்த கோபுரங்களையும் குவிமாடங்களையும் கொண்ட பெரிய கோயில்களைக் கட்டுதல், ஏழைகள் என்றுகூட வேறுபாடு காட்டாது எல்லாரிடமும் கட்டாய நன்கொடை பிரித்து, ஆடம்பர விழாக்கள் வழிபாடுகளைக் கொண்டாடுதல் என்பவற்றை வாடிக்கையாக நடத்திக் கொண்டிருக்கின்றன. அதுபோல் தெய்வங்கள், புனிதர்களின் திருவுருவங்களுக்கு பல்லாயிரம் செலவில் தங்க நகைகள் அணிவிப்பதும் அவர்களை மாட்சிப்படுத்தும் செயல்களாகவே கருதப்படுகின்றன. ஏழையாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, எளியவராய் வறியவரின் தோழமையில் வாழ்ந்து, இறுதியில் ஆடையின்றி சிலுவையில் இறந்த இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவமும்கூட பல வேளைகளில் இதே பாணியில் செயல்படுவதுதான் வேதனையும் வியப்பும் தரும் உண்மை. இவையெல்லாம் உண்மையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் மாட்சிக்காகவா அல்லது சமயத் தலைவர்கள் அல்லது மக்களின் அல்லது ஊர்த் தற்பெருமைக்காகவா எனும் கேள்வியும் நாம் எழுப்பவேண்டியதே.

இவையெல்லாம் போதாதென்று ஏழை மக்களுக்குத் தங்களையே அர்ப்பணித்துள்ளதாகக் கூறும் அருட்பணியாளர்களும் துறவியரும் அலங்கார வரவேற்புகள், வண்ண வளைவுகள், போலிப் புகழுரைகள், நட்சத்திர உணவு விடுதிப் பாணியில் அறுசுவை விருந்துகள் என்பவற்றுடன் யூபிலிகள் கொண்டாடுவது இன்றைய சமயக் கலாச்சாரம் ஆகியுள்ளது. ஆன்மீகம் என்பது வாழ்வளிக்கும் இறைவனின் அனுபவம் பெற்று இவ்வுலக வாழ்வுப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் மனிதநேய உணர்வுகள், உறவுகள், சமூக ஈடுபாடுகள் என்பவற்றை வளர்க்கவும் ஆற்றல் அளிக்கவேண்டும். வாழ்வைத் தொடாத வரையில் அதாவது, உள்ளங்களையும் உறவுகளையும் ஈடுபாடுகளையும் பரிவிரக்கம் உள்ளவையாக மாற்றும் வரையில் இத்தகைய பக்திச் செயல்பாடுகளெல்லாம் வெறும் சொகுசு ஆன்மீகமே.

இந்நிலையில் ஏழைகளுக்குக் கல்வி, அனாதைகளுக்கு ஆதரவு, நோயாளர்களுக்கு மருத்துவ உதவி, நலிந்தோருக்குச் சமூக சேவைகள் எனும் சமயங்களின் பல்வேறு பணிகள் கூட இன்று மிகவும் நலிந்தும் மெலிந்தும் போய்க்கொண்டிருப்பதும் நாம் பரவலாகக் காணும் யதார்த்தம்.

**பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக**

முதலில் திரு அவை இதயமில்லா உலகில் தன்னையே பரிவிரக்கத்தின் பசுஞ்சோலையாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்குக் கிறிஸ்தவர்கள் முதலில் இறை இரக்கத்தின் கதவுகளுக்குள் நுழைந்து அதை ஆழ அனுபவிக்க வேண்டும். யூபிலிக் கதவுகள் திறக்கப்பட கோயில்களுக்குத் திருப்பயணம் செய்து அக்கதவுகளுக்குள் நுழைவதை திருத்தந்தை அதற்கு உருவகமாகவும் உதவியாகவும் காட்டுகிறார். மேலும், வாழ்வை மாற்றும் வகையில் இரக்கத்தின் இறைவார்த்தைகளைக் கேட்பது, அன்றாடமும் சிறப்பாகத் தவக்காலத் தியானம் வழியாகவும் அது பற்றி அமைதியாக அருட்சிந்தனை செய்வது, இரக்கமுள்ள மனிதர்களாக நாம் வாழ அருளும் ஆற்றலும் கேட்டு மன்றாடுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவழிபாட்டையும் சிறப்பாக ஒப்புரவு அருளடையாளத்தையும் உண்மையிலேயே இறை இரக்கத்தின் அனுபவக் கொண்டாட்டமாக நிகழ்த்துவது, அவசரப்பட்டும் அநீதியாகவும் பிறருக்குத் தீர்ப்பு வழங்குவதைத் தவிர்ப்பது, தவறு செய்கின்றவர் மீதும், குற்றவாளிகள் மீதும் தனிப்பட்ட பரிவு காட்டுவது என்பன இறை இரக்க சமூகமாகத் திரு அவை திகழத் திருத்தந்தை முன் வைக்கும் சில பரிந்துரைகள்.

மேலும் தம் புற ஈடுபாடுகளிலும் திரு அவை எத்தகைய பரிவிரக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனத் திருத்தந்தை பட்டியல் இட்டே காட்டுகிறார். அவை "பசித்தோருக்கு உணவளிப்பது, தாகமுற்றோருக்குக் குடிக்கத் தருவது, ஆடையற்றோரை உடுத்துவது, அந்நியரை வரவேற்பது, நோயாளரை நலமாக்குவது, சிறையிலிருப்போரைச் சந்திப்பது, இறந்தோரை நல்லடக்கம் செய்வது" எனும் உடல்சார் அன்பிரக்கப் பணிகளுடன் உள்ளம் சார் நற்செயல்களாகிய "குழப்பத்திலிருப்போர்க்கு வழிகாட்டுவது, அறியாதவருக்கு அறிவு புகட்டுவது, பாவிகளை மனம்மாற அழைப்பது, துன்புறுவோருக்கு ஆறுதல் தருவது, குற்றங்களை மன்னிப்பது, தீங்கு செய்வோரைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வது, வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் மன்றாடுவது" என்பனவும் ஆகும்.

**இறுதியாக**

நமது ஈழத்துச் சூழமைவில் அதன் சமூக ஈடுபாடும் இன்றியமையாதது. இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு அமைப்புக்களையும் ஆதிக்கங்களையும் அது எதிர்த்தாக வேண்டும். அவையற்ற நலமான சமூகத்தை உருவாக்க அது தன் பங்களிப்பைச் செய்யவேண்டும். ஏனெனில், இதயமற்ற சமூக - பொருளாதார - அரசியல் - பண்பாட்டு - சமய அமைப்புகளே இதயமற்ற மனிதர்களையும் பெரிதும் உருவாக்குகின்றன. இறை இரக்கத்தின் திருமுகம் எனும் தன் மடலில் அதுபற்றி திருத்தந்தை அதிகம் எடுத்துரைக்கவில்லையெனினும் ஊழலைப்பற்றிப் பேசும்போது அதை நாம் துணிச்சலுடன் விட்டொழிப்பதுடன் "வெளிப்படையாகப் போரிட்டு வெல்ல வேண்டிய" கடமையையும் எடுத்துக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06

## "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன."

(மாற்கு. 2:5)

ஒப்புரவு அருட்சாதனம் என்பது பாவத்தின் சாபத்தாலும் குற்றப்பழி உணர்வாலும் துவண்டுபோயிருக்கும் ஒரு தனிநபர் உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஆகும். பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு. மாறாகக் கடவுள் கொடுக்கும் அருட்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு (உரோ.6:23). மனந்திரும்பும் பாவிக்கு இயேசு தன் அன்புச் செயலால் மன்னிப்புக் கொடுக்க விரும்புகிறார். இவ்வாறுதான் இயேசு தன் வாழ்வில் சந்தித்த பாவிகள் அனைவரையும் இறைவனின் பிள்ளை என்ற புது வாழ்விற்குள் அழைக்கிறார். பாவம் என்பது தந்தையின் வீட்டிலிருந்து தன்னிச்சையாக ஒரு தனி நபர் வெளியேறுவதற்கு எடுக்கும் முடிவாகும். ஒப்புரவு அருட்சாதனம் என்பது ஊதாரி மகன் உவமையில் கூறப்பட்டது போல தந்தையின் அரவணைப்பைப் பெற்றுக் கொள்வதாகும். இது பாவத்தில் தன் வாழ்வை அழித்துக் கொண்ட ஒருவருக்கு இயேசு தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்ட முக்கிய பணியான பாவத்திலிருந்து பெறும் மீட்பை உணர்த்துகின்றது. இயேசு இவ்வுலகிற்கு வந்த போது "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்"(யோவான் 3:16) என்று காட்டினார்.

இயேசு தந்தைக்குக் கொடுத்த அர்ப்பணமானது எவரும் அழியாமல் மீட்கப்படுவது என்பதாகும். அவரில் விசுவாசங் கொள்ளும் எவரும் அழியாமல் முடிவில்லா வாழ்வு பெறவேண்டும்.

எனவே, தனது முதல் மறையுரையில் இயேசு அனைவரையும் தன்னிடம் திரும்பும்படி அழைக்கிறார். "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது" (மத் 4:17) என்று இயேசு பறைசாற்றினார். மனமாற்றம் என்பது இறைவனுடைய திட்டத்தின் படி வாழுவதற்கு இறைவனிடம் திரும்புவதற்காக ஒருவர் செய்யும் தீர்மானமாகும். இந்த அழைப்பை இயேசு ஒவ்வொருவருக்கும் கொடுத்து நிறை வாழ்வு பெறுவதற்காக அழைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உலகிற்குத் தீர்ப்பு வழங்க வரவில்லை மாறாக அதை மீட்கவே வந்தேன்" (யோவான் 12:47). பாவம் என்பது தண்டனையையும் சாவையும் குறிக்கின்றது. ஆனால் இயேசு சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியானது பாவத்தின் இத் தண்டனையில் இருந்து மனுக்குலத்தை மீட்கின்றது. இவ்வுலக வாழ்விலும் கூட பாவத்தின் தண்டனையைப் பெற்றவர்களுக்கு விடுதலையைக் கொடுத்தார்.

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் இயேசு முன்பாக இழுத்து வரப்பட்டாள் (யோவா. 8) தீர்ப்புத் தெளிவாயிருந்தது; மோசேயின் சட்டத்தின்படி அவள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும். ஆனால், இயேசுவோ அவளை மீட்பதற்கான பணியை உணர்ந்தார். யூதரின் கரங்களில் கற்கள் எடுக்கப்பட்டிருந்தன. இயேசுவோ இறை ஞானத்தினால் தூண்டப்பட்டவராக உங்களுள் பாவம் இல்லாதவர் இவள் மீது முதற் கல்லை எறியட்டும் என்றார். ஒவ்வொருவரும் தம் கரத்திலிருந்த கல்லை கீழே போட்டுவிட்டு வெளியேறினர் என்று நற்செய்தி குறிப்பிடுகிறது. அனைவரும் வெளியேறிய பின் இயேசு அப்பெண்ணிடம் "எவரும் உன்னைத் தீர்ப்பிடவில்லையா" (யோவா 8:10) என்று கேட்டார். அதற்கு அவள் சொன்ன பதில் ஆச்சரியமானது. "இல்லை ஐயா" (யோவா 8:11). அவள் இவ்வாறு அழைத்தது அவள் இயேசுவை ஆண்டவர் என இனங்கண்டு கொண்டாள் எனக் குறிப்பிடுகிறது. வாழ்விக்கும் ஆண்டவரான இயேசு தன் மீது அதிகாரம் செலுத்த அவள் விட்டுவிடுகிறாள். இந்தத் தீர்மானமானது அவளுக்குத் தெளிவான ஒரு திசையைக் காட்டுகின்றது. இந்த மனமாற்றம் இயேசுவின் பதிலை அவளுக்குக் கொடுக்கின்றது. "நானும் தீர்ப்பளிக்க வில்லை, நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" (யோவா 8:11). நாம் பொறுப்புணர்வோடும் இதயசுத்தியோடும் ஏற்றுக் கொள்ளும் போது இறைவனின் இரக்கம் எமக்குப் பொருள் மிக்கதாக மாறுகின்றது.

இதே விதத்தில்தான் வரிதண்டும் சக்கேயுவின் மன மாற்றத்தைப் பார்க்கின்றோம். பாவத்தினால் தனிமைப் படுத்தப் பட்டிருந்த இந்த மனிதனுக்கு மீட்பைக் கொடுக்கும் தன் பணியை இயேசு உணர்த்துகின்றார். இயேசுவைக்காண வேண்டும் என்று சக்கேயு தீர்மானித்திருந்தார். சக்கேயுவே இறங்கி வாரும் என்று அழைத்து அவர் வீட்டிற்குச் செல்கின்றார். இயேசு இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றது இரக்கத்தின் செயலாக மாறுகின்றது. ஏனென்றால், சக்கேயு தீண்டப்படாத ஒருவராக யூதரினால் பார்க்கப்பட்டார். ஆனால், இயேசுவோ பரிசேயரின் முறுமுறுப்பு, யூதர்களின் மரபு எதையும் பற்றிக் கவலைப்படாமல் சக்கேயுவின் வீட்டிற்குச் செல்லுகின்றார். இயேசுவின் இந்த இரக்கச் செயலுக்கு சக்கேயு தன் வாழ்வு மாற்றத்தினால் பதிலளிக்கின்றார்.

"ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" (லூக்.19:8) என்றார். மீட்பரின் பிரசன்னம் சமுதாயத்திலிருந்து புறம்பாக்கப்பட்ட வரி தண்டுபவருக்கு அடிப்படை மாற்றத்தைச் செய்வதற்குத் தைரியத்தைக் கொடுத்தது. இப்படிப்பட்ட மனமாற்றம் இயேசு கொண்டு வந்த மீட்பிற்கு வழிவகுத்தது. சக்கேயுவும் அவரது குடும்பமும் இயேசு கூறிய புது வாழ்விற்கு, விசுவாச வாழ்விற்கு வருகிறார்கள். "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே!" (லூக்.19:9). நல்ல கள்வன் தன் பாவத்தை உணர்ந்து இறைவனின் இரக்கத்தைத் தேடியபொழுது இயேசு அவருக்கு மன்னிப்பையும், விண்ணகத்தையும் வாக்குப் பண்ணினார். இவ்வுலகப் பணி வாழ்வு முழுவதும் தன்னிடம் வந்தவர்களுக்கு இயேசு மன்னிப்பை வழங்கினார். பாவத்தின் பிடியிலிருந்த அவர்களின் உள்ளத்திற்கு அமைதியைக் கொடுத்தார்.

"கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்முடன் ஒப்புரவாக்கும் திருப்பணியையும் எமக்குத் தந்துள்ளார்" (2கொரி.5:18). திருத்தூதர் யோவான் கூறுவது போல அலகையின் செயல் களைத் தொலைக்கவே இறைமகன் தோன்றினார் (1யோ.3:8). சிலுவையிலே தீமையின் மேலுள்ள இறுதி வெற்றியை அவர் பெற்றார். எல்லாக் காலத்திலுமுள்ள எல்லா மனிதரும் பாவத்தின் மீதுள்ள இந்த வெற்றியில் பங்குபெற வேண்டுமென விரும்புகிறார். இந்த நோக்கத்திற்காகவே இயேசு ஒப்புரவு அருட்சாதனத்தை ஏற்படுத்தினார்.

வானதூதரின் மீட்பர் பற்றிய முதல் வாக்குறுதியை நாம் நினைவு கூரலாம். மண்ணுலகில் அமைதியாகுக! உயிர்ப்பின் பின்னர் ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றி அமைதியைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" (யோவா20:19) என்று வாழ்த்தினார்.

அச்சத்தோடும், அங்கலாய்ப்போடும் இருந்த சீடர்களுக்கு அமைதியைக் கொடுத்தபின் ஆண்டவர் அவர்களை அமைதியின் தூதுவர்களாக ஏற்படுத்தினார். "இயேசு மீண்டும் அவர்களை நோக்கி உங்களுக்கு அமைதியாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்." இதைச் சொன்ன பின் அவர்கள் மீது ஊதி தூயாவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா என்றார் (யோவா.20:21-23). இயேசுவிடம் திரும்பும் எவராவது அழிந்து போகக் கூடாது என்பதற்காகவே திருச்சபை உருவாக்கப்பட்டது. தந்தையினால் இயேசு எதற்காக அனுப்பப்பட்டாரோ அதே பணி இப்போது திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப்பணிதான் திருத்தூதர்களிடமும், அவர்களது வழி வருபவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்புரவு அருட்சாதனத் தொட்டியில் ஒரு பாவி அருட்பணியாளரை அணுகும்பொழுது அவர் உயிர்த்த இயேசுவோடு உறவு கொண்டு உயிர்ப்பின் மகிமையில் பங்கு பற்றுகின்றார். ஆனால், விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் போல தான் இயேசுவிடம் திரும்பியுள்ளதாகவும் ஆண்டவர் இயேசுவுக்குத் தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் திருச்சபைக்கு வெளிப்படுத்த வேண்டும்.

தீமை என்பது இறைவனுக்கெதிராக மனிதன் செய்யும் தெளிந்த தீர்மானமாகும். இது அவனுள் பாவத்தின் வலிமையைக் கொண்டு வந்து படைத்தவருக்கெதிராகத் தன் இதயத்தைத் திருப்புவதற்கு வழிவகுக்கின்றது. மனித உள்ளத்திலிருக்கும் கொடூரமான இந்நிலையைப் பவுலடியார் விளக்கும் போது, "நான் செய்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை எதைச் செய்ய விரும்புகிறேனோ அதைச் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்" என்று கூறுகிறார் (உரோ 7:15).

இத்தகைய ஈர்ப்பு ஒரு பாவி தீமையைச் செய்வதற்கு அவனது உள்ளத்தைத் தூண்டிக் கொண்டே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுலடியார் கூறுவதுபோல பாவத்திற்கு அவனை அடிமையாக்குகிறது. எவ்வளவு காலத்திற்கு இத்தகைய பாவத்திற்கு அவன் நீடிக்கிறானோ அவ்வளவிற்கு அவன் மீது பாவத்திற்குள்ள வல்லமையும் நீடிக்கிறது. இப்படிப்பட்ட தீமையை நாம் புறக்கணிக்கவோ, மூடி மறைக்கவோ முடியாது. இதை நாம் முறியடிக்கவே வேண்டும். பாவத்திற்கான பொறுப்பை நாம் ஏற்று அதில் இருந்து விடுபடும் தீர்மானத்தை எடுக்கும் போதுதான் நாம் இவ்வாறு வெளிவர முடியும். ஒப்புரவு அருட்சாதனத்திற்குப் போவதற்கு முன்னர் நாம் இத்தகைய தெளிவான தீர்மானத்தைச் செய்ய வேண்டும்.

"அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்." தனக்காகக் காத்திருக்கும் அருட்பணியாளர் வழியாக இறைவனுக்குத் தம் உள்ளத்தைத் திறப்பதற்குப் பாவம் செய்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஒரு இயல்பான, ஆழமான தூண்டுதல் இருக்கின்றது. மனித உள்ளத்தின் மீது ஒரு பெரிய பாரமாக பாவம் அழுத்திக் கொண்டிருக்கிறது. பாவம் செய்தவர் தன் தவறுகளை வெளிப்படுத்தி, தன் இயலாமையைத் தெளிவு படுத்தும் பொழுது திருச்சபையின் பெயரால் அருட்ணியாளர் அவரை ஏற்றுக்கொண்டு இறைவனின் அதிகாரத்தினால் அவருக்கு மன்னிப்பு வழங்குகிறார். ஒப்புரவு அருட்சாதனத்தில் நிகழும் நிகழ்வுகளைத் திருப்பாடல் 32 தெளிவாக்குகின்றது.

"என்பாவத்தை அறிக்கையிடாதவரை, நாள் முழுவதும் நான் கதறி அழுததால், என் எலும்புகள் கழன்று போயின. ஏனெனில் இரவும், பகலும் உம் கை எனக்கு எதிராக ஓங்கி நின்றது. கோடையின் வறட்சி போல என் வலிமை வறண்டு போயிற்று (தி.பா. 32: 3-4). தன்னுடைய உள்ளத்திலே பாவத்தை மறைத்து வைத்திருக்கும் ஒவ்வொரு பாவிக்கும் நடப்பது இதுதான். அவருக்குள்ளேயிருக்கும் பாவத்தின் வல்லமை தொடர்ந்தும் அவரை வாட்டி வதைத்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் இறைவனின் பிரசன்னத்திலே பாவ மன்னிப்பை வழங்கும் அதிகாரம் உள்ள அருட்பணியாளர்முன் இவற்றை வெளியே கொட்டும் பொழுது அவருடைய உள்ளத்திலே இனம்புரியாத அமைதி ஏற்படுகிறது.

"என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன். என் தீச் செயலை நான் மறைத்ததில்லை; ஆண்டவரிடம் என் குற்றங்களை ஒப்புக்கொள்வேன் என்று சொன்னேன். நீரும் என் நெறி கேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், பாவத்தையும் போக்கினீர்" (தி.பா.32:5). பாவங்கள் மன்னிக்கப்பட்டன, என்ற இந்த வாக்குறுதிதான் வாழ்வின் ஆசீர்வாதமாக மாறுகிறது. "எவரது குற்றம் மன்னிக்கபட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ, அவர் பேறுபெற்றவர். ஆண்டவர் எந்த மனிதரின் தீச்செயலை எண்ணவில்லையோ எவரது மனத்தில் வஞ்சம் இல்லையோ, அவர் பேறுபெற்றவர் (தி.பா.32:1-2) திருச்சபையின் பணியிலே ஒப்புரவு அருட்சாதனத் தைப் பொறுத்தவரையில் ஓர் உன்னதமான தன்மை உண்டு. சாதாரணமாகத் திருச்சபையிலே ஓர் விசுவாசி பலருள் ஒருவரா கத்தான் கணிக்கப்படுகிறார். இறைவார்த்தையை உரைக்கும் பொழுதென்றால் என்ன, திருப்பலி ஒப்புக்கொடுக்கும் பொழு தென்றால் என்ன இவ்வாறுதான் நடைபெறுகின்றது. ஆனால் ஒப்புரவு அருட்சாதனத்தின் பொழுது அவர் இறைவனோடு தனித்திருக்கின்றார். அந்நேரத்தில் திருச்சபையும் அவருக்காக மட்டுமே காத்திருக்கின்றது. ஒப்புரவு அருட்சாதனத்திலே பாவிக்கும், இறைவனுக்குமிடையிலே ஒரு தனிப்பட்ட உறவு ஏற்படுகின்றது.

"நம்பிக்கையுடன் இறைவனிடம் வேண்டும் போது நோயுற்றவர் குணமாவார்" (யாக்.5:15). தியானத்திற்கு வந்த ஓர் இளைஞன் இவ்வாறு சாட்சியம் சொன்னான். தன்னுடைய வாழ்வைச் சீரழித்துக் கொண்டான். தீய பழக்கங்கள் அவனை ஆட்கொண்டுவிட்டன. இளைஞனாக இருக்கும்போது மது போதைக்கும், புகைத்தலுக்கும் அடிமையாகிவிட்டான். போதை வஸ்துவிற்கு அடிமையாகாவிட்டாலும் அதன் மட்டிலே பாரிய ஈர்ப்பு அவனுக்கிருந்தது. அவன் எப்போது கடைசியாக ஒப்புரவு அருட்சாதனத்திற்குச் சென்றான் என்று கேட்டேன். எத்தனையோ வருடங்களாகிவிட்டன. குருக்கள் சாதாரண மனிதர்கள் தானே, அவர்களிடம் பாவ அறிக்கை செய்வதில் எனக்கு நம்பிக்கை இல்லை. என் உள்ளத்திலுள்ள குற்றங்களை நான் இறைவனிடம் நேரடியாகச் சொல்லுகிறேன். ஆனால் உடனடியாக அதே பாவங்களுக்குள் வீழ்ந்து விடுகிறேன் என்றான். அவனுடைய பாவப்பழக்கம் அவனுக்குள் ஆழமாக வேர் விட்டு விட்டது. அவன் தோற்கடிக்கப்பட்டான் என்பதை உணர்ந்தான். நான் அவனிடம் தீமைகளின் சக்திகளுக்கெதிராக அவன் வெற்றி கொள்ள முடியும் என்று கூறினேன். அது ஒப்புரவு அருட் சாதனத்தில் மட்டுமே நிகழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அது இயேசுவினால் ஏற்படுத்தப்பட்டது. உயிர்ப்பின் பொழுது ஏற்படுத்தப்பட்டு பாவத்தின் மீது அவர் பெற்ற வெற்றியிலே பங்குபெற வழிவகுக்கிறது. தனிப்பட்ட விதத்திலே எம் பாவங்களை அறிக்கை செய்வது தீமை மீது நாம் வெற்றி கொள்ள எடுக்கும் முயற்சிதான். ஆனால் ஒப்புரவு அருட் சாதனத்திலே நாம் அறிக்கையிடுவது மனுக்குலத்தை இறைவன் மீட்பதற்குச் செய்யும் செயலிலே நம்பிக்கை கொள்வதாகும். ஒருவர் பாவம் செய்யும் போது அவர் பாவத்திற்கு அடிமை யாகின்றார்."பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என உறுதியாக உங்களுக்கச் சொல்கிறேன்" (யோவா.8:34). ஒரு அடிமை தன் சொந்த முயற்சியானால் தன்னை மீட்க முடியாது. இதனால் தான் தந்தையாகிய இறைவன் மனுக்குல மீட்பிற்காக இயேசுவை அனுப்பினார். இயேசு தன் இறப்பினாலும், உயிர்ப்பி னாலும் பாவத்தின்மீது வெற்றி கொண்டார். இந்த வெற்றிக்கான அருள் தனிப்பட்ட விதத்திலே எமக்கு ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இதை உயிர்த்த இயேசுவே நமக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த இளைஞன் ஒப்புரவு அருட்சாதனத்தின் அவசியம் பற்றி நம்பிக்கை கொண்டான். தன்னை நன்கு ஆயத்தம் செய்து தன் பாவச்சுமைகள் அனைத்தையும், ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாக இறைவனின் கரத்தில் ஒப்படைத்தான். தன் உள்ளத் திலே பெரும் அமைதியையும், தீமைக்கெதிரான விடுதலையையும் அவன் உணர்ந்தான். நான் அவனிடம் சோதனைகள் வரத்தான் செய்யும், அவை பற்றி விழிப்பாயிருக்க வேண்டும். சோதனை களையும், பாவத்திற்கான ஈர்ப்புக்களையும் ஒவ்வொரு நாளும் திருப்பலியின் போது பீடத்தில் ஒப்புக்கொடுத்து பாவத்திற்கு மறுப்புக்கூறும் வல்லமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறினேன். அவன் தன்னுடைய முயற்சிகளிலே மிக நேர்மையாக இருந்து ஒரு விடுதலை பெற்ற மனிதன் ஆனான். அவன் தன்னுடைய பொறியியல் துறையிலே முன்னேறி எவ்வாறு இறைவன் ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் தன்னைக் காப்பாற்றினார் என்று சாட்சியம் கூறி வருகின்றான்.

"வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம் என்கிறார் ஆண்டவர். உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன. எனினும் உறைந்த பனிபோல வெண்மையாகும்" (எசா.1:18) என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் ஆண்டவர் எம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார். ஒப்புரவு அருட்சாதனத்திலே நாம் இயேசுவின் தனிப்பட்ட அன்பை அனுபவிக்கின்றோம். கிறிஸ்துவின் இரத்தம் எம்மைத் தூய்மையாக்கி சிலுவையில் பெற்றுக்கொண்ட புதுவாழ்வை எமக்குத் தருகின்றது. இதுவே உயிர்ப்பின் கொடை. நாமனைவரும் கிறிஸ்துவின் தூய்மையிலே வாழுவோம்.

**செபம்**

ஆண்டவராகிய இயேசுவே! பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து எம்மை மீட்க நீர் வந்தீர். நாம் முயற்சிகள் பல செய்தும் எம்மை மீட்கத் தவறி விட்டோம். இப்பொழுது எம்மை உமது கரத்திலே ஒப்படைத்து ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் எம்மை வழிநடத்த வேண்டுகின்றோம். நீர் பாவிகளோடு தனிப்பட்ட முறையில் பேசியது போல அருட்பணியாளர்கள் மூலம் எம்மோடு பேசும். உயிர்ப்பின் வல்லமையினால் எம்மைப் புதுப்படைப்பாக்கும். திருச்சபைக்காக நாம் உமக்கு நன்றி கூறுகின்றோம். உம்முடைய ஆவியானவர் எம்மை உமது தூயாவியாலும் அன்பினாலும் உமக்கு உரியவராக்குவாராக! ஆமென்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07

# இயேசு பிறப்பார்... ! ...?

மார்கழி மாதம் என்றாலே மனங்கள் குளிர்ந்து மகிழ்ச்சி பெருக்கெடுக்கும். விழா என்றாலே யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் கிறிஸ்மஸ் விழா என்றால் சொல்லவா வேண்டும்? கனவுகளெல்லாம் நனவாகும் நேரம். அன்றாட வாழ்க்கைச் சலிப்பினிடையே புதுத்தெம்பூட்டி நம் மகிழ்ச்சியைப் பெருக்கும் ஒரு நல்ல விழா கிறிஸ்மஸ்.

குதூகலமெல்லாம் கிறிஸ்மஸ் அல்ல. நள்ளிரவில் திருப் பலி கண்டு, குடிலில் காணும் பாலனை பக்தியோடு முத்தி செய்தால் மட்டும் போதாது. இயேசுவின் பிறப்பு நம் வாழ்க்கையில், சமூகத்தில், திருச்சபையில் ஒரு செய்தியாக மாறாவிட்டால் மற்ற எல்லாமே ஒரு மயக்கமேதான்.

### குழந்தையின் பிறப்பு நாள்

"நமக்காகவும் நம் மீட்புக்காகவும் கன்னி மரியிடமிருந்து பிறந்து மனிதன் ஆனார்" என்று நம் விசுவாச அறிக்கை நமக்கு உணர்த்துகின்றது.

இறைவனின் படைப்பு இன்னும் முடிந்தபாடில்லை. எப்போது மனிதன் முழுமை பெறுகின்றானோ, அப்போது படைப்பும் முழுமை எய்தும். கடவுளின் மனித வருகை, மனிதனை இறைவனுக்காக மட்டுமன்று அவனை முழு மனிதனாக்கவும், புது மனிதனாக்கவும் தான். தனிமையிலே தத்தளிக்கும் மனிதன் பழைய மனிதன். இறைவனோடும் பிறரோடும் உலகோடும் உறவு முறிந்த நிலையில் நிற்பவன் அவன். கிறிஸ்துவில் புது உறவு பிறக்கின்றது. அவர் வழியாக இறைவனின் பிள்ளையாக மாறுகின்றான் மனிதன். "பழைய மனிதன்" என்னும் இருளிலிருந்து இயேசு நம்மை இன்று தம் வியத்தகு ஒளிக்கு இட்டுச் செல்கின்றார். அவரோடு பிறக்கும் புது மனிதனுக்கு இரவே இல்லை. இறைவனின் வாழ்வு புது மனிதனில் சுடர்விட்டெரி கின்றது. ஆவியின் செயல்கள் அன்பு, நீதி, இரக்கம், சமாதானம் என்பவை. இந்த மதிப்பீடுகளையெல்லாம் தம் வாழ்வின் அடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாகக் கொண்டு செயல்படும் ஒவ்வொரு மனிதனும் இயேசு வோடு இறைவனின் பிள்ளையாகப் பிறக்கின்றான்.

### மதிக்கப் பழக வேண்டும்!

நம் சமூகம், சில பொருட்களுக்குக் கொடுக்கும் மதிப்பைக்கூட, மனிதனுக்குக் கொடுக்க மறுக்கின்றது. கார், ஸ்கூட்டர், கமரா, செல்போன் - அதுவும் "வெளிநாட்டுப் பொருள்" என்றால் அவைகளுக்குத் தனிப்பெருமை, பெரும் மவுசு. இவையெல்லாம் நம் குட்டித் தேவதைகள்! அதே நேரத்தில் வீட்டில் பணிவிடை செய்வோரின் ஏழ்மை, வீதியில் பிச்சை எடுப்போரின் பரிதாப நிலை - இவை நம் உள்ளத்தைத் தொடுவதில்லை. ஏதோ மனமிருந்தால் - அந்த மனமும் இரங்கினால், ஒரு சில சில்லறைக் காசுகள். அவ்வளவுதான் அவர்களின் தகுதி. மனிதனைவிடப் பொருட்கள் எப்போது நம் உள்ளத்தின் அடி ஆழத்தில் பெரிதாகத் தோன்றுகின்றதோ, அப்போது நமக்கு இன்னும் கிறிஸ்மஸ் கொண்டாடத் தகுதியில்லை என்றுதான் பொருள்.

இறைவனைப் போல மனிதனை மதித்தவர் இதுவரை யாருமில்லை. அடிப்படையில் அவனுக்கு உரிமை வாழ்வு அளிக்க வல்லவரும் அவரே. தன்னைச் சிறைப்படுத்தும் பல்வேறு அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெற முயன்று வந்துள்ளான் மனிதன். அவனால் முடிகிறதா? அவன் ஒரு அடி முன்னெடுத்து விடுதலைப் பாதையில் செல்லும்போது, இரு முழம் சறுக்கி இன்னும் பெரிய அடிமைக் குழியில் சிறைப்படுகின்றான். ஒளி மயமான பூரண சுதந்திர வாழ்வை அவன் பெற வேண்டுமென்றால், முழுமையான சமூகத்தை அவன் படைக்க வேண்டுமென்றால், மனிதனை இறைவன் மதிப்பது போல அவனும் மதிக்க வேண்டும், அன்பு செய்யப் பழகவேண்டும்.

### நீங்கள் அறியாத ஒருவர்?

கண்ணுக்குப் புலப்படாதவர் கடவுள். அவர் விண்ணுலகில் இருக்கின்றார், அவரை அண்ணார்ந்து பார்த்து ஆராதனை செய்வோம் - என்று நினைக்கின்றான் மனிதன். ஐயோ அவர் அருகிலே வேண்டாம், நம் வாழ்வின் அலங்கோலங்களை அவர் எங்கே பார்த்துவிடப் போகிறாரோ, அவர் தொலைவிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கட்டும் - என்று அவர் பிடியிலிருந்து நழுவப் பார்க்கிறான். ஆனால் அவரோ இல்லை இல்லை..... நான் உன் வாழ்வில் உறைய விரும்புகிறேன். உன்னைப்போல் ஒருவனாக இருக்க விழைகின்றேன் என்று நம்மிடையே குடிகொள்ள வருகின்றார். கடவுள் நம்மோடு (இம்மானுவேல்) என்பதே அவர் பெயர்.

கிறிஸ்மஸ் விழா இறைவனின் அருகாமையை உணர்த்தும் விழா. வாயளவில் நம்மைப்போல் மனிதன் என்று கூறினாலும் அவரது மனிதத் தன்மையில் ஏனோ நமக்கு இன்னும் நம்பிக்கை இல்லை. அவரை எட்டாத தூரத்தில் இருப்பவராக இன்னும் பார்க்கின்றோம். அப்படி அவர் அருகில்தான் உள்ளார் என்பதை நாம் அறிந்தாலும்கூட, அது பலவேளைகளில் நகர வாசிகள் தம் அண்மை வீட்டுக்காரரை அறிவது போல்தான்!

அவரோ, நம்மோடு உறவாடி முற்றிலும் நம்மைச் சார்ந்திருக்க விரும்புகின்றார். அவர் பிறந்த மாடடை குடில் பிறருக்குச் சொந்தமானது. அவர் பயணம் செய்த படகுகள் பிறருடைய உடைமைகளாய் இருந்தன. அவரைச் சுமந்து சென்ற கழுதையும் பிறருக்கு உரியது. ஏன், அவரை அடக்கம் செய்த கல்லறையும்கூட பிறருக்கே உரியது. நமக்கு உரிய அத்தனையும் அவர் பகிர்ந்து கொண்டார். நமக்கோ அவர் தன்னையே சொந்தமாக்கினார். "ஏனெனில் அவர் செல்வமிக்கவராய் இருந்தும் அவருடைய ஏழ்மையில் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார்" (2கொரி. 8:9).

கிறிஸ்துவின் பிறப்பு ஒரு தொடர் நிகழ்ச்சி. பாலஸ் தீனாவில் அன்று பிறந்த இயேசு இன்று ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு கலாச்சாரத்திலும், மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலை களிலும் பிறக்க வேண்டும். உலகிற்குச் சொந்தமான அவர், வரலாற்றுக்குச் சொந்தமான அவர், ஒவ்வொரு மனித இதயத்திற் கும் மட்டுமல்ல, ஒவ்வொரு சமூகத்திற்கும், பண்பாட்டிற்கும்கூடச் சொந்தமானவர். இதுவும் அவர் வரவில் பின்னிப் பிணைந்திருக்கும் உண்மை. விண்ணுலகில் அணி செய்து மேல் மாடியிலிருந்து இறக்கி அவரை உலகில் தவழவிடவில்லை பரமதந்தை. மாறாக அவர் மண்ணிலிருந்து வருகின்றார் மரியின் உதரத்திலிருந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைக் கண்ணீரா?

அன்று சூசையும் மரியாளும் சத்திரத்தில் இடமின்றித் தத்தளித்ததை நினைக்கும்போது மனம் உருகுகின்றது. இயேசு மாட்டுத்தொழுவத்தில் பிறக்க நேர்ந்ததை எண்ணும் போது நம் நெஞ்சம் அழுகின்றது. கண்ணீர் சொரிகின்றது. நான் அன்று பெத்லேகேமில் இருந்திருந்தால் இயேசுவுக்குக் குளிர்காய என் உடையை நிச்சயமாக அளித்திருப்பேன். உண்மைதானே? மாட்டுத் தொழுவத்தில் கிடந்தவர் இயேசு என்று எனக்கு இன்று தெரிந்ததனால் அல்லவா அவ்வாறு கூறுகின்றேன்! அன்று பெத்லேகேமில் இருந்திருந்தால் நானும் அந்த ஊரைப் போலத் தான் நடந்திருப்பேன். இயேசுவை இனம் கண்டிருக்கமாட்டேன்.

ஆனால் அந்தோ! இன்று இயேசு எங்கே இருக்கின்றார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆம், அவர் ஏழையின் குடிசையில் உள்ளார். நோயுற்றோரிடம், புறக்கணிக்கப்பட்ட வறியவரிடம், பெற்றோரை இழந்த ஏழை அனாதைச் சிறுவரிடம் உள்ளார். இதை அறிந்தும் அவருக்கு நான் யாதொன்றும் செய்யாது போனால், என் நெஞ்சம் அன்று பிறந்த இயேசுவின் நிலையை நினைந்து வருந்தி என்ன பயன்? நடக்காது என்று திட்டமாகத் தெரிவதால்தான் நல்லெண்ணங்கள் தோன்றுகின் றனவோ? இன்று இயேசுவுக்கு என் உடையை அளிக்கத் தயார் தானே? இன்று ஏழைகளில் காணும் இயேசுவின்முன் என் நெஞ்சம் உருகுகின்றதா? நம் இதய வீட்டில் எவ்வளவோ இடமிருந்தும் அதில் வறியவர்களுக்கு இடம் கொடுக்காமல், பெத்லேகேமில் அன்று இயேசுவுக்கு இடம் கிடைக்வில்லையே என்று கண்ணீர் வடித்துப் பயன் என்ன?

இயேசுவின் பிறப்பை நாம் இன்று தேடிச் செல்ல வேண்டியது கோயில்கள் தோறுமுள்ள குடில்களில் அல்ல, மாறாக குடிசைகளில். இறைவனின் செயல்முறை நமக்கு விந்தையாக இருக்கலாம். எளியவரை முறியடிக்க இன்னும் அதிக வலிமையைப் பயன்படுத்துகின்றான் மனிதன். எவன் வல்லவனோ அவனுக்குத்தான் வெற்றி வாகை. எவன் பணக்காரனோ அவனுக்குத் தான் நாற்காலி. இறைவனுங்கூட அவனோடுதான் இருப்பதாக எண்ணித் தன்னையும் பிறரையும் ஏமாற்றிக் கொள்கின்றான். மாறாக வலுவின்மையின் வழியாக, ஏழ்மையின் வழியாக, குழந்தை வழியாக, எளியவரை உயர்த்துவதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக, வலியவரைத் தலை குனிய வைக்கின்றார். ஆம், குடிசையின் குட்டையான வாயிலில் நாம் தலைகுனிந்து சென்றால் தான் இயேசுவைக் காணமுடியும்.

### அமைதியின் இரவு?

சமாதானம் என்றால் வெறும் அமைதி நிலையெனப் புரிந்து கொள்கிறோம். ஆன்மாவைச் சார்ந்தது அது என நினைக் கின்றோம்.

விவிலியக் கண்ணோட்டத்தில், மனிதனின் முழு நலனையும் சார்ந்தது சமாதானம். அது, இவ்வுலக நலன்களாலும், இறைவனோடும் பிறரோடும் கொள்ளும் நல்லுறவாலும் பிறக்கிறது. உலகோடும் உடன் மனிதரோடும் உறவு முறிந்த நிலையில் சமாதானம் இருக்க முடியாது. கிறிஸ்மஸ் இரவு தரும் சமாதானம், ஏழைகளுக்கு நீதி வழங்கி வறியவர்க்கு உறுதுணையுமாக இருக்கும் நன் மனத்தவர்க்கு உரியது.

கிறிஸ்மஸ் இரவு நமக்குச் சமாதானத்தின் இரவா? இல்லை, இல்லை....... ஏழ்மையில் ஒடுங்கிக் கிடக்கின்ற மூன்றில் இரண்டு பகுதி மனித குலத்தின் அழுகைக் குரல் அந்த இரவின் நிசப்தத்தில் தெளிவாகத் தொனிக்கின்றது. மரத்துப்போன மனச்சாட்சி சமாதானம் அற்றுப்போகின்றது. ஆம், அதுவே அருளின் தொடக்கம், கிறிஸ்து பிறந்துவிட்டார் - நீதியின் ஆதவன் தோன்றிவிட்டார் என்பதற்கு முதல் அறிவிப்பு. இனி அவன் தன் சமாதானத்தை இழந்து, கிறிஸ்து அளிக்கும் சமாதானத்தைத் தேடியாக வேண்டும்.

### நல்ல மனத்தவர்க்குக் கிறிஸ்மஸ் விழா

எங்கெல்லாம் சுதந்திரம், நீதி, சேவை, அன்பு நிலை பெறுகின்றதோ, மனிதர்கள் சமத்துவத்தைக் கடைப்பிடிக்கிறார் களோ, அங்கெல்லாம் இயேசு பிறக்கின்றார். எங்கு அன்பின் உரையாடல் நடக்கின்றதோ அங்குதான் அவர் குடிகொள்கின்றார். திறந்த உள்ளங்களில்தான் இயேசு தம் கூடாரத்தை அமைக்கின் றார். இதை யாரும் மறுக்க முடியாது.


கிறிஸ்தவர்களில் கிறிஸ்தவர் அல்லாத பழைய மனிதர்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களில் உண்மைக் கிறிஸ்தவர்கள், புது மனிதர்கள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் வருகையின் இறுதிப் பொருளை, அதாவது அவர் கொணர்ந்த உண்மையையும் அருளையும் நீதியையும் யார் தம் வாழ்வின் மையமாகக் கொண்டுள்ளார்களோ, அவர்களில்தான் கிறிஸ்து பிறக்கின்றார். இம்முறையில் இயேசுவின் பிறப்பு பல கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடந்த கால நிகழ்ச்சியல்ல; மாறாக இன்னும் நடைபெறாத ஒரு நிகழ்ச்சி. கிறிஸ்தவர்கள் அல்லாத பலருக்கும் - நல்மனத்தோர்க்கு, கிறிஸ்மஸ் ஒரு உண்மை நிகழ்ச்சி, மகிழ்ச்சியின் செய்தி. ஏனெனில் அவர்கள் வாழ்வே அவரோடு மலரக் காண்கிறார்கள். நல்மனத்தோர் அனைவருக்கும் சொந்தமான இயேசு பிறப்பு, கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகின்ற நமக்கு இன்னும் சொந்தமில்லை என்ற நிலையா?





கடவுளின் மனித வருகை, மனிதனை இறைவனாக்க மட்டுமன்றி அவனை முழு மனிதனாக்கவும், புது மனிதனாக்கவும் தான். தனிமையிலே தத்தளிக்கும் மனிதன் பழைய மனிதன். இறைவனோடும் பிறரோடும் உலகோடும் உறவு முறிந்த நிலையில் நிற்பவன் அவன். கிறிஸ்துவில் புது உறவு பிறக்கிறது. அவர் வழியாக இறைவனின் பிள்ளையாக மாறுகின்றான் மனிதன். 'பழைய மனிதன்' என்னும் இருளிலிருந்து இயேசு நம்மை தம் வியத்தகு ஒளிக்கு இட்டுச் செல்கின்றார். இறைவனின் வாழ்வு மனிதனில் சுடர்விட்டெரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08

# இயேசுவே மாதிரி

கடவுளின் மனித அவதாரத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இயேசுவே அந்த அவதாரம். அவர் உண்மையான இறைவன், உண்மையான மனிதன். இயேசு உண்மையான மனிதன் என்றால் அவர் முழுமையான மனிதன். இயேசுவின் முழுமையான மனிதத்தை ஏற்றுக்கொண்டால், அவருடைய பாலியல்பை நாம் ஏற்றே ஆகவேண்டும். ஏனெனில் பாலியல்பு பாவமல்ல. பாலியல்பு முழு மனிதத்தின் ஒரு கூறு, ஒரு அம்சம். இயேசுவின் பாலியல்பை ஏற்றுக்கொள்ளாமல் அவரது மனித அவதாரத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இயேசுவும் இறையாட்சிக்காக மணத்துறவு பூண்டவர். ஆனால் பாலியல்பைத் துறக்கவில்லை. பாலியல்பின் உயிரோட்டமான, மிகவும் இன்றியமையாத தன்மையான உறவுப் பாலியல்பை ஏற்றுக்கொண்டார். உறுப்புப் பாலியல்பைத் துறந்தார். பாலியல்பை உண்மையான மனிதத் தன்மையுள்ளதாக ஆக்கும் பண்புகள் அன்பு, பரிவு, பாசம், இரக்கம், நன்னயம், கருணை போன்றவையாகும். இப்பண்புகளால் அலங்கரிக்கப்படும் உறவுப் பாலியல்பை ஏற்றுக்கொண்டார். பெண்களோடு அவர் கொண்டிருந்த உறவு இதன் வெளிப்பாடாகும். பெண்களைத் தனது நற்செய்திப் பணியில் சீடர்கள் வட்டத்திற்குள் ஏற்றுக்கொண்டார் (லூக். 8:1-3). இளம் பெண்கள் இருவர் இருந்த லாசரின் வீட்டுக்கு அடிக்கடி சென்றார், உணவு உண்டார் (லூக்.10:38-42, யோவா.12:1-3). பெண்களிடம் தனியாகவும் பேசினார் (யோவா.4:27). பாவத்தினாலும், நோயாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் தன்னைத் தொடரவும் அனுமதித்தார் (லூக்.7:36-39, 8:46, யோவா.20:17). மகதலா மரியா மீது அவருக்கிருந்த சிறப்பான அன்பினால் உயிர்த்த பின் அவருக்குத் தோன்றியது மட்டுமல்லாமல் (மாற் 16:9), பெண் திருத் தூதராகவும் அவரை உயர்த்தினார் (யோவா.20:17-18). இவ்வாறு பெண்களுடன் நெருங்கிய உறவை, ஆரோக்கியமான உறவை ஏற்படுத்திக்கொண்டார். உறுப்புப் பாலியல்புச் சோதனைகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள செபத்தில் தினமும் ஈடுபட்டார் (லூக்.9:28, 11:1, மாற் 6:46). நோன்பிருந்து தன்னை ஒறுத்துக்கொண்டார் (லூக்.4:2). மேலும் பகல் முழுவதும் நற் செய்தியை அறிவிக்கும் பணியிலும், நோய்களைக் குணமாக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்ததால் சோதனைகளுக்கு இடமில்லாது போயிற்று. இவ்வாறு முழுமனிதனாக, நிறைவுள்ளவராக வாழ்ந்தார். அவரே நமது மாதிரி.

**நிறைவாக**

இருவகைப் பாலியல்பும் பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றுக்கொன்று நெருக்கமானவை. இன்றும் கிராமங்களில் சாதாரண மக்கள் பயன்படுத்தும் ஓர் அழகிய உருவகம் இந்த நெருக்கத்தைப் பளிச்சென்று எடுத்துக்காட்டும். மக்கள் இருபாலாரையும் நெருப்புக்கும் பஞ்சுக்கும் ஒப்பிட்டு "நெருப்பும் பஞ்சும் நெருங்கினால் தீ நிச்சயம் உண்டாகும். எனவே எச்சரிக்கை தேவை" என்று சொல்லுவார்கள்.

பாலியல்பு மானிடரை வெகு எளிதில் உடல் ஒன்றிப்புக்கு ஈர்க்கும் தன்மையுடையது. ஆகவே மனித முழுமைக்கும் இன்றியமையாததாகிய உறவுப் பாலியல்பை அணிந்துகொண்டு, உறுப்புப் பாலியல்புக்கு ஈர்க்கப்படாமலிருக்க செபம், நோன்பு, போன்ற இயற்கைக்கு மேலான சாதனங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். மட்டுமல்ல, மனித இயல்புக்கு உட்பட்ட சில செயல்களையும் மனதிற் கொண்டு வாழ்ந்தால் இறையாட்சி மலர நாம் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வு இன்னும் வளம் பெறும்.

1. இன்றைய கலாச்சாரம் மனிதனை ஒரு தனித்தீவாக்கும் கலாச்சாரம். மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று தெரிந்தும், தனிமையின் இறுதி எல்லைக்கு நாம் சென்றுவிடக்கூடாது. நம்மை நாமே தனிமைப்படுத்துதல் போன்ற நிலைக்கு (Individualism) ஆளாக்கிவிடக்கூடாது. இந்தச் சோதனையை வெல்லவேண்டும். எனவே மாதந்தோறும் நடக்கும் ஞான ஒடுக்கக் கூட்டங்களில் கலந்து கொள்வது மட்டும் போதாது. மறைப் பணியாளர்கள் ஐந்து அல்லது ஆறு பேர் சேர்ந்து (அருகிலுள்ள பணித்தளங்களிலுள்ளவர்கள் அல்லது ஒரே குருத்துவக் கல்லூரியில் படித்தவர்கள் முதலானோர்...) ஒரு ஆதரவுக் குழுவை (Core Support Group)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி, வாரம் ஒருமுறை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை கூடிக் கலகலப்புடன் உரையாடி, பிரச்சினைகளைப் பகிர்ந்து (பாலியல்பு பிரச்சினைகளையும் கூட), ஆரோக்கிய மான மனநிலையை உருவாக்கலாம்.

2. ஒரு நல்ல அனுபவமிக்க ஆன்ம ஆலோசகரைத் தெரிந் தெடுத்து மாதம் ஒருமுறை அவருடன் உரையாடலாம்.
3. மதுப் பழக்கத்துக்கு அடிமையாவதையும், கவர்ச்சிப் படங்கள் போன்றவற்றைத் தொலைக்காட்சியிலும், கணினியிலும் பார்ப்பதையும் தவிர்க்கலாம்.
4. இளம் பெண்களை அவசியமின்றித் தனியாகச் சந்திப்பதைத் தவிர்த்து, அவர்களை முடிந்தவரை பெற்றோர் அல்லது உற்றாரோடு சந்திப்பது நல்லது.
5. இறுதியாக ஆனால் முக்கியமாக நம்மை நாம் பல பயனுள்ள அலுவல்களில் ஈடுபடுத்திக்கொண்டு சோம்பேறித்தனத்தை தவிர்க்கலாம். "சோம்பேறியின் மனம் சாத்தானின் பணிமனை" என்பதை மறத்தலாகாது.

மானிட இனத்தை ஒரு குடும்பமாகப்
பார்க்கும் அளவுக்கு, ஏற்கும் அளவுக்கு
காட்சியும், இதயமும் விரிவடைய வேண்டும்!
இத்தகைய சிறப்பியல்பினைப் பெற்று வாழ்பவன்
காலத்தின் நிறைவினைக் கண்டு களிக்கின்றான்!
கடவுளின் அரசினில் அங்கம் வகிக்கின்றான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

# இயேசுவின் பணியைத் தொடர்தல்

### விடுதலையாளர் இயேசு

விடுதலையே காலங்காலமாக தமிழ் ஆன்மாவின் தேடலாக இருந்து வந்திருக்கிறது. வேதங்களும், உபநிடதங் களும் பகவத் கீதையும் பக்தி இலக்கியங்களும் வாழ்வின் இறுதிக் கதியாகக் காட்டுவது மட்டுமல்ல, இங்குள்ள சமயங்கள் வகுத்துத் தந்துள்ள ஆன்மீக முறைகள், அறநெறிகள் அனைத்தின் குறிக்கோளும் விடுதலையே. தமிழ் மரபில் விடுதலையைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல் முக்தி அல்லது மோட்சம் என்பது.

தமிழ் மக்கள் தேடியுள்ள விடுதலை எத்தகையது? அது பெரிதும் காலத்தின் சுழற்சியிலிருந்து, கர்மாவின் பிடியிலிருந்து பிறவிகளின் தொடர்ச்சியிலிருந்து தப்பித்துக்கொள்வதே. அவற்றில் மனித ஆன்மாவைச் சிக்கவைக்கும் இவ்வுலகப் பற்றுகள், பாசங்கள், ஈர்ப்புக்கள், ஈடுபாடுகள் எனும் மாயையி லிருந்தே அவர்கள் முக்கியமாக விடுதலை தேடியுள்ளனர். இவ்வாறு ஈராயிரம் ஆண்டுகளாக இந்தியச் சமயங்களின் மிகப்பெரும் தேடலாக இருந்துவந்துள்ளது மறுமை சார்ந்த ஆன்மீக அல்லது அக விடுதலையே. விவேகானந்தர், மகாத்மா காந்தி, அரவிந்தர், வள்ளலார் போன்ற அண்மைக் கால இந்தியச் சிந்தனையாளர் பலர் இந்த மரபு விடுதலைத் தேடலின் மறக்கப்பட்ட மறு பக்கத்தை வலியுறுத்தியுள்ளனர். உண்மையான விடுதலை என்பது இம்மையையும் மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் சார்ந்தது என்பதை அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்து சமயத்தின் சில மரபுகளிலும் மக்கள் சமயத்தின் பல்வேறு வடிவங்களிலும் குறிப்பாகத் தமிழகத்துச் சித்தர்களின் சிந்தனைகளிலும் இத்தகைய இம்மை நோக்கு ஏற்கனவே முக்கிய இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களும் பன்நெடுங்காலமாக விடுதலையையே தேடியுள்ளனர். அதனைச் சங்க காலத் தமிழர் வீடு அல்லது வீடுபேறு என அழைத்தனர். விடுதலை என்பது அவர்களுக்கு வீடு வந்து சேருவதே. அதாவது தமது உண்மை மனிதத்தை, முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வு எனும் வளர்ச்சியை அடைவதே. விடுதலை என்பது அவர்கள் இவ்வுலகிற்கு அப்பால் இன்னோர் உலகில் தேடியது அல்ல. தங்கள் மனித இயல்புக்கும் இந்த மண்ணக வாழ்வுக்கும் அப்பால் வேறு எங்கோ அது கிடைக்கும் என அவர்கள் நம்பவும் இல்லை. இதனால் அவர்கள் உடலைத் தீயது எனக் கருதவில்லை இவ்வுலகைப் புறக்கணிக்கவும் இல்லை. மாறாக இவ்வுலகில் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் நிறைவாகப் பெற்று வாழ்வதே வீடு அல்லது விடுதலை என அவர்கள் கருதினர். ஊரார், உறவினருடன் பகிர்ந்து வாழ்வதே அவர்களது மானம். உரிமையைப் பறிக்க வந்த பகைவரை எதிர்த்து நிற்பதே அவர்களது வீரம். இவ்வாறு மானத்தோடும் வீரத்தோடும் வாழ்ந்து இறந்து மக்கள் நினைவிலும் வாழ்விலும் நிலைத்திருக்கும் புகழே அவர்கள் கண்ட மறுமை. வடக்கிலிருந்து நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் காரணமாகத் தமிழரின் இந்த விழுமிய விடுதலைப் பார்வை வீழ்ந்தது. உலகே மாயம், வாழ்வே மாயம் எனும் விரக்தி வேதாந்தம் தமிழர் மனதிலே ஊன்றப் பெற்றது. இன்று, இன்னொரு பண்பாட்டுப் படையெடுப்பு நிகழ்கிறது. இது மேற்கத்திய நாடுகளில் இருந்து வரும் முதலாளித்துவ நுகர்வுப்பண்பாடு இங்கே பரப்பப்படுவதுதான். இதன் காரணமாக அறமும் பகிர்வும் குன்றித் தனக்கு மட்டும் வாழ்க்கை வசதிகளையும் சொகுசுகளையும் பெருக்கிச் கொள்வதே விடுதலை எனும் புதிய மாயை இங்கே புகுத்தப் பட்டுள்ளது.

**இலங்கையின் இன்றையத் தேவையும் தேடலும்**

இன்று நமது மக்களில் பலர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்கள். பசியாலும் பட்டினியாலும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய வழியின்றி வாழும் இவர்களுள் பலர் வேலை அற்றவர்கள். வேறு பலர் நோயாளர்கள், இளம் வயதிலேயே இறப்பவர்கள். இன்னும் பலர் கொத்தடிமைகள், சிறார் தொழிலாளர்கள், குடிப்பழக்கத்திலும் குற்றங்களிலும் ஈடுபடு பவர்கள், அனாதைகளாகக் கைவிடப்பட்ட குழந்தைகள், முதியோர். இவர்களது முக்கிய தேடல் வறுமையிலிருந்து விடுதலை.

நம் நாட்டு மக்கள் தொகையில் பாதியினராகிய பெண்கள் இங்கு இரண்டாம் தரக் குடிமக்களே. கருச்சிதைவு, குழந்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை, குறைந்த கல்வி, குறைந்த உரிமை, அதிக உழைப்பு குறைந்த கூலி, வரதட்சணை, வன்முறை, மனைவி எரிப்பு, மறுமண மறுப்பு என எத்தனையோ கொடுமைகளுக்கு இவர்கள் இன்றும் ஆளாக்கப்படுகிறார்கள். இவர்களது தலையாய தேடல் ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை.

நம் நாட்டுப் பொதுமக்கள் கோடி கோடியாகப் பணத்தைக் கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகளால் ஏமாற்றப்படுகிறார்கள். சாதி வெறி, சமயவெறி, பணக்குவிப்பு, பதவி மோகம், அதிகார மமதை என்பவற்றில் மூழ்கிக்கிடக்கும் பல போலிச் சமய வாதிகளால் ஏமாற்றப்படுகிறார்கள். உழைக்கும் மக்கள், குறிப்பாக ஊர்ப்புற அல்லது ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள், பெருநிலப் பண்ணையார்களாலும் உள்நாட்டு, பன்னாட்டு முதலாளிகளாலும் சுரண்டப்படுகிறார்கள். நடுத்தர மக்களுள் பெரும்பாலோர் புதுப்புது வாழ்க்கை வசதிகளும் பொழுது போக்குகளும் சுகங்களுமே சொர்க்கம் என நுகர்வு வெறிக்கு ஆளாகிக் கிடக்கின்றனர். இளைஞர்கள் வேலையின்மைக்கு வருங்கால வாழ்வு பற்றிய நம்பிக்கையின்மைக்கு இலக்காகித் திரைப்பட மோகம், தலைமை வழிபாடு, போதைப்பழக்கம் முதலியவற்றுக்கும் பெரும் எண்ணிக்கையில் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவர்க்கும் இன்றைய முக்கிய தேவை விடுதலை.

**இலங்கையில் இயேசு விடுதலையாளரே**

“இருளிலிருந்து ஒளிக்கும், பொய்மையிலிருந்து உண்மைக்கும், சாவிலிருந்து வாழ்விற்கும் எங்களை இட்டுச் செல்” என்பதுதான் உபநிடதங்களின் காலத்திலிருந்தே இங்குள்ள மக்கள் இறைவனை நோக்கி எழுப்பிய வேண்டுதல். இன்றும் இதுவே அவர்களுடைய விடுதலை மன்றாட்டாக இருக்கிறது. ஆனால் இன்று அவர்கள் வேண்டும் ஒளி ஆன்மீக இருளாகிய மாயைகளிலிருந்து விடுதலை மட்டும் அல்ல, அவர்களது வாழ்வைச் சூழ்ந்திருக்கும் வறுமை, அறியாமை, நோய் போன்ற இருட்டுகளிலிருந்தும்தான். அவர்கள் தேடும் உண்மை, தவறான சமய நம்பிக்கைகள் எனும் பொய்மையிலிருந்து விடுதலை மட்டும் அல்ல அரசியல்வாதிகள், சமயவாதிகள், சமூகத் தொடர்பு ஊடகங்கள் என்பவற்றின் பொய்களிலிருந்தும்தான். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கும் வாழ்வு பாவம் எனும் ஆன்மாவின் சாவிலிருந்து விடுதலை மட்டும் அல்ல இன்று அவர்களைச் சிறிது சிறிதாக அன்றாடம் சிதைத்துக்கொண்டிருக்கும் சாதியம், பொருளாதார அநீதிகள், சமூகக் கொடுமைகள், அமைப்பு முறையிலான வன்முறைகள் எனும் சாவுகளிலிருந்தும்தான்.

அவர்களுக்குத் தேவை விடுதலை அல்ல, ஆன்மீகமே என்பவர்கள் அவர்களை மட்டும் அல்ல, ஆன்மீகத்தையும் சரியாக அறியாதவர்கள் என்பதே பொருள். இத்தனை அடிமைத்தனங்கள் மலிந்த இந்த மண்ணிலே பயணிக்கும் இயேசு விடுதலை வீரராகத்தான் இருக்கமுடியும். இல்லை என்றால் அவர் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அந்நியமானவரே.

ஈராயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவம் இங்கு மீட்புப் பற்றிப் பேசியுள்ளது. மீட்பு என்பது முழு மனித விடுதலையே அன்றி வேறு எதுவும் இல்லை. ஆனால் இயேசு அளித்த, இன்றும் அளித்துக் கொண்டிருக்கின்ற முழு மனித மீட்பைக் காலப் போக்கில் கிறிஸ்தவம் பல வேளைகளில் வெறும் அக மீட்பாக, பாவங்களிலிருந்து ஆன்மாவைக் காக்கும் செயலாக மட்டுமே புரிந்தும் விளக்கியும் வந்துள்ளது. இதனால் இவ்வுலக வாழ்வில் இறைவனது உருவும் சாயலுமான மனிதரை ஊனப்படுத்தும் பல்வேறு சமூக-பொருளாதார-அரசியல்-பண்பாட்டு ஆதிக்கங் களையும் அநீதிகளையும் கண்டுகொள்ளாது மறுமையை நோக்கியே மக்களின் மனதை அது ஈடுபடுத்திக்கொண்டிருந்தது உண்டு. ஆனால் இன்றைய இலங்கைக்கு இன்றியமையாத தேவை உண்மையான, நிறைவான விடுதலையே.

இன்றைய இலங்கையும் தமிழ்ச் சமூகமும் ஏங்கும் உண்மையான விடுதலையைத் தருபவர் இயேசு. அவர் அகவாழ்வைப்பற்றி மட்டுமே அருளுரை ஆற்றும் ஓர் ஆன்மீகவாதி அல்ல. கோவில்களிலும் வெளியிலும் பக்தி வழிபாடுகளோ பரவசக் கூட்டங்களோ மட்டும் நடத்தும் ஒரு சமயவாதியும் அல்ல. அவர் ஒரு விடுதலையாளர். மக்கள் இறைவனின் பிள்ளைகளாக வாழ வழிகாட்டியவர். அவர்களை அடிமைப்படுத்தியிருந்த எல்லா வகைத் தளைகளையம் எதிர்த்து நின்றவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மட்டும் அல்ல, இன்றும் அவர் தருவது முழு மனித விடுதலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடுதலையின் ஊற்றும் நிறைவும் இறைவனே!**

இயேசு வழங்குவது வெறும் உளவியல் அல்லது உலகியல் சுதந்திரம் அல்ல. அது இறைவனின் பிள்ளைகளுக்கு உரிய தன்னுரிமை. இயேசு வழங்கும் விடுதலையின் ஊற்றும் நிறைவும் இறைவனே. மனிதர்கள் இறைவனின் படைப்புக்கள். அவர்களது இயல்பின் மையமும் இருப்பின் ஊற்றும் அவரே. அவருடன் கொண்ட உயிர் ஒன்றிப்பில்தான் அவர்கள் உண்மை மனிதர்களாக வாழ முடியும். அவருடன் தொடர்பு இழந்த மனித வாழ்வுகள் கயிறு அறுந்த பட்டங்கள், காற்றில் சாயும் மரங்கள்.

மனிதர் கடவுளின் படைப்புகள் மட்டும் அல்ல, அவருடைய அன்புப் பிள்ளைகளும் ஆவர். இதுவே அவர்களது மிகப்பெரும் மாண்பு. அவர்களது மறுக்கப்படமுடியாத தனிமனித உரிமை களுக்கும் சமத்துவ சகோதரத்துவ உறவுகளுக்கும் சமூக நீதிக்கும் அடிப்படை. எந்தப் படைப்புக்கும் மனிதருக்கும் சமூக அமைப்புக்கும் அவர்கள் அடிமைகள் ஆகலாகாது; எதுவும் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அதற்குக் காரணம், அவர்கள் கடவுளின் பிள்ளைகள் என்பதே. கடவுள் ஒருவரைத் தவிர, வேறு எவருக்கும் எதற்கும் அவர்கள் மேலானவர்கள். அவர்களுடைய நலனும் வளர்ச்சியுமே இவ்வுலகில் உள்ள வேறு எதையும்விட முதலும் முக்கியமும் ஆனவை. எந்தச் சூழமை விலும் கட்டாயம் பாதுகாக்கப்படவேண்டியவை. அவற்றின் அடிப்படையில் அவற்றைக் கேள்விக்கு உட்படுத்தக்கூடிய அமைப்போ அதிகாரமோ, சட்டமோ, சமய மரபோ, கோட்பாடோ கருத்தியலோ எதுவுமே இவ்வுலகில் இல்லை.

விடுதலை வாழ்வு என்பது கடவுள் தம் மக்களுக்குத் தந்துள்ள அன்புப் பரிசு, அரிய கொடை. அதில் அவர்கள் வளரமுடியும், அதை அவர்கள் இழந்துவிடவும் முடியும். கடவுளின் பிள்ளைகள் எனும் உணர்விலும் உறவிலும் அவர்கள் வாழும்போது உண்மையான விடுதலையை அவர்கள் அனுபவிக்கிறார்கள். அந்த உணர்வை இழந்து விடும்போது அந்த உறவை மறந்தோ அல்லது முறித்தோ விடும்போது அவர்கள் அடிமைத்தனங்களுக்கு ஆளாகின்றார்கள். இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் இதை நாம் தெளிவாகக் காண்கிறோம். அவர்கள் உண்மைக் கடவுளை விட்டுப் போலித் தெய்வங்களை நாடும்போது, அவரது உடன்படிக்கையின் விடுதலைச் சட்டத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ப வாழத் தவறும்போது, அவர்கள் தங்கள் தன்னுரிமையை இழக்கின்றனர்; அந்நியர் ஆட்சிக்கு அடிமை ஆகின்றனர். பாவம் என்பது இதுவே. இறைவனுடன் உள்ள விடுதலை உறவை விட்டுப் படைப்பு எதற்காவது மனிதர் தங்களையே அடிமையாக்கிக்கொள்வதே பாவம்.

இறைவனுடன் மனிதர் கொண்டிருக்க வேண்டிய இந்த உறவை உருவாக்குவதும் வளர்ப்பதுமே இயேசுவின் விடுதலைப் பணியின் மையமும் அடிப்படையுமாக இருந்தது. இதற்காக அவர் இறைத்தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் தம் படிப்பினையாலும் பணியாலும், அனைத்திற்கும் மேலாகத் தம் அன்புறவுகளாலும் ஆளுமையாலும் மக்களுக்கு வெளிப் படுத்தினார்; அவர்கள் மனம்மாறி எல்லாவற்றிற்கும் அதிகமாக இறைவனுக்கு அன்புசெய்ய அவர்களை அழைத்தார்; அவர்களுடைய பாவங்களை மன்னித்து அவர்களைத் தந்தையுடன் ஒப்புரவு ஆக்கினார். இப்பணியின் உச்சமே அவரது சிலுவைச் சாவு.

**இறையாட்சிக்கு இன்றியமையாதது சமூக விடுதலை**

இறைவனுடன் மனிதர் கொண்டிருக்க வேண்டிய ஒன்றிப்பு ஏனைய இவ்வுலக உறவுகளும் தொடர்புகளும் இல்லாத வெறுமையில் நிகழ்வது அல்ல. மாறாக, மனித வாழ்விற்கு. இன்றியமையாத இவ்வுலக ஈடுபாடுகள், உறவுகள், மனித ஆளுமைக்கு இயல்பான பல்வேறு பரிமாணங்கள் என்பவற்றின் ஆழத்திலும் அவற்றின் வழியாகவும்தான் இறையுறவை மனிதர்கள் அனுபவிக்க முடியும். அதை வாழ்ந்து அதில் வளரமுடியும். இவ்வாறு இறை உறவும் அவர் தரும் விடுதலையும் இன்றியமை யாத மூன்று பரிமாணங்களைக் கொண்டவை. சமூக, உறவு, உள்ளப் பரிமாணங்களே அவை. இந்த மூன்று பரிமாணங்கள் அல்லது தளங்களில்தான் அந்த விடுதலை முக்கியமாக அனுபவிக்கப்படுகிறது, வாழப்படுகிறது, வெளிப்படுகிறது. அதற்கு எதிராக முக்கிய அடிமைத்தனங்களும் இந்த மூன்று தளங்களைச் சார்ந்தவையே. இந்த மூன்று தளங்களிலும் அடிமைத்தனங்கள் அனைத்தும் நீங்கி அன்பும் உண்மையும் நீதியும் பொங்கிப் பெருகும் நிலையே முழு விடுதலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் சார்பு மனிதருக்கு இயல்பானது. அவர்களது பிறப்பும் வாழ்வும் வளர்ச்சியும் சமூகத்தில்தான் நிகழ்கின்றன. அவர்கள் சார்ந்துள்ள சமூகத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, சமயச் சூழமைவு அவர்களுடைய அனுபவங்களையும் ஆளுமையையும், உணர்வுகளையும் உறவுகளையும், விழுமியங் களையும் வாழ்க்கை முறையையும் ஆழமாகப் பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, சாதியச் சமூகம் மனிதர்களைச் சமத்துவம் அற்றவர்கள் ஆக்குகின்றது; ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள் எனும் சகோதர உறவிற்கு அது தடையாகிறது. நுகர்வுவெறி மக்களின் மனித நேய உணர்வுகளை மட்டும் அல்ல, இறை உணர்வையும் மழுங்கடிக்கிறது. இதனால் சமூக-பொருளாதார-அரசியல்-பண்பாட்டு-சமய விடுதலை இன்றி முழு மனித விடுதலை இல்லை. இயேசுவின் இறையாட்சிப் பணியிலும் சமூக விடுதலை இன்றியமையாத இடம் பெறுகிறது. இறையாட்சி என்பது அடிமைத் தனங்கள் எதுவும் இன்றிக் கடவுளின் பிள்ளைகள் எனும் உறவுடனும் உரிமையுடனும் மாந்தர் வாழும் விடுதலைச் சமூகம். “ஆட்சி” எனும் சொல் அதன் சமூக, அரசியல் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. சமத்துவச் சமூகம், பகிர்வுப் பொருளாதாரம், ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை, சுதந்திர அரசியல், பரிவிரக்கப் பண்பாடு, மனிதநேயச் சமயம் என்பன இயேசு கொண்டுவந்த விடுதலையின் இன்றியமையாத கூறுகள். சாதியம், வறுமை, பொருளாதாரச் சுரண்டல், ஊழல் அரசியல், கலாச்சாரச் சீரழிவு, சமயவெறி என்பன இயேசு கொணர்ந்த விடுதலைக்கு எதிரானவை. மனிதருக்கு எதிரான இவை இறைவனுக்கும் பகையானவையே. இவற்றிற்கு எதிரான சமூக, அரசியல் ஈடுபாடும் புரட்சிகரச் செயல்பாடும் இன்றி உண்மையான விடுதலை வாழ்வு இல்லை, ஆன்மீகமும் இல்லை.

**உறவுகளிலும் விடுதலை உதயம்**

உறவே மனிதம் என்பர். உறவுகளே மனிதரைப் பெரிதும் உருவாக்குகின்றன. அவர்களது ஆளுமைகளின் அக, புறக் கூறுகளை நிர்ணயிக்கின்றன. சமூக-பொருளாதார அமைப்புகளும் அரசியல் செயல்பாடுகளும் பண்பாட்டுப் பாணிகளும் பார்வைகளும் மாறும்போது உறவுகள் மாறுகின்றன. அதுபோல உறவுகள் மாறும்போது சமுதாயங்களும் மாறுகின்றன என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையே. எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்திலே பெரும்பாலானோர் சகோதர உறவுகளுடன் பழகத் தொடங்கினால் அதில் சாதியம் வீழ்ந்துவிடும்தானே!

இயேசு வழங்கும் விடுதலை, உறவுகளையும் சார்ந்தது. எல்லாரும் ஒரே இறைத்தந்தையின் மக்கள், உடன்பிறப்புகள் என்பது அவருடைய போதனை. எனவே உறவுகளில் உயர்வு தாழ்வு பாராட்டுதல், பகைமைகள், பழிவாங்கும் செயல்கள், பிளவுகள், பணம், பதவி, படிப்பு, பால், பக்தி என்பவற்றின் அடிப்படையிலான ஆதிக்கங்கள், சாதி, சமயம், இனம், மொழி, என்பவற்றின் அடிப்படையிலான ஒதுக்கல்கள், அடிமைப் போக்குகள், அதிகாரத் துதிபாடல்கள், தலைமை வழிபாடு, அடுத்தவர்மீது குறிப்பாகத் தேவையிலும் வறுமையிலும் இருக்கிறவர்கள்மீது அக்கறையின்மை என்பவை இறையாட்சிக்கு எதிரானவை எனச் சொல்லாலும் மாதிரியாலும் அவர் எடுத்துக்காட்டினார். அதற்கு மாறாக, சகோதர நல்லுறவே உண்மையான வழிபாடு, இரக்கமே உயர்ந்த பலி, மன்னிப்பே தெய்வீகம் என்றார். அவர் நிறுவிய இறையாட்சி எனும் விடுதலைச் சமூகத்தின் உறுப்பினரிடையே ஏற்றத் தாழ்வுகள் இல்லை எல்லாரும் அதில் சகோதரர்களே, சமமானவர்களே. அதில் பகைமைகள், வெறுப்புகள் இல்லை. யூதத் தீவிரவாதியான சீமோனும் உரோமையருக்கு வரி தண்டிய மத்தேயுவும் அதில் தோழர்களே. ஆண், பெண் எனும் பாகுபாடு அதில் இல்லை இருபாலரும் அதில் சம உரிமையும் பொறுப்பும் உள்ள சீடர்களே. ஆள்பவர் என்றும் அடிமைகள் என்றும் அதில் இல்லை. ஏனெனில் தலைவர்கள்கூட அதில் பணியாளர்களே. இத்தகைய சமத்துவமும் சகோதரத்துவமும் உறவுகளில் இயேசு கொணரும் உண்மையான விடுதலைக் கூறுகள்.

**உள்ளத்து ஊனங்களை நலமாக்கியவர்**

சமூக அநீதிகளும் ஆதிக்க உறவுகளும் உள்ளங்களை ஊனப்படுத்துகின்றன. அத்தகைய ஊனங்களுள் மிகக் கொடியவை அவை உருவாக்கும் அடிமை மனநிலையும் ஆற்றலற்ற உணர்வுமே. பல வேளைகளில் சமூக அடிமைத்தனங்களும் ஆதிக்க உறவுகளும் தொடருவதற்குக் காரணமாகின்றன. எனவே உள்ளங்களில் விடுதலை ஏற்படாத வரை முழு விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை என்பதே பொருள். அனால் அக விடுதலை இயேசு ஆற்றிய பணியின் முக்கிய ஒரு பகுதியாகவும் பரிமாணமாகவும் இருந்தது.

இன்றுபோல் அன்றும் ஏராளமான மக்கள் தன் வெறுப்புக்கும் தாழ்வு மனநிலைக்கும் ஆளாக்கப்பட்டுத் தங்களையே மனதார ஏற்க மறுத்தனர்; குற்றப்பழி உணர்வுக்கு இலக்காகி உள்ளூரக் கூனிக் குறுகி நின்றனர். நினைவிலே ஆறாத பல காயங்கள், மனதில் பல அச்சங்கள், அவர்களால் கட்டுப்படுத்த இயலாத ஆசைகள், பழக்கங்கள், வெறியாகிவிட்ட உணர்ச்சி வேகங்கள் என அவர்களிடம் எத்தனையோ உளவியல் பிரச்சினைகளும் ஊனங்களும் இருந்தன. இவற்றின் விளைவாக அவர்களுள் பலர் உடல் நோய்களால் பாதிக்கப்பட்டனர். வேறு சிலர் மனநோய்களுக்கு ஆளாகி அலகையால் பீடிக்கப் பட்டவர்களாகக் கருதப்பட்டனர்.

அவர்கள் அனைவர்க்கும் இயேசு தருவது அன்பு, மன்னிப்பு, நம்பிக்கை, நலம். அவர் அவர்களை ஏற்றுக் கொள்வதால் அவர்களும் தங்களை ஏற்றுக்கொள்கிறார்கள்; அவர் அவர்களை அன்புசெய்ததால் அவர்களும் தங்களை அன்பு செய்கிறார்கள்; அவர் அவர்களை மன்னிப்பதால், மதிப்பதால், நம்புவதால் அவர்களும் தங்களை மன்னித்து, மதித்து, நம்புகிறார்கள். இதனால் அவர்களுடைய அகப்புண்கள் ஆறுகின்றன, அச்சங்கள் நீங்குகின்றன, உள்ளத்தில் ஆற்றல்கள் பிறக்கின்றன, உணர்ச்சிகள் விழுமியக் குறிக்கோள்களை நோக்கி ஆற்றுப்படுத்தப்படுகின்றன, அவர்களைப் பீடித்திருந்த நோய்கள் நீங்குகின்றன, கவலைகள் விலகுகின்றன.

இவ்வாறு அவர்கள் உள்ளத்தில் விடுதலை பெறுகின்றனர். இறையாட்சிக்கு இயல்பான சகோதர உறவுகள் கொள்ளவும் சமநீதிச் சமூகம் செய்யவும் ஆற்றல் பெறுகின்றனர். இயேசுவின் இத்தகைய உள்ளத்து விடுதலைப் பணிக்குச் சமாரியப் பெண்ணும், சக்கேயுவும், குணமடைந்த முடக்குவாதமுற்றவரும், கேரசேனர் பகுதியில் நலம்பெற்ற பேய் பிடித்தவரும் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

இயேசு வழங்கும் விடுதலையில் மேற்கூறிய முப்பெரும் பரிமாணங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து இயங்குபவை, ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கிடப்பவை, ஒன்றுக்கொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாதவை, ஒன்றை ஒன்று முழுமையாக்குபவை. சூழ்நிலையின் தேவையைப் பொறுத்து அவற்றுள் ஏதாவது ஒன்றை முதன்மைப்படுத்துவது முக்கியமாகலாம். எடுத்துக் காட்டாக, சமூக நீதி நிலவும் நாடுகளில் அந்த விடுதலையின் உளவியல், உறவுப் பரிமாணங்கள் அதிக அழுத்தம் பெறலாம். ஆனால் சமூக அநீதிகள் மலிந்த இலங்கைச் சூழமைவில் அதன் சமூகப் பரிமாணம் முன்னிறுத்தப்படுவது காலத்தின் அறிகுறிகள் காட்டும் கடவுளின் அழைப்பு. ஆனால் இவ்வாறு ஒரு பரிமாணத்தை முதன்மைபடுத்துவது, அதுவே இயேசு வழங்கும் விடுதலையின் முழுமை எனக் கருதும் ஊனமுற்ற ஒன்றைப் பரிமாணப் பார்வைக்கு இட்டுச் சென்றுவிடக்கூடாது. ஏனெனில் உள்ளம், உறவுகள், சமூகம் ஆகியவை இணைந்து நிற்பதே மனிதம். இந்த மனிதத்தைச் சார்ந்த எதுவுமே இயேசுவுக்கு அந்நியமானது அல்ல. அன்றும் இன்றும் இயேசு முழு மனித விடுதலையாளரே.

**இறுதியாக**

இயேசுவைச் சடங்குகளாகவும் சட்டங்களாகவும் சமய நிறுவனங்களாகவும் ஆக்கிவிட்டோம். ஆனால் அவரை நம் வாழ்வாக்க மட்டும் தவறிவிட்டோம் என்கிறார் செபஸ்தியான் காப்பன் எனும் இறையியலாளர். இன்றைய கிறிஸ்தவத்தைப் பற்றி அவர் செய்யும் இந்த விமர்சனம் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றலாம். எனினும் அதை முற்றிலும் தவறு என நாம் தள்ளிவிடுவதற்கில்லை. சடங்குகள், சட்டங்கள், கோட்பாடுகள், நிறுவனங்கள் என்பவை தேவைதான். ஆனால் அவை அல்ல கிறிஸ்துவத்தின் மைய நோக்கம். அவை எவ்வளவோ பழமையும் பெருமையும் அருமையும் அழகும் கொண்டவையாக இருக்கலாம். எனினும் அவற்றை கட்டிக் காத்துக்கொண்டிருப்பது அல்ல கிறிஸ்துவ வாழ்வின் தலையான குறிக்கோள். இயேசு உயிருள்ள ஒரு நினைவு, வாழ்வளிக்கும் தெய்வீக உறவு, மனிதத்தின் மாபெரும் விடுதலைச் சக்தி. அவர் நமது வாழ்வாக வேண்டும். அதற்கு எந்த அளவு அமைப்புகளும் மரபுகளும் உதவுகின்றனவோ, அந்த அளவுக்கே அவை அர்த்தமுள்ளவை, அவசியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு இன்றும் உயிருள்ள ஒரு நினைவு. அவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து, முடிந்துபோன வெறும் கடந்தகாலக் கதை அல்ல. வரலாற்று மனிதராக இவ்வுலகில் வாழ்ந்தபோது அக்கறையும் ஈடுபாடும் இன்றி அவர் இருக்க வில்லை. பிறருக்கும் சமூகத்திற்கும் என்ன நிகழ்ந்தால் என்ன, எப்படியாவது தான் மட்டும் வசதியாக வாழ்ந்து விட்டால்போதும் எனும் மனநிலையுடன் அவர் வாழவில்லை. மாறாக, அவர் பற்றி எரியும் நெருப்பாக வாழ்ந்தார். "மண்ணுலகில் தீ மூட்டவே வந்தேன். அது இப்போதே பற்றி எரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்" (லூக் 12:49) என்றார். அவரது நெஞ்சில் எரிந்த இறையாட்சி எனும் இலட்சிய நெருப்பின் பிழம்புகளே அவருடைய சொல்லும் செயலும் வாழ்வும். இறுதியாக அந்த இலட்சியத் தீயில் அவர் தம்மையே தியாகத் திருவேள்வி ஆக்கியதுதான் அவரது இறப்பும் உயிர்ப்பும். அந்த இயேசுவின் நெருப்பு நினைவு இன்றும் தொடர்கிறது, நம்மைத் தொடுகிறது. நம் உள்ளத்தின் பொய்மைகள் போலிகள், நமது சமூகத்தின் மாயைகள் மயக்கங்கள் அனைத்தையும் சுட்டெரித்து மனிதநேய உணர்வுகளுடனும் இலட்சிய உறுதியுடனும் புரட்சிகர விழுமியங்களுடனும் அது நம்மை வாழ அழைக்கிறது.

நமக்கும் சரி, திரு அவைக்கும் சரி எதிரிகள் எப்போதும் இருப்பார். இது நமக்கு ஒரு வலிமையையும் தாழ்ச்சியையும் தரவேண்டும். இவ் எதிரிகளை நாமே நம் செபம் வழி, செயல் வழி முடியடிக்க முயலவேண்டும். அதற்கு நமக்கு இறை நம்பிக்கை இருக்க வேண்டும். "அவனின்று அணுவும் இசையாது" என்னும் மனத்திடன் நமக்கு வேண்டும். துன்பம், தீமை முதலியன நம்மை அண்டுவதே நமது நம்பிக்கையை வளர்க்கவே என்னும் மனப்பாங்கோடு, இவற்றை ஈண்வன் துணையோடு எதிர்ப்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# இயேசுவின் உருவில் வளர்தல்

முகவுரை

இயேசுவுக்கு பக்தர்கள் பலர். சீடரோ சிலர். அவரைப் பார்க்க, பரவசமாக, பக்தியோடு இரந்து கேட்க என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஆனால் அவரோடு உடனிருக்க, உடன் பயணிக்க, உண்மைச் சீடனாக சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவைப் பின்செல்ல சிலரே உண்டு. அந்த சிலருள் நீரும் ஒருவரா...?

நாளாந்த சிலுவை சுமத்தல்
சீடனாய் இருப்பதற்கான முதல் தகுதி.
ஆனால், பொன்னால் சிலுவை
மரத்தால் சிலுவை மட்டும் அணிந்து
திரிவோரே மிகுதி.
துயருறுவோர் ஆண்டு
உகைமே வலிகளின் கூண்டில் இன்று
துயர்துடைக்கும் கதைகள் வேண்டாம்
செயல்கள் ஆற்றும் கரங்கள் வேண்டும்.
அன்றாட தேவை வேண்டி
மன்றாடும் மக்களால் ஆலயம் நிறைந்தது - ஆனால்,
ஒற்றை வெரோனிக்காளின் முகம் துடைத்த வீரம்
சற்றும் இல்லாமல் போனதே.
அயலில் பசியிருக்கும்
அநீதி குடியிருக்கும்
சுயநலமாய் நாங்கள் அயர்ந்திருப்போம்.
சீரேனே ஊர் சீமோன் பற்றி
வாரம் ஒருமுறை பேசிக்கொள்வோம்.
எங்கள் மேசையிலிருந்து விழும்
ரொட்டித் துண்டுகளுக்காய்
இலாசர்கள் காத்துக்கிடக்கின்றார்கள்
பணக்காரத் தன்மையிலிருந்து கீழிறங்கு!
உண்மை சீடனாய் வாழ்வதற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீடராக வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வு**

கிறிஸ்தவர்களுக்கு இயேசுவைப்பற்றிய ஆழமான அறிவு இன்னும் அதிகம் தேவை. ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்து மைய வாழ்வு. அது அவருடைய உள்ளத்தையும் உணர்வுகளையும் எண்ணத்தையும் விழுமியங்களையும் தமதாக்கி வாழ்வது. கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் (பிலி 2:5) என இதையே தூய பவுல் எடுத்துரைக்கிறார். மேலும், கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம் (எபே.4:13) என்கிறார். இயேசுவின் இலட்சியத்தைத் தமதாக்கி, தம் வாழ்வாலும் சமூக ஈடுபட்டாலும் அந்த இலட்சியக் கனவைத் தம் சமூக வரலாறு ஆக்க முனைபவரே உண்மைக் கிறிஸ்துவர். இவ்வாறு கிறிஸ்துவ வாழ்வு என்பது இயேசுவைப் பின்தொடரும் சீடத்துவ வாழ்வு, இலட்சிய அர்ப்பணத்தின் வழி அவருடன் ஒன்றித்த வாழ்வு.

இதனால் கிறிஸ்துமைய வாழ்வு உண்மைக் கிறிஸ்து மைய வாழ்வாக வளருகிறது. இவ்வாறு, "நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள்" (யோவா 15:5) என இயேசுவுடன் உயிர்த் தொடர்பு உருவாகிறது "இனி வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:20) எனும் உறவும் ஒன்றிப்பும் தொடர்கிறது. "உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை..." (கலா 4:19) எனும் தூய பவுலின் கனவு நனவாகிறது. இத்தகைய சீடத்துவ அன்புறவிலும் ஒன்றிப்பிலும் வளர இயேசு பற்றிய ஆழ்ந்த அறிவு கிறிஸ்துவர்களுக்கு இன்றியமையாதது. அவருடைய இலட்சியங்கள், போதனைகள், ஈடுபாடுகளை அறிந்திருக்கும் அளவுதான் அவர்கள் அவரை ஆழமாக அன்பு செய்ய முடியும். அவரை உண்மையாகப் பின்தொடர முடியும்.

இத்தகைய சீடர்களின் இயக்கமே திருச்சபை. அது இயேசுவின் நினைவை நிகழ்வாக்கவேண்டும்; அவருடைய வார்த்தைகளை அறிக்கையிடவேண்டும்; அவருடைய இலட்சியங் களைக் கொண்டாட வேண்டும்; அவருடைய உடனிருப்பின் அடையாளமாக, உயிர்த்துடிப்பின் வெளிப்பாடாகச் செயல்பட வேண்டும். அனைத்திற்கும் மேலாக அவருடைய பணியை அது தொடரவேண்டும். இவையே அதன் குறிக்கோள்கள். இவற்றை நிறைவேற்ற அதற்குத் தேவை இயேசுவைப் பற்றிய ஆழமான அறிவு. ஏனெனில், எவ்வளவு அதிகமாக அது அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைக் கேட்டிருக்கிறதோ அவ்வளவு ஆற்றலுடன் தான் அவற்றை அது அறிக்கையிடமுடியும். எவ்வளவு ஆழமாக அவருடைய இலட்சியங்களையும் பணிகளையும் அது புரிந்திருக் கிறதோ அவ்வளவு அர்த்தமுள்ள முறையில்தான் அது அவற்றை இன்றும் என்றும் தொடரமுடியும்.

அதிலும் குறிப்பாக, இன்று கிறிஸ்தவம் தன்னையே ஆழமாகப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. புதுப்பித்தல் என்றும் தொடரவேண்டியது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே காலாவதியாகிவிட்ட அணுகுமுறைகள், அமைப்புக்கள், சிந்தனை செயல்பாங்குகள் களையப்படவேண்டும். இன்றைய சூழ்நிலை களுக்கும், மக்கள் தேவைகளுக்கும் ஏற்ப புதிய முறைகளிலும் வகைகளிலும் இயேசுவின் இலட்சியம் செயல்படுத்தப்பட வேண்டும். இத்துறையில் கிறிஸ்துவம் தவிர்க்க வேண்டிய இரு தவறுகள் உண்டு. அவை பெயரளவில் புதுப்பித்தல், காலத்திற் கேற்பக் கோலமிடல் என்பன.

இவ்விரு தவறுகளையும் திருச்சபை தவிர்க்க அதற்குத் தேவை இயேசு பற்றிய ஆழமான அறிவு. ஏனெனில் உண்மையான கிறிஸ்துவப் புதுப்பித்தலின் ஊற்றும் உரைகல்லும் அவரே. அவருடைய எண்ணங்கள், கனவுகள், இலட்சியங்களை மாறிவரும் இன்றைய சூழ்நிலைகள், பிரச்சினைகளுக்கு ஏற்பப் பொருளும் பொருத்தமும் உள்ள முறையில் நிறைவேற்ற வழிவகுப்பதே உண்மையான மாற்றம் அல்லது மறுமலர்ச்சியின் நோக்கம். எனவே மறுமலர்ச்சி, புதுப்பித்தல் முயற்சிகள் அனைத்திற்கும் அடிப்படையும் அளவுகோலுமாக அமைவது இயேசு பற்றிய ஆழமான அறிவே.

## இயேசுவின் ஆளுமை

### இயேசுவின் ஆளுமைப் பண்புகள்

எந்த ஒரு மனிதரின் ஆளுமையும் ஒரு மறைபொருளே, அதிலும் இறைமனிதர் இயேசுவின் ஆளுமை நம் ஆய்வுகளுக்கு எட்டாத ஆழம் உடையது. உளவியல் முறைகளில் அவரைப்பற்றி நாம் பெறும் அறிவு நிச்சயம் மேலோட்டமானதாகவே இருக்கும். எனினும் ஏனைய முறைகளில் பெற இயலாத சில பயனுள்ள பார்வைகளை உளவியல் ஆய்வுகள் நமக்குத் தரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வரலாற்று இயேசு காலத்தால் நம்மிடமிருந்து மிகத் தொலைவானவர். உளவியல் ஆய்வுமுறைகளில் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்குத் தேவையான தகவல்களும் நம்மிடம் இல்லை. குறிப்பாக, அவருடைய அகக்கூறுகள், உளப்பாங்குகள், மனப்போராட்டங்கள் பற்றிய நற்செய்தி ஏடுகளோ அக்காலத்து ஏனைய நூல்களோ நேரடியாக எதுவும் சொல்வதில்லை. எனினும் நற்செய்தி நூல்களில் அவருடைய வார்த்தைகள், வாழ்க்கை நிகழ்வுகள், ஈடுபாடுகள், உறவுகள் காணக்கிடக்கின்றன. அவற்றிலிருந்து அவருடைய ஆளுமையின் பல்வேறு முக்கிய பண்புகளை நாம் ஊகிக்கமுடியும். ஒருவருடைய அடிப்படைப் பண்பையும் ஏனைய முக்கிய பண்புகளையும் தெரிந்துகொள்வது என்பது அவருடைய ஆளுமையையே ஓரளவு நன்கு தெரிந்துகொள்வதுதானே!

**உணர்ச்சித் துடிப்பானவர்**

இயேசுவின் பண்புகளுள் எளிதில் நம் மனதில் பதிவது அவர் உணர்ச்சித் துடிப்பானவர் என்பது. இயேசுவின் உணர்வுகள் மெல்லியவை, ஆழமானவை. பெரும்பாலான மனிதர்களைப் போல் அவர் தம் உணர்ச்சிகளை மழுங்கடித்துவிடவில்லை, தம் உள்ளம் மரத்துப்போகவும் விடவில்லை. யாருக்கு எது நடந்தாலும் அது தம் உள்ளத்தையும் உணர்வுகளையும் பாதிக்காதவாறு அவர் தம் இதயத்தைக் கல்லாக இறுக்கிக்கொண்டு வாழவில்லை. மாறாகப் பிறருடைய உணர்ச்சிகளில் அவர் தம் இதயத்தை நனைய விட்டார். அவர்களுடைய கண்ணீரிலும் மகிழ்வுகளிலும் அவர் தம் உள்ளத்தைக் கரையவிட்டார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் அவர் தாமும் வாடினார். வளரும் உயிர்களைக் கண்ட போது தாமும் உள்ளத்தில் வளர்ந்தார்; அழுவாரோடு தாமும் அழுதார்; சிரிக்கும் சின்னக் குழந்தைகளுடன் தாமும் சிரித்து மகிழ்ந்தார். அடிமைப்பட்டோரின் கோபத்தில் தாமும் கொதித்தார். உரிமை கேட்டு உடைக்கப்பட்ட ஏழைகளின் இரத்தத்தில் தம் நெஞ்சத்து நினைவுகள், கனவுகளைச் சிவப்பாக்கிக் கொண்டார்.

இயேசுவின் உணர்ச்சிகளுள் ஆழமானது, அடிப்படையானது அவரது இரக்கம். தொழுநோயாளி (மாற் 1:41), மகனை இழந்த விதவை (லூக் 7:13), வழிகாட்ட ஆளில்லாத மக்கள் (மாற் 6:34), பட்டினியாக இருந்த மக்கள் திரள் (மாற் 8:2) என்போரின் நிலை கண்டு இயேசு இரங்குகிறார். அவரது மக்கள்பணிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை அவரது இரக்க உணர்வே. அது வெறும் கருணையின் கசிவு மட்டும் அல்ல மாறாக, வாழ்வளிக்கும் செயல்களாக வெளிப் பட்ட அவரது மனிதத்தின் துடிப்பு.

துயரம் இயேசுவின் இன்னோர் உணர்ச்சி. மார்த்தா, மரியாயின் கண்ணீரைக் கண்டு அவரும் கண்ணீர் விடுகிறார் (யோவா. 11:35). எருசலேம் நகருக்கு ஏற்படப்போகும் அழிவை எண்ணியும் அழுகிறார் (லூக் 19:41).

புதிய ஏற்பாடு காட்டும் இயேசுவின் மற்றோர் உணர்ச்சி கோபம். கோவிலில் நடந்த வியாபாரத்தையும் (மாற் 11:15-16), பரிசேயர், மறைநூல் அறிஞரின் போலித்தனத்தையும் கண்டு அவர் ஆத்திரம் கொள்கிறார் (மத் 23:13-36). பொதுவாக, தமக்குத் தீங்கு இழைத்தவரை அவர் மன்னிக்கிறார். அடுத்தவர்க்கு, அதிலும் ஏழை எளியவர்க்கு, அநீதி இழைப்போரிடம் அவர் சினந்து எழுகிறார்.

அநீதிகளைக் கண்டு ஆத்திரம் கொண்ட இயேசு சில போலிப் புனிதர்களைப்போல் சிரிக்கத் தெரியாதவரோ, எதற்கும் சீறி விழுகின்றவரோ அல்ல. சோகமும் கோபமும், கடுகடுப்பும் கண்டிப்புமே ஆன்மீகம் என சிரித்தார். இறையாட்சியில் அழுகை மகிழ்வாக மாறும் என அறிவித்தார் (லூக் 6:21). ஏழைகளுக்கு இறையாட்சி விடிகிறது என அவர் பேருவகை அடைந்தார் (லூக் 10:21). திருமண நிகழ்வின் மகிழ்விலும் விருந்துக் கொண்டாட்டங் களிலும் பங்கெடுத்தார். சுருங்கக் கூறுவதெனில், அவர் இருந்த இடமெல்லாம் மகிழ்வும் அக்களிப்பும் இருந்தன. இறையியலாளர் ஸ்கிலபெக்சு கூறுவதுபோல், "இயேசுவின் முன்னிலையில் எவரும் வருத்தமாக இருக்க இயலாது".

பொதுவாகக் கூறுவதெனில், இயேசு எதையும் ஆழமாக உணர்ந்தார். தம் உணர்ச்சிகளை ஆக்கபூர்வமாக வெளியிட்டார். உணர்ச்சிகளை மறுத்து, உள் அமுக்கி, உள்ளுக்குள் இறுக்கி, ஆளுமை சிறுத்து அவர் வாழவில்லை. உணர்ச்சிகளை உள் அமுக்கிக்கொள்வதால் ஏற்படும் செயற்கைத் தன்மையோ போலித் தனங்களோ முகமூடிகளோ உளவியல் கவசங்களோ அவரிடம் இல்லை. அதற்கு நேர்மாறாக உணர்ச்சி வேகத்தில் அல்லது வெறியில் அவர் செயல்படவில்லை. மாறாக எதையும் இயல்பாக, ஆழமாக உணர்ந்தார். உணர்ச்சிகளை ஆற்றுப்படுத்தி வெளிப் படுத்தினார். இதனால் அவருடைய உணர்ச்சிகள் அவரிடம் ஆக்க பூர்வமான சக்திகள் ஆயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெளிந்த சிந்தனையாளர்

தெளிந்த சிந்தனைத் திறனும் கூரிய அறிவும் கொண்டவராக இயேசு விளங்கினார் (லூக் 2:46-47; மாற் 6:2 யோவா 7:15). யூதத் திருநூலை அவர் நன்கு கற்றுத் தெளிந்திருந்தார். தேவைக்கு ஏற்ப அதிலிருந்து பல்வேறு பகுதிகளை எளிதாக அவர் எடுத்தாள்கிறார். எனினும் அவருடைய அறிவுக்கு அடிப்படையனது அனுபவமே. இயற்கையை அவர் ஆழ்ந்து உற்று நோக்கியவர் என்பதை அவருடைய உவமைகள் காட்டுகின்றன. மனிதர்களையும் அவர் கூர்ந்து கவனித்து உள்ளூர அறிந்திருந்தார். இவ்வாறு பிறரது மனதை அறிந்து அவர் மறுமொழி கூறியதை நற்செய்தி நூல்கள் குறிப்பிடுகின்றன (மாற் 2:8, 3:5, 12:15 லூக் 7:39:39-40). யோவான் நற்செய்தி இதை வெளிப்படையாகவே கூறுகிறது. "அவர்... மனித உள்ளத்தில் இருப்பதை அறிந்திருந்தார்" (யோவா 2:25).

இயேசுவின் அனுபவமும் அறிவும் ஆழமானவை மட்டும் அல்ல, அடித்தட்டு மக்களின் நிலையைச் சார்ந்தவை. இதனால் தான் அன்றைய சமுதாயத்தின் மரபுப் பார்வைகளையும் மந்திர மாய விளக்கங்கள், விடைகளையும் எதிர்க்கேள்வி இன்றி அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல மேலாதிக்க வகுப்பினரின் மேலோட்டமான பார்வைகள், விழுமியங்களையும் அவர் தம தாக்கிக் கொள்ளவில்லை. மாறாக அடித்தட்டு மக்கள் அனுபவத்தின் ஒளியில் அனைத்தையும் விமர்சித்தார். இவ்வாறு அன்றைய ஆளும் சமூகத்தினரின் பொய்மைகளையும் சமயவாதிகளின் பக்திச்சாயங்களையும் அவர் இனம் கண்டு கொள்ளத் தவறவில்லை. அன்றைய அவரது சமுதாயத்தில் தூயவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் எல்லாரும் அவர் பார்வையில் தூயவர்கள் அல்ல; அன்றையச் சமூகத்துப் பாவிகள் அனைவரும் அவர் பார்வையில் பாவிகளும் அல்ல (லூக் 7:36-45 18:9-14 19:1-10).

இயேசுவின் அறிவு ஆழமானது மட்டும் அன்று, கூர்மையானதும் கூட. தம்மைப் பேச்சில் மடக்க வந்தவர்களை பலமுறை அவர் வாயடைக்க வைத்ததிலிருந்து இது தெரிகிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள்: சீசருக்கு வரி (மாற் 12:13-17), இறந்தோரின் உயிர்ப்பு (மாற் 12:18-27), தமது அதிகாரம் (மாற் 11:27-33), விபச்சாரப் பெண் மீது கல்லெறிதல் (யோவா 8:3-9) என்பன பற்றிய கேள்விக்கு அவர் தந்த மறுமொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் வரலாற்று மனிதராக வாழ்ந்த காலத்தில் இயேசு எல்லாம் அறிந்தவர் அல்ல. "வளர வளர ஞானத்தில் முதிர்ந்து" (லூக் 2:51) வந்தவர் அவர். "அந்நாளோ நாழிகையோ... மகனுக்குக்கூடத் தெரியாது" என்று கூறி இறுதி நாள் என்று வரும் என்பது தமக்குத் தெரியாது என்பதை அவர் வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்கிறார். கெத்சமெனித் தோட்டத்திலும் சிலுவையிலும் இறைத்தந்தையின் திருவுளம் என்னவெனத் தெரியாது அவர் தத்தளிக்கிறார் (மாற் 14:36 15:34). மேலும் பாவம் தவிர வேறு அனைத்திலும், அறியாமை உட்பட, அன்று அவர் நம்மைப் போன்றவரே (எபி4:15). வரலாற்றில் வாழ்ந்தபோது அவரது அறிவு ஆழமானது, கூர்மையானது. எனினும் அது எல்லாம் தெரிந்த இறையறிவு. அன்று தம் சாவையும் எருசலேமின் அழிவையும் அவர் முன்னுரைத்தது உண்மைதான். ஆனால் அது இறைவாக்கினருக்கு உரிய உய்த்துணர்வு அறிவால்தான். இறைவனுக்கு உரிய முற்றுணர் முழு அறிவால் அன்று அவர் செய்தது இறைவன் எனும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு முரணானது அல்ல. ஏனெனில் வரலாற்று மனிதராக அவர் வாழ்ந்த போது, தூய பவுல் கூறுவதுபோல், இறைமையும் அதன் அறிவும் ஆற்றலும் அவரிடம் வெறுமையாக்கப்பட்டிருந்தன. (பிலி 2:6-7).

**பழகுதற்கு எளியவர்**

இயேசு உறவிற்கு எளியவர், இனியவர் என்பது அவரது இன்னொரு சிறப்புப் பண்பு. மற்றவர்களைவிடத் தான் உயர்ந்தவன், பெரியவன் என அவர் பிறரிடமிருந்து தம்மைத் தொலைவுபடுத்திக்கொள்ளவில்லை. மக்களின் உறவும் தொடர்பும் புனிதத்திற்கோ இறை உறவிற்கோ தடைகள் என அல்ல, மாறாக வாய்ப்புக்கள் என்றே அவர் கருதினார். எனவேதான் குழந்தைகளோ அந்நியர்களோ எவர் வரினும் அவர் ஏற்றுக் கொண்டார். எல்லாரையும் உறவாகவே கருதி உதவினார் (மாற் 10:13-16 7:24-30 லூக் 7:1-10 யோவா 12:20-26). இவ்வாறு சாதி, சமயம், இனம், ஆண், பெண் வேறுபாடு பாராது அவர் பழகினார். பெண்களை அவர் மனிதர்களாக, ஆட்களாக மதித்தார் மனித நேயத்துடன் அவர்களுடன் பழகினார். சமாரியப் பெண்ணுடன் தாமே முன்வந்து பேசினார் (யோவா 4:5-26). பெண்களை நலமாக்குவதற்காக அவர்களைத் தொட அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்கவில்லை (மாற் 1:31 5:41). அவர்களும் தம்மைத் தொட அவர் அனுமதித்தார் (மாற் 5:25-36 லூக் 7:36-50). அனைத்திற்கும் மேலாக, சில பெண்களை அவர் சீடர்களாகவும் கொண்டிருந்தார். (லூக் 8:1-3 மாற் 15:40-41).

இயேசுவுக்கு எவரும் பகைவர் இல்லை. பரிசேயர், சதுசேயர்களின் தவறுகளை அவர் கண்டிக்கிறார். எனினும் அவர்களை அவர் வெறுக்கவில்லை. பரிசேயர் நிக்கோதேமை அவர் வரவேற்று உரையாடுகிறார் (யோவா 3:1-21). பரிசேயர் சீமோனின் அழைப்பை ஏற்று அவர் வீட்டில் விருந்துண்ணச் செல்கிறார் (லூக் 7:36). இவ்வாறு "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் தமிழரின் உயர் மரபிற்கு இயேசு உன்னத மாதிரி.

எல்லாரிடமும் இயேசு பழகினாலும் ஏழை எளியவர்க்கு அவர் நண்பனாகத் திகழ்ந்தார். "சுமை சுமந்து சோர்ந்திருப் பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்" (மத் 11:28) என அவர்களை அவர் அழைத்தார். செல்வமும் செல்வாக்கும் உடையோரின் நட்பையே பெரிதாக எண்ணிய சமூகத்தில் தாழ்ந்தோரையும் நலிந்தோரையும் தேடிச் சென்று அவர்களைத் தம் தோழர்கள் ஆக்கிக்கொண்டதே இயேசுவினது உறவின் உயர்வும் சிறப்பும்.

சிலரிடம் இயேசு நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். பன்னிரு சீடர்கள் அவருடைய நண்பர்கள் (யோவா 15:14). அதில் மூவர் அவருக்கு அதிக நெருக்கமானவர்கள். அவர்களுள் ஒருவரான யோவான் அவரால் அன்பு செய்யப்பட்டவர். என நான்காவது நற்செய்தி வெளிப்படையாகவே குறிப்பிடுகிறது (யோவா 13:23, 19:26). மேலும் மகதலா மரியா, லாசர், அவர் சகோதரிகளான மார்த்தா, மரியா ஆகியோர் அவருடைய நண்பர்கள் (யோவா 11:5).

இயேசுவின் பழகும் முறையில் பல சிறப்புக்கள் உள்ளன. ஒன்று, அதில் போலித்தனங்கள், பொய்கள், ஒளிவு மறைவுகள் இல்லை. இயல்பாகப் பழகினார்: உள்ளம் திறந்து பேசினார் நண்பர்களின் தவறுகளைக்கூட அவர் சுட்டிக்காட்டத் தயங்க வில்லை (மாற் 8:33 லூக் 10:41-42), பிறருடைய குற்றம் குறைகளுடன் அவர்களை அவர் ஏற்றுக்கொண்டமை இதற்கு தெளிவான சான்று. மேலும், இயேசுவின் உறவில் சிறிதும் சுயநலமோ, ஆணவமோ, அதிகாரப்போக்கோ இல்லை. மாறாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரையும் மதித்தார், பிறரின் பணியாளனாக நடந்துகொண்டார் அவர்கள் வாழத் தம்மையே தியாகமும் செய்தார்.

இயேசுவின் உறவுகள் அவருடைய இலட்சியத்தில் வேரூன்றியவை. வெறும் ஊனைச் சார்ந்த உறவுகளை அவர் பெரிதுபடுத்தவில்லை. சாதி, சமய, இன அடிப்படையிலான உறவுகளுக்கு அவர் அதிக முக்கியத்துவம் தரவில்லை. "கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்களே எனக்குத் தாயும் சகோதரரும் ஆவர்" (லூக் 8:21) என அவரே இதைக் குறிப்பிடுகிறார்.

**வியத்தகு சுதந்திரம் உடையவர்**

இயேசுவின் இன்னொரு சிறப்புப் பண்பு அவரது வியத்தகு சுதந்திரம். தமது சமூகத்தின் மனநிலைகள், மரபுகளுக்குள் அவர் தம்மையே சிறைப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் புதியவற்றைக் கற்பனை செய்து பார்க்கிறார். மரபினின்று மாறுபட்டுச் சிந்திக்கிறார். அடிமைச் சமூகத்தில் அவர் விடுதலைக் கனவுகளை வளர்த்துக் கொண்டவர். புதிய ஒரு வருங்காலத்தைப் புனைய அனைவரையும் அழைத்தவர்.

அவருடைய சுதந்திரம் சிந்தனையை மட்டுமன்றி, செயல்பாட்டையும் சார்ந்தது. அர்த்தம் இழந்த சமய மரபுகளையும் சமூகச் சட்டங்களையும் அவர் மாற்றுகிறார், மீறுகிறார் (மாற் 3:1-6 2:23-28). ஆசாரத் துப்புரவு முறைகளைத் தூக்கி எறிகிறார் (மாற் 7:1-9). அன்றையச் சமயவாதிகளின் நடைமுறைக்கு மாறாக அவர் பெண்களுடன் இயல்பாகப் பழகுகிறார். அன்றையச் சமூக வழக்கத்திற்கும் விதிகளுக்கும் மாறாகத் தொழுநோயாளரைத் தொடுகிறார் (மாற் 1:41). கடவுளின் வார்த்தை எனக் கருதப்பட்ட யூதத் திருநூலின் சட்டங்களைக்கூட அவர் மனிதநேயத்தின் அடிப்படையில் மாற்றத் துணிகிறார் (மாற் 10:2-12 7:14-23). மேலும் தலைமைக் குரு, ஏரோது, பிலாத்து போன்றோரின் அதிகாரத்தைக் கண்டு அவர் அஞ்சவில்லை அவர்களுடைய அதிகார அத்துமீறல்களை எதிர்க்கவும் தயங்கவில்லை.

உண்மை எனத் தாம் உணர்ந்ததை இயேசு போதிக்கிறார்; சரி எனத் தமக்குப் பட்டதை அவர் சாதிக்கிறார். உறவினரின் எண்ணங்கள், சீடர்களின் விருப்பு வெறுப்புகள், பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அவர் நடக்கவில்லை. ஊருடன் ஒத்து வாழ்வது முக்கியமானது என அவர் ஒருபோதும் கருதவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய அனுமதியோ தயவோ அவருக்குத் தேவைப்படவுமில்லை. செல்வத்திற்கோ சுகத்திற்கோ அவர் அடிமை அல்ல; பதவியும் புகழும் அவரது தேவைகள் அல்ல. அன்பைத் தவிர வேறு எதுவும் அவரது உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்தவில்லை; கடவுளின் திருவுளத்தைத் தவிர வேறு எதுவும் அவரைக் கட்டுப்படுத்தவில்லை.

இயேசுவின் வியத்தகு அக, புறச் சுதந்திரத்திற்கு, வீரச் செயல்பாட்டிற்கு ஊற்றாகவும் உந்துசக்தியாகவும் இருந்தது அவரது இறையனுபவமே. இறைவனை அவர் அன்பு, உண்மை, நீதியாக, மனித நேயத்தின் நிறைவாகக் கண்டார். இதனால் அவருக்கு மனிதரைவிட முதன்மையானது, முக்கியமானது எதுவும் இல்லை. அவரது வாழ்வின், பணியின் அடிப்படை எந்த ஓர் ஏடோ எழுத்தோ, அதிகாரமோ மரபோ அல்ல; மாறாக அது எல்லாரும் நிறைவாக வாழவேண்டும் எனும் இலட்சியம் ஒன்றே. அந்த இலட்சியத்தின் அடிப்படையில் அவருக்கு "கேள்விக்கு உள்ளாக்கப்படக் கூடாத அளவுக்குப் புனிதமான மரபு எதுவும் இல்லை. மறுத்துப் பேசக்கூடாத அளவுக்கு உயர்ந்த அதிகாரம் எதுவும் இல்லை. மாற்றக்கூடாத அளவுக்கு அடிப்படையான முற்கோளும் எதுவும் இல்லை" (ஆல்பர்ட் நோலன்).

இவ்வாறு இறையாட்சியின் இலட்சியத் தன்னுரிமையுடன் வாழ்ந்தவர் இயேசு. தம் உயிரையே ஈந்திடும் சுதந்திரத்தையும் அவருக்குத் தந்தது அந்த இலட்சியம்தான். "என்னுயிரை என்னிடமிருந்து பறிப்பவர் எவனும் இல்லை. நானாகவே என் உயிரைக் கையளிக்கிறேன்" (யோ 10:18).

**அன்பே அடிப்படைப் பண்பு**

இயேசுவின் பண்புகளுள் தலையானது அல்லது அடிப்படையானது எது? அது அன்பே. அவருடைய ஆளுமையின் மையம் அன்புதான். அதுதான் அவருடைய ஏனைய பண்புகளுக்கு ஊற்று, அவற்றை ஒருங்கிணைக்கும் சக்தி. நற்செய்தி நூல்களில் நாம் காணும் இயேசு ஒரு மாபெரும் அன்பர். அவரது மனிதத்தின் உயர்வும் நிறைவும், அவரது வாழ்வின் அழகும் ஆழமும் அன்பே.

இயேசுவின் மனிதநேயம் உள்ளத்து உணர்ச்சி மட்டும் அல்ல, பேச்சுடன் முடிந்துவிட்ட வெறும் போதனையும் அல்ல. அது அவரது முழுமையான ஈடுபாடு, வாழ்வின் தொடர் செயல்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் நலனை மட்டுமே அவர் நாடினார். அதற்காகவே அவர் வாழ்ந்தார்; பணி செய்தார். துன்புற்றோரின் துயர்களைக் களைந்தார்; நோயாளரை நலமாக்கினார்; பாவிகளை மன்னித்தார். ஒதுக்கப் பட்டோருக்கு அவர் தந்தது சமபந்தி, ஒடுக்கப்பட்டோருக்கு அவர் அளித்தது உரிமை வாழ்வு. இதனால்தான், "இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்துவருகிறார்!" (மாற் 7:37) என மக்கள் திரள் அவரைப் பாராட்டுகின்றது "எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்" (தி.ப. 10:38) எனத் திருத்தூதர் பணிகள் அவர் வாழ்வையே சுருக்கிச் சொல்லிவிடுகிறது.

இயேசுவின் அன்பு எங்கோ உயரத்தில் இருந்துகொண்டு, தம் பாதுகாப்புகளை விட்டுவிடாமல் ஏழைகளுக்கு இரங்கி, அவ்வப்போது இறங்கிவந்து உதவிசெய்வது அல்ல. மாறாக, அது தன்னையே வெறுமையாக்கியது; ஏழை எளியவருடன் தன்னையே ஒன்றுபடுத்திகொண்டது. இறையியலாளர் மோல்ட்மான் கூறுவதுபோல், "அவர் ஏழைகளின் சகோதரர், மக்களின் தோழர், கைவிடப்பட்டோரின் நண்பர், நோயுற்றோருக்கு இரங்கும் உதவியாளர். (அவர்களுடன் கொண்ட) கூட்டொருமையால் அவர் குணப்படுத்துகின்றார்; தம் அன்புறவால் தம் விடுதலையையும் நலமாக்கும் ஆற்றலையும் அவர்களுக்கு நல்குகின்றார். அவரின் ஆண்களும் பெண்களும் சகோதரத்துவ மனிதனைக் காண்கின் றனர்". தம் வீடு, உறவு, தொழில் அனைத்தையும் விட்டு (மாற் 3:31-35), தலைசாய்க்கவும் இடமில்லாத நிலைக்குத் தம்மையே தாழ்த்தி, ஏழைகளுடன் அவர் கூட்டொருமை ஏற்படுத்தக் காரணம் அவரது மானிடத் தோழமையே.

ஏழைகளுடன் கொண்ட இந்தத் தோழமையால் அவர்களுடைய ஏக்கங்கள், எழுச்சிகளைத் தமதாக்கிக் கொண்டார்; முயற்சிகள் தளர்ச்சிகளில் தாமும் இணைந்தார். இத்தகைய கூட்டொருமையிலிருந்து பிறந்ததுதான் அவரது சமூக நிலைப்பாடு. அவர் செய்தவை தனியார் சிலருக்கான அன்பிரக்கப் பணிகள் மட்டும் அல்ல. மாறாக ஏழை வர்க்கத்திற்கும் ஒடுக்கப் பட்ட வகுப்புகளுக்கும் சார்பாகவும் ஆதிக்கவாதிகளான அன்றைய ஆட்சியாளர்கள், சமயத் தலைவர்கள், அறிஞர்களுக்கு எதிராக வும் அவர் நிலைப்பாடு எடுத்ததும் அவரது அன்பின் இயல்பான, இன்றியமையாத வெளிப்பாடே. ஆம், சமயத்தைச் சாட்டாகக் கொண்டு சமூகப் பிரச்சினைகளிலிருந்து விலகிக் கொண்டது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல இயேசுவின் அன்பு. ஆன்மீகம் என்னும் போர்வையைப் போர்த்தி மக்களுக்கு எதிரான அநீதிகளுக்கு அது கண்களை மூடிக்கொண்டதும் அல்ல.

இயேசுவினது அன்பின் இந்தச் சமூகப் பண்பும் அரசியல் தன்மையம் முக்கியமானவை. அதனை மறப்பதோ மறுப்பதோ அவரது ஆளுமையின் முக்கிய சில பரிமாணங்களை மட்டும் அல்ல, வாழ்வின் சாவின் அர்த்தங்களையும் புரிந்துகொள்ளத் தவறுவது ஆகும். ஏனெனில் அவர் கொல்லப்பட்டது ஏழைகளுக்கு உதவியதால் அல்ல, மாறாக அவர்களது ஏழ்மைக்குக் காரண மான அன்றைய ஆதிக்க சக்திகளை எதிர்த்ததால்தான். ஆனால் அன்பினால் அந்தச் சாவையும் ஏற்று உலகம் வாழத் தம்மையே தருகிறார். இவ்வாறு "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடை யார் என்பும் உரியர் பிறர்க்கு" எனும் குறளுக்கு அவர் குன்றின் மேல் தீபம் ஆகிறார்.

இயேசுவின் இந்த மாபெரும் மனிதநேயத்திற்கு, தியாகப் பிறரன்புக்கு ஊற்று அவரது இறையன்பே. அன்பே இறைவன் என்று அவர் உணர்ந்தார்; அந்த இறைவனின் அன்பராக அவர் திகழ்ந்தார். இறைவன் மனிதரில் இருக்கிறார், சிதைந்த மனிதத்தில், சீர்குலைந்த வாழ்வுகளில் இருந்து அவர் தம்மை அழைக்கிறார் என்பது இயேசுவின் அனுபவம். எனவே பிறர் வாழ்வுக்குத் தம்மையே தருவதன் வழியாக இறைவனுக்கே தம்மை அவர் தருகிறார். இந்த அன்புறவுகள் வேறுபட்ட இரண்டு அல்ல; ஒன்றைவிட ஒன்று முக்கியமோ, ஒன்றுக்கு ஒன்று முரணோ அல்ல. மாறாக இறையன்பே அவரது மனிதநேயத்தின் ஆழம், அடித்தளம், உள்ளீடு. அவரது பிறரன்பே இறையன்பாக ஆழம் பெறுகிறத் இறையன்பே பிறரன்பாகச் செயல்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

## "என் இதயத்திற்கு உகந்தவனாகக் கண்டேன்"

(திப 13:22)

இறைவன் மனிதன் மேல் கொண்டுள்ள அக்கறை அவனது இதயம் பற்றியதாகும். "மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர். ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்" (1சாமு.16:07). இறைவன் நாம் உள்ளார்ந்த பயணத்தைச் செய்து நமது உள்ளங்களைப் புதுப்பிக்கப் பணிக்கின்றார். "தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5:8) என்று உறுதியாகக் கூறுகின்றார். எனவே இறைவனைத் தேடுவோர் அனைவரும் மரியாயின் மாசற்ற இருதயத்தை உற்று நோக்குவது அவசியமாகும்.

மரபு வழியாக மரியாயின் மாசற்ற திரு இருதயம் இயேசுவின் திரு இருதயத்தோடு சேர்த்து வணங்கப்படுகிறது. இயேசுவின் இதயம் சிலுவையிலே ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்டது. இது அவரை நாம் ஆச்சரியத்துடன் பார்த்து எம்மை எல்லையில்லா அன்போடு நேசிப்பதை அனுபவிக்கவே நடந்தது என்று யோவான் 19:37ல் கூறுகின்றார். இயேசு தன் தாயின் கரங்களில் குழந்தையாக இருந்தபோது மரியாயின் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சிமியோன் இறைவாக்கு உரைத்தார் (லூக் 1:35). சிலுவையடியில் நின்று தன்னுடைய மகன் கொடூர துன்பங்களை அனுபவிப்பதைப் பார்க்கும் அந்தக் கடைசி நேரங்களில் உண்மையாகவே இந்தத் தாயின் இதயம் குத்திப் பிளக்கப்பட்டது. தாய்மையும், பலியும் ஒத்த கருத்துள்ள சொற்களாகும். குத்திப்பிளக்கப்பட்ட மரியன்னையின் இதயம் எமது மீட்புக்கு விலையாக தன்னுடைய மகனை சிலுவைப் பீடத்தில் பலியாக்க வேண்டி இருந்தது என்பதைத் தெளிவாக்குகின்றது.

இயேசுவினுடைய துன்பங்களோடு நெருக்கமாக இணைக்கப்பட்ட மரியன்னையின் இதயம் கடவுளின் அன்பை எமக்கு முழுமையாக வெளிப்படுத்துகின்றது. நாம் எத்தகைய வாழ்வு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார்" (எசாயா 54:10). இறைவன் இவ்வுலகிற்கு மனுவுரு எடுத்து வந்தபோது அவருக்கு ஒரே ஒரு நோக்கம் தான் இருந்தது. எசாயா இறைவாக்கு உரைத்ததுபோல இறை ஊழியனாக இருப்பதாகும். இதை எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் பின்வருமாறு கூறுகின்றது. "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை ஆனால் ஓர் உடலை எமக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது. "என் கடவுளே உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்" (எபிரேயர் 10:5). இயேசு தனது இவ்வுலக வாழ்வில் மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கொடிய சிலுவை மரணம் வரைக்கும் தந்தைக்குக் கீழ்ப்படிந்தார்.

"தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதனுக்கு ஒப்பானார்... சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலி 2:7,8). தன்னைப் போசித்தது தந்தையின் திருவுளம் என்பதில் இயேசு என்றும் தெளிவாய் இருந்தார். "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்று வதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவான் 4:34). தந்தையிடம் இருந்து தன்னைப் பிரிப்பது எதையுமே அவர் பற்றிப்பிடிக்கவில்லை. எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் தந்தையினுடைய திருவுளத்தை முழுமையாக ஏற்றார். மீட்பின் வரலாற்றில் மரியன்னை காலடி எடுத்து வைத்த போது வானதூதரின் செய்திக்கு ஆம் என்று சொல்லி தந்தையின் கரத்திலே சரணடைந்தாள். "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே உமக்கு நிகழட்டும்" (லூக் 11:38) என்றார். மரியன்னையின் எதிர்காலம் இனம் புரியாததாய் இருந்தபோதும் கூட, இறைவனிடம் சரணடைந்தாள். அவளது வாழ்வைக்கூட இழக்கவேண்டிய நிலை இருந்தது. அவள் கல்லால் எறிந்து கொல்லப்படக்கூடிய நிலை இருந்தது. ஏனெனில் மோயீசனின் சட்டப்படி திருமணத்திற்கு முன் கருத்தரிக்கும் எப்பெண்ணும் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்று இருந்தது. ஆனால் தான் கருத்தரிப்பது தந்தையின் திருவுளம் என்று அறிந்ததும் எவ்வித மறுப்பும் இல்லாமல் சம்மதித்தாள். அவள் தன் மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக அன்பு செய்தாள். ஆனால் இவ்வுலகத் தாய்மார் செய்வது போல தன் மகனின் எதிர்கால வாழ்வுபற்றி பெரும் எதிர்பார்ப்பை அவள் வைத்திருக்கவில்லை. அவளுக்குத் தேவைப்பட்டது எல்லாம் தந்தையின் திருவுளப்படி நடப்பதாகும். சிலுவையடியிலே கொடூரமாகக் கொலை செய்யப் பட்ட தன் மகனின் உடல் தன் மடியிலே வளர்த்தப்பட்ட போதும்கூட, இந்தக் கொடிய துன்பத்தை ஏற்றுக்கொள்வதே தனக்கு இறைவன் வகுத்த திட்டம் என உணர்ந்தாள். இவ்விதமாக தன் வாழ்வனைத்தையும் இறைவனின் கரத்திலே ஒப்படைத்தது தனது மகனது உயிர்ப்பின் மகிமையிலே பங்கு கொள்வதற்கு ஓர் வழியாகின்றது.

**"மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மத்தேயு 20:28).**

தந்தைக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட இயேசுவின் இதயம் துன்புறுவோர் அனைவர் மட்டிலும் இரக்கம் பாய்ந் தோடுவதாக இருக்கின்றது. துன்புறும் அனைவரது வாழ்வையும் சாந்திப் படுத்துவதே இந்த இதயத்தின் ஆவலாக இருக்கின்றது. மாற்கு நற்செய்தியாளர் தனது நற்செய்தியிலே ஓய்வுநாளில் இயேசு சூம்பிய கரமுடைய மனிதனைக் குணமாக்குவதே இறைவனுக்கு முக்கியம் என்பதை உணர்ந்த பொழுது பரிசேயர்களின் கண்டனம் எதையும் அவர் பொருட் படுத்தவில்லை என்கிறார் (மாற் 3:1-6). இயேசுவின் இவ்வுலகப் பணி வாழ்வை புனித பேதுரு சுருக்கமாகக் கூறும்பொழுது "கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்" (தி.ப 10:38) என்று கூறுகிறார். மனிதனின் துன்பத்தைக் கண்டதும் இயேசுவின் இதயம் துடித்தது என்று நற்செய்தி எமக்குச் சொல்லுகின்றது. "திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார். அவர்கள் ஆயன் இல்லா ஆடுகளைப் போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்" (மத்தேயு.9:36). மேலும் நற்செய்தியிலே "இயேசு அங்கு சென்றபோது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள் மீது பரிவு கொண்டார். அவர்களிடையே உடல் நலமற்று இருந்தவர்களைக் குணமாக்கினார்" (மத்.14:14). இயேசுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் அனைவரையும் இரக்கத்துடனேயே பார்த்தன. அவரது இரக்கத்தின் வல்லமை எவ்வளவாகச் சுரந்தது என்றால் அது நோயுற்றவர்களைக் குணமாக்கியது. "அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணியையும் போக்கியதால் அங்கு திரண்டிருந்த மக்கள் யாவரும் அவரைத் தொட முயன்றனர்" (லூக் 6:19).

மரியன்னையின் இதயமும் அவளது வாழ்வு முழுவதும் இதே இரக்கத்தையே வெளிப்படுத்தியது. தன்னுடைய மங்கள வார்த்தையைக் கேட்கும்பொழுது அவளது மைத்துனி எலிசபேத் தனது முதிர்ந்த வயதில் கருவுற்று இருக்கின்றாள் என்று கேள்வியுற்றதும் அவளுக்கு உதவ வேண்டும் என்று இவளது உள்ளம் துடித்தது. மலையிலே இருந்த எலிசபெத்தின் வீட்டிற்கு நீண்ட பயணம் மேற்கொண்டு விரைந்து சென்றாள் என்று லூக் 1:34 கூறுகின்றது. மரியன்னை தன்னைப்பற்றிச் சிந்திப்பதற்கும் பல விடயங்கள் இருந்தன. ஆனால் சுயநலம் இல்லாத அவளது உள்ளம் மற்றவர்களது தேவை பற்றியே அக்கறையாய் இருந்தது. கானாவூர்த் திருமணத்தின் பொழுதும்கூட மரியன்னைதான் முதலில் அங்குள்ள தேவையை உணர்ந்து தன் மகனிடம் முன்வைக்கின்றாள். மரியன்னையின் இவ் அன்புத் தூண்டுதல்தான் இயேசு தன் முதல் புதுமையை செய்வதற்கு அவரைத் தூண்டியது.

இன்று நாம் வாழும் கலாச்சாரம் மற்றவர்களுடைய கண்ணீரிலே எம் கனவுகளைக் கண்டு மற்றவர்களை எப்படியும் வீழ்த்தி எமது ஏணியில் ஏறவேண்டும் என்று இருக்கும் கலாச்சாரமாகும். இப்படிப்பட்ட கலாச்சாரத்திலே நம்மை மறந்து மற்றவர்களுக்காக வாழ இங்கே மாபெரும் அழைப்பு ஒன்று எமக்கு விடுக்கப்படுகின்றது.

**"இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள்" (மத் 7:13).**

இயேசுவின் பணி வாழ்வு நம் எல்லோருக்கும் ஒரு ஆச்சரியத்தை எழுப்புகின்றது. அவரது வார்த்தைகளைக் கேட்டவர்கள் வியந்து நின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. அவர் புதுமைகளைச் செய்து குணமளித்த போது அங்கே அதிர்ச்சியானதொன்று இடம் பெறுகிறது என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். இதனால் மக்கள் கூட்டம் அவரை அரசனாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியது. அவரோ அங்கிருந்து நழுவி விட்டார். தான் தேடிவந்தது இவ்வுலக ஆட்சியும் இவ்வுலக முடியும் அல்ல என்பதில் அவர் தெளிவாய் இருந்தார். தலைசாய்க்க இடமில்லாத மனுமகனாக தான் இருப்பதையே விரும்பினார். ஆரம்பத்திலே அலகை தன்னை வணங்கினால் இவ்வுலக அரசு அனைத்தையும் கொடுப்பேன் என்று சொன்ன பொழுது கடவுள் ஒருவரையே ஆராதிப்பாயாக என்று உறுதியாக வென்றார் (மத்தேயு 4:8-10). சிலுவையிலே இருந்து இறங்கி வா என்று இறுதி நேரத்திலே கூறியபோது தந்தையின் வழியையே அவர் பின்பற்ற விரும்பினார்.

இயேசு தன் தாய் மரியாவை சீடத்துவத்தின் மாதிரியாக எமக்கு முன்வைக்கின்றார். மக்கள் கூட்டத்திற்கு போதித்துக் கொண்டிருந்த பொழுது "உம்முடைய தாயும் உம்முடைய சகோதரர்களும் உம்மைக் காண்பதற்காக வெளியே காத்துக் கொண்டு நிற்கின்றனர்" என்று சொன்னபோது தன்னுடைய தாயை அறிமுகப்படுத்தி பின்வருமாறு கூறுகின்றார். "இறைவார்த்தை யைக் கேட்டு அதன்படி செயற்படுகிறவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்" (லூக் 8:21). இது ஆரம்பத்தில் பொருத்தம் இல்லாதது போல் தோன்றலாம். ஆனால் இயேசுவே இறை வார்த்தையைக் கேட்பதற்கும் அதன்படி வாழ்வதற்கும் தன்னுடைய தாயை சுட்டிக் காட்டுகின்றார். இதுவே சீடத்துவத்தின் சாராம்சமாகும்.

**"என் தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும் ஆண்டவர் என்னை ஏற்றுக் கொள்வார்" (தி.பா 27:10).**

சீடத்துவம் என்பது எதிர்நீச்சல் போடுவதாகும். அறிவாளி களும் செல்வந்தர்களும் அதை ஒரு மடமையாகக் கருதுவர். உற்றார் உறவினர்கள்கூட நாம் எடுக்கும் இந்த சீடத்துவத்தின் ஒடுக்கமான பாதையை விளங்காமல் இருக்கலாம். தந்தையின் பாதையைத் தேர்ந்தெடுத்தபோது, அனைவரும் தன்னைக் கைவிட்ட நிலையை இயேசு உணர்ந்தார். இப்படிப்பட்ட தனிமை நிலையை தனது இறுதி இராவுணவின் பொழுது இவ்வாறு கூறுகின்றார். "என்னைத் தனியே விட்டுவிடுவீர்கள். ஆயினும் நான் தனியே இருப்பதில்லை. தந்தை என்னோடு இருக்கின்றார்" (யோவா 16:32). இயேசு இத்தனிமையை நல் மனத்தோடு ஏற்றார். மற்றவர்கள் தன்னைத் தனிமையில் விட்டதை அவர் பெரிது படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயும் சீடத்தியும் என்ற நிலையில் மரியன்னை இறைவனின் அழைப்பை முழுமையாக ஏற்று, கடினமும் பயங்கரமுமான தனிமையின் பாதையில் நடப்பதை ஏற்றுக் கொண்டாள். இறைவனின் தாயாக வரவேண்டும் என்ற வானதூதரின் அழைப்பை ஏற்றபொழுது அவள் தனிமையிலேயே இருந்தாள். தன்னில் நிறைவேற இருக்கும் இறைதிட்டத்தை ஏற்பதனால் வரும் விளைவுகளைப்பற்றி அவள் பயப்படவில்லை. யூதேயாவில் இருந்த எலிசபெத்தினுடைய வீட்டிற்கு கற்கள் நிறைந்த பாதையால் சென்றபொழுது, தன்னுடைய எதிர்காலம் எப்படி இருக்கும்? தான் கருவுற்று இருப்பதை சூசையப்பர் எப்படி ஏற்றுக்கொள்ளுவார்? என்பது பற்றியெல்லாம் சிந்தித்தார். தனக்கு நெருக்கமானவர்களுக்கு தன் நிலையை எப்படி வெளிப்படுத்த முடியும் எனச் சிந்தித்தாள். பின்னர் பெத்லகேமிற்கு பிரசவத் திற்காக சென்ற பொழுது தன்னைப் பராமரிக்க முதிர்ந்த வயதுள்ள எந்தப் பெண்ணினதோ தன் குடும்பத்தின் எந்த ஆறுதலோ இல்லாமல் இருப்பதையும் உணர்ந்தாள். அதற்கு மேல் அவர்கள் தங்குவதற்கு எங்கும் இடம் இருக்கவில்லை. இறுதியாக கல்வாரியிலே, உயிர் போகும் மயில் ஒன்று ஊசலாடுவது போல தனிமையிலே ஊசலாடினாள். தன்னுடைய மகன் அனைவராலும் கைவிடப்பட்டு கொடூரமான விதத்திலே கொலை செய்யப்பட்ட பொழுது அந்தத் தாயின் உள்ளம் எவ்வளவிற்கு துன்பத்தினால் வெடித்து சிதறி இருக்கும் என்பதை நம்மில் எவராலும் உணர முடியாது. சீடத்துவத்தின் பாதையிலே தனிமையிலே சென்று கடுமையான பாதையிலே போகும் பொழுதும்கூட மங்கள வார்த்தையில் "ஆம்" என்று சொன்ன அதே தாராளத் தன்மையோடு தான் சென்றாள்.

**"நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருளுவேன்" (யோவா 2:28)**

மரியாள் இயேசுவை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது மாத்திரமல்ல, சீடர்கள் மீது ஆவியானவர் பொழியப்படுவதற்கும் இறைவனின் முக்கிய கருவியாக இருக்கின்றாள்.

இயேசு தன் சீடர்களிடம் "நீங்கள் உன்னதத்திடமிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை" (லூக் 24:49) காத்திருந்து வேண்டுதல் செய்யுங்கள் எனக் கூறுகின்றார். சீடர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் ஒன்றுபடுத்தி, தொடர்ந்து செபிப்பதில் மரியாள் ஈடுபட்டு இருந்தாள் என்று திருத்தூதர் பணி கூறுகின்றது. "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (தி.பணி 1:14). மரியன்னை சீடர்களை ஆவியின் பொழிவுக்காக ஆயத்தம் செய்து கொண்டு இருந்தாள். தன்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்து இறைவனுக்கு தன்னுடைய வாழ்வை முழுமையாக அர்ப்பணிப்பதன் மூலமாகவே ஆவியின் பொழிவு கிடைக்கும் என்று உணர்ந்திருந்தாள். தனக்கு மங்கள வார்த்தை சொல்லப்பட்ட பொழுது ஆவியின் பொழிவு கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. "தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும் (லூக் 1:35). இவ்வேளையில்தான் இதோ ஆண்டவரின் அடிமை என்று தன்னைக் கையளித்தாள். கானாவூர் திருமணத்தின் போதும் இந்த ஆவியின் தூண்டு தலையே அவள் உணர்ந்தாள். திராட்சை இரசம் தீர்ந்த பொழுது அந்த குடும்பத்தை ஆண்டவரிடம் கையளிக்கச் சொன்னாள். "அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான்.2:5) என்று பணித்தாள். அந்த குடும்பமும் இயேசு சொல்வதெல்லாம் செய்வதற்கும் ஆண்டவருடைய ஊழியராக இருப்பதற்கும் சம்மதித்தது. அதனால் தண்ணீர் திராட்சை இரசமாக மாறியது. அந்தத் திருமணம் மங்களகரமான கொண்டாட்டமாக மாறியது.

கானாவூர் திருமணப்புதுமை இறைவார்த்தைக்குத் தம்மை சரணடையச் செய்யும் அனைவர் மேலும் கிறிஸ்து பொழியவிருக்கும் தூய ஆவியார் ஆகிய புதிய இரசத்திற்கு முன்னடையாளமாக இருக்கின்றது. இந்தப் புதுமையிலே மரியன்னை முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடப்பட வேண்டியது.

**"கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பது போல"**
**(லூக் 13:34)**

ஆவியானவரின் பொழிவை நாம் அனுபவிப்பதற்கு மரியாயின் மாசற்ற இருதயம் நமது வாழ்வை இறைவனிடம் சரணடையச் செய்ய இட்டுச் செல்கின்றது. ஆண்டவருக்காகக் காத்திருப்பதில் திருச்சபையை ஒன்றுபடுத்தும் பணியிலே மரியன்னை முக்கிய பங்கு வகிக்கிறாள். இயேசுவோடு நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற போது திருத்தூதர்களிடையே பல விதமான முரண்பாடுகள் ஏற்பட்டன. தமக்குள்ளே பெரியவர் யார் என்ற வாக்குவாதங்கள் அடிக்கடி எழுந்தன. ஆனால் சிலுவையடியிலே சீடர்களுக்கு அவர்களது தாயாகக் கொடுக்கப்பட்டதில் இருந்து அவர்கள் ஒன்றுபடத் தொடங்குகின்றார்கள்.

ஒரு குருவானவர் பின்வரும் நிகழ்வை எனக்கு கூறினார். குடும்பங்களை இணைப்பதிலே மரியன்னையின் அன்புப் பிரசன்னத்தின் அழகான அனுபவம் அது. ஒரு ஊரிலே மகா ஞான ஒடுக்கம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஒரு குடும்பப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் அழைக்கப்பட்டோம். அந்த குடும்பத்திலே 05 சகோதரர்கள் திருமணமாகி தனித்தனியே வாழ்ந்தார்கள். சொத்தைப் பிரிப்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. தங்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்து போதாது, தமக்கு அநியாயம் செய்யப்பட்டது எனச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நாம் இரு குருக்கள் அவர்களுடைய முறைப்பாடுகளைக் கேட்டுக்கொண்டு இருந்தோம். நான் அவர்களை ஒன்றாக செபமாலை சொல்லும்படி அழைத்தேன். ஆரம்பத்தில் அவர்கள் தம் பிரச்சினை பற்றிச் சொல்லிக்கொண்டு செபமாலை சொல்வதற்குப் பின்னடித்தார்கள். அந்நேரத்தில் நான் எப்படியாக ஆண்டவரிடம் திரும்பி அவருடைய திருவுளத்தின்படி வாழ கானாவூர் திருமணத்திலே மரியன்னை அந்தக் குடும்பத்தை அழைத்தாள் எனச் சொன்னேன். அவர்களுக்கு இருந்த கொண்டாட்டம் அனைத்தும் ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்தது தவிர வேறொன்றும் இல்லை எனச் சொன்னேன். ஆனால் அவர்களோ தம்முடைய எண்ணப்படி அந்தக் கொண்டாட்டம் நடைபெறவில்லை என வருந்தினார்கள். ஆனால் இயேசு தலையிட்டு அவர்களுக்கு தூய ஆவி எனும் திராட்சை இரசத்தைக் கொடுத்தார். அதனால் அக்குடும்பத்திலே கொண்டாட்டம் மங்களகரமாகியது. நானும் அவர்களை ஆண்டவருக்கு அவர்களுடைய உள்ளத்தைத் திறந்து ஆண்டவருக்காகக் காத்திருந்து அவர் காட்டும் வழியிலே நடக்க அவர்களை அழைத்தேன். அப்பொழுது அனைவரும் ஒன்று சேர்ந்து செபமாலை சொல்லத் தொடங்கினர். மரியன்னையின் பிரசன்னத்தை நாம் அனைவரும் உணர்ந்தோம். அவர்களது செப அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு நான் சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரொருவராக ஒவ்வொருவரும் தம்முடைய உள்ளத்திலே எவ்வாறு அமைதி ஊற்றெடுக்கின்றது எனச் சொன்னார்கள். நாம் இரண்டு குருக்களும் சொல்வதன்படி ஒவ்வொருவருக்கும் சொந்த மானதை ஏற்றுக் கொள்வதெனச் சொன்னார்கள். இறுதியிலே அனைவரது உள்ளங்களிலும் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. அனைத்து முரண்பாடுகளும் தீர்ந்து தங்கள் மத்தியில் உண்மையான சமாதானம் செய்து கொண்டனர். உண்மையில் அந்தக் குடும்பத்தை இணைத்தவர் தேவதாயாரே. மரியன்னையின் விண்ணக பிரசன்னமும் இடைவிடாத செபமும் ஒவ்வொரு குடும்பத்திலும் இறையாட்சியின் அனுபவம் ஏற்பட வழிவகுக்கும்.

செபம்

விண்ணகத் தந்தையே! மீட்பரை உலகிற்கு கொண்டு வருவதற்கு நீர் மரியன்னையைத் தேர்ந்து கொண்டீர். நீர் தாழ்ந்தோரை உயர்த்தி அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கின்றீர். மரியன்னை இவ்வுலக வாழ்வில் உமது இரக்கத்தையும் நன்மைத்தனத்தையும் பிரதிபலித்துக் கொண்டிருந்தார். நாம் உம்மைத் தேடி வரும்பொழுதும் எம் தேவைகளிலும் எம்மை உம் திருமகளிடம் வழிநடத்திச் செல்லுகின்றீர். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நாம் கைவிடப் பட்டவர்களாக இல்லாதபடி எம்மோடு எந்நாளும் இருந்தருளும் தாயே. நாம் எங்கிருந்தாலும் உம்முடைய மகனையும் தூய ஆவியானவரையும் எமக்குத் தந்து எம்மை ஆறுதல் படுத்தும் ஆமென்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# "மத்தேயு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்" (மத் 9:4)

இயேசுவின் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராக நற்செய்தியாளர் மத்தேயுவை நற்செய்தி குறிப்பிடுகின்றது. தன்னோடு இருக்கவும், நற்செய்தியை பறைசாற்றுவதற்கு அனுப்பப்படவும் இயேசு பன்னிரு திருத்தூதர்களைத் தேர்ந்து கொண்டார். எனவே இயேசுவின் மிக நெருக்கமான குழாமில் ஒருவராக மத்தேயு இருந்தார். அவரைப் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. அவர் அல்பேயுவின் மகனாக கலிலேயாவிலே பிறந்தார். உரோமானியரின் ஆட்சிக்காலத்தில் பலஸ்தீனாவிலே வரிதண்டும் ஒருவராக இருந்தார். அவரது அலுவலகம் கப்பர்நாகூமிலே இருந்தது. வரிதண்டுபவர் என்ற நிலையில் அவர் தனது சக யூத சமூகத்தினால் வெறுக்கப்பட்டு சமுதாயத்திற்கு புறம்பானவராகக் கருதப்பட்டார்.

தன்னுடைய அழைப்பின் பின்னர் மத்தேயு இயேசுவை தன்னுடைய வீட்டிற்கு விருந்துக்காக அழைத்தார் என்று நற்செய்தி கூறுகிறது. அவரின் அப்போஸ்தலிக்க செயற்பாடுகள் ஆரம்பத்தில் பலஸ்தீனாவில் உள்ள கிறிஸ்தவ சமூகங்களுக்குள் இருந்தது. அவர் நற்செய்தியை எழுதும் பொழுது நசரேனுவாகிய இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட மெசியா என்றும் அவரிலே மெசியாவின் வாக்குறுதிகள் நிறைவுற்றது என்றும் யூதர்கள் நம்புவதற்காகவே எழுதினார்.

**"மனிதர் விரும்புவதாலோ உழைப்பதாலோ எதுவும் ஆவதில்லை; கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது" (உரோ 9:16).**

மத்தேயு தன்னுடைய வாழ்வாலும் இறைவார்த்தையாலும் மனிதனின் மீட்பு இறைவனின் இரக்கத்தினாலேயே ஏற்படுகிறது என்று காட்டுகின்றார். தன்னுடைய சொந்த இனத்தினாலேயே பாவியாகக் கருதப்பட்ட தன்னை திருத்தூதர் குழாமில் ஒருவராக இயேசு அழைத்தது பற்றி அவர் ஆச்சரியப்பட்டிருப்பார். வரி தண்டுபவர் எனும் முறையில் இயேசுவால் அழைக்கப்படும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநீதியாக நடந்து பண ஆசை கொண்டவராக இருந்தார். கப்பர்நாகூமிலேயே அவரது முக்கிய சுங்கச் சாவடி இருந்தது. உரோமானிய ஆட்சி முறையின்படி வரிதண்டுபவர் அதிகபணத்தை அறவிட்டு தன்னை ஒரு நல்ல வரிதண்டுபவராகக் காட்டிக் கொண்டார். அவர்கள் உரோமானியப் படைவீரரால் என்றும் பாதுகாக்கப்பட்டனர். இதனால் அவர்கள் அதிக இலஞ்சம் வாங்கினாலும் எவரும் அவரை எதிர்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த அவர் கடவுளின் மகனான இயேசுவின் அருகில் இருப்பதற்கு தான் அருகதை அற்றவர் என்பதை உணர்ந்தார். ஆனாலும் இயேசு அழைத்தவுடன் அவரைப் பின்சென்றார். மத்தேயுவின் அழைப்புப் பற்றி மூன்று விடயங்களை நாம் கவனிக்க வேண்டும். இறையருள் கொடுக்கப்படுவது மனிதனின் பெறுபேறுகளைப் பொறுத்தது அல்ல என்கிறது ஒரு நற்செய்தி. கடவுள் தம் நட்பில் இருந்து எவரையுமே ஒதுக்கி விடுவதில்லை. மத்தேயு இயேசுவின் நெருங்கிய சீடராக ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றி பரிசேயரும் சதுசேயரும் அதிர்ச்சியடைந்தனர். இவர்களுக்கு பதிலாக இயேசு பின்வருமாறு கூறுகின்றார்.

**"நோயற்றவர்களுக்கு அல்ல. நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளரை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்"**

(மத்தேயு 9:13)

மத்தேயுவே தான் இயேசுவின் சீடராக இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதை உணர்ந்தார். ஆயினும் தனக்குக் கிடைத்த விசேட அழைப்புப் பற்றி மிக மகிழ்ச்சியுற்றார். இதனால் தன்னுடைய பாவம் பற்றி வெட்கப்படாமல் தனது கடந்தகால வாழ்விலே இறைவன் செய்தவற்றுக்கு நன்றியுள்ளவராக இருந்தார். நற்செய்திகளிலே மத்தேயு ஒருவர்தான் தன்னை ஆயக்காரன் என்று குறிப்பிடுகிறார். மற்ற நற்செய்திகள் அவரை இவ்வாறு குறிப்பிடவில்லை. இது தமது சகோதர திருத்தூதர் களுக்கு மதிப்புக் கொடுப்பதற்காக இருக்கலாம். நற்செய்தியிலே ஆயக்காரன் என்ற சொல் அருவருக்கத்தக்க பாவிகளையே குறித்தது. நற்செய்தியில் பல இடங்களில் "ஆயக்காரர்களும் பாவிகளும்" (மத்.9:10) (லூக்இ15:1), "ஆயக்காரரும் விலைமாதரும்" என்றும் குறிப்பிடப்படுகிறது (மத் 21:31).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மத்தேயுவோ தன்னை ஆயக்காரன் என்று குறிப்பிடத் தயங்கவில்லை. ஏனென்றால் அவர் தன் கடந்தகால வாழ்வை விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடரத் தீர்மானித்து விட்டார். இயேசு அழைத்ததும் உடனடியாகப் பதில் கொடுத்தார். "அவர் எழுந்து அவரைப் பின் சென்றார்" என்று நற்செய்திகள் கூறுகின்றன (மத்தேயு 9:9) (மாற் 2:14) (லூக் 5:26). அவரது பதில் அவருடைய முன்னைய எசமானர்களுக்குப் பயப்படாமல் சுங்கவரிக் கணக்குகள் அனைத்தையும் அப்படியே விட்டு விட்டு உடனடியாக இயேசுவைப் பின்சென்றார். இந்த உடனடிப் பதில் தனக்கு இதுவரை வாழ்வு கொடுத்த அனைத்தையும் விட்டு விடுவதாக இருந்தது. இயேசுவுக்குப் பணிந்து வாழ்வதன் பிரதிபலன் என்னவென்றோ தன்னுடைய எதிர்காலம் என்ன வென்றோ அவர் சிந்திக்கவில்லை. மாறாக அவர் கொடுத்த பதில் பெரும் கொண்டாட்டமாக இருந்தது. ஏனென்றால் இயேசுவுக்கு தன் வீட்டில் பெரும் விருந்தளித்தார் என்று சொல்லப்படுகின்றது. இந்த விருந்தின் பொழுதுதான் பரிசேயரும், சதுசேயரும் இயேசு தன்னை ஆயக்காரர் பாவிகளோடு ஒன்றுபடுத்துகிறார் என்று சொல்லும்பொழுது இயேசு இறை உள்ளத்தின் மறை பொருளை எடுத்துச் சொல்லுகின்றார். அதாவது "நான் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன்" (மத் 9:13).

மத்தேயுவினது அழைப்பும் அவர் கொடுத்த பதிலும் நமக்கு மீட்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. எம்முடைய வாழ்வு மனித தகுதிப்பாட்டிலே அல்ல, இறைவனின் இரக்கத்தி லேயே தங்கியுள்ளது. இறைவன் நம்மை அழைக்கும் பொழுது நாம் தாராளமாகப் பதில் கொடுப்போம் என்றால் எமது கடந்த கால பாவ வாழ்வு எவ்வளவு துன்பமாக இருந்தாலும் அது இறைவனின் இரக்கத்தினாலே மூழ்கடிக்கப்படுகின்றது. இதனால் எம்முடைய கடந்தகால வாழ்வை நாம் வெட்கத்தோடும் துக்கத் தோடும் பார்க்காமல் இறை இரக்கத்தினால் மன்னிக்கப்பட்டோம் என்ற அளவில்லா மகிழ்ச்சியால் நாம் நிரப்பப்படுகின்றோம். "செயல் களின் அடிப்படையிலா இல்லை, நம்பிக்கையின் அடிப்படையில் தான்" (உரோமர்.3:27). திருத்தூதர்களின் அழைப்புப் பற்றி புனித யோண் கிறிஸ்தோஸ்தம் கூறும்பொழுது திருத்தூதர்களுடைய பெயர் மீட்பின் வரலாற்றில் மகிமையான தாக இருந்தாலும்கூட அவர்களுடைய கடந்தகால வாழ்வு பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகவே இருந்தது என்று குறிப்பிடுகின்றார். மத்தேயு அழைக்கப்படும்பொழுது வரிதண்டுபவராக இருந்தார். அது அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட வாழ்வு. பேதுரு, பெலவேந்திரர், யாக்கோபு, யோவான் என்பவர்கள் அழைக்கப்படும் பொழுது அவர்களது தொழில் மீன்பிடித்தொழிலாக இருந்தது. ஆனாலும் அவர்களது பணிக்குப் பெருமை வந்தது அவர்கள் பெற்ற அழைப்பாலும் அதற்கு அவர்கள் முழுமனதோடு கொடுத்த பதில்களாலுமே.

இறை தியானம் நடத்தும் ஒரு அருட்தந்தை பின்வரும் நிகழ்வை எனக்குச் சொன்னார். இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வியாபாரியை எனக்குத் தெரியும். தூய ஆவியின் வரங்களி னாலே நிரப்பப்பெற்றவர் அவர். தங்களுடைய துன்ப வேளைகளில் ஆறுதல் பெறவும் வழிநடத்தலைப் பெற்றுக்கொள்ளவும் பல மக்கள் அவரைத் தேடிச் சென்றனர். அப்படி வருபவர்களுக்கு அவர் தன்னுடைய கடந்த கால வாழ்வை எவ்வித ஒளிவுமறைவும் இல்லாமல் கூறுவார். அது கேட்பவர்களுக்கு ஒரு தூண்டுதலாக இருக்கும். அவருக்கு ஒரு முறையற்ற தொடர்பு இருந்தது. அவருடைய செப வாழ்வும் மிகக் குறைந்ததாகவே இருந்தது. அவரது நண்பர்கள் அவரைக் குடிப்பதற்கும் சூதாடுவதற்கும் இட்டுச் சென்றனர். அவர் தன்னுடைய தொழிலிலே நேர்மையாய் இருக்கவில்லை. அந்நேரத்தில்தான் அவரது தொழிலிலே பெரிய பாதிப்பு ஏற்பட்டது. எனவே விரக்தி அடைந்த நிலையில் அவர் தியானத்திற்கு வந்தார். ஏனென்றால் அவருக்கு எங்கே போவது என்று தெரியவில்லை. அவரது மனைவியும், மகனுமே அவரைக் கைவிட்டு விட்டனர். அவருடைய ஆன்மீகப் பிரச்சினை அவரை அந்தத் தியானத்திற்குக் கொண்டு வந்தது. அவர் இறைவனுடைய அனுபவத்தின் இரக்கத்தினாலே ஆழமாகத் தூண்டப்பட்டார். தான் இறைவனை சாதாரணமானவராக எடுத்துக் கொண்டார் என்ற உணர்வுக்கு வந்தார். அவருடைய சமய அனுஸ்டானங்கள் எல்லாம் விசுவாசத்தால் அல்ல, சம்பிரதாயமாகவே இருந்தன. இறைவனை விட்டு எவ்வளவு தொலைவில் இருக்கின்றார் என்பதை அவர் உணர்ந்தார். தன்னுடைய தொழிலில் ஏற்பட்ட வீழ்ச்சியே தன்னை இறைவனிடம் கொண்டு வருவதற்கான காரணம் என்பதை உணர்ந்தார். அந்த வீழ்ச்சியே கடவுளுக்கு தன் வாழ்விலே முதலிடம் கொடுக்க இறைவன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கின்றார் என்பதை உணர்ந்தார். அவர் தியான நிலையத்தில் சேர்ந்து தியானம் செய்ய வருபவர்களுக்கு ஆற்றுப்படுத்தலைத் தொடங்கினார். அவரிலே குறிப்பிடத்தக்கது என்னவெனில் அவர் தனது மனமாற்றம் பற்றி எவ்வித வெட்கமும் இன்றி திறந்த உள்ளத்தோடு சொல்லுவார். நான் அவரோடு பேசிக்கொண்டிருந்தபோது இவை அனைத்தும் இறைவனின் செயலே என்று சொன்னார். இறைவன் மனித வாழ்விலே எவை எல்லாம் செய்ய முடியும் என்பதற்கு இவர் ஓர் முன்னுதாரணம். இவர் தன்னுடைய பணிக்கு எவ்வித பிரதிபலனும் எதிர்பார்ப்பதில்லை. தனக்கும் தன் மூலமாகவும் இறைவன் செய்த அனைத்திற்கும் இறைவனுக்கு அவர் நன்றி உள்ளவராக இருந்தார்.

**"குயவர் கையில் களிமண் போல்" (சீராக் 38:13)**

இங்கே நாம் கிறிஸ்தவ வாழ்வினதும் பணியினதும் மையத்தைத் தொடுகின்றோம். நாங்கள் நினைப்பதுபோல நாம் வாழும்பொழுது எமது வாழ்வு முழுவதையுமே நாம் குழப்பி விடுகின்றோம். இறைவனது கரத்தில் நாம் சரணடையும் பொழுது அவர் தமது திருவுளத்திற்கு ஏற்ப எம்மை உருவாக்குகின்றார். எம் வாழ்வின் மூலமாக அவர் விரும்புவதை இவ்வாறுதான் செய்கின்றார். அப்பொழுதுதான் எமது வாழ்வு அர்த்தமுள்ளதாகி மீட்பின் வரலாற்றிலே எமது பணி ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகின்றது.

மத்தேயு தன்னை இயேசுவின் கரத்திலே கொடுக்கும் பொழுது அதை ஒரு பெரும் கொண்டாட்டமாக்கியதுடன் தனது மனமாற்றத்தில் இருந்து என்றுமே பின்வாங்கியதில்லை. அவரது கொண்டாட்டம் அவருடைய பழைய நண்பர்களுக்குப் பிரியாவிடை கொடுத்து அவருடைய புதுவாழ்வு பற்றிப் பறை சாற்றியது. இந்தக் கொண்டாட்டத்திலேதான் அவர் இறைவனின் மாபெரும் இரக்கத்தை அறிந்து கொண்டார். அதிலிருந்து இயேசுவை அறிவிப்பதே அவருடைய ஒரே ஒரு ஆவலாக இருந்தது. வரிதண்டுபவர் என்ற முறையில் அரமேய மொழியை, மக்களின் மொழியை அவர் நன்கு தெரிந்திருந்தார். தொழில் செய்வதினால் கிரேக்க மொழியைத் தெரிந்திருந்தார். அவர் தன்னுடைய நற்செய்தியை எழுதும் பொழுது யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா இயேசுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை தெளிவாகக் காட்டுகின்றார். "வரவிருப்பவர் நீர்தானோ அல்லது வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ" (மத் 11:3) என்ற யோவானின் சீடர்களது கேள்விக்கு மத்தேயு நற்செய்தி பதில் கூறுகின்றது. நான்கு நற்செய்தியாளர்களுள் மத்தேயுவே யூதர்களுடைய மீட்புப்பற்றிய நம்பிக்கை அனைத்தும் இயேசுவிலே நிறைவேறுகிறது என்று காட்டுகின்றார். இன்று நமக்கும்கூட எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வாழ்விலே அர்த்தமுள்ள விதமாக நிறைவு பெறுவது இயேசுக் கிறிஸ்துவிலேதான் என்பதை இந்த நற்செய்தியே எமக்கு காட்டுகின்றது.

**"தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரை ஆட்சியில் பங்குபெறச் செய்தார்" (உரோ 8:30)**

மத்தேயு நமக்கு இரண்டு பாடங்களைக் கற்பிக்கின்றார். எமது இன்றைய வாழ்வு, எமது கடந்த காலத்தினாலே தீர்மானிக் கப்பட முடியாது. எம்முடைய கடந்த காலத்திலே என்ன தவறுகள் நேரிட்டாலும் நாம் குற்ற உணர்வோடு வாழ்வைத் தொடரக் கூடாது. எமக்கு வேண்டியதெல்லாம் "என்னைப் பின்பற்று" என்ற இயேசுவினது அழைப்பிற்கு பதில் கொடுப்பதாகும். நாம் விசுவசிக் கும் கடவுள் கடந்த காலத்தின் கடவுள் அல்ல, எதிர் காலத்தின் கடவுள். ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு கடந்தகாலம் உண்டு. ஒவ்வொரு பாவிக்கும் ஒரு எதிர்காலம் உண்டு. இறைவனின் அழைப்பை எவ்வளவிற்கு தள்ளிப் போடுகின்றோமோ அவ்வளவிற்கு எம் வாழ்வை அழித்து விடுகின்றோம். இயேசுவைப் பின்பற்றுவது எமக்கு ஒரு மகிமையைக் கொண்டுவரும். நாம் பாவத்தில் இருந்து மீண்டு எழுந்து வாழ இறை உறவைத்தேடி திருப்தி அடைய முடிபவர்களாக இருக்க வேண்டிய நிலையில் திருப்தியோடு இருக்கமாட்டோம். இயேசுவைப் பின் செல்லும் பொழுது எமது வாழ்வு மகிமை நிறைந்த வாழ்வாக மாறுகின்றது.

மத்தேயு இயேசுவைப் பின்தொடரத் தொடங்கியதும் அவரது வார்த்தைக்குச் செவி சாய்க்கத் தொடங்கினார். இயேசுவின் சீடராக வாழ்வது என்பது இதுதான். மத்தேயு நற்செய்திலே இயேசு இவ்வாறு கூறுகின்றார். "நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறை மீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழை பெய்தது, ஆறு பெருக்கெடுத்து ஓடியது, பெருங்காற்று வீசியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை அவ்வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில் பாறையின் மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது" (மத்தேயு 8:24,25). மத்தேயு இயேசுவின் வார்த்தையைக் கேட்டது மாத்திரம் அல்ல முழு உலகமும் ஆண்டவர் காட்டும் வாழ்வுக்கு வரவேண்டும் என்று விரும்பினார். இதற்காகத்தான் தனது நற்செய்தியை எழுதினார். எந்தத் தடையும் இயேசுவைப் பின் பற்றுவதில் இருந்து எம்மைத் தடுக்க முடியாது என்பதை வலியுறுத்தினார். மத்தேயு தனது சீடத்துவத்தினால் பெற்றுக் கொண்டது என்னவென்றால், இயேசுவைப் பின்செல்பவர்கள் இறைவார்த்தை எனும் கற்பாறை மீது தம் வாழ்வைக் கட்டுகின்றார் கள். வரி சேர்ப்பதனால் தம் வாழ்வை வீணடித்த ஒரு மனிதரை, ஆன்மாவை இறையரசுக்காக சேர்த்ததனால் அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டார்.

**செபம்**

ஆண்டவரே! அற்புதமான திருத்தூதரை உருவாக்கிய உமது இரக்கத்திற்காக உம்மைப் புகழுகின்றோம். அவர் ஒரு பாவியாக இருந்தாலும் ஒரு புனிதராகவும், நற்செய்தியாளராகவும் மாறச் செய்தீர். எமக்குக் கொடுக்கும் நம்பிக்கையின் அழைப்பை நாம் விசுவசிக்கின்றோம் ஆண்டவரே. நாம் உம்முடைய வார்த்தைக்காகக் காத்திருக்கும்பொழுது அவநம்பிக்கையாலும் குற்றப்பழி உணர்வுகளாலும் உடைந்திருக்கும் இவ்வுலகத்தை உம்முடைய மீட்பினால் ஒன்று சேர்க்கும் கருவிகளாக நாம் மாறுவதற்கு எம் உள்ளத்திற்கு அவை ஒளி தருவதாக ஆமென்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# "எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" (மாற்கு 2:9)

இயேசுவினுடைய பகிரங்க வாழ்வு முழுவதும் நோயாளிகள் அனைவருக்கும் குணமளிக்கும் ஒருவராக இயேசு காட்டப் படுகின்றார். நோயாளிகளைக் கண்டவுடன் அவரது இதயத்தின் ஆழத்தில் இருந்து இரக்கம் சுரப்பதாக நற்செய்திகள் காட்டுகின்றன.

"நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையானவர்களை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன்" (மாற்கு 2:17).

நோயாளிகளும் சமுதாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட வர்களுமே இயேசுவிடம் திரண்டு வந்தனர். இயேசுவுக்கு குணமளிப்பது என்பது இறையாட்சியின் தொடக்கமாக இருந்தது. திருமுழுக்கு யோவான் தன் சீடர்களை அனுப்பி உண்மையான மெசியா நீர் தானோ என்று கேட்டபொழுது இயேசு பின்வருமாறு கூறுகின்றார். "நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர். தொழு நோயாளர்கள் நலமடைகின்றனர். காது கேளாதோர் கேட்கின்றனர். இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது" (மத்தேயு.11:4,5). இயேசுவுக்கு குண மளிப்பது என்பது வெறும் உடல் நோயைக் குணமாக்குவது மட்டுமல்ல. மனிதனுக்கு அவர் கொண்டுவந்த நிறைவாழ்வின் ஒரு அடையாளமுமாகும்.

**"அவர் உன் உயிரை படுகுழியில் நின்று மீட்கின்றார்" (தி.ப 103:4).**

முடக்குவாதமுற்ற ஒருவரைக் குணமாக்குவது பற்றி நற்செய்தி விபரிக்கின்றது (மாற் 2:1-12). இயேசு ஒரு வீட்டில் போதித்துக் கொண்டு இருக்கும்பொழுது அவர் சொல்வதைக் கேட்பதற்கு திரளான கூட்டம் குழுமி இருந்தது. அந்நேரத்தில்தான் முடக்கு வாதமுற்ற ஒருவரை இயேசு குணமாக்க வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்போடு நாலு பேர் சுமந்து வந்தனர். ஆனால் திரளான கூட்டத்தின் காரணத்தினால் அவரை இயேசுவுக்கு அருகில் கொண்டுவர முடியவில்லை. இயேசு குணமளிப்பார் என்ற மன உறுதியோடு அவர்கள் கூரை மேல் ஏறி நோயுற்றவரை கீழே இறக்கினர். கூரை மீது ஏறி கூரையைப் பிரித்து ஒரு வெளி உண்டாக்கி இயேசு இருந்த இடத்திற்கு முன்னால் இறக்கினர். அவர்கள் கூரையைப் பிரித்து முடக்குவாதமுற்றவரை இயேசு முன் இறக்கும்போது, யூத மரபுகள், கலாசாரம் அனைத்தையும் உடைத்தெறிந்து இயேசுவின் விசுவாசம் என்னும் புதிய யுகத்தை ஆரம்பித்தனர். அவர்களுடைய விசுவாசத்தைக் கண்ட இயேசு முடக்குவாதமுற்றவரை நோக்கி "மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" (மாற் 2:5) என்றார். பின்னர் இயேசு அவரிடம் எழுந்து நட என்று சொன்னார். அவர் எழுந்து நடந்து தன் வீட்டிற்குச் சென்றார்.

இந்தப் புதுமை இயேசு குணமளிக்கும் மூன்று நிலைகளைக் காட்டுகின்றன. முடக்குவாதமுற்றவர் இயேசுவிடம் கொண்டுவரப்பட்டபோது அவர்கள் எதிர்பார்த்தது அனைத்தும் அவருடைய உடல் நோய் குணமாக்கப்படவேண்டும் என்பது மட்டும்தான். ஆனால் அவருடைய உடல் நோயைக் குணப் படுத்தும் முன் இயேசு அவருடைய பாவங்களை மன்னித்து அவருடைய இதயத்தைக் குணமாக்குகின்றார்.

பரிசேயரும் சதுசேயரும் இதைக் கேட்டபொழுது அவர்கள் இயேசுவுக்கு எதிராக முணுமுணுத்து "இவன் ஏன் இப்படிப் பேசுகிறான்? இவன் கடவுளைப் பழிக்கின்றான். கடவுள் ஒருவரே அன்றி பாவங்களை மன்னிக்க யாரால் இயலும்?" (மாற்கு 2:7) என்றனர். ஆனால் இயேசுவோ "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானுட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்" (மாற்கு 2:10) என்றார். ஆண்டவர் இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம் பாவங்களை மன்னிப்பதாகும். "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இக்கூற்று உண்மையானது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. (திமொ 1:15).

மனிதனைப் பாதிக்கும் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் கடவுளிடம் இருந்து அவனைப் பிரிப்பதாகும். இந்தப் பகைமை மனிதனின் செயல், அவனது தீர்மானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பாவமும் மனிதன் மீண்டும் இறைவனிடம் இருந்து விலகுவதாகும். எசாயா இறைவாக்கினர் மூலமாக ஆண்டவர் பேசுவது போல.

**"உங்கள் தீச்செயல்களே உங்களுக்கும், உங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன. உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன." (எசாயா 59:2).**

ஊற்றில் இருந்து துண்டாடப்பட்ட நீரோட்டம் காய்ந்து போகும். ஒளியில் இருந்து தடைப்பட்ட ஒளிக்கதிர் இருளையே காட்டும். பாவம் என்பது மனிதனுடைய முழுமையான வாழ்வையும் இருளாக்குவதுமட்டுமன்றி அவனுடைய மனம் இதயம் அனைத்தையும் ஒரு போலியான சிந்தனைக்குள்ளாக்குகின்றது. இதனால் மனிதன் அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் முடியாதவன் ஆகி விடுகிறான். உறவுகள் அனைத்தும் பாதிக்கப் படுகின்றன. அவன் தனிமையில் வாழத்தொடங்குகின்றான். இதனால் அவனது உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. அவனது வாழ்க்கையே ஒரு சுமையாகிவிடுகின்றது. பாவம் நிறைந்த வாழ்வைப்பற்றி பவுல் அடியார் கூறுவது போல நாம் விரும்பு வதைச் செய்யமுடியாமல் போகின்றது. "நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை விரும்பாத தீமையையே செய்கி றேன்" (உரோ 7:19). மனிதன் தன்னுடைய செயல், தீர்மானம் இவற்றின் மேல் உள்ள சுதந்திரம், கட்டுப்பாடு அனைத்தையும் இழந்து விடுகின்றான்.

நாம் இறைவனிடம் திரும்பும்பொழுது இறைவன் செய்யும் முதல் செயல் பிரிந்த எமது இதயத்தின் மேல் அதிகாரம் செலுத்துவதாகும். எம்மை அடிமைப்படுத்தும் எல்லாச் சக்திகளிடம் இருந்தும் அவர் எம்மை விடுவிக்கின்றார். எமக்கு இந்த உறுதிப்பாட்டை அளிக்கின்றார். "மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்" (யோவான் 8:36). பாவத்தினதும் சாவினதும் இருளில் இருந்து நம்மை இறைவன் விடுவித்து நிலை வாழ்விற்கு எம்மை உயர்த்துகின்றார் என்று வேதம் கூறுகின்றது. தீய சக்திகளின் பிடியில் இருந்துதான் ஆன்மீக விடுதலையை இயேசு முடக்குவாதக்காரனுக்குக் கொடுத்தார். பாவங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அவனை மன்னிக்கும் பொழுது அவன்மேல் இயேசுவுக்கு இந்த அதிகாரம் இருந்தது. நற்செய்தியிலே தனிநபர்கள்மேல் தீய சக்திகள் கொண்டிருந்த அதிகாரத்தை இயேசு விரட்டுகின்றார். கெனசரேத் நகரிலே பேய் பிடித்தவன் எத்தனையோ வருடங் களாக படைகள் என்று சொல்லப்படுகின்ற பெரும் ஆவியினாலே ஆட்கொள்ளப்பட்டிருந்தபொழுது அவனைக் குணமாக்கி, அவனது சுயநிலைக்குக் கொண்டுவந்தார். அவன் சமூகத்தில் இருந்து தனிமையாக்கப்பட்டு தனிமையிலும், துன்பதுயரத்திலுமே வாழ்ந்தான். அவனை ஆட்கொண்ட தீய சக்திகள் அவனை அலைக்கழித்து அவனது உடலையே வெட்டுமளவிற்குத் துன்புறுத்தின. நற்செய்தி "அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார்" (மாற்கு 5:5) என்று கூறுகின்றது. இந்தத் தீய ஆவியிடமிருந்து இயேசு அவனை விடுவித்து, அவனது சுய நிலைக்கு அவனைக் கொண்டு வந்த பொழுது இயேசுவின் தூதுவராக மாறி தனக்கு நடந்தவற்றை மக்களுக்கு எடுத்துரைத்தான் என்று கூறுகின்றது. "அவர் சென்று, இயேசு தமக்கு செய்ததையெல்லாம் தெக்கப்பொலி நாட்டில் அறிவித்து வந்தார். அனைவரும் வியப்புற்றனர்" (மாற்கு 5:20).

**"உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்துகின்றார்" (தி.பா 147:3)**

நாலுபேர் சுமந்து வந்த முடக்குவாதக்காரன் தன் உடலிலே தனிமைப்பட்டிருந்தது போல மற்றவர்களிடமிருந்தும் தனிமைப்பட்டிருந்தான். தன்னுடைய நண்பர்களின் பேச்சையும் அன்பையும் கேட்டுப் பதில் கொடுக்க முடியாதவனாக இருந்தான். தனிமை எனும் கொடுமையிலே வாழ்ந்து கொண்டிருந்தான். ஆண்டவருடைய பார்வை அவன் மேல் விழுந்தபோது அவனது உள்ளத்தின் துன்பத்தைப் பார்த்து அதிலிருந்து அவனை விடுவித்து "என் மகனே" என்றழைத்தார். என் மகனே என்று அழைத்த இயேசுவின் அன்பு வார்த்தையைக் கேட்டு அவன் கண் திறந்தான். அந்த அன்பின் அழைப்பு அவன் இயேசுவுக்குச் சொந்தமானவன் என்ற ஒரு விழிப்புணர்வைக் கொடுத்தது. இயேசு தன்னை ஒரு மகன் என்று அழைக்கின்றார் என்றும் ஒரு தந்தை தன் மகன் மேல் அக்கறை கொள்வது போல தன்மீது அக்கறை கொள்கின்றார் என்றும் உணருகின்றான். அவன் இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவராலும் வேண்டப்படாத ஒருவன் அல்ல. இனி வாழமுடியும் என்ற மகிழ்ச்சியை தன்னுடைய உள்ளத்திலே பெறுகின்றான். தன்னால் உணரக்கூடிய, தன்னை அன்பு செய்யக்கூடிய ஒருவர் இருக்கின் றார் என்பதை உணருகின்றான்.

ஒரு மகன் தன் தந்தையை உற்றுப்பார்ப்பது போல அவன் இயேசுவை உற்றுப்பார்க்கின்றான். வருடக்கணக்காக மற்றைய வர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட அவனது நிலை அவனுக்கு பெரும் அங்கலாய்ப்பைக் கொடுத்தது. திடீரென அவனுக்கு நம்பிக்கை ஏற்படுத்தி, அவனுடைய வாழ்வை ஒளிமயமாக்கி, மீண்டும் அன்பை உணரவைத்து அவனது உள்ளத்தைக் குணப்படுத்தியது. அவன் இறைவனோடும் மனிதனோடும் ஒப்புரவாகத் தொடங்கி விட்டான். அவனுக்கு இனிமேல் எவர்மீதும் எவ்வித மனத்தாக்கமும் இல்லை. அவன் மனம்மாறி இறைவனோடு ஒப்புரவாக ஆயத்தமாகி விட்டான்.

அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டபொழுது அவன் முழுமையாகக் குணமாகி, தந்தையினதும், தூய ஆவியினதும் அன்பைச் சுவைக்க இயேசு அவனை அழைத்தார். அதாவது தந்தையாகிய இறைவன் நம்மைப் படைக்கும் பொழுதே மூவொரு கடவுளின் அந்நியோன்னிய அன்பைச் சுவைக்கவே அழைத்தார். பாவம் மனிதனின் உள்ளத்துள் குடிகொள்ளும் முன் இத்தகைய நிலையே மனிதனுக்கு இருந்தது. அதுவரை மனிதனின் உள்ளம் இறைவனோடு ஒன்றித்து இருந்தது. இதுதான் ஆரம்பத்தில் படைப்பிலே இருந்த நல்லிணக்கம். வெறுப்போ, கோபமோ, பிரிவினையோ இருக்கவில்லை. துன்பமோ, நோயோ, சாவோ இருக்கவில்லை. மனிதனுக்குள் பிளவுபட்ட நிலையும் இருக்கவில்லை. இயற்கை மனிதனோடு இணைந்த நிலையில் இருந்தது. ஆனால் மனிதனிலே "வீழ்ச்சி" ஏற்பட்டதும் எல்லாச் சமநிலைகளும் பாதிக்கப்பட்டன. மனிதனுடைய வாழ்வு, அவனது உறவுகள் அனைத்தையும் பிளவு என்ற கொள்ளை நோய் ஆட்கொண்டது. மனிதன் தன் சக மனிதனிடமும் இயற்கையிடமும் குறைகாணத் தொடங்கிவிட்டான். மனிதனுடைய இதயத்துள் பிளவு ஏற்பட்டு அவன் விரும்பியதைச் செய்ய முடியாது போயிற்று. மனிதனுக்குள் துயரம் புகுந்துவிட்டது. மனிதனுடைய ஆவிக்கு எதிராக அவனுடைய உடல் கிளர்ந்தெழுந்து அவனுக்கு நோய்களையும் துன்ப துயரங்களையும் ஏற்படுத்தியது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு உலகிற்கு வந்தபொழுது மீண்டும் ஆரம்பத்தில் இருந்த அந்த நல்லிணக்கத்தை உலகத்தில் உருவாக்கினார். சிலுவையிலே காட்டப்பட்ட உன்னதமான அன்புக்கு மனிதனுடைய ஆன்மா திறக்கத் தொடங்கிவிட்டது. இயேசுவில் விசுவாசம் கொண்ட அனைவரும் அவர்மூலம் மீட்பைக் கண்டடைந்தனர். பகிர்ந்து வாழும் மனித சமுதாயம் உலகத்தில் உருவாகத் தொடங்கியது. இயேசு குணமளித்தபொழுது அவர் கொண்டு வந்த மீட்பு ஆரம்பமாகிவிட்டது என்பதை நாம் உணரவேண்டும். முடக்குவாதம் உற்றவனுடைய உள்ளம் இறைவனுடன் ஒப்புரவாகத் தொடங்கியபொழுது அவனது உடலும் குணம் பெற்றது.

இந் நேரத்தில்தான் இயேசு "நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போ" (மாற் 2:11) என்று கூறுகின்றார். எல்லோரும் ஆச்சரியப்படும் விதத்தில் புதிய வாழ்வுக்குள் அவன் நடந்து செல்லுகின்றான். அவனுடைய உடல் முடக்குவாதம், அவனுடைய பாவ வாழ்வோடும் மன அழுத்தம் கொண்ட மனத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருந்தது. அவன் குணமாக்கப்பட்ட பொழுது, அவன் பாவத்தில் இருந்து விடுதலை பெற்று அவனது புதிய உறவுகள் ஆரம்பமாகின்றன. எமது ஆவி, ஆத்ம, சரீர நிலைகள் அனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றன. இவ்வாறுதான் இயேசு கொண்டுவந்த மீட்பு நிறைவாழ்விற்கு மனிதனை இட்டுச் செல்கின்றது. "நீங்கள் வாழ்வு பெற அதுவும் நிறைவாக பெறவே நான் வந்தேன்" (யோவான் 10:10)

"நீர் என் புலம்பலை களிநடனமாக்கிவிட்டீர்." (தி.பா 30:11). இறைதியானம் நடத்தும் ஓர் அருட்தந்தை பின்வரும் சம்பவத்தை என்னோடு பகிர்ந்து கொண்டார். இளைஞன் ஒருவன் இளைஞர் தியானம் ஒன்றிற்கு வந்தான். அவன் நொண்டியாகவே இருந்தான். மருத்துவரால் அவனது நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்கவும் முடியவில்லை. அவனுக்கு சிகிச்சை அளிக்கவும் முடியவில்லை. நடைபெற்ற தியானத்தில் அவனுக்கு எவ்வித ஆர்வமும் இருக்கவில்லை. அவன் போதைக்கு அடிமையாகவும் இருந்தான். அவனுக்கு உள ஆற்றுப்படுத்தல் செய்த பொழுது தன்னுடைய உறவிலே தான் ஆழமாக பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னான். தன்னை ஏமாற்றிய பெண்ணை தன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்கவே முடியாது என்று கூறினான். அவனுடைய ஒரே ஒரு நோக்கம் அவளைப் பழிவாங்குவதாகும். அவளைப் பழிவாங்க முடியவில்லையே என விரக்தி அடைந்தவனாக இருந்தான். அப் பெண்ணோ வாழ்க்கையில் முன்னேறி இருந்தாள். அவனாலேயோ முடியவில்லை. உள்ளார்ந்த குணமாக்கல் நடைபெற்ற வேளை அவனுக்கு ஒரு புதிய உணர்வு ஏற்பட்டது. அவளை மன்னிக்க வேண்டும் என்ற என்ற பெரும் தூண்டுதல் அவனுக்கு ஏற்படக் காரணம் இயேசு சிலுவையில் இருந்து மன்னிக்க வேண்டும் என்று அவனிடம் கேட்டுக் கொண்டிருந்தார். அவனோ அதனை தட்டிக் கழித்துக் கொண்டு இருந்தான். ஆனால் அவன் மன்னிக்கத் தீர்மானித்து மனமுவந்து மன்னித்தபோது பெரும் அழுகுரலோடு நிலத்திலே விழுந்தான். கூட நின்ற இளைஞர்கள் சூழ நின்று மன்றாடிக் கொண்டு இருந்தனர். அவன் கண் திறந்தபோது அவனது உள்ளத்திலே பெரும் அமைதியும் போதையின் தூண்டுதலில் இருந்து ஒரு விடுதலையும் கிடைத்தது. அவன் கைகளைக் குவித்து நற்கருணை ஆண்டவரை ஆராதித்து தன்னுடைய வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணித்தான். இளைஞர்கள் அவனைத் தூக்கிய பொழுது அவன் தன்னால் நடக்கமுடியுமெனவும் தான் நொண்டிக் கொண்டிருந்த நிலையில் இருந்து குணம் பெற்றதாகவும் நினைத்தான்.

முடக்குவாதக்காரன் குணமாகியது மக்கள் அனைவரும் பாவத்தினால் முடக்கப்பட்டு, உறவுகளில் இருந்து பாதிக்கப் பட்டிருந்த நிலையில் இருந்து முழுமையாக விடுதலை பெறுவதன் முன்னடையாளமாக இருக்கின்றது. அவனது இயலாமை இன்று மானிடத்தில் இருக்கும் இயலாமையைக் குறிக்கின்றது. அந்த நபரைச் சுமந்து வந்த நாலு பேரும் அவனைக் கொண்டு வந்தபொழுது அவனை மீண்டும் குணமாக்கி நடக்கச் செய்வார் என்ற ஆழமான நம்பிக்கையுடன் தான் கொண்டு வந்தனர். ஆனால் அவன் பெற்ற குணமாக்கலோ அவர்களது எதிர்பார்ப்பு அனைத்தையும் விட மேலானதாக இருந்தது. அது அவனுக்குச் கொடுக்கப்பட்ட முழு வாழ்வின் குணமாக்கல் ஆகும். இன்றைக்கு எமக்குத் தேவைப்படுவது எம்மைக் கடவுள் எந்த நோக்கத்திற் காகப் படைத்தார் என்ற விசுவாசத்தைப் பெறும் நோக்கத்தை அடைவதாகும். இன்று எமக்குக் கொடுக்கப்படும் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால் நாம் விசுவாசத்தோடு இறைவனோடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பினோம் என்றால் எமது உடைந்த, சிதைந்த நிலைகளிலே நாம் விடப்படமாட்டோம். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்." (யோவா 3:16). முடக்குவாதம் உற்றவனை நான்கு மனிதர்களும் இயேசுவிடம் தூக்கி வந்தது அவர்களது உண்மையான அன்பின் வெளிப்பாடாகும். மனிதர்களாகிய நம் மத்தியில் உண்மையான அன்பு காட்டப்படும் என்றால் உண்மையான புது வாழ்வு நம் மத்தியில் மலரும்.

**செபம்**

ஆண்டவராகிய இயேசுவே, நமக்கு வாழ்வை அதுவும் நிறை வாழ்வைத் தரவே நீர் வந்தீர். நீர் நோயுற்றோரைக் குணமாக்கிக் கொண்டு, பாவிகளை மன்னித்துக் கொண்டு, ஆறுதலற்றோருக்கு ஆறுதலை கொடுத்துக்கொண்டு, உறவு முறிந்த குடும்பங்களிலே உறவை ஏற்படுத்திக் கொண்டு சென்றீர். இறுதியாக உம்முடைய மீட்பை அனைவரும் அடையும்படி உம்மைச் சிலுவையிலே பலியாக்கினீர். உம்முடைய பிரசன்னத்திலே முறிந்த உறவுகள் அனைத்தும் மீண்டும் குணமாக்கப்படும் என்ற ஆழமான விசுவாசத்தை நமக்குத் தாரும். எம்மைப் பல விதங்களிலும் முடக்கிக் கொண்டிருக்கும் பாவ நோய்களிலிருந்து எம்மைக் குணமாக்கும். உம்முடைய குணமாக்கலை நாம் அனுபவித்த பின்னர் முழு உலகும் மீட்பை அனுபவிப்பதற்காக உடைந்த உள்ளங்கள் அனைத்தையும் சிலுவையின் நிழலின் கீழ் கொண்டுவரும் ஆற்றலை நமக்குத் தாரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# இறைவனின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிதல்

"ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானது போல் ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவார்கள்" (உரோமர் 5:19). மீட்பின் வரலாறு முழுவதுமே இறைவனுக்குக் கீழ்ப்படியும் ஒரு கொண்டாட்டம் ஆகும். ஒருவர் தன்னை இறைவனுக்கு மகிழ்ச்சியுடன் அர்ப்பணிக்கும் பொழுது கீழ்ப்படிதல் ஒரு கொண்டாட்டமாகின்றது. ஒருவர் தான் செய்வ தையே சரியென வலியுறுத்திக் கொண்டிருக்கும் பொழுது அது அவரின் விடாப்பிடியாக இருக்கின்றது. ஆனால், ஒருவர் தன்னு டைய உள்ளத்தை இறைவனின் விருப்பத்திற்குத் திறந்திருக்கும் பொழுது அங்கே இறைவனது அருள் பொழியப்பட்டு விண்ணகத் தின் அரிய ஆற்றல்கள் பொழியப்படுகின்றன. எமது விசுவாசத்தின் மரபை நாம் பார்க்கும்பொழுது இதையே நாம் அனுபவித்து எமது கிறிஸ்தவ வாழ்விற்குச் சான்று பகரக்கூடியதாக இருக்கின்றது.

"அவர் இறைமகனாய் இருந்தும் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்" (எபிரேயர் 5:8). இறைமகன் மனுவுருவானதை மனுக்குலத்தின் மீட்புக்கான இறைவனுடைய திட்டத்திற்கு தன்னைக் கையளிப்பதாக இயேசு விளக்குகின்றார். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவான். 3:16). மனுக்குலம் முழுவதும் இறைவனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து தங்களுக்கான அழிவையே தெரிவுசெய்த பொழுதும்கூட, மனிதரில் ஒருவராவது அழிவதை தந்தை விரும்பவில்லை. அவர்களது மடமைக்கு அவர்களைக் கையளிக்காமல், அவர்களது கொடூரச் சாவிலிருந்து அவர்களை விடுவிக்க, தன்னுடைய ஒரே மகனைக் கையளித்தார். இதனால் மனுக்குலம் தன் மேல் எடுத்துக்கொண்ட சாவின் சுமையையும் அதனால் வரும் துன்பத்தையும் இறைமகன் தன்மேல் ஏற்றுக்கொண்டார். இதனால் அவர் விண்ணகத்தை விட்டு இறங்கி மண்ணகம் வந்து மனுக்குலத்தின் துன்ப துயரங்களோடு தன்னை ஒன்றுபடுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இவ்வாறு, தந்தையின் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு திருப்பாடல் ஆசிரியர் கூறுவதுபோல "என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் உமது திருச்சட்டம் என் உள்ளத்தில் இருக்கின்றது" (தி.பா.40:8,9) என்கிறார். தந்தையை அவர் முழுமையாக அன்பு செய்ததால் எந்த ஒரு தியாகத்தையும் ஏற்றுக்கொள்ள அவர் தயங்கவில்லை. "நானும் தந்தையும் ஒன்றே" (யோவா. 10:30). இயேசு தன்னை தந்தையின் விருப்பத்திற்கு அர்ப்பணித்ததை நற்செய்தி முழுவதிலும் நாம் பார்க்கிறோம். "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு" (யோ.4:34). இந்த நற்செய்திப் பகுதியிலே நாம் பார்ப்பது, பாவியாகிய சமாரியப் பெண்ணை பாவம், சாவு ஆகிய சாபத்திலிருந்து விடுவிப்பது இயேசு தன்னுடைய பணியைச் செய்து முடிப்பது என்பதாகும்.

தந்தையின் விருப்பத்தின்படி எந்நேரமும் வாழ்வதனால் தந்தையின் அன்புப் பிரசன்னம் தனக்கு என்றும் ஆதாரமாக இருக்கின்றது என்பதில் அவர் உறுதியாய் இருந்தார். "இதோ! காலம் வருகின்றது ஏன், வந்தே விட்டது. அப்போது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு ஓடிப் போவீர்கள். என்னைத் தனியே விட்டு விடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை. தந்தை என்னோடு இருக்கிறார்" (யோவா 16:32). மனிதரின் பாராட்டுக்களையோ பசப்பு வார்த்தைகளையோ இயேசு ஒரு பொழுதும் எதிர்பார்க்கவில்லை. மாறாக, அவரது இந்தக் கீழ்ப்படிதல் பெத்தலகேமில் பிறந்தது முதல் கல்வாரிச் சிலுவையில் உயிர் துறந்ததுவரை தன்னை முழுமையாக வெறுமையாக்குவதிலேயே அடங்கியிருந்தது. "சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தன்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலிப் 2:8).

**மரியன்னையின் கீழ்ப்படிதல்**

"நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார் (லூக்.1:38). மீட்பின் வரலாற்றிலே தந்தைக்கு இயேசு காட்டிய உன்னதமான கீழ்ப்படிதலை நாம் கொண்டாடும் பொழுது அவரோடு ஒத்துழைத்தவரை நாம் மறந்து விடக்கூடாது. இறைமகன் மனிதனாகப் பிறப்பெடுப்பதற்கு ஒரு பெண் தாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் சம்மதம் தேவைப்படுகின்றது. இந்தச்செய்தி மரியாளுக்கு வானதூதர் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. மரியாளுக்கோ எதுவும் விளங்கவில்லை. ஆகையால் மிகவும் கலங்கினாள் என்று நற்செய்தி கூறுகின்றது. ஒரு கன்னியாக இருந்து கொண்டு தாயாக வருவதன்மூலம் எப்படிப்பட்ட ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டுமென்பதை மரியா உணர்ந்தாள். திருமணத்திற்கு முன் கருத்தரிப்பது கல்லால் எறிந்து கொல்லப்படக்கூடிய ஒரு குற்றம் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். அப்படி இருந்தும் வானதூதரின் அந்தச் செய்திக்கு - ஆண்டவரின் அழைப்பிற்கு "ஆம்" என்று அடிபணிந்தாள். இதனால்தான் எலிசபேத்து மரியாளை வாழ்த்தும் பொழுது "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக்கா1:45) என்று கூறினார்.

**கீழ்ப்படிதலே செவிமடுத்தலின் கனி**

பல குரல்களால் நமது மனம் அலைக்கழிக்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட முக்கியமான செய்திக்கு நம்மால் செவிமடுக்க முடியாது. வெளி இரைச்சல் மட்டுமன்றி உள்ளிருந்தும் தோல்வி யின் பயம், பொறாமை, சோம்பல், தன்னலம் போன்ற "பல இரைச்சல்கள்" வரலாம். இவையனைத்தும் நம்மை செவிமடுக்க விடாது தடுக்கின்றன. சுய விருப்பத்தில், தன்னலத்தில் மூழ்கியி ருக்கும்போது நம் உள்மனக்குரலை நாம் கண்டறிய முடியாது.

திருவிவிலியத்தில் கீழ்ப்படித்தல் பற்றிய கருத்து முதல் நூலிலிருந்து இறுதி நூல் வரை இழையோடுகிறது. கடவுளை கீழ்ப்படிதல் மூலமே ஒருவர் அடையமுடியும். (தி.வெ.12:17) இல் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஈடேற்றும் பெண்ணாக மரியா உருவகப்படுத்தப்படுகிறாள். கீழ்ப்படிதலே மரியாவினது வாழ்வின் அடித்தளம். அவளைப் பொறுத்தவரை கீழ்ப்படித்தல் என்பது அவ்வப்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழும் செயலன்று. மாறாக, முழுச்சுதந்திரத்துடன்கூடிய திறந்த மனப் பான்மை. கடவுளின் திருவுளம் அவள் வாழ்வில் நிறைவேற இக் கீழ்ப்படித்தல் உதவுகின்றது. வானதூதரது தூரைப்பின் போது மரியா "ஆம்" என்றாள். அந்நேரத்திலிருந்து இயேசுவோடு இறைதந்தைக்கு தொடர்ந்து "ஆம்" என்றாள். இயேசுவோடு இணைந்து "என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே வந்தேன்" (யோவா6:38) என்றாள். இவ்வாறு தனது வாழ்விலே எந்நாளும் இறைத்திட்டத்துக்கு "ஆம்" என்று பதிலளித்துப் பழகிய தாய் கானாவூர் திருமணத்தின் இக்கட்டான நேரத்திலே பணியாளர் களைப் பார்த்து "அவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்று பணிக்கின்றாள். அவ்வாறு செய்யவே புதுமைகள் நடக்கின்றன.

**புனித வளனாரின் கீழ்ப்படிதல்**

மீட்பின் வரலாற்றிலே கீழ்ப்படிதலுக்கு புனித வளனார் ஒரு சிறந்த சின்னமாக இருக்கின்றார். நற்செய்தி நூல்களின்படி அவர் ஒரு வார்த்தையும் பேசாத ஒருவர். ஆனால், இறைவார்த்தையைத் துல்லியமாகக் கடைப்பிடிப்பதில் மிகவும் சிறந்தவராகக் காட்டப்படுகின்றார். அவரைப்பற்றி நற்செய்தியில் அடிக்கடி கூறப்படுவது என்னவென்றால், தன்னுடைய தீர்மானங்களை செபத்தில் கொடுக்கும், இறைவழிகாட்டலுக்கு ஏற்ப செய்யும் ஒருவர். மரியாள் எனும் ஒருவரை அவர் திருமணம் செய்வதாக இருந்தது. ஆனாலும், அவள் கருவுற்று இருந்ததை அறிந்ததும் தன்னுடைய திட்டங்களின்படி நடக்கமுடியாமல் இருந்தது. மரியாளை மறைவாக விலக்கிவிடத் திட்டமிடப்பட்டிருந்தார். ஆனால், மரியாளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி வானதூதர் கூறிய அறிவுரைக்கு இணங்க இறைவார்த்தைக்குப் பணிந்தார். கணவன் என்ற உரிமையைக் கைவிட்டு இறை வார்த்தைக்கு தன்னைக் கையளித்தார். இவ்வாறு தாராளத் தன்மையுடன் இறைதிட்டத்திற்குத் தன்னைக் கையளிப்பது அவரது வாழ்வுப் பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் முழுமை யாகின்றது.

மரியாளின் மகப்பிரசவத்திற்கு நேரம் வந்ததும் கணக்கெடுப்பிற்காக பெத்லகேமிற்குக் கூட்டிச் செல்கின்றார். நற்செய்தியின்படி நகரத்தின் எந்த இடத்திலும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இறைவனின் தாயின் இந்த இக்கட்டான நிலையில் இடமேதும் கிடைக்காதது அவருக்கு இதயம் தாங்க முடியாத துன்பமாக இருந்திருக்கும். அடுத்து பாலன் பிறந்தவுடன் ஏரோதுவின் கைக்குத் தப்புவிக்க தப்பியோடவேண்டி இருந்தது. முதலிலே எகிப்திற்குத் தப்பியோடி மீண்டும் நசரேத்துக்கு திரும்பிவரப் பணிக்கப்படுகின்றார். எந்தவொரு கட்டத்திலும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்காமல் இறை திட்டத்திற்குத் தன்னைக் கையளிக்கின்றார். இறைவனுடைய வெளிப்பாடே தன்னுடைய குடும்பத்திற்குத் தலை சிறந்தது என அவர் உணர்கின்றார். அனைத்தும் செய்து முடிந்ததும் விவிலியத்தின் பக்கங்களிலிருந்து அவர் மறைந்து விடுகின்றார். அவரது வாழ்வின் ஒரே ஒரு நோக்கம் இயேசுவையும் மரியாளையும் பாதுகாத்து வழிநடத்துவதாகும்.

**விவிலியத்தில் இறைத்திட்டத்தை ஏற்பது**

"ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரிபலிகள், பிறபலிகள் செலுத்துவதா? அவரது குரலுக்குக் கீழ்ப்படிவதா? கீழ்ப்படிதல் பலியை விடச் சிறந்தது" (1சாமுவேல்15:22). மீட்பு நிகழ்விற்கான ஆரம்பத்தின் முதல் மூன்று முக்கியமானவர்கள் தம்மை இறைவனின் திட்டத்திற்கு முற்றாகக் கையளித்தவர்கள். நாம் இயேசுவின் மனுவுருவாதலைக் கொண்டாடும் பொழுது இறை வனுக்குக் கீழ்ப்படிதலே எமக்கு மீட்பைக் கொண்டு வரும் என்று அறிக்கையிடுகின்றோம். வாழ்க்கைக் கொண்டாட்டத்தை நிர்மூல மாக்குகின்ற ஒரே ஒரு திட்டம் இறைவனுடைய திட்டத்தை நிராகரிப்பது ஆகும். ஊதாரி மகன் தந்தையை அவமானப்படுத்தி சுயநலத்தோடு சென்றபொழுது பன்றிகளோடு வாழும் பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றான். தந்தையின் இல்லத்தில் இருந்து அவன் வெளியேறும்பொழுது தந்தையின்றி தான் வாழமுடியும் எனும் தீர்மானத்தை எடுக்கின்றான். அவனது நோக்கம் தந்தையைப் பற்றி எந்தச் சிந்தனையும் எடுக்காது, தான் மட்டும் இன்பத்தில் வாழ வேண்டும் என்பதாகும். இந்த முடிவிற்கு அவன் சென்றதும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தந்தையிடம் திரும்ப வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தபோதே அவனது வாழ்வு மீண்டும் ஆரம்பமாகின்றது. அவனது ஒரே ஒரு நோக்கம் "உம்முடைய கூலி ஆட்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும்" என்பதாகும் (லூக்கா15:19).

தன்னை ஒரு கூலியாளாக வைத்திருக்க விரும்பும் பொழுது தந்தையின் அன்புக் கரங்களுக்குள்ளே வந்து விழுகின்றான். வீட்டிலே ஆரம்பமாகின்றது கொண்டாட்டம்.

தந்தைக்கு அமைவதே மீட்பின் நுழைவாயில் ஆகின்றது. ஒருவர் இறைசித்தத்திற்கு தன்னை சரணடையச் செய்யும்போது இறைவன் தனது திட்டத்தின்படி அவரது வாழ்வை உருவாக்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் திட்டங்கள் எந்நாளும் எமது எதிர்கால வாழ்வை நலமாக்குவதும் நம்பிக்கையாக்குவதும் ஆகும் (எரேமியா20:11).

இறைவன் எவரையாவது மீட்பின் வரலாற்றிலே தன்னுடன் ஒத்துழைக்கத் தேர்ந்து கொள்ளும்பொழுது தனக்கு முழுமையாகக் கீழ்ப்படிய அவர் பணிக்கின்றார். எவ்வளவிற் கெவ்வளவு மனிதன் இறைவனுடன் ஒத்துழைக்கின்றானோ, அவ்வளவுக்கு மனிதன் மனுக்குலத்தை மீட்கும் இறைதிட்டத்தைத் துரிதப்படுத்துகின்றான். எமது ஆதிப்பெற்றோரான ஆதாம், ஏவாள் இறைவனை அலட்சியப்படுத்தி இறைவனில்லா சொர்க்கத்தை சாத்தானுடன் சேர்ந்து உருவாக்க விரும்பினர். இதனால் மீட்பின் வரலாற்றில் அவர்கள் பயனற்றுப் போயினர். ஆதாம் ஏவாளின் இக் கிளர்ச்சியினால் கடவுள் பூமியைச் சபித்தார். "உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது" (தொ.நூல்.3:17) என்றார். அதற்கு மாறாக மரியாளின் கீழ்ப்படிவால் மனுக்குலத்தின் சாபம் உடைக்கப் பட்டது. நாம் இறைவனுக்கு அமையும் பொழுது நம்மீதும் ஏனையோர் மீதும் இறையருள் பொழியப்படுகிறது.

இரு தாய்மார்களின் சம்பவம், துன்பம் வந்ததும் ஒரு தாய் 'கடவுளே' உனக்குக் கண்ணில்லையா? என்று திட்டுகின்றாள். குருமடமாணவனின் தாய் மகனின் இறப்புச் செய்தி கேள்விப் பட்டதும் முழந்தாளிலிருந்து "ஆண்டவரே! உமக்கே மகனைக் கையளித்தேன், நீரே எடுத்துக்கொள்ளும்" என்றாள். இதில் எந்தத் தாய் உண்மையான விசுவாசமுள்ள தாய்?

ஒரு குடும்பத்தினர் தங்களுக்கு அற்புதமான இறையருள் பொழியப்பட்டதாகக் கூறிக்கொண்டு ஒரு குருவானவரிடம் வந்தார்கள். அக் குடும்பப் பெண் கருவுற்றிருந்தாள். அது அவளுக்கு மூன்றாவது குழந்தை ஆகும். அவள் வழக்கமான மருத்துவ பரிசோதனைக்குச் சென்றபோது அவளது கரு கொடியநோய் பீடித்திருந்த அடையாளங்களைக் காட்டியது. மருத்துவரோ ஒரு மாதம் பொறுத்திருந்து மீண்டும் அவளை மருத்துவப் பரிசோதனை செய்யச் சொன்னார். இம்முறை முந்திய மருத்துவக் கண்டுபிடிப்பை அது நிரூபித்தது. எனவே, அவளை கருக்கலைப்புச் செய்யுமாறு மருத்துவர் ஆலோசனை கூறினார். அவளுக்கு ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருந்ததால் மூன்றாவது குழந்தை நோயுற்ற குழந்தையாக இருக்கத் தேவையில்லை எனும் காரணங்களைக் காட்டி மருத்துவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைப்படி செய்யுமாறு அவனது நண்பர்கள், உறவினர்கள் அறிவுறுத்தினர்; பேசினர். ஆனாலும் அக்குழந்தையின் பெற்றோர் இது கடவுள் கொடுத்த கொடை. அதனால் கடவுளைப் புண்படுத்தக்கூடாது என ஆழமாக உணர்ந்தனர். இறைவன் எப்படி இக் குழந்தையைக் கொடுக்கப்போகின்றாரோ அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு இதய பூர்வமாக விரும்பினர். அக்குழந்தை பிறந்த பொழுது அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் குறைபாடற்ற சுகதேகியான குழந்தையாகப் பிறந்தது. இதை எப்படி விளங்குவதென்று மருத்துவருக்கே புரியவில்லை. அந்தத் தம்பதிகளோ தாம் இறைவனுக்குரியவர்கள் என்பதால் அவர் கொடுத்த ஆசீர்வாதம் என்று நம்பினர். குறைபாடுள்ள நோயுற்ற குழந்தையாக குழந்தை பிறந்திருந்தால் மகிழ்ச்சியாக ஏற்றிருப்பீர்களா என்று குருவானவர் கேட்ட பொழுது இப்பொழுது எவ்வாறு அன்பாக அக்குழந்தையை ஏற்றிருக்கிறோமோ அதே அன்போடு தாம் ஏற்றிருப்போம் என்று கூறினார்கள். நோயுற்ற குழந்தையாக அக்குழந்தை பிறந்திருந்தாலும் அக் குழந்தை ஆண்டவருக்கு ஆசீர்வாதமான குழந்தையாக இருக்கும் என்றார்கள். நாம் எம் இதயத்தைத் திறந்து இறைவனை நம்பி வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவரது திட்டத்தை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கும்பொழுது அவர் எங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார்.

"அவை பொன்னிலும் பசும் பொன்னிலும் மேலாக விலைமிக்கவை தேனிலும்....... தெளி தேனிலும் இனிமையானவை" (தி.பா19:10). பிரபரல்ய அமெரிக்க மறையுரைஞர் ஆயர் புல்டன் சீன் தன்னுடைய இறை அனுபவத்தைக் கூறும் பொழுது சொல்கின்றார்: தன்னுடைய பட்டப்படிப்பு முடிந்து தான் குருமடத்தில் சேருவதற்கான இறைவனின் அழைப்பை தனது உள்ளத்தில் மிக காத்திரமாக உணர்ந்தார். அந்நேரத்தில்தான் கல்வித்திணைக்களத்தில் இருந்து அதி உன்னத புலமைப்பரிசு அவருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அவருடைய கல்லூரிக் கல்விகள் அனைத்தும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன எனும் கடிதம் அனுப்பி வைக்கப்படுகின்றது. இது கிடைத்தது அரிய சந்தர்ப்பம் ஆகும். இந்தப் புலமைப்பரீட்சைக் கடிதத்தை எடுத்துக்கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு தன் பங்குத் தந்தையிடம் சென்றார். வயது முதிர்ந்த அந்தப் பங்குத்தந்தையோ அதைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளளவும் அக்கறை காட்டவில்லை. அந்த இளம் சீனிடம், அவர் பெற்ற இறை அழைத்தலோ அனைத்தையும் விடப் பெறுமதி மிக்கது, அவ் அழைத்தலுக்குக் கீழ்படிதலே மேலானது, என்று கூறி கடிதத்தைக் கிழித்துவிட்டு குருமடத்திற்கு செல்லச் சொன்னார் பங்குத்தந்தை. சீனும் உடனடியாக அக் கடிதத்தைக் கிழித்து எறிந்து விட்டார். அவர் ஒரு குருவாகி, ஒரு ஆயராகி, ஒரு பெரும் தலைவராகவும், போதகராகவும் எத்தனையோ காலங்களுக்கு புகழப்படுகின்றவராக மாறினார்.

ஆண்டவருடைய திருவுளத்தை ஏற்பதற்கு எத்தனையோ விதமான சலுகைகளை நாம் விட்டு விடவேண்டும். எமது அன்றாட வாழ்வின் சூழ்நிலைகளில் இறைவனின் திட்டத்தை செபத்திலே நாம் கண்டுகொள்ள முடியும். அவற்றைக் குழப்பும் பல தெரிவுகள் எங்களுக்கு முன் வரலாம். ஆனால் இறைவனுடைய திருவுளத்திற்கு எம்மை அர்ப்பணிக்க எமது உள்ளத்திலே உறுதி வேண்டும். உலகத்தினால் முன்வைக்கப்படும் தேர்வுகள் எங்களுடைய வாழ்விலே இறைவனுடைய அருளைக் களைந்து எறிவதற்கான ஏமாற்று நிலைகளாகவும் ஆகலாம்.

"நான் என்ன செய்யவேண்டும்?" (தி.பா.22:10) என்று திருத்தூதர் பணியிலே திருத்தூதர் பவுலுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்புப் பற்றி நாம் வாசிக்கின்றோம். தமஸ்கு நகருக்கு குதிரையிலே செல்லும்பொழுது அவ் அழைப்பு கொடுக்கப் படுகின்றது. இயேசுவின் அவ் அழைப்பை ஏற்றுக் கொண்டால் நிச்சயமாக எத்தனையோ காரியங்களை விட்டுவிட வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். தனது அழைப்பையும் அதை ஏற்றுக்கொள்வதனால் ஏற்படும் உள்ளார்ந்த நிலையும்பற்றி பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலே அவர் கூறும் பொழுது, "இயேசுவின் மகிமைக்காக இவை அனைத்தையும் குப்பை என்று கருதுகிறேன்" எனக் கூறுகின்றார் (பிலிப்பியர்.3:8).

கல்வியிலே கமாலியியலால் பயிற்றப்பட்ட பரிசேயர். இது அக்காலத்திலுள்ள மிக உயர்ந்த நிலை ஆகும். சமூக நிலையிலே பவுல் ஒரு உரோமைக் குடிமகன். பவுல் தலைமைக்குருவின் நண்பன். பழைய சமயத்திற்கெதிராக எழும் எதையும் தகர்த்தெறிவதை எவராலும் நிறுத்தப்படமுடியாத ஒருவர். ஆனாலும் இயேசுவின் அழைப்பை ஏற்ற பொழுது இவற்றில் எதுவுமே அவரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரத்தில் அவர் செய்த தீர்மானம் அவரை ஓர் கிறிஸ்துவின் திருத்தூதராக உருமாற்றியது. பிற இனத்தாரை இயேசுவிடம் கொண்டு வருவதற்கு சிறப்பாக தேர்ந்தெடுக்கப்படுகின்றவராகி ன்றார். இறை அழைத்தலுக்கான அவரது கீழ்படிவு அவருக்கும் இயேசுவைத் தேடும் அனைவருக்கும், பெரும் ஆசீர்வாதமாகின்றது.

நாம் ஆரம்பத்தில் பார்த்தது போல, மீட்பு நிகழ்வின் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட இயேசு, மரி, சூசை என்பவர்களின் இறை சித்தத்திற்கான கீழ்படிவு நாம் நினைக்க முடியாத அளவிற்கு வரவிருக்கும் தலைமுறை அனைத்திற்கும் பெரும் ஆசீர்வாதமாகின்றது. எமது விசுவாசம் எமது அன்றாட வாழ்வில் நாம் இறைவனுக்குச் சொல்லும் "ஆம்" என்பதற்கு பெரும் வரப்பிரசாதமாகவுள்ளது. இவ்வாறு நாம் நம்மை இறைவனிடம் அர்ப்பணிப்பதற்கு எதிராக குழப்பும் சந்தர்ப்பங்கள், அச்சமூட்டும் சவால்கள் பல ஏற்படலாம். ஆயினும் இறைவனின் வழியைத் தெரிந்துகொள்வதற்கான உறுதியான தீர்மானம் எமது உள்ளத்திலே இருக்க வேண்டும். குழப்பும் சந்தர்ப்பங்கள் அல்லது பயப்படுத்தும் நிகழ்வுகள் ஏற்பட்டால் நாம் செய்யவேண்டியது கடவுளுடைய உள்ளத்தின் வெளிப்பாடு எமக்குத் தெளிவாகும் வரை காத்திருந்து மன்றாடுவதாகும். இறைவனுடைய திருவுளத்தை ஆவலோடு அறிந்து கொள்வதற்கான அருளையும் அதைக் கடைப்பிடிப்பதற்கான ஆசிரையும் மன்றாடுவோம். இறைவனுடைய திருவுளத்திற்கு அமைந்து செல்லும் பாதை நிச்சயமாக எமக்கு மீட்பின் மகிழ்ச்சியைப் பெற்றுத்தரும். இவ்வாறு இயேசுவின் மீட்பளிக்கும் அருளைப் பறைசாற்றுபவர்க ளாக நாம் மாறுவோம்.


செபம்

வானகத் தந்தையே! உம்முடைய ஒரே மகன் இயேசுக் கிறிஸ்துவை இவ் உலகிற்கு ஒரு கொடையாகக் கொடுத்தமைக் காக நாம் மனம் மகிழுகின்றோம். இது எம்மை பாவத்திலும் சாவிலும் இருந்து மீட்டு மாபெரும் நிலையாகிய நிலை வாழ்வை கொடுத்துள்ளது. இறைவா! நாம் உம் திருமுன் பணிந்திருக்கும் இவ்வேளை எமது தீர்மானங்கள் அனைத்தையும் உமது திருப் பாதம் வைத்து "உமது சித்தம் எம் வாழ்வில் நிறைவேறட்டும்" என்று மன்றாடுகின்றோம். அன்பின் இறைவா! உமது அன்பு எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு ஒரு போதும் அகலாது என்பதை உறுதியாக விசுவசிக்கின்றோம். நாம் எம்மை உமது திட்டத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கும்போது நாமும் முழுமையாக ஆசீர் வதிக்கப்பட்டு எம் வாழ்வும் எம்மை சூழ உள்ளவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக அமைகின்றது. எமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உம்முடைய விருப்பத்தை எமக்குத் தெளிவாக்கும். உம்முடைய திருவுளத்தை நாம் என்றென்றும் தேடி உமது மகிமைக்காக அவற்றை நிறைவேற்ற எமக்கு அருள்தாரும். ஆமென்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

## "ஆண்டவரே என் ஆயர்" (தி.பா.23:1)

தன்னைப் படைத்தவருடைய பெயரையும் அவரது குணவியல்புகளையும் அறிய வேண்டுமென்கின்ற ஆவல் மனிதனின் இதயத்தில் ஆழப் பதிந்திருந்தது. இதை நாம் விவிலியத்தின் தொடக்கத்திலேயே மோயீசன் எரியும் முட்புதரில் இறைவனைச் சந்தித்த நிகழ்விலே காணுகின்றோம். இந்த அதிசய நிகழ்விலே ஆச்சரியப்பட்ட மோயீசன் இறைவனின் பெயர் என்ன என்பதை வினவுகின்றார். கடவுளும் பதிலாக "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார் (வி.ப3:14).

புதிய ஏற்பாட்டில் இயேசு மனிதனுக்கு வெளிப்படுத்த வேண்டிய கடவுளின் அதீத ஆவலை பல்வேறு உவமைகள், விபரங்கள், தலைப்புக்கள் மூலமாக வெளிப்படுத்துகின்றார். இத்தகைய உருவகங்களில் எல்லாம் மிகச் சிறந்ததும் ஆறுத லளிப்பதும் பல நூற்றாண்டுகளாக மனிதனால் விரும்பப்படுவதும் நல்லாயன் என்ற உருவகமே.

"நல்ல ஆயன் நானே" (யோவான் 10:11) என்கிறார் இயேசு. இயேசு கூறும் இந்த உருவகம் விவிலியத்திலும் யூதகலா சாரத்தி லும் ஆழப் பதிந்திருந்தது. இவ் உருவகம் கேட்போருக்கு பரீட்சார்த்தமானதாகவும் இருந்தது. பழைய ஏற்பாட்டில் இறைவனுடைய வழிநடத்தும் அன்பு பலதடவைகளில் பேசப்படுகின்றது. இயேசு தன்னுடைய தனித்துவமான ஆழ் தன்மையையும், பணியையும் விளக்குவதற்கு இவ் உருவகத்தைத் தேர்ந்தெடுத்தார். யோவான் நற்செய்தியில் வரும் "நானே" எனும் இயேசுவின் வாக்கியங்களுள் "நல்லாயன் நானே" என்பது முக்கியமானதாகும். அதே பகுதியில் இயேசு "ஆடுகளுக்கு வாயில் நானே" (யோ.10:07) என்கிறார்.

**"ஆயன் தம் மந்தையைக் காப்பது போல் ஆண்டவர் அதைக் காப்பார்" (எரேமியா 31:10)**

"ஆடுகளுக்கு வாயில் நானே" (யோவான் 10:7). இதை விளங்கிக் கொள்வதற்கு யூதர்களின் கலாசாரத்தை அறிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புது நல்லது. ஆடுகள் முற்று முழுதாக ஆயனின் அன்பிலும் பராமரிப்பிலும் தங்கியிருந்தன. ஆயனே ஆடுகளின் தொடர்பான துணையாக இருந்தான். அவரே ஆடுகளுக்கு அனைத்தையும் வழங்கி அவற்றைப் பாதுகாத்தார். ஆயனுக்கும் ஆடுகளுக்கு மிடையேயுள்ள உறவு எவ்வளவு நெருக்கமானதும் உணர்ந்து கொள்ளத் தக்கதும் என்றால் ஆயனின் குரலை அவை கேட்ட வுடன் அதை இனங்கண்டு ஆயனைப் பின் செல்லும். ஆயனும் அவற்றைப் பாதுகாப்பான பசும்புல் மேய்ச்சலுக்கு இட்டுச் செல்வான்.

இரவு வேளைகளில் ஆடுகள் பட்டிகளுக்கு இட்டுச் செல்லப்படும். ஆயன் பட்டியின் வாயிலின் குறுக்கே படுத்திருப் பான். ஓநாய்களும் காட்டு மிருகங்களும் ஆயனைக் கடந்த பின்பே பட்டிக்குள் செல்ல முடியும். "பட்டிக்கு வாயில் நானே" என்று கூறும் பொழுது இயேசு மந்தையை எவ்வளவிற்கு பாதுகாத்துப் பராமரிக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகின்றார். எவரும் அவரது கையிலிருந்து அதைப் பறிக்க முடியாது. மேலும் இயேசு விளக்குகையில் "நான் அவற்றிற்கு நிலை வாழ்வை அளிக்கின்றேன். அவை என்றுமே அழியா. அவற்றை என் கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ளமாட்டான் அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ள இயலாது" (யோா10:28,29). அநேகமாக பொதுவான ஆட்டுப்பட்டிகள் இருந்தன. காலையில் மந்தைகளை மேய்ச்சலுக்குக் கூட்டிக்கொண்டு போகுமுன் ஒவ்வொரு ஆயனும் தனக்குரிய குரலில் கூப்பிட்டுவான். அல்லது ஒரு குறிப்பிட்ட பெயர் சொல்லிக்கூப்பிடுவான். ஒவ்வொரு ஆயனுக்குரிய மந்தையும் அவனையே தேடி ஓடும். இதைத்தான் இயேசு "என் ஆடுகள் எனது குரலுக்கு செவிசாய்க்கின்றன" (யோ.10:27) என்கிறார். இயேசு இரண்டு முக்கிய உண்மைகளை இங்கே வெளிப்படுத்துகின்றார்.

1) தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொருவரையும் தனித்துவமான முறையிலே தெரிந்து கொண்டு அவர்களது தனிப்பட்ட தேவைகளையும் அறிந்துள்ளார். இதைத்தான் "நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன" (யோவான் 10:14) என்கிறார். இதைத்தான் இன்னுமொரு இடத்தில் இயேசு "உங்கள் தலைமுடி எல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது" என்கிறார் (மத்தேயு 10:30). சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக ஒருவரின் தலையில், சராசரி ஒரு லட்சம் முடி இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது தலையிலிருந்து கீழே விழுந்தவுடன் கால் விரலிலே சுற்றி குப்பையில் அல்லது நெருப்பில் போடுவார்கள். அருவருப்பாக இருக்கும். அந்த முடிக்கே கடவுள் இவ்வளவு அக்கறை காட்டுகிறாரெனில் நம்மைக் காப்பதற்கு எவ்வளவு தான் செய்யமாட்டார் என்று உணர இயேசு அழைக்கின்றார். 40 வருடங்களாக வனாந்தரத்தில் இஸ்ராயேல் மக்களின் ஆடைகள் கிழியவுமில்லை, செருப்புகள் தேயவுமில்லை (இணை.29:5). இதை நாம் உணர்ந்தோம் என்றால் எமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஆழமான மாற்றம் பெறும்.

2) இயேசு மீண்டும் மீண்டும் எமக்கு நினைவுறுத்துவது, "ஆகவே, எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றை எல்லாம் நாடுவர். உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் விண்ணகத்தந்தைக்குத் தெரியும்" (மத்தேயு 6:31-33). எங்களுடைய செபத்தில் எப்படியோ இறைவனை நம் வசப்படுத்தி நமது தேவைகளைப் பெற்றுக்கொள்ள சுயநலவாதிகளாகி இறையரசை மறந்து விடுகின்றோம். இதனால் எங்களுடைய மனிதப் போக்கிலே நாம் அங்கலாய்ப்புள்ளவர்களாக மாறி இறை நம்பிக்கையில் தளர்ந்து விடுகின்றோம்.

**"ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார்" (எசாயா 40:11).**

இயேசு தம் சீடருக்கு தானே உண்மையான ஆயன் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார். அவற்றின் ஒவ்வொரு தேவைக்கும் தானே பொறுப்பெடுப்பதாகக் கூறுகின்றார். ஆயனின் உருவகம் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் ஆடுகள் உதவி இல்லாப் பிராணிகள்; அனைத்திற்கும் பயந்து ஆயனின் பாதுகாப்பிலே தங்கியிருக்கின்றன. மற்றைய பிராணிகள் போல தம்மைப் பாதுகாப்பதற்கான கூரிய நகங்களோ பலமுள்ள பற்களோ அவற்றிற்குக் கிடையாது. ஆயனே அவற்றின் பாதுகாப்பு; அந்த ஆயன் தன்னுடைய உயிரையே பணயம் வைத்து மந்தைகளைப் பாதுகாக்கின்றான். மந்தையின் ஒவ்வொரு சிறு சிறு விடயத்திலும் ஆயன் அதீத கவனம் எடுக்க வேண்டும். உதாரணமாக - எங்கே அவற்றை இட்டுச் செல்கின்றார். விரைந்து ஓடும் ஆற்று நீரில் அவை குடிக்க முடியாது. எனவே ஆயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தைகள் குடிக்கக்கூடிய அளவிற்கு நீரைக் கட்டுப்படுத்தி அவற்றைக் குடிக்க விட வேண்டும். இதனால் தான் திருப்பாடல் 23 இல் "அமைதியான நீர் நிலைக்கு என்னை அழைத்துச் செல்வார்" என்று கூறுகின்றார். மந்தையின் வாழ்வும் பாதுகாப்பும் ஆயனுடைய உயிரைவிட முக்கியமாக இருக்கின்றது. எம்மை விழுங்கவரும் எல்லாத் தீமைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாக்க இயேசு தனது உயிரைப் பணயம் வைத்தார். இதையே பவுல் அடியார் "நாம் இறைபற்றின்றி வலுவற்று இருந்தபோதே குறித்த காலம் வந்ததும் கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார்" (உரோமர்.5:6) என்று கூறுகின்றார். எம்முடைய பாவங்களைத் தானே தம் மேல் சுமந்து கொண்டு அவற்றிற்காக தம் உயிரைக் கொடுத்தார். பாவத்திற்கு அடிமையாகி எம்மையே நாம் மீட்டுக்கொள்ள முடியாதிருந்த நிலையில் தந்தையினது பணியை தாம் ஏற்றுக்கொண்டார். "என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக்கொடுக்கிறேன். உயிரைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்" (யோவான். 10:18).

**"ஆயனைப் போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார்" (எசாயா 40:11).**

நமது மீட்பிற்காக அடித்து நொருக்கப்பட தன்னைக் கையளித்தபின் நமக்கு உணவானார். "நான் ஆடுகள் வாழ்வைக் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவா.10:10). இந்த சொற்றொடர் யோவான் நற்செய்தியில் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு அப்பங்களை உணவாகக் கொடுத்த புதுமையின் பின்னர் (யோவான் 6 அதிகாரம்) குறிக்கப்படுகின்றது. புதுமை நடந்த மறுநாள் மக்களுக்கு ஏற்பட்ட உடல் பசியைத் தீர்ப்பதற்கான இயேசுவின் ஆவல் பற்றி அல்ல, ஆன்மீக வாழ்விற்கான ஏக்கத்தைப் பூர்த்தி செய்வதே முக்கியம் என்பதை இயேசு தெளிவுபடுத்துகின்றார்.

"அழிந்து போகும் உணவிற்காக உழைக்க வேண்டாம் - நிலைவாழ்வு தரும் அழியாத உணவிற்காகவே உழையுங்கள்" (யோவா.6:27). அவ் உணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார். இந்நிலையில் அவர் தம் உடலையும் உதிரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு உணவாகவும் பானமாகவும் தருகின்றார். "விண்ணகத்தி லிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கின்றேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்" (யோ.6:51).

இவ்வாறு இயேசு கூறியபோது அவரைப் பின்பற்றியவர்கள் பலர் அதை விளங்கிக் கொள்ளமுடியவில்லை. அவர்கள் அவரை விட்டுப் பிரிந்து சென்றனர். ஆனால், அவரோ அவர்களை மீண்டும் அழைக்கவில்லை. அதேவேளை அவர் முன்வைத்த அன்புக் கொடையை அவர் எடுத்துக் கொள்ளவுமில்லை. அவர் அப்போஸ் தலர் பக்கம் திரும்பி அவர்களிடம் "நீங்களும் போய்விட நினைக் கிறீர்களா?" என்று கேட்டார் (யோவா.6:67). சீமோன் பேதுரு மறு மொழியாக "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன." (யோவா.6:68-69) என்றார்.

"இயேசு அப்பத்தை எடுத்து இதைப் பெற்று உண்ணுங்கள் இது எனது உடல்....... இதிலுள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருடைய பாவ மன்னிப்பிற்காக சிந்தப்படும் இரத்தம்" (மத்.26:26-29) என்று இயேசு கூறியபோது திருத்தூதர்கள் இயேசுவின் உடலிலும் உதிரத்திலும் பங்கு பற்றும் பாக்கியம் பெற்றனர்.

கடவுளிடம் இருந்து மனிதனைப் பிரித்த பாவத்தின் சாபம் இந்தப் பலியினால் முறியடிக்கப்பட்டது. அலகை தான் நினைத்தது போல மனிதனை விழுங்க முடியவில்லை. ஏனென்றால் கிறிஸ்து தான் சிந்திய இரத்தத்தினாலே மன்னிப்பையும் நிலைவாழ்வையும் வென்றெடுத்து விட்டார். உண்மையான ஆயனாக தன்னுடைய உடலாலும் உதிரத்தாலும் எமக்கு ஊட்டம் தந்து எம்முடன் ஒன்றாகி எம்மை நிலைவாழ்விற்கு வழிநடத்தி செல்கிறார்.

**"என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்கு கொடுப்பேன்" (எரேமியா3:15)**

நானே நல்லாயன் என்று இயேசு கூறும் பொழுது அன்றைய மதத்தலைவர்களிடம் இருந்து முற்றுமுழுதாகத் தன்னை வேறுபடுத்திக் கூறுகின்றார். அவர்களை சுயநலம் பேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியாட்கள் என்று அழைக்கின்றார். அவர்கள் மத மரபுகளின், ஒழுங்குகளின் சுமையை மக்கள் மீது சுமத்திவிட்டு தாங்கள் எதையும் சுமக்காமல் இருப்பவர்கள் என்று கூறுகின்றார்.

"சுமத்தற்கரிய பழுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக்கூட முன் வரமாட்டார்கள்" (மத்தேயு 23:4) என்று கூறுகின்றார். இறைவாக்கினர் எசேக்கியேலின் இறைவாக்கினைக் கூறி அன்றைய மதத் தலைவர்களைக் கடிந்து கொள்கின்றார். பரிசேயரும், சதுசேயரும் தங்கள் நலனைப் பற்றியே சிந்தித்து தங்களுக்கு எப்படிப்பட்ட நன்மை கிடைக்கும் என்பதையே பார்க்கின்றனர். "தலைவனாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: தாங்களே மேய்த்துக்கொள்ளும் இஸ்ரயேலின் ஆயர்களுக்கு ஐயோ கேடு! ஆயர்கள் மந்தையையன்றோ மேய்க்க வேண்டும்: நீங்கள் கொழுப்பானதை உண்டு, ஆட்டு மயிராடையை உடுத்தி, மந்தையில் சிறந்ததை அடிக்கிறீர்கள். மந்தையையோ மேய்ப்பதில்லை. நீங்கள் நலிந்தவற்றை திடப்படுத்தவில்லை பிணியுற்றவற்றிற்குக் குணமளிக்கவில்லை. காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போடவில்லை வழிதப்பியவற்றை திரும்பக் கூட்டி வரவில்லை. காணாமல் போனவற்றைத் தேட வில்லை, ஆனால் அவற்றைக் கொடுமையுடன் வன்முறையுடன் நடத்தினீர்கள் (எசேக்கி.34:2-4).

பரிசேயருடைய மேலோட்டமான வாழ்வை எடுத்துக்காட்டி மந்தைக்காகத் தன் உயிரைக் கொடுப்பதே தனது தந்தையின் திருவுளம் என்பதை உறுதிபடக் கூறுகின்றார். பரிசேயர் எந்த நாளும் பொதுமக்களில் குறைகண்டு மோயீசனுடைய சட்டத்தி னாலே அவர்களைக் கண்டனம் செய்தனர். இயேசு அனுதாபத் தோடு மக்களுக்கு ஓய்வுநாளில் குணமளித்ததற்காகவும் இயேசு வின் மேல் குற்றம் சாட்டினர். மனிதனுடைய துன்பத்தையும் துயரத்தையும் விட மரபுகளும் சட்டங்களும்தான் அவர்களுக்கு முக்கியமானவையாக இருந்தன.

இந்தப் பின்னணியில் இயேசு தொலைந்த ஆட்டின் உவமையைக் கூறுகின்றார். பரிசேயருடைய பார்வையில் பாவி களின் வீழ்ச்சிக்கு அவர்களே காரணம் அதற்குரிய பரிகாரத்தை அவர்களே செய்யவேண்டும். இயேசுவோ இதற்கு எதிர்மறை யானதைக் கற்பித்தார். தவறிய ஆட்டைத் தீர்ப்பிடாமல், அழிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடாமல் அதைத் தேடிச் செல்லுகின்றார். 99 நல்லவற்றையும் பாழ்வெளியில் விட்டு விட்டு தொலைந்த ஒன்றைத் தேடி ஆயன் செல்லுகின்றான். 99 நீதிமான்களால் ஏற்படும் மகிழ்ச்சியை விட, தொலைந்து கண்டு பிடிக்கப்பட்ட ஒன்றினால் ஆயனுக்கு ஏற்படும் மகிழ்ச்சி அதிகமாகும்.

"காணாமல் போனதைத் தேடுவேன், அலைந்து திரிவதை திரும்பக் கொண்டு வருவேன்" (எசேக்கியல் 34:16). இயேசுவின் இப்போதனை பல்வேறு பலவீனங்களோடு இருக்கும் நமக்கு மிகுந்த நம்பிக்கையைத் தருகின்றது. பாவத்திற்கெதிரான எமது போராட்டத்தில், எமது குறைகுற்றங்களை மூடி மறைக்க முயற்சி எடுக்கவேண்டிய அவசியமில்லை. தேவையான விடயம் அனைத்தும் நம்பிக்கையோடு தந்தையிடம் திரும்பி அவரது அன்பால் அரவணைக்கப்படுவதே ஆகும். அதாவது தந்தையினு டைய அளப்பரிய இரக்கத்தையும் தாராளத் தன்மையையும் உணராமல் எத்தனையோ பேர் குற்றப்பழி உணர்வினால் கூனிக் குறுகி வேதனைப்படுகின்றார்கள். தியானம் நடாத்தும் அருட்தந்தை ஒருவர் பின்வரும் நிகழ்வை எனக்குக் கூறினார்.

இளைஞன் ஒருவன் தியானத்திற்கு வந்தான். தியானத்தின் இரண்டாம் நாளிலேயே தான் தியானத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று நெஞ்சுப்படபடப்போடு வந்தான். இங்கு சொல்வது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை என்றான். அவன் மனத்தைக் குழப்புவது என்னவென்று கேட்டேன். இங்கு கூறப்படும் இறை வார்த்தைகள்தான் என்று உடனடியாகப் பதில் சொன்னான். இங்கு சொல்வதன்படி யாருமே வாழமுடியாது. பணம் சேகரிப்பதும், பகட்டாக வாழ்வதுமே என் வாழ்வின் இலக்கு என்றான் அவன். புத்திக் கூர்மையும் கடின உழைப்பும் உடையவன். ஆதலால் வாழ்க்கையில் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தான். இவ்வாறு அவன் முன்னேறுவதற்குப் பலருடைய வாழ்வின் மேல் மிதிக்க வேண்டி இருந்தது. இதனால் உறவுகளை இழந்தான். ஆரம்பத்தில் மக்களை ஏமாற்றுவதும், தனது நோக்கத்திற்காக அவர்களைப் பயன்படுத்துவதும் அவனுக்கு குற்றப்பழியை ஏற்படுத்தியது. ஆனாலும் அவனது வாழ்வின் நோக்கம் அவற்றைவிட முக்கிமாக இருந்தது.

இத்தியானத்திற்கு எதற்காக வந்தீர் என்று கேட்டபொழுது தன் பணத்தாலும், பகட்டான வாழ்வாலும் மனத்தை திருப்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த முயன்றேன். ஆனாலும் இவை அனைத்திற்கும் மேலாக மனதிலே பெரும் வெறுமை இருக்கின்றது என்று சொன்னான். தனிமை அவனை வாட்டியது. அவனுடைய குற்றப்பழி உணர்வுகள் அவனுக்கு ஆழ்ந்த அங்கலாய்ப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் தன்னுடைய கடந்தகால வாழ்விலிருந்து தப்பிக்க வழியில்லை. தன்னுடைய எதிர்காலம் இப்படியே போகப் போகின்றதா என்று மனங்குழம்பினான். அவன் தேடிப்போவதற்கு யாருமே கிடைக்கவில்லை. அவனுக்கு ஆறுதலோ மன நிறைவோ இல்லை. அவனது பணம், பதவி கொடுத்தது எல்லாம் ஒரு மேலோட்டமான வெறுமையான வாழ்வையே. அவன் சிரித்து மகிழ்ந்தது அவனுக்கே ஞாபகமில்லை. அப்போது நான் அவனது உள்ளத்திலே ஆண்டவர் பேசத்தொடங்கிவிட்டார் என்று சொன்னேன். இதனால்தான் இந்தத் தியானத்திற்கு உம்மை அழைத்து வந்திருக்கின்றார். நிச்சயமாக இறைவன் உமக்கு ஆறுதலையும் மன்னிப்பையும் கொடுக்கக் காத்திருக்கின்றார் என்று கூறினேன். ஊதாரி மகன், தொலைந்த ஆடு இவற்றின் உவமைகளை வாசிக்கச் சொன்னேன். நல்லாயனாகிய இயேசு கொடிய காரிருள், பாலைவனம் போன்றவற்றிலிருந்து மீட்டு தன் இதயத்திற்கு அருகில் உள்ளதைக் கொண்டு வருவார் என்று அவனுக்கு உறுதியளித்தேன். அவனை நல்லதொரு பாவசங் கீர்த்தனம் செய்யும்படியாக சொன்னேன். அவன் இறைவனோடு ஒப்புரவாகி நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தில் காலடி வைக்கத் தொடங்கினான்.


இயேசு தனது பணியை நல்லாயன் என்ற இந்த உருவகத்திற்குள் இரத்தினச் சுருக்கமாகக் கூறி விட்டார். எத்தகைய வீழ்ச்சிகள், தவறுகள், பாவங்களுக்குள் விழுந்தாலும் இறைவனது அன்பின் அரவணைப்பு எங்களுக்கு நம்பிக்கையைத் தருகின்றது. எந்த ஆபத்திலிருந்தும் மீட்க அவர் எங்களுக்காகக் காத்திருக்கின்றார். எந்தப் பாதையிலே நாம் நடத்தாலும் நமக்கு முன் ஒரு அடி அவர் முன்நடந்து பசும் புற்தரைக்கும் அமைதியான நீர்நிலைக்கும் இட்டுச் செல்கின்றார். நல்லாயனின் முகத்தைப் பார்க்கும்பொழுது எல்லாவித பயங்களும் எம்மை விட்டு அகன்று போகும். வாழ்வின் சவால்களுக்கு நாங்கள் அஞ்சவேண்டிய தில்லை. தோல்விகளும் இயற்கை அனர்த்தங்களும் எங்களை அங்கலாய்ப்பிற்குள்ளாக்கத் தேவையில்லை. எம்மைப் பாதுகாக் கவும், வழிநடத்தவும் நல்லாயன் என்றும் இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபம்

நல்லாயனாகிய இயேசுவே! எமது கண்கள் என்றும் உம்மையே நோக்கி இருக்கின்றன. எமது சுயநலப் போக்குகளும் சவால்களால் ஏற்பட்ட தோல்விகளும் எம்மை மூழ்கடிக்கும் பொழுது எமக்கு அருகில் இருந்தருளும். பசும்புற்தரைக்கும் தெளிந்த நீர் நிலைக்கும் உம்முடைய பாதச்சுவடுகளில் நாம் நடந்து தந்தையின் இல்லம் நோக்கி வரச் செய்யும் - ஆமென்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

## "கடவுள் மிகுந்த இரக்கமுடையவர்" (எபே.2:4)

இன்றைய உலகம் பல்வேறு சவால்களுக்கு ஊடாகச் சென்று கொண்டிருக்கின்றது. இயற்கை அனர்த்தங்கள், ஈவு இரக்கமற்ற கொலைகள் என்பன இவற்றுள் சில. இந்தக் கொடிய இருள் அடர்ந்த நேரத்திலேதான் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் எல்லா மக்களையும் இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கவும் தம் வாழ்வாலும், செயலாலும் தம்மைச் சூழவுள்ளவர்களுக்கு இரக்கத்தின் வாய்க்காலாக இருக்கவும் தொடர்ந்து அழைத்துக் கொண்டிருக்கின்றார். "முழுத்திருச்சபையும் இறைவனுடைய இரக் கத்தில் தங்கியிருக்கின்றது என நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனென்றால், நாம் அனைவரும் பாவிகள். இன்று வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் ஆறுதலைக் கொடுப்பதற்காகவே நாம் அழைக்கப் படுகின்றோம். இவ்வாறு ஆறுதலைக் கொடுக்கும் பொழுதான் உண்மையான மகிழ்ச்சியைக் கண்டுகொள்ள முடியுமென நான் உறுதியாக நம்புகின்றேன்" என்று திருத்தந்தை கூறுகின்றார்.

**"கடவுளே வானங்களுக்கு மேலாக நீர் உயர்வு பெறுவீராக" (தி.பா.57:11)**

மனிதன் அன்புக்கும் நீதிக்கும்தான் பழக்கப்பட்டவனாக இருக்கின்றான். ஆனால் இறைவனின் இரக்கமோ மனிதனின் அறிவு அனைத்தையும் கடந்து நிற்கின்றது. நீதி என்பது ஒவ்வொரு வருக்கும் உரியதைக் கொடுப்பது. ஆனால் அன்பு நீதியைக் கடந்து, தன்னை மறந்து மற்றவருக்குக் கொடுப்பதாகும். ஆனால் அன்பிலும்கூட ஒருவித பதில் எதிர்பார்ப்பு இருக்கின்றது. மற்றவர் தனக்கு அன்பு காட்டுவார் என்ற பதில் எதிர்பார்ப்போடுதான் ஒருவர் மற்றவருக்குக் கொடுக்கின்றார். இந்த அன்பை அவர் அலட்சியம் செய்யும்பொழுது மற்றவர் உள்ளத்திலே ஒரு தாக்கமும் வேதனை யும் ஏற்படுகின்றது. தான் காட்டிய அன்பு அனைத்தையும் மறந்து பழிவாங்கவேண்டுமென்ற உணர்வும் ஏற்படுகின்றது. அன்பு எவ்வள விற்குப் பெறுமதியானதோ அவ்வளவிற்கு அதை நிராகரிப்பதனால் ஏற்படும் தாக்கமும் ஆழமானதும் வலுவானதுமாக இருக்கும். எல்லாக் காலங்களிலும் அன்பு உன்னதமானதாகப் போற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. ஆனால் அதைவிட மேலானது ஒன்று உண்டு. அது தான் இரக்கம். ஒருவருக்கு இரக்கம் காட்டும் பொழுது அது அன்பிற்கு மேலாக சென்று தாக்கங்களையும் பாராது மற்றவர் களுக்கு நன்மை செய்கின்றது. இரக்கம், மற்றவருடைய தகுதி யற்ற நிலையிலும் அன்பைக் காட்டி ஆனந்தம் கொள்வதாகும்.

தன்னுடைய சீடரின் அளவுகோலாக இயேசு இரக்கத்தைக் காட்டுகின்றார். "பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத்9:13) என்று இயேசு கூறுகின்றார். இயேசு கூறும் இவ் வார்த்தை களின் சந்தர்ப்பம் மிக முக்கியமானது. இயேசு வரிதண்டும் மத்தேயுவை தன் சீடராக அழைத்தார். அது மாத்திரம் அல்ல அவருடைய வீட்டிற்கு விருந்திற்குச் சென்றார். அவ்விருந்திலே பாவிகள் பலர் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் யூத மதத்தின்படி சமுதாயத்திற்குப் புறம்பானவர்கள். இயேசுவின் இச்செயல் பரிசேயரின் பார்வைக்கு இடறலானதும், விளங்கிக் கொள்ள முடியானதாகவும் இருந்தது. மத்தேயுவைத் தன் சீடராக ஏற்றுக்கொண்டதற்காகவும் அவருடைய வீட்டிற்கு விருந்து உண்ணச் சென்றதற்காகவும் இயேசுவின் மேல் பல கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். வரிதண்டுவோரோடு சேர்ந்து கொள்வது யூத ராபிக்கு தகுமா? என்று கேட்டனர். இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் "ஒருவரை மேன்மைப்படுத்துவது பலி அல்ல இரக்கமே" என்று இயேசு கூறுகின்றார்.

**"இறைவன் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர்" (மீக்கா.7:18)**

இயேசுவினுடைய பணியையும் போதனையையும் உந்தித் தள்ளியது அவரது இரக்கம். தந்தையினுடைய இரக்கத்தை வெளிப்படுத்துவதற்கு இயேசு ஊதாரி மகன் எனும் பிரபல்ய உவமையைக் கூறினார். இந்த உவமை உண்மையில் "ஊதாரித் தந்தை" இன் உவமை என்று கூறுவதே பொருத்தம். ஏனென்றால், தந்தையே இதன் முக்கிய நபர் என்பதையும் மகனின் ஊதாரித் தனத்தை தந்தையினுடைய ஊதாரித்தனமான அன்பு வென்றெடுத் தது என்பதையும் விளக்குகின்றது. தந்தையினுடைய இறப்பின் பின்னரே மகனுக்குச் சேர வேண்டிய சொத்தை, முன்னதாகவே மகன் வலுக்கட்டாயமாக வாங்கிக்கொண்டு செல்லுகின்றான். அனைத்தையும் ஊதாரித்தனமாக அழித்து பரம ஏழையாகின்றான். எந்தவொரு யூத மகனும் நினைக்கமுடியாத அளவிற்கு அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றிகளை மேய்க்கத் தொடங்குகின்றான். உண்மையில் அவன் வாழ்வு பன்றிக் கூட்டைச் சென்றடைகின்றது. அந்நேரத்தில் தந்தையின் கூலி ஆட்களுள் ஒருவனாக என்றாலும் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி தன் தந்தையிடம் சொல்வேன் - என்று உணருகின்றான். அதுதான் அவனுக்கு "அருளின் நேரம்". நீதியின்படி தனக்கு எதுவுமே கிடையாது. அன்பையும் தான் அலட்சியம் செய்து விட்டேன் என்று உணருகின்றான். தந்தையின் இடத்தில் ஒரு வேலையாளுக்கு இடமாவது கிடைக்குமா? என்று ஏங்குகிறான். இவ்விடத்தில்தான் இயேசு இரக்கத்தை அறிமுகப்படுத்துகின்றார். மகனோ தந்தையின் வேலையாட்களுள் ஒருவனாக தன்னை ஏற்றுக்கொள்வாரா என்ற ஏக்கத்தோடு வருகின்றான். ஆனால் தந்தையோ தன் இரக்க மிகுதியால் அவனை அரவணைத்து அவனுடைய மடமைத்தனத்தினாலும், பிடிவாதத்தினாலும் இழந்த அனைத்தையும் பெற்றுக்கொடுக்கின்றார். இப்பொழுது தந்தையின் கரத்தில் அவன் மகனாகி விட்டான்.

தந்தையை நன்கு அறிந்த இயேசு தந்தையின் ஒரு அழகான படத்தை நமக்கு வரைந்து காட்டுகின்றார். "தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்" என்று இயேசு கூறினார் (மத்.11:27). உண்மையில் இயேசு இவ் உவமையைக் கூறியிருக்காவிட்டால் தந்தையின் இரக்கத்தையும் அவரது தாராளத் தன்மையையும் நாம் உணர்ந்திருக்கவே முடியாது.

தந்தையின் இம் மாபெரும் இரக்கத்தில் நாம் அனைவரும் பங்குபெற திருத்தந்தை நம்மை அழைக்கின்றார். அவர் இவ்வாறு கூறுகின்றார்: 'தந்தையின் மென்மையையும் அண்மையையும் அனுபவித்த நாங்கள் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் உறுதியடைந்து அவற்றிற்கு "உண்மைச் சாட்சிகளாக இருக்க வேண்டும் என்பதே என் விரும்பம்". மேலும் அவர் கூறுகையில் "கிறிஸ்தவ பயணம் இறைவனின் இரக்கத்தை உண்மையிலே சந்தித்து வாழ்வதாகும்" என்கின்றார். ஒப்புரவு அருட்சாதனத்தில் வெளிப்படுத்தப்பட்டு நற்கருணையில் கொண்டாடப்படும் உண்மையான மன மாற்றத்திற்கு அனைத்து விசுவாசிகளையும் அவர் அழைத்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஆண்டவரின் இரக்கம் எத்துணை பெரிது? அவரிடம் மனந்திரும்பு வோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது" (சீராக்.17:29).**

இறைவனின் இரக்கத்தை நாம் அனுபவிப்பதற்கு உண்மையான மனத்துயர் அல்லது மனஸ்தாபத்தோடு நாம் அவரிடம் திரும்பி வரவேண்டும். நற்செய்தியில் நாம் காணும் உவமைகள் அனைத்தும் உண்மையான மனமாற்றத்தோடு இறைவனிடம் வருபவரே இறைவனின் இரக்கத்தைப் பெற ஆயத்தமாக உள்ளார் என்று கூறுகின்றது. திருத்தூதர் யோவான் எட்டாம் அதிகாரத்தில் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணினுடைய நிகழ்வைக் கூறுகிறார். இப்படிப்பட்டவர்களை கல்லால் எறிந்து கொல்லவேண்டுமென்பதே மோயீசனின் கட்டளை. கற்கள் அனைத்தும் ஆயத்தமாக இருந்தன. இப்படிப்பட்ட கொடிய பாவத்தை இயேசு முன்பாக வைத்தபோது நிச்சயமாக அவள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும் என்று தம் கைகளில் கற்களை வைத்திருந்தனர். ஆனால் இயேசுவோ அவளைக் காப்பாற்றத் தீர்மானித்து விட்டார். அவர்கள் சுமத்திய குற்றத்தை அவர்கள் பக்கமே திருப்பி "உங்களுள் பாவமில்லாதவர் முதலில் கல்லை எறியட்டும்" என்றார். இதுவும் மோயீசன் சட்டத்தில் குறிக்கப்பட்டிருந்தது. தன்னுடைய பாவத்திலே தன் வாழ்வை எவ்வளவு வீணாக்கி விட்டாள் என்பதை அவள் உணர்ந்து இப்பொழுது எவ்வளவு மனஸ்தாபப்படுகிறாள் என்பதை இயேசு உணர்ந்து கொண்டார். "எவரும் உன்னைத் தீர்ப்பிடவில்லையா?" என்று கேட்டபொழுது "எவரும் இல்லை ஆண்டவரே" என்று கூறிய அவளது பதிலிருந்து அவளது மனஸ்தாபம் தெளிவாய் இருந்தது. அவள் இயேசுவை "ஆண்டவரே" என்று கூறியதை மிக உன்னிப் பாகக் கவனிக்க வேண்டியது. நான் தீர்ப்பிடவில்லை என்று கூறியதன்மூலம் இயேசு அவளுக்கு மனம்மாற சந்தர்ப்பமளிக் கின்றார். தன் உயிரின் மேல் அதிகாரம் கொண்டவராக இயேசுவை அவள் வெளிப்படுத்துகின்றாள். இனிமேல் அவளது வாழ்வு அவருக்கு அடிபணிந்து இருக்கும் என்றார். இத்தகைய உணர்வு அவளுக்கு ஏற்பட்டது இதுவரை அவள் வாழ்ந்த பாவ வாழ்வு அவளுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. அவள் அனுப வித்த உலக இன்பங்கள், உடல் இச்சைகள் எல்லாம் அவளை ஒரு வெறுமைக்கே இட்டுச் சென்றது. அவளது மனமாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவை மையமாகக் கொண்டு வாழ அவளுக்கு உதவியது.

ஒரு தியானத்திற்கு வந்த நபரைப்பற்றி ஒரு அருட்தந்தை பின்வருமாறு கூறினார். பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் நாற்சக்கரவண்டியில் தியானத்திற்கு வந்தார். அவர் ஒரு கொடிய வியாபாரி என்பது பலருக்குத் தொரியும். பணம் தான் அவருக்கு எல்லாம். மென்மேலும் பணத்தைச் சேமிக்கவேண்டும் எனும் அவா அவருக்கு. இதற்கு யாராவது தடையாக வந்தால் அவர்களுடன் கொடூரமாக நடந்துகொள்வார். தங்களது குடும்பச் சொத்தைப் பிரிப்பதில் தன்னுடைய சகோதரன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்பதை உணர்ந்த அவர் குண்டர்களைக் கூலிக்கு அமர்த்தி தன்னுடைய சகோதரனைத் தொலைத்துவிட முடிவு செய்தார். ஆனால், அவரது சகோதரன் கொலையிலிருந்து தப்பிவிட்டான், ஆனால் அவரது கை ஒன்று துண்டாடப்பட்டது. நடந்ததைப்பற்றி எந்தவொரு குற்ற உணர்வும் அவருக்கு இல்லை. பதிலாக தன்னுடைய சகோதரன் உயிரோடு இருக்கின்றான் என்ற கோபமே அவருக்கு இருந்தது. தியானத்தின் 2ம் நாள் இறைவனின் இரக்கத்தைப்பற்றி இறைவார்த்தை எடுத்துச் சொல்லப்பட்டபோது அவரது உள்ளம் உருகத் தொடங்கியது. இறைவனுடைய அளப்பரிய இரக்கத்திற்கும் தன்னுடைய கடின உள்ளத்திற்கும் எவ்வளவு வேறுபாடு என்பதை உணரத் தொடங்கினார். நல்லதொரு பாவசங்கீர்த்தனம் செய்தார். பாவசங்கீர்த்தனம் கேட்ட குருவானவருடைய அறிவுரையால் தன்னுடைய சகோதரனோடு உண்மையான மனஸ்தாபத்தோடு தொலைபேசியில் கதைத்தார். தியானம் முடிந்து அவரை நேரில் சந்தித்து தன்னுடைய கொடிய செயலுக்கு பரிகாரம் செய்வதாகச் சொன்னார். அந்த சகோதரனோ இதற்குமுன் நடந்த தியானத்தில் பங்குபற்றியிருந்தார். ஆதலால் அவரை மனதார ஏற்றுக்கொண்டார்.

அதன்பின் நான் அவரை சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறைவன் தனக்குக் காட்டிய இரக்கத்தைச் சொல்லிக் கண்ணீர் விட்டு அழுதார். அவர் மனஸ்தாபப் படுவதையோ அழுவதையோ தான் முன்பு ஒரு பொழுதும் கண்டதில்லை என்று அவர் மனைவி கூறினாள். இந்த இரக்கத்தின் அனுபவம் பாரிசவாதத்திலிருந்து அவரை குணமாக்கத் தொடங்கியது. யாருடைய உதவியும் இல்லாமல் அவர் நடக்கத் தொடங்கினார். உடலிலும் உள்ளத்திலும் முழுமையாகக் குணமடையத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைச் சேகரிப்பதில் குருட்டுத்தனமாகத் தன் வாழ்க்கையை வீணாக்கி தன்னுடைய வாழ்வையும் அன்பையும் இழந்து விட்டதை நினைத்து மனம் வருந்தினார். இனிமேல் தன் வாழ்வையும் பணத்தையும் நோயாளிகளுக்காகவும், வீடற்றவருக்காகவும் செலவளிக்கத் தீர்மானித்தார்.

**"இரக்கமுடையோர் பேறுபெற்றோர்" (மத்தேயு 5:7).**

இறைவனது இரக்கத்தின் அளப்பரிய அனுபவம் எம்மை எம் சகோதரர் சகோதரிகளுக்கு, குறிப்பாக ஏழைகள், நோயாளர், பாதிக்கப்பட்டோர், உரிமை மறுக்கப்பட்டோர் அனைவருக்கும் இரக்கத்தின் வாய்க்காலாக இருக்கத் தூண்டுகின்றது. இறைவன் மட்டில் திறந்துள்ள இதயம் தேவைகளோடும் துன்பங்களோடும் இருக்கும் ஒவ்வொருவர் மட்டிலும் திறந்திருக்கின்றது. செல்வந்தனும் ஏழை இலாசரும் பற்றிய உவமையை இயேசு கூறினார். செல்வந்தனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. செல்வந்தன் என்பது ஒரு தனி நபரை அல்ல. இறையாட்சியை இழந்த ஒரு சாராரைக் குறிக்கின்றது. இவ்வுவமையில் பசியிலே இறந்துகொண்டிருந்த ஏழையைப் பற்றி எவ்விதமான அக்கறையு மின்றி ஒரு சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்த இந்த செல்வந்தன் இறந்து அடி நரகத்தில் புதைக்கப்பட்டான். அவனது ஒரே ஒரு குற்றம் தேவையோடிருந்த தன் சகோதரனைப் பற்றி அக்கறை இல்லாமல் வாழ்ந்ததே. வாழ்க்கைத் தேவையில் இருப்போரோடு தன்னுடைய செல்வத்தைப் பகிர்ந்து வாழ்வது அவனுடைய பாரதூரமான பொறுப்பாக இருந்தது. இதைச் செய்யாத குற்றத்திற்காக எரி நரகத்துள் தள்ளப்பட்டான். உண்மையான குற்றம் என்னவென்றால் தன்னைப் பாதுகாத்த இறைவனின் இரக்கத்தை தன் சகோதரனுக்குக் காட்டாமல் விட்டதாகும். இறைவனை இரக்கத்தின் ஆண்டவராக அறிவது பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. இறைவனை இரக்கம் நிறைந்த தந்தையாகத் தேடியிருந்தால் அந்த இரக்கத்தை மற்றவருக்கும் காட்ட அது நிச்சயம் அவனைத் தூண்டியிருக்கும்.

இறைவனின் இரக்கத்தை அனுபவிப்பவர்கள் அதைத் தம் அன்றாட வாழ்வில் காட்டுவார்கள் என்று திருத்தந்தை கூறுகின் றார். எவ்வளவிற்கு எவ்வளவு இறைவனின் நன்மைத் தனத்தை உற்றுப் பார்க்கின்றோமோ அவ்வளவிற்கு அவ்வளவு நாம் மற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டில் இரக்கமுடையவராய் இருக்கின்றோம். இரக்கம் நிறைந்த நமது வாழ்விற்கு ஆண்டவர் இயேசு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றார். இயேசு நோயாளர், கைவிடப்பட்டோர் அனைவருக் கும் நன்மையே செய்து கொண்டு சென்றார். நாம் வாழ்க்கையில் தேவையில் உள்ளவர்களுக்கு உதவ சரீர இரக்க செயலில் ஈடுபடுவதற்கும் ஆன்மீக குணமாக்கலில் ஈடுபடுவதற்கும் திருச் சபை நம்மைத் தூண்டுகின்றது.

தன்னைப் பற்றியும் தன்னுடைய பாதுகாப்புப் பற்றியும் சிந்தித்து தனக்கென்றே வாழும் கிறிஸ்தவன் தன்னுடைய சுய அடையாளத்திற்கெதிராகவே வாழ்கின்றான். தங்களுடைய ஆன்மீக நிறைவு பற்றியும் தம் சுய விளம்பரங்கள் பற்றியும் பெரிதுபடுத்திக் கொள்பவர்கள் பரிசேயரிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல.

விசுவாசிகள் என்ற நிலையில் இயேசு நமக்கும் வெளிப்படுத்தும் இரக்கத்தின் தந்தையைப் பற்றி நாம் அதிகம் அதிகம் தியானிப்பது அவசியம். எமது இதயங்கள் இறை அனுபவத்திற்குத் திறந்திருக்கும்பொழுது அவை இரக்கத்தால் வழிந்தோடும். எம்முடைய ஒவ்வொரு உறவும் இரக்கத்தால் செயற்படும். தண்டனையைவிட இரக்கமே மேலோங்கி நிற்கும்.

செபம்

ஆண்டவராகிய இயேசுவே! பாவிகள் மட்டில் உமது தந்தையின் இதயம் துடித்துக் கொண்டிருப்பதை எமக்கு வெளிப்படுத்த வந்தீர். ஈட்டியால் குத்தித் திறக்கப்பட்ட உமது இதயத்தை நாம் உற்று நோக்கிப் பார்க்கச் செய்யும். உமது தந்தையின் இரக்கத்தினால் நிறைந்து இரக்கத்தின் வாய்க்காலாக நாம் மாறச் செய்யும். மற்றவர்களைப் பற்றி அக்கறையற்ற வாழ்வை எமது இதயத்திலிருந்து வேரோடு அறுத்தெறியும். ஏழைகளும் உள்ளம் உடைந்தவர்களும் எம்மூலம் உமது இரக்கத்தை அனுபவிக்கச் செய்யும் - ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# “நான் உங்களோடு இணைந்திருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருங்கள்”

எசாயா.49:13-18, யோவா 15:1-5

ஓஷோ என்பவர் தனது புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்: நாலு வயதுக் குழந்தையின் தாய் நாள் முழுவதும் வேலை செய்து கடும் களைப்போடு ஆழ்ந்த நிலையில் படுத்திருக் கிறாள். நீங்கள் கூப்பிடுகிறீர்கள். அவள் எழும்பவில்லை. அவளுடைய கையில் தட்டுகிறீர்கள், அசையவில்லை, அவளோ ஆழ்ந்த நித்திரை. அவளுக்கு அருகில் படுத்திருக்கும் அவளது நாலு வயதுக் குழந்தையை மெதுவாக தொடப்போகிறீர்கள். உடனே குழந்தை மேல் தனது கையைப் போட்டு குழந்தையைப் பாதுகாக் கிறாள். இதை எப்படி விளக்குவீர்கள்? இதைத்தான் தொப்புள் கொடி உறவு என்கிறோம். தாய்க்கும் சேய்க்கும் இடையே உள்ள உறவு அவ்வளவு நெருக்கமானது. இதுதான் இறைவனுக்கும் நமக்கும் இடையே உள்ள இணைபிரியா உறவு. இதைத்தான் இறைவாக்கினர் எசாயா 49:15ல் “பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவேமாட்டேன்” என்கிறார். இதே உண்மையைத் தான் திருப் பாடல் ஆசிரியர் “கண்ணின் மணிபோல் காத்தருளும்” என்று தி.பா.17:8ல் கூறுகிறார். எவ்வாறு கண்ணின் மணியை இமைகள் காக்கின்றன என்று நமக்குத் தெரியும்.

இறைவனுக்கும் நமக்கும் இடையே உள்ள இவ் உறவு ஒருதலைச்சார்பானது அல்ல. இறைவன் இவ்வாறு நம் ஒவ்வொரு வரையும் பாதுகாக்கின்றார், வாழ்விக்கின்றார், வழி நடத்துகின்றார் என்றால், நாம் எப்படி வாழவேண்டும்? இதே உறவு நெருக்கத்தோடு அல்லவா? ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவத்தை 'வழி' அல்லது 'மார்க்கம்' என்று அழைத்தார்கள். அங்கு எவ்வித பாகுபாடும் இல்லை. சிந்தித்ததைச் சொன்னார்கள், சொன்னதைச் செய்தார் கள். அவர்களில் ஒரு ஒருங்கிணைந்த வாழ்வு இருந்தது. இதையே தி.ப.17:28ல் “நாங்கள் வாழ்வதும், இயங்குவதும் இருப்பதும் உம் மிலேதான்” என்று கூறினார். இதுதான் அன்று சாட்சிய வாழ்வாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைந்த அல்லது ஒன்றுபட்ட வாழ்வை நாம் வாழவேண்டுமென்றால், நாம் இறைவனிலே, கிறிஸ்துவிலே இணைந்து வாழவேண்டும். அன்பை ஆழமாக அனுபவித்த திருத்தூதர் யோவான் இதுபற்றிக் கூறும்போது "நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" என்கிறார் (யோவா 15:4). கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதை எவ்வளவுக்கு வலியுறுத்துகிறார் என்றால் தனது நற்செய்தியில் 40 முறையும் திருமுகங்களில் 30 முறையும் அதாவது முழு நற்செய்தியில் குறிப்பிடப்படுவதில் அரைவாசிப் பங்கு யோவான் மட்டும் குறிப்பிடுகிறார்.

இணைந்து இருப்பது என்பது தந்தையோடு அவர் நித்தியத்திற்கும் அனுபவிக்கும் அற்புதமான அந்தரங்க வாழ்வைக் குறிக்கின்றது. அது மட்டுமல்ல, அவரது சீடர்கள் உண்மையின் ஆவியாரோடு அனுபவிக்கப்போகும் வாழ்வையும் குறிக்கின்றது. தாய்க்கும் சேய்க்கும் இடையே உள்ள தொப்புள்கொடி உறவைக் குறிக்கிறது.

எப்படி இந்த நெருங்கி இணைந்திருக்கும் வாழ்வை நாம் வாழ முடியும்? இரண்டு விடயங்களைக் குறிப்பிடுகிறார்.

1. யோவா 8:21 "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடராயிருப்பீர்கள்."
2. யோவா 6:56 "எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்."

இரண்டு வழிகளில் நாம் இயேசுவோடு இணைந்திருக்கி றோம். இவை இரண்டும் ஒவ்வொரு திருப்பலியிலும் இடம் பெறுகின்றன. தகுந்த ஆயத்தத்தோடு நாம் திருப்பலியில் பங்கெடுத்தால் இயேசுவோடு நெருக்கமாக இணைந்திருக்கிறோம். இவ்வாறு இணைந்திருப்போரே உண்மைக் கிறிஸ்தவர்கள். ஒரு கிளை எவ்வளவுக்கு நெருக்கமாக செடியோடு இணைந்துள்ளதோ அவ்வளவுக்கே அது செடியின் சாரத்தையும் பெறும்; கனியையும் கொடுக்கும். இது போலவே கிறிஸ்துவின் சீடரும். இத்தகைய தொப்புள் கொடி உறவோடு வாழும் பொழுது என்ன நடக்கிறது?

தந்தையோடு இயேசு நெருக்கமாக இணைந்திருத்ததன் விளைவு என்னவென்றால் தனது உள்ளார்ந்த பதிலைக் கொடுக்கக்கூடிய விதமாக இருந்தது. அதாவது, தன்னை மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய வேதனைகளுக்கு உள்ளாக்கி சிலவையில் அறைந்தவர்களுக்காகவும் "தந்தையே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" என்று வேண்டினார். இத்தகைய மன்றாட்டு அனைவரையும் திகிலுறச் செய்தது, இயற்கையையே அதிர வைத்தது. இதுதான் சாட்சிய வாழ்வு. இன்று வாழப்பட வேண்டிய வாழ்வு. "இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்து விடல்." இன்னா செய்தார்க்கு அவர்கள் நாணும்படி நன்மை செய்வது மட்டுமன்று அத்துடன் அச்செயல்பற்றி மறந்துவிட வேண்டும்.

இன்றைய நிலையில் சாட்சியம் பகருவது பெரும் விழாக்களும் உயர்ந்த கோபுரங்களுமல்ல. திருச்சபையின் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏற்படும் தவறுகள்தான் இன்றும் நம்மத்தியில் நிலவுகின்றன. எந்த மக்களை நினைத்து இயேசு இந்த ஏழைகளின் திருச்சபையை ஆரம்பித்தாரோ அதே ஏழைகள், நோயாளிகள், ஓரங்கப்பட்டவர்களை மறந்து அமைப்புக்கள், அதிகார மோகங்கள், உலகப்போக்குகள், பகட்டான வாழ்க்கை முறைகள் என்று ஏழைகளின் திருச்சபையிலிருந்து எங்கோ சென்று எதிர்சாட்சியமாக வாழ்ந்துவரும் இக்காலகட்டத்தில் இன்று திருச்சபைக்கு எதிராக ஏற்படும் பல்வேறு சவால்கள் நம்மைக் கண்விழிக்க வைக்கின்றன. எமது இருப்பைக் கேள்விக் குறியாக்குகின்றன. தூய ஆவியானவரின் துணையோடு உண்மையான ஒரு புதுப்பித்தல் ஏற்பட வேண்டும்.

இறைவனின் ஆலயங்களைத் தேடிவரும் நாம் ஒன்று கூடி செபிக்க வேண்டும். எமது மனமாற்றம் பற்றி ஆராய வேண்டும். பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறி சீடர்களின் பாதங்களைக் கழுவிய பின் "ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" (யோவா 13:14) என்று கூறிய அந்த இயேசுவின் அடிப்படைப் போதனைக்குச் செல்ல வேண்டும். எது இயேசுவின் மனநிலையோ, எது திருச்சபை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமோ அவற்றை ஆவியாரின் துணையோடு உய்த்து உணர்ந்து கதையில் வரும் தாயைப் போன்று இயல்பாகவே கிறிஸ்தவ வாழ்வை வாழ அனைவரும் உருக்கமாகச் செபிப்போம். புதுப்பித்தல் முதலில் ஒவ்வொரு தனி மனிதனுடைய உள்ளத்திலும் ஏற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, புதுப்பிக்கும் ஆவியாரால் நம் உள்ளங்கள் நிரப்பப்பட மன்றாடுவோம். நமது விண்ணப்பம் வீண்போகாது என்று இயேசு லூக் 11:13 வழியாக உறுதியளிக்கிறார். கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்னும் பகுதியின் இறுதியில் "அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!" என்கிறார். திருப்பாடல் 51:10,11ல் உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும்... உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும் என்று மன்றாடுகின் றோம். தூய ஆவி நம்முள் பிரசன்னமாயிருப்பதன் அடையாளம் கலாத் 5:20 கூறும் அவரது கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவற்றால் நிறைந்திருப்பது. கலாத் 5:25 கூறுவதுபோல "அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவது".





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

# நீ இன்றி நிறைவு இல்லை

### முகவுரை

குடும்பத்தைப் பலர் பற்பலவாறு விபரிக்கின்றனர். சமூகத்தின் ஓர் அலகாகப் பார்க்கின்றனர். உளவியலாளர் மாறிவருகின்ற சூழலுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஒரு திறந்த அமைப்பாகப் பார்க்கின்றனர். திருச்சபை குடும்பத்தை ஒரு இல்லத் திருச்சபையாக நோக்குகின்றது. உலகத்திற்கு அங்கத்தவர்களை வாரி வழங்கும் ஒரு அமைப் பாகவும், அன்பினதும், உயிர்வாழ்வினதும் சரணாலயமாகவும் நோக்குகின்றது. இறைவனின் கொடைகள் என பிள்ளைகளை வரவேற்று, அடிப்படையாக, சமுதாயத்திற்கும் திரு அவைக்கும் சிறந்த அங்கத்தவர்களை வழங்குவதன் மூலம் தனது பணியை ஒரு குடும்பம் செவ்வனே செய்கின்றது.

### திருக்குடும்பமே முன்னுதாரணம்

இந்நிலையில் வருங்காலத் திருச்சபையின் மறுமலர்ச்சி குடும்பத்தின் முழுப் புதுப்பித்தலிலே தங்கியுள்ளது. தம்பதியர்கள் கிறிஸ்துவுக்காக வாழும் உயிர்த்துடிப்புள்ள தம்பதியர்களாக மாற வேண்டும். குடும்பங்களைப்பற்றிச் சிந்திக்கும் வேளையிலே, எந்தவொரு நிலையிலும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு எடுத்துக் காட்டாக, முன்மாதிரியாக விளங்குவது திருக்குடும்பமே. எனவே, இந்த திருக்குடும்பம் எவ்வாறு என்றும் சமாதானத்திற்கு அடிப் படையாக, சமாதானத்தின் ஊற்றாக விளங்குகின்றது என்றும் அதில் மாபெரும் கொடையாகிய இயேசு, ஒட்டுமொத்த சமாதான வடிவமாக எப்படித் திகழ்கின்றார் என்றும், இச்சமாதானத்தின் மனிதர் முழு வளர்ச்சி பெறுவதற்கு அன்னை மரியாளும், தந்தை சூசையும் காரணிகளாக எப்படித் திகழ்ந்தார்கள் என்றும் பார்ப்போம்.

### இறைசித்தமேற்ற அன்னை மரி

இச்சமாதானத்தின் இயேசு உருவாவதற்கு அடிப்படைக் காரணியாய் அமைந்தது அன்னை மரியாளும், சூசையப்பருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையருக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் அன்னை மரியாள் தன் பிள்ளை சமாதானம் நிறைந்த பிள்ளையாய் இருப்பதற்குப் பல வழிகளில் காரணமாக இருந்தாள். அன்னை மரியாள் திருமண வாழ்விற்கு அழைப்புப் பெற்றது அன்றைய சமுதாய வழமைக்கு முற்றிலும் வேறுபட்ட விதத்தில். அவளுடைய திருமண ஒழுங்குகள் நிறைவேறியது வித்தியாசமான, ஏன்? விசித்திரமான விதத்தில். அப்படியிருந்தும் அவற்றை இறை திட்டமாக ஏற்றுக்கொள்கின்றாள். உதாரணமாக இறை வார்த்தையையே தன் வாழ்வாக்கி, இந்த வார்த்தையைத் தன் உள்ளத்திலே என்றும் இருத்தி சிந்தித்துக்கொண்டு இருந்ததனால் தான் (லூக் 2:19) இறை திட்டத்தை அவளால் உணர முடிந்தது. இந்த இறைதிட்டத்திற்கு எவ்வளவு தூரம் இறை வார்த்தையைத் தன் உள்ளத்திலே இருத்தி, சிந்தித்து, இறை திட்டத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடன்பாடு கொடுத்து தன்னைக் கையளித்தாளோ அவ்வளவிற்குத்தான் தனக்குள்ளும், தன் குடும்பத்திலும் சமாதானத்தை அனுபவித்தாள்.

**அர்ப்பணத்தின் மறுபெயர் சூசை**

புனித சூசையப்பரைப்பற்றிப் பார்க்கும்பொழுது தந்தையாக இருப்பதற்கு சூசையப்பருக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு, அன்றைய சமுதாய நிலையில் இருந்து மிகவும் வேறுபட்டது. மரியாளுடன் கூடி வாழுமுன் அவள் கருத்தரித்திருந்தாள். அதனால் ஏற்படுகின்ற சந்தேகங்கள்...! ஆனால் இது கடவுளின் திட்டமென்று தெளிவுபடுத்தப்பட்டவுடன் அத்திட்டத்திற்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்கின்றார். குழந்தை இயேசுவின் உயிருக்கு ஆபத்து என்று அறிவிக்கப்பட்டவுடனே, அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றத் தொலைவிடத்திற்கு கொண்டு ஓடிச் சென்றார். இவ்வாறு இறைவனுடைய திட்டத்திற்குத் தம்மை முழுவதும் கையளிப்பதனாலே, தனக்குள்ளும் தன் குடும்பத்திலும் இறைவன் கொடுக்கின்ற சமாதானத்தை அனுபவித்தார். கற்பாறையில் அமைந்த இல்ல(றம்)ம் மேற்சொன்ன வழிகளாலும், இன்னும் பல்வேறு வழிகளாலும், அன்னை மரியாளும், சூசையப்பரும் இணைந்த திருக்குடும்பம் சமாதானத்தால் நிறைந்து, சமாதானத்தின் ஊற்றாக இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது திருக்குடும்பத்தின் மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களுமே அவரவர் வாழ்விலே எதிர்காலம் தெளிவில்லாமல் இனம்புரியாததாக இருக்கின்ற நேரத்திலும் இறைவனுடைய திட்டத்திற்குத் தம்மை முற்றாகக் கையளித்தார்கள். அவர்கள் இறைவார்த்தையிலே தம் வாழ்வை அமைக்க வைத்தது மத்தேயு 7:14 இல் சொல்லப்படுவது போல கற்பாறை மீது தங்கள் வீட்டைக் கட்டியவர்களாக இருந்ததனால் தான். இதுதான் அவர்கள் சமாதானத்தை அனுபவிக்க ஊற்றாக அமைந்தது.

இத்திருக்குடும்பத்திலே ஒவ்வொரு உறுப்பினரும் தத்தம் அழைத்தலுக்கும் நிலைக்கும் ஏற்ப சமாதானத்தை அனுபவித்து, சமாதானத்தின் தூதுவர்களாக இருந்தார்கள்.

**கனியாக இயேசு**

அவர்களுக்கு குடும்பத்தில் ஏற்பட்ட கஷ்டங்களில் உதாரணமாக, கன்னிப்பெண் வீதியோரத்திலே தன் ஒரே மகனைப் பிரசவித்த நேரத்திலே, பாலகன் இயேசுவை எகிப்துக்குக் கொண்டு ஓடிய நேரத்திலே, ஒருவருக்கு ஒருவர் பிரமாணிக்கத்துடனும் ஒருவர் மட்டில் ஒருவர் பொறுப்புணர்வுடனும் இருந்தார்கள். இன்னும் அன்னை மரியாளினதும் சூசையப்பரினதும் வாழ்விலே இருந்த ஆழமான இறையுறவு, ஆலயம் செல்லும் வழக்கம், திருச்சட்டத்தை நிறைவேற்றும் ஆவல் போன்றவைதான் இயேசுவின் ஆளுமை வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தன. இந்தக் களத்திலேதான் லூக் 3:52 இல் கூறப்படுவதுபோல இயேசு ஞானத்திலும், உடல் வளர்ச்சிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். ஒரு பிள்ளை வளர்வதற்கு இவ்வாறு களம் அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு குடும்பத்தைச் சார்ந்தது.

இந்த இயேசுதான் சமாதானத்தின் கொடை. தந்தையிடமிருந்து உலகிற்கு சமாதானத்தின் கொடையாக அனுப்பப்பட்ட இந்த இயேசுதான் உலகம் தரமுடியாத உண்மைச் சமாதானத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன் (யோவான் 14:27) என்று கூறுகின்றார். இந்த இயேசு தனக்குள்ளே எவ்விதத்திலும் குறைவுபடாத சமாதானத்தை அனுபவித்தார். இத்தகைய சமாதானத்தின் மனிதரைத்தான் ஆயிரம் ஆயிரம் மக்கள் ஆவலோடு தேடி ஓடினார்கள். ஆனால் மேலோட்டமாக உள்ளங்களைச் சாந்திப்படுத்தக்கூடிய சமாதானத்தை அவர் அறிவிக்கவில்லை. உண்மைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தைப்பற்றிப் பேசும் இயேசு, சமாதானத்தை அல்ல, வாளையே கொண்டு வந்தேன் என்று தெளிவாகக் கூறுகின்றார் (மாற்கு 10:34). அதாவது பல்வேறு வகையான தீமைகள், அடக்கு முறைகள் நிறைந்த சமுதாயத்திலே, சமாதானம் என்பது உண்மைக்குக் குரல் கொடுத்து இறைவன் பக்கம் நிற்பதனாலே ஏற்படுகின்றது. இதனால்தான் உலக சமாதானத்திற்கான செய்தியை விடுத்த திருத்தந்தை 23ம் அருளப்பர், உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்பவற்றின்மேல் கட்டப்பட்ட சமாதானம், தீமை, பாவம், அடிமைத்தனங்கள் என்பவற்றிற்கு சவால் விடுத்த சமாதானம், மனிதனை எல்லா நிலையிலிருந்தும் விடுவித்து உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கச் செய்த சமாதானம் என்று வர்ணிக்கின்றார். இதனால்தான் இயேசு தான் கொண்டுவந்த சமாதானத்தை சமாதானத்தின் நகரம் அதாவது ஜெருஷலோம் என்று அழைக்கப்படுகின்ற ஜெருசலேமிலே தன்னை முழுவதும் பலியாக்கித்தான் பெற்றுத்தந்தார். எவ்விதத்திலும் சவால் விடுக்க முடியாத சமாதானத்தின் மனிதனாகிய இயேசு, தனக்குள்ளே நிறைவான சமாதானத்தை அனுபவித்தது மாத்திரமல்ல, உலகம் தரமுடியாத உண்மைச் சமாதானத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன் (அரு 14:27) என்று சொல்லும் சமாதானத்தின் கொடையாகத் திகழ்கின்றார்.

**இல்லறத்திற்கு இன்றைய சவால்கள்**

திருக்குடும்பம் சவாலை ஏற்றது போல இன்றைய ஒவ்வொரு குடும்பமும் பல்வேறு சவால்களை ஏற்றுக்கொண்டு வாழ்கின்றது. ஆனால் திருக்குடும்பம் ஏற்றுக்கொண்ட சவால்கள் வேறு. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும், பூகோளமயமாக்கலினாலும் குடும்பத்தின் சமாதானம் இன்று பலவிதத்திலும் நிர்மூலமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு துறையும் குடும்பத்தின் சமாதானத்திற்கு நவீன சவால்களை விடுத்துக்கொண்டே இருக்கின்றது. உதாரணமாக ஊடகங்கள், நாட்டிலே மலிந்து வருகின்ற வன்முறைகள், போதைப்பொருட்கள் இவைகள் எல்லாம் குடும்ப சமாதானத்திற்கு பெரும் சவால்களாக அமைந்து பெரும் பெரும் முதலைகளுக்கு குடும்பங்களை இரையாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய ஆணவம், தன்னலம் என்பவற்றை உடைக்கும்போதுதான் குடும்பத்தின் அங்கத்தவர் மத்தியில் உண்மைச் சமாதானம் ஏற்படும். ஒவ்வொரு குடும்பமும் சமாதானத்தின் உறைவிடமாக, ஊற்றாகத் திகழும். குடும்பம் சமாதானத்தின் உறைவிடமாகவும், ஊற்றாகவும் இருக்கும்போது அது நிச்சயமாக குடும்பங்களிடையேயும், சமூகத்திற்குள்ளும் பரவும். இனிக்காத தேனில்லை. மணம் பரப்பாத மலர் இல்லை. ஒளி கொடுக்காத விளக்கில்லை. எந்த மதிப்பீடும், எந்த நன்மைத்தனமும் தன்னிலே வெளிநோக்குக் கொண்டது. இதுபோன்றுதான் சமாதானம் நிறைந்த குடும்பமும், குடும்ப உறுப்பினரும் என்றும் வெளிநோக்குக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் சமாதானத்தின் கருவியாக, பகை உள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்தில் மன்னிப்பையும், கொடுக்கின்றவர்களாக, ஆறுதலுக்காக அலைவதை விடுத்து ஆறுதலைக் கொடுக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறுதான் குடும்பங்களின் ஊடாக சமாதானம் பரவ முடியும். எனவே, திருஅவையின் மறுமலர்ச்சியை விரும்பும் நாம் ஒவ்வொரு குடும்பத்தையும் எமது குழுமம், பங்கு, தலத் திருஅவை எனும் குடும்பங்களையும் புதுப்பிப்போம். குடும்பம் சமாதானத்தின் உறைவிடமும் ஊற்றுமாகத் திகழ்வதற்கு எதிராக வரும் சவால்கள், அழிவு சக்திகளை இனம் காண்போம். அதேவேளை இச்சமாதானத்தை உருவாக்கும், வளர்க்கும் ஆக்கபூர்வ அம்சங்களையும் இனங் கண்டு, ஒவ்வொரு குடும்பத்தையும் சமானத்தின் உறைவிடாகவும், ஊற்றாகவும் மாற்றுவோம்... வளர்ப்போம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# உள் அறைக்குள் செல்லுங்கள்

செபிப்பது எப்படி என்று தமது சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தபோது இயேசு கூறியது "உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அளிப்பார்" (மத் 6:6). இந்த "உள்ளறை" ஓர் இடமல்ல. அது எமது உள்ளத்தின் அடி ஆழத்திலுள்ள நாம் யார் என்பதை உணர்த்தும் ஒரு பகுதியாகும். அது நாம் ஆண்டவரைச் சந்திக்கக் கூடிய அமைதியான இடமாகும்.

செபிக்கும்போது ஒவ்வொரு நாளும் உங்களால் முடிந் தளவு சத்தத்தைக் குறைக்க முயற்சியுங்கள். உங்கள் உள்ளறைக்குச் செல்வதற்கு துணைபுரியக் கூடிய ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சில சமயம் இது உங்களை நற்கருணை ஆராதனைக்காக ஆலயத்திற்குக்கூட போகச் செய்யலாம். அல்லது நீங்கள் செபிக்கும் போது உங்கள் தொலைக்காட்சியையும் கைத்தொலைபேசியையும் நிறுத்தி விடுவதாயிருக்கலாம். அல்லது உங்கள் வீட்டிலேயே நாளாந்த பராக்குகள் இல்லாத ஒரு அமைதியான அறையைத் தேடிப் பிடிப்பதாக இருக்கலாம். உங்கள் யுக்தி எதுவாக இருந்தாலும் இறைவனோடு தனித்திருக்க ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங் கள். இறைவனை நீங்கள் அனுபவிக்கும் படியாக உங்கள் மனதை அமைதிப்படுத்த ஒரு நல்ல வழியைக் கண்டு பிடியுங்கள்.

**செயற்படுதலுக்கு மாறாக இருத்தல்.**

உலகமானது எமது உறவுகளையிட்டோ அல்ல, எமது பயன்பாடுகளையிட்டோ அல்ல, மாறாக எமது பயன்பாடுகளை யிட்டு எம்மை இனங்காட்டத் தூண்டுகின்றது. எமது வேலை, எமது வீடு, எமது பிள்ளைகள், எமது பொழுது போக்குகள், எமது திறமைகள் எமது ஆற்றல்கள் பற்றிப் பேசுகின்றோம். எமது வெற்றி தோல்விகளின் அடிப்படையில் எமக்குத் தீர்ப்பிட்டுக் கொள்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோம். ஓர் அளவுக்கு இது இயல்பானது. எமது வாழ்வின் இலக்குகளை நிர்ணயிக்க இது உதவக்கூடும்.

ஆனால் இறைவனது அன்பை அனுபவிப்பதோ செயலாற்று வதல்ல, அது சிந்தயை அடக்கி சும்மா இருப்பது. செயற்படுவதை நாம் சுலபமாக விளக்கலாம். அது ஏதாவது ஒன்றைச் செய்வது. ஆனால் இருப்பதை விளக்குவது எப்படி, அதற்குச் சொல் வடிவம் கொடுப்பது மிகக்கடினம்.

செயலாற்றுவது வாழ்வின் ஒரு முக்கிய அம்சம் என்பது உண்மையே. எமது செலவினங்களை ஈடு செய்ய நாம் உழைக்கத் தான் வேண்டும். நாம் உண்ண வேண்டுமானால் சமைக்கத்தான் வேண்டும். ஆனால் இருப்பது அதைவிட முக்கியமானது. நாம் இறைவனை அறிந்து அவரது அன்பை அனுபவிக்க வேண்டுமானால் இது மிக முக்கியம்.

இயேசுவிடம் எமது வாழ்வை ஒப்படைக்கும் ஆவலுடன் நாம் திருப்பலிக்கு வராவிட்டால், அவர் கூறுவதைக் கேட்கும் ஆவலுள்ளவர்களாகவும், அவர் எமக்குத் தர விரும்பும் கொடை களை ஏற்பதற்கு ஆயத்தவமானவர்களாகவும் நாம் வராவிட்டால் நாம் பெறக் கூடிய பலன்களை இழந்து விடுவோம்.

ஆகவே, தவக்காலங்களில், செய்வதை விட இருப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க முயற்சிப்போம். இறைவனது பிள்ளைக ளாக இறைவனிடமிருந்து வாழ்வையும், அன்பையும் பெற்றுக் கொள்வதற்கெனப் படைக்கப்பட்ட அன்புக்குரிய மகனாக, மகளாக எம்மை நோக்கக் கற்றுக் கொள்வோம். இவ்விதமாக எம்மைப் பார்க்க முடியுமானால் எமது செப, திருப்பலி வேளைகள் மேன்மேலும் இயேசுவைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களாக மாறும்.

**இயேசுவைத் தியானித்தல்**

எம்மை முடிவில்லாமல் நேசிக்கும் ஒருவருடன் ஒன்றாகி இறைவனைத் தியானிப்பதில் மட்டுமே எமது மேலான மகிழ்ச்சி அடங்கியுள்ளது என்று புனித அக்குவீனாஸ் தோமையர் கூறியுள்ளார்.

இயேசுவைத் தியானிப்பது எப்படி என்று நீங்கள் கற்றுக் கொள்ள விரும்பினால் உங்கள் கற்பனையோடு ஆரம்பிப்பது நல்லது. பெய்யும் மழையின் நடுவே நீங்கள் நிற்பதாக கற்பனை செய்து பாருங்கள். 'இயேசு உங்கள் மேல் அருள் மழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிவதாகக் கற்பனை செய்யுங்கள். அல்லது இயேசுவுக்கு அருகில் இருப்பது போல அல்லது அவரோடு சேர்ந்து நடப்பது போல நீங்கள் கற்பனை செய்யலாம். அவருடைய பிரசன்னத்தால் ஈர்க்கப்பட்டு அவரது ஒவ்வொரு சொல்லையும் விடாமல் பற்றிக் கொள்வதாகக் கற்பனை செய்யுங்கள். தாழ்மையாயிருங்கள், போலிப் பெருமை வேண்டாம். உங்கள் ஆன்மாவை அவருக்குத் திறந்து காட்டுங்கள். உங்கள் நன்மை தீமைகளையும், சுக துக்கங்களையும் அவருக்குக் கூறுங்கள்.

இவ்வாறு உங்கள் உள்ளத்தைத் திறந்த பின்பு, இயேசுவையும் அவரது உண்மைகளையும் பற்றித் தியானிக்கத் தொடங்குங்கள். "இயேசு முடிவில்லாக் கடவுளின் மகன், ஆயினும், அவர் என்னை நேசிக்கின்றார்" என்றோ, "இயேசு எனக்காகத் தம் உயிரைக் கொடுத்தார், அவ்வளவு ஆழமாக என்னை நேசிக்கின்றார்" என்றோ, "இயேசு இப்போது என்னோடு இருக்கிறார் நான் கூறுவதைக் கேட்கிறார். அவரது அன்பை நான் சுவைக்கவேண்டுமென்று விரும்பகின்றார்" என்றோ உங்களுள் சொல்லிக் கொள்ளுங்கள்.

இத்தகைய தியானத்தின் நோக்கம் எமது இதயங்களை இயேசுவின் திரு இதயத்துடன் ஒன்றாக்கி எமது உள்ளத்தின் எண்ணங்கள், நினைவுகள் அனைத்தையும், பலங்கள், பலவீனங்கள் அனைத்தையும் அவரிடம் கொண்டு வருவதாகும். நாம் விரும்புவதெல்லாம் எமது உள்ளத்தை அவருக்குக் கொடுப்பதும் அதற்குப் பதிலாக அவர் தமது இதயத்தை எமக்குத் தருவதுமேயாகும்.

**அவரது பிரசன்னத்தை உணர்தல்**

இயேசுவோடு ஒன்றாகும் வேளையில் அவர் உங்களிடம் என்ன செய்ய விரும்புகின்றரோ கூடியளவு அதை ஏற்கும் நிலையில் இருங்கள். இதை நாம் மிகவும் வற்புறுத்துகின்றோம். ஏற்கும் மனநிலையில் இருங்கள். உள்ளத்தைத் திறந்து ஏற்றுக்கொள்ளுங்கள். இறைவனது அன்பிலும் நன்மைத் தனத்திலும் நம்பிக்கை வையுங்கள். சில வேளை அவர் உங்களுக்கு எதுவும் கூற விரும்புவார், அல்லது ஒரு பழைய காயத்தைக் குணப்படுத்த விரும்புவார். அல்லது நீங்கள் தள்ளிப் போட்ட ஒரு செயலைச் செய்யும்படி தூண்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் உங்களிடத்தில் எதைச் செய்தாலும் எதைச் சொன்னாலும் அதை நீங்கள் உணரும்போது அவரில் நம்பிக்கை வையுங்கள். உங்களால் எதையும் உணரமுடியாது போனாலும், இயேசு உங்களுடன் இருக்கிறார் என்று நம்புங்கள். "தட்டுங்கள் திறக்கப்படும்" (மத்.7) என்று அவர் உறுதிமொழி கூறியதை நினையுங்கள் "இப்பொழுதும் நீங்கள் அவரைக் கண்டதில்லை எனினும் நம்பிக்கை கொண்ட சொல்லொணா, ஒப்பற்ற மகிழ்ச்சி யடைந்து பேருவகை கொள்கிறீர்கள்" (1பேதுரு 1:8) என்ற புனித பேதுருவின் வார்த்தைகளை நினைத்துப் பாருங்கள்.

சில வேளைகளில் தூய ஆவியானவர் செய்வதை நாம் உணரக்கூடியதாயிருக்கின்றது. இயேசுவைத் தியானித்தவர்கள் அடிக்கடி ஆழ்ந்த அமைதியாலும் பெருமகிழ்ச்சியாலும் நிரப்பப் பெறுவர். வேறு சிலர் இறைவனது அற்புதமான பிரசன்னத்தைப் பற்றி நினைப்பதாக உணருகின்றனர். "இயேசுவே, நான் உம்மை நேசிக்கின்றேன்" அல்லது "இயேசுவே, என் வாழ்வை உம்மிடம் ஒப்படைக்கின்றேன்" என்று சொல்லும்படி தூண்டப்படுகின்றனர். ஆயினும் நாம் இயேசுவைத் தியானிக்கும் போது நாம் காணும் பொதுவான அனுபவம் இறைவன் எம்மை அன்பினாலும் அமைதியினாலும் நிரப்புகின்றார் என்ற உணர்வே.

**ஆண்டவரே, இதோ இருக்கின்றேன்.**

ஒவ்வொரு நாளும் இயேசு எம்மைத் தமது பிரசன்னத்தில் தம்மோடு ஒன்றாகும்படி அழைக்கின்றார். "என்னிடம் வாருங்கள் உங்களை இளைப்பாற்றுவேன்" என்கிறார் (மத் 11:28). எமது ஆழ்ந்த தேவைகளை நிறைவு செய்ய விரும்புகிறார். தமது அன்புதான் எம்மை முழுமையாகத் திருப்திப்படுத்தக் கூடியது என்பதை அவர் அறிவார். உண்மையான மகிழ்ச்சியையும் உண்மையான அர்த்தத்தையும் தம்மிடம் காண முடியும் என்று எமக்குத் தெரியப்படுத்த விரும்புகிறார். ஆம், தினந்தோறும் அவரது அழைப்பை ஏற்போம். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, நீங்கள் அவரது பிரசன்னத்தையும் அன்பையும் தியானிக்கும் போது, உங்கள் செயற்பாடுகள், முயற்சிகளுக்கு மிகுந்த பலனைத் தருவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# அம்மாவைக் காண முடியுமா?...

## முகவுரை

நம் நாட்டில் ஒரு ஆச்சரியமான, ஆனால் மகிழ்ச்சியான விடயம் கிறிஸ்தவர்களை மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான ஏனைய மதத்தினரையும் கவர்ந்திழுக்கும் தேவதாயாரின் சக்தியாகும். ஒரு பெண் என்ற முறையில் பெண்கள் மரியாவுடன் ஒரு பண் பொருமைப்பாட்டைக் காண்கின்றனர். ஆண்களும் பெண்களும் ஒரு தாய் என்ற விதத்தில் அவரிடம் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர். மரியா அனைத்துலகத் தாய். ஆகவே, அவரிடத்தில் மக்களுக்கு ஒரு தனிப்பட்ட, சில சமயம் உணர்ச் சிகரமான அன்பு உண்டு. தமிழ் நாட்டிலுள்ள வேளாங்கண்ணி, எமது நாட்டிலுள்ள மடுத் திருப்பதி, தேவத்தை போன்ற திருத்தலங்கள் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கவரும் இடங்களாயுள்ளன. வழக்கமாக வரும் ஆயிரக்கணக்கான ஏழைகளும் ஏதிலிகளும் செல்வந்தர்களும், தொழிலதிபர்களும் வர்க்க பேதங்களை மறந்து ஒன்றாகக் கூடி நின்று அன்னையை வணங்குவார்கள்.

## நவீன கால உளவியலாளரின் சான்று

நவீன கால உளவியலாளருள் செல்வாக்குமிக்க ஒருவராக கார்ல் ஜுங் (karl Jung) என்ற கிறிஸ்தவ சமயத்தவர் கிறிஸ்தவர் பரிசுத்த கன்னி மரியாவைத் தமது சமய அனுசாரங்களில் பின்நோக்கித் தள்ளி விட்டார்களென்றும், இதனால் வருந்தத்தக்க ஒரு பெரும் பிழையைச் செய்து தம்மை ஆன்மீக அனாதை களாக்கிவிட்டனர் என்றும் கவலைப்படுகிறார். எமது, உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு தாய் தேவை. வாழ்வில் எமது ஆன்மீக தாய்க்குரிய இடத்தை கன்னி மரியா வகிக்கின்றார்.

## அம்மா வரவேண்டாம்.

புதிய பெந்தெக்கோஸ்தே சபையினர் கன்னி மரியாவின் பக்தியைக் கடுமையாகத் தாக்கி வரும் இக்காலகட்டத்தில் பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்தை நாம் மனதிற் கொள்ள வேண்டும். ஒரு இயேசு சபைக் குருவானவரின் தந்தை ஒரு கிறிஸ்தவருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். அவர்கள் அடிக்கடி நட்புரிமையுடன் கன்னிமரியாவுக்கு கத்தோலிகர் செலுத்தும் வணக்கம் உட்பட, பல்வேறு மத சம்பந்தமான விடயங்களைப் பற்றி உரையாடுவது வழக்கம். அந்த நண்பர் தேவதாயின் பக்தியை மிகைப் படுத்தப்பட்ட ஒன்றாகவும் தப்பானதாகவும் கூடக் கருதினார். ஒரு நாள் அவர் தமது தாயுடன் கத்தோலிக்க நண்பரின் வீட்டுக்கு வந்தார். வழக்கம் போல அவர் அன்புடன் வரவேற்கப்பட்டார். ஆனால், அவர் வீட்டுக்குள் காலடி வைத்தபோது வீட்டுக்காரர் "நண்பரே, உம்மை நான் அன்புடன் வரவேற்கிறேன். ஆனால், தயவு செய்து உமது தாயாரை உள்ளே அழைத்துவர வேண்டாம்" என்று கூறினார். கிறிஸ்தவ நண்பருக்கு அவமானமாக இருந்தது. அவர் கோபத்துடன் "எனது தாயாரை என்னோடு வீட்டுக்குள் அனுமதிக்காவிட்டால் நானும் வரப்போவதில்லை" என்றார். கத்தோலிக்கரோ புன்னகையுடன் "உம்முடைய அம்மாவைத் தாராளமாக அழைத்து வாரும். அவர் வருவது எனக்கு மகிழ்ச்சியே. நான் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டத்தான் விரும்பினேன். நீர் வரலாம். ஆனால், உமது தாயார் வரக்கூடாது என்று சொன்னபோது நீர் அவமதிக்கப்பட்டதாகக் கருதினீர் அல்லவா? அதுவும் சரியே, நீர் இயேசுவை உமது வாழ்வில் வரவேற்று, அவரது தாயை வேண்டுமென்றே வெளியே விட்டால் இயேசுவுக்கு எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்?" என்றார். கிறிஸ்தவ நண்பர் இந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டார். தனது தாயாரை எமது வாழ்விலிருந்து நீக்கி விட்டால் இயேசு தாம் அவமதிக்கப்பட்டதாகவே கருதுவார்.

**அன்னை வழி ஆண்டவரிடம்**

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே இருக்கும் ஒரே இடை நிலையாளர் இயேசுவே என்றும், இயேசு மூலமாக அல்லாமல் எவரும் தந்தையிடம் போக முடியாது என்றும் கிறிஸ்தவ சபையினர் கூறலாம். அவர்கள் கூறுவது சரியே. "மரியாவிடமிருந்து அறிமுகக் கடிதமில்லாமல் நாம் நேரே இயேசுவிடம் போக முடியாதா?" என்று அவர்கள் கேட்கலாம்.

அதற்கு விடை "ஆம், போக முடியும்". எனது தனிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபத்திலும் திருவழிபாட்டிலும் நாம் அடிக்கடி அவ்வாறு போகிறோம். ஆயினும், தூய கன்னி மரியாள் கிறிஸ்துவை அடைவதற்கு, தந்தையை அடைவதற்கு ஒரு சிறப்பான வழியாவார். அவர் நாம் இயேசுவைச் சந்திப்பதை இலகு வாக்குகிறார்.

இறைமகனும் எமது மீட்பருமான இயேசு, எந்த இடையீட்டாளரும் இன்றியே ஒரு வளர்ந்த ஆளாக உலகுக்கு வந்திருக்கலாம். ஆயினும், தம்மை உலகிற்கு அளிக்க மரியாளைத் தேர்ந்தெடுத்தார். கன்னி மரியாளின் திருவயிறு என்னும் அதே வாசல் வழியே சென்று இயேசுவைச் சந்திப்பதில் தவறென்ன? இயேசு மரியாளை அம்மா என்று அழைத்து அவரை கௌரவித்தார். நாமும் அவரை அன்னையென்று அழைக்க உரிமை தந்து எம்மைக் கௌரவித்தார்.

**மகிமைப்படுத்தப்பட்ட மரியா**

தமது ஒரே மகனும் எமது மீட்பருமான இயேசுவை உலகிற்கு அனுப்புவதற்கு முன் தந்தையானவர் தமது திருமகனுக்குத் தாயாக மரியாளைத் தேர்ந்தெடுத்து அவருடைய சம்மதத்தையும் கேட்டார். கடவுளுக்கு ஒரு மனித உடலையும் மனித ஆன்மாவையும் அளிப்பதில் மரியாளோடு ஒத்துழைத்து தூய ஆவியானவர் மரியாளைக் கௌரவித்தார். தூய ஆவியின் வல்லமையால் கன்னி மரியாளின் திருவயிற்றில் வார்த்தையானவர் மனிதனானார். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவரும் தெய்வீகத்தைத் தவிர்ந்த மிக உயர்ந்த கௌரவத்தை அளித்த மரியாளுக்கு விசேட வணக்கம் செலுத்துவதில் தவறென்ன இருக்க முடியும்? எனவே...

அவரைக் கௌரவிக்கும் சிறந்த வழிகளில் ஒன்று அவரைக் கண்டு பாவிப்பதாகும். அவர் எமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். அவரைக் கௌரவிக்கும் மற்றொரு சிறந்த வழி அவரிடம் செபிப்பதாகும். மரியாளுக்குரிய பல்வேறு பக்தி முயற்சிகளுள் செபமாலையே வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. போலியான இறையியல் போக்குகளாலும், வாழ்க்கை உலக மயமாக்கப்படுவதாலும், பொழுது போக்கு சாதனங்களை மேன்மேலும் தேடுவதாலும் அநேக கத்தோலிக்க இல்லங்களில் அவர்களது செப வாழ்விலிருந்து செபமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கப்பட்டு விட்டது.

செபமாலையின் மறை பொருள்கள் நற்செய்தி பற்றிய தியானங்களே. செபமாலையில் வாய்ச் செபமும் உண்டு, மனச்செபமும் உண்டு, எமது உடல், உள்ளம், கற்பனை அனைத்தையும் கொண்டு செபிக்கிறோம். "மலர்களோடு சொல்வது" என்று சொல்வார்கள். செபமாலை ஒரு ரோஜா மலர்ச் செண்டாகும். ஆகவே, அதைச் செபிக்கும் போது ரோஜா மலர்களோடு சொல்கிறீர்கள்... "மரியாயே என் நல்ல தாயாரே, நான் உம்மை நேசிக்கிறேன்" என்று சொல்லுவோம். தாய்ப்பாசமுள்ள பிள்ளை, தவறினாலும் அழிந்து போகாது. பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? தனது பிள்ளை அவள்

'மரியாவின் மாண்புகளைப் பற்றி நாம் சிந்திப்பதன் மறுபக்கம் நம் கிறிஸ்துவ அழைப்பையும் அதன் அலுவல்கள் சிறப்புக்களையும் சிந்திப்பதே. நம்முடைய வாழ்வுகளுடன் தொடர்புபடுத்தப்படும்போதுதான் மரியா பற்றி நம் வாழ்த்துக்களும் வணக்கங்களும் நமக்கு உண்மை ஆகின்றன, பொருள்படுகின்றன...

வானத்தில் உயரத்தில் வைத்து மரியாவை வாழ்த்தி வணங்குவதுடன் நின்று விடாது. வாழ்வுப் பயணத்தின் நம்பிக்கையின் உயர்மாதிரியாக நம்முடன் பயணிக்கும் அவரது கரம்பற்றி, இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழவும் செயல்படவும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அழைக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

# சமகாலத் துன்பியலில் ஓர் ஆன்மீகத் தேடல்

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி, வேதனை தான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி" என்ற கவிஞனொரு வரின் வரிகளோடு அறிமுகமாகி, துன்பத் தீப்பிழம்புகளோடு பயணித்துக் கொண்டிருக்கும் நமது மக்களைச் சந்திக்க விழைகிறேன்.

துன்பியலையும் கிறிஸ்தவத்தையும் துண்டுபடுத்திப் பார்க்க முடியாது. கிறிஸ்தவம் துன்பியலுக்கு அர்த்தத்தைக் கொடுத்து இறைவனை அண்ணார்ந்து பார்க்க வைக்கிறது. ஓடிக்கொண்டேயிருக்கும் மனிதனுக்கு நில் - நிதானி - செல் என்று பணிப்பது துன்பியல். சுய அழிவை நோக்கி வாழ்க்கைப் பயணத்தை நகர்த்திக் கொண்டிருக்கும் மானுடத்தை சுய விமர்சனம் செய்யப் பணிப்பது துன்பியல். எனவே, துன்பியல் எம்மை உள்நோக்கிப் பார்க்க, இதய சுத்தியுடனான தேடலைத் தொடர வழி வகுக்கின்றது.

இவ்வருடம் 2020 தவக்காலப் பயணத்தை கொவிட்-19 என்னும் கொள்ளை நோயிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. எமது தவக்காலம் இந்தக் கொள்ளை நோயென்னும் நெருக்கீட்டை எதிர் கொள்ள எமக்கு ஒரு புதிய பார்வையைக் கொடுக்க வேண்டும். புதிய வாழ்வைக் கொடுத்து இறைவன் சொல்லும் செய்திக்குச் செவிமடுக்கச் செய்ய வேண்டும். 2020ஆம் ஆண்டு தவக்காலம் கொரோனாவோடு நினைத்துப் பார்க்கச் செய்கிறது. இதை வார்த்தையின் அடிப்படையில் கீழ்வரும் மூன்று சிந்தனைகளும் எமது தனிப்பட்ட சிந்தனைகளைத் தூண்டி எமது ஆன்மீக வாழ்வுக்கு ஒரு நுண்நோக்கைக் கொடுக்குமென நம்புகிறோம்.

இந்நாட்களில் "உங்கள் கைகளைக் கழுவுங்கள்" என்னும் ஆலோசனை, எச்சரிக்கை அடிக்கடி எமக்குச் சொல்லப்படுகிறது. இந்த சாதாரண ஆலோசனை காத்திரமானதாகக் கொள்ளப்பட வேண்டும். மற்ற இரசாயனங்களைவிட சாதாரண தண்ணீர், சவர்க்காரம் அதிக பலனைத் தரும் என்று கூறுவோரும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாயினும் "தயவு செய்து கையைக் கழுவுங்கள்" என்பது மருத்துவ ஆலோசனை. கைகளைக் கழுவாமல் இருந்ததற்காக இயேசு பிரச்சினைக்கு உள்ளானாரென நற்செய்தி கூறுவது தெரியும் அல்லவா? உண்பதற்கு முன் தன் சீடர்கள் கைகழுவாததை தடை செய்யாதது. இதைச் சொன்னவுடனே நாங்கள் இயேசுவும் சீடர்களும் கைகழுவவில்லை. எனவே, நாங்களும் கைகழுவத் தேவையில்லை என்ற முடிவுக்கு முண்டியடித்து வரக்கூடாது. மாற்கு நற்செய்தியில் இயேசுவின் மனப்பான்மையை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மாற்கு 7:1-13, வாசிக்கவும். மேலும் 7:8 இல் மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள் என்கிறார் இயேசு. மத் 15:3ல் "நீங்கள் உங்கள் மரபின் பின் பொருட்டுக் கடவுளின் கட்டளையை மீறுவது ஏன்?" என்று வினவுகிறார். எனவே இயேசு கைகழுவுவதை எதிர்க்கவில்லை. கடவுளின் கட்டளைகளை மீறுவதையே கண்டிக்கிறார். இறைவனது கட்டளைகள் எம்மைக் கழுவித் தூய்மைப்படுத்தும்.

இணைச்சட்டம் 8:11 "ஆண்டவரை மறந்து போகாதபடி கவனமாயிருங்கள். இணைச்சட்டம் 8:3 "கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர் வாழ்கின்றார்". இறை வார்த்தை எம் உணவு, அதை உண்டு தன் வயமாக்கி, ஆழமாகத் தியானிக்க வேண்டும்.

மாற்கு 7:14-15 உள்ளேயிருந்து வெளியே வருபவையே உண்மையான நச்சுயிர். உள்ளிருந்து, உள்ளத்திலிருந்து அனைத்தும் வெளிவருகின்றன. அவற்றை வார்த்தையால் தூய்மையாக்குங்கள். மாற்கு 7:20-23 களவு, கொலை, தீச்செயல், வஞ்சகம் இத்தீமைகள் அனைத்தும் உள்ளிருந்து வெளியே வந்து உள்ளத்தை தீட்டுப்படுத்துகின்றன. லூக்கவோ வெளிப்புறத்தைத் தூய்மையாக்குகிறீர்கள். உள்ளேயோ நாற்றமடிக்கிறது என்கிறார். நமது கையைக் கழுவும் அதே வேளை இயேசுவின் அறிவுரை யையும் மனத்தில் பதிப்போம். கொரோனாவிலிருந்து நம்மைப் பாதுகாக்க மூக்கு, வாய், முகத்தை மூடிக் கையைக் கழுவும் அதே வேளை, நச்சுயிர்களான பொறாமை, கோபம், பரிவற்ற தீர்ப்பு, எதிர்மறையான குறைகூறுதல், இரக்கமின்மை, சுயநலம் போன்றவை பரவாவண்ணம் பொறுப்புடன் செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை நச்சுயிர்கள் பரவாவண்ணம் கவனமாயிருப் போம். எமக்குளிருந்து வெளிவரும் நச்சுயிர்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம். கடவுளின் கட்டளைகள் பற்றி நமக்கு ஊட்டமளிக்கும் உணவு, அதாவது நம்மைப் தூய்மைப்படுத்தும் இறைவார்த்தை மட்டில் கருத்தாயிருப்போமா?

திருப்பாடல் ஆசிரியரோடு மன்றாடுவோம். தி.பா 51:7 "என்னைக் கழுவியருளும், உறை பனியிலும் வெண்மையாவேன்" யோவா 9:7 "நீர் சீலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்". 2அரசர் 5:9-10, 14-15 "யோர்தானில் ஏழுமுறை கழுவும்". வெளிப்புறத்தில் கழுவுவது நமது உள்ளார்ந்த கழுவுதலை நமக்கு உணர்த்தி நிற்கிறது.

**பிலாத்து கைகழுவுதல்**

கொரோனாவிலிருந்து பாதுகாப்பதற்கு பிலாத்து ஒரு முன்னுதாரணம் என்று நம்மில் எவரும் சொல்ல மாட்டார்கள். தவக்காலத்தில் நாம் பிலாத்துவைப் பற்றிச் சிந்திக்கின்றோம். இயேசுவில் நான் ஒரு நச்சுயிரையும் காணவில்லை, என்னிலே தான் நச்சுயிர் இருக்கிறது. எனவே என் கைகளைக் கழுவுகிறேன். இயேசுவில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. அவரால் எவ்வித ஆபத்தும் இல்லை என்றான். யோவா 19:4-6 மாற் 15:10-11, மத் 27:18 கூறுகின்றது "அவர்கள் பொறாமையால் தான் இயேசுவை ஒப்படைத்தார்கள்"

மத்.27:24 கலகமே உருவாகிறது என்பதாலும், தனது மனைவியின் பரிந்துரையாலும் "தண்ணீரை எடுத்து தன் கைகளைக் கழுவினான்." அதாவது அவன் தன்னையே கழுவிக்கொண்டான். அது கழுவுதல் - ஆம் தன் பொறுப்பிலிருந்து தன்னைக் கழுவுதல், இல்லை நழுவுதல். இப்படியாகக் கழுவுவதை நாம் இன்று எதிர்பாக்கிறோமா? இது கை கழுவுதல் அல்ல: எம் பொறுப்புக்களிலிருந்து நழுவுதல். இது எமது தற்காப்புக்காக மட்டுமல்ல, இப்படிப்பட்ட கழுவுதல்களை இயேசு எதிர்பார்க்கவில்லை. உங்கள் அறைக்குள் நுழைந்து, உள்ளிருந்து கதவுகளைத் தாழிட்டுக் கொள்ளுங்கள் (எசா.26:20, யோவா 20:19).

மாற்கு 7:31-37 காது கேளாதவரும் திக்கிப் பேசுபவரும் நலம் பெற இயேசு என்ன செய்தார்? தம் விரல்களை அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார். இன்று இப்படிச் செய்பவர் கைது செய்யப்படுவார். மாற் 8:22-26 இயேசு என்ன செய்தார்? 23ஆம் வசனம் "அவருடைய விழிகளில் உமிழ்ந்து" (யோவா 9:6). அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச் சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி" என்று கூறுகிறது. இயேசுவின் கரங்கள் அழுக்காகின. இதே கரங்கள் தான் 4000, 5000 பேருக்கு உணவளித்த கரங்கள்.

இப்பொழுது நிலவும் நெருக்கீடு மற்றவர் பற்றி அக்கறையற்று இருப்பதற்கான ஒன்றல்ல. ஏழைகளையும், நோயுற்றோரையும் மறந்து எங்கள் இல்லங்களில் எம்மைப் பூட்டி வைத்துக் கொண்டிருப்பதுமல்ல. நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். எம்மைக் கழுவிக் கொள்ள பிலாத்து செய்தது போல் அல்ல, எமக்குள்ளே இருந்து இன்று நடக்கும் மெய்மையை நன்கு பார்ப்பதற்காக எமது பார்வையை, தொலைநோக்கைக் கழுவ வேண்டும். எம் கண்களில் பூச இயேசு வேண்டும். இயேசுவின் உமிழ்நீர் எம் கண்களில் படவேண்டும். இயேசு எத்தனையோ நச்சுயிர் கொண்டவர்களைத் தொட்டுக் குணப்படுத்தினார். இயேசுவைப் போன்று மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக எமது கண்கள், கரங்களைக் கழுவுவோம். உலகளாவிய இக்கொள்ளை நோய் பிலாத்துவைப் போன்று பொறுப்பற்வர்களாய் கைகழுவாமலிருக்க எம் கண்களைக் குருடாக்காதிருக்கட்டும்.

**கொரோனா என்பது முடி அல்லது முடிசூட்டுதல் எனப்பொருள்படும் ஆங்கிலப் பதத்திலிருந்து வருகிறது**

முள்முடி யோவா 19:2-3 முண்முடியும் செந்நிறப் போர்வையும் - அவரை எள்ளி நகையாடினார்கள்! அவர் அரசர் போன்றா காட்சியளிக்கிறார்? உடல் வேதனைக்கு மேலாக உள வேதனை. தாம் செய்வதென்னவென்று வீரருக்கு விளங்கவில்லை. 1கொரி. 1:23. "நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறோம்". இன்று மனிதன் ஏனைய கோள்களுக்குச் சென்றுள்ளான். நாம் படைத்தவருக்கு நிகர் என்று மார் தட்டுகிறான். ஆனால் இந்த அற்ப, நுண் நச்சுயிர் நம்மைத் தாழ்த்தக் கற்றுக் கொடுத்து விட்டது. இக்கொள்ளை நோய் எம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் சமப்படுத்தி விட்டது. அனைவரும் கைகோர்த்து இயேசுவின் முடியுடன் சேரவேண்டும். இயேசு சொன்னது போல "உமது கரங்களில் என்னைக் கையளிக்கிறேன். வல்லமையும் தூய்மையும் நிறைந்த கரங்களில் எம்மைக் கையளிப்போம். இந்த ஆச்சரியமான கொள்ளை நோயான கொரோனா நேரத்தில் இறைவனிடத்தில் எம்மைக் கையளிப்போம். இறைவனின் அன்புக் கரங்களில் எம்மைக் கையளிப்போம் என்று ஒருவருக்கொருவர் சொல்லுவோம்.

எமது கரங்களைக் கழுவுவோம். இல்லை இறைவன் எம்மை உள்ளார்ந்த விதமாகக் கழுவி வேண்டாத அனைத்திலிருந்தும் எம் உள்ளத்தைத் தூய்மையாகக்க இடமளிப்போம்.

பிலாத்துவைப் போலன்றி பாராமுகமாயிராமல் சுயநலமற்று இருப்போம். மற்றவர்கள் மட்டில் நமக்குப் பொறுப்பு உண்டு. குறிப்பாக ஏழ்மையில் வாழ்வோர் மட்டில் நாம் பொறுப்பேற்போம். அவர்கள் எமது சகோதர சகோதரிகள். அதே வேளை எமது குடும்பம், குழுமத்தில் உள்ளோருடன் அன்புறவை ஏற்படுத்துவோம். அவர்களுடன் எமது நேரத்தைச் செலவிட்டு அவர்கள் சொல்லாமற் சொல்பவற்றுக்கு உற்றுச் செவிமடுப்போம். உண்மைக் குடும்பங்களாவோம்.

இறுதியாக இயேசுவின் முள்முடி - துன்பத்தின் கொடுமுடி கொரோனா எம்மை ஒரு மகிமைக்கு இட்டுச் செல்லும் என உள்ளூர நம்புவோம். நம் அன்னை அனைவரின் அரசி, இவ் இக்கட்டான நேரத்தில், மனித நிலையில் நம்பிக்கையற்ற நேரத்தில் இறைவனிடத்தில் நமக்காக இறைஞ்ச இரு கரம் கூப்பி மன்றாடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# உயிர்ப்புத் தரும் புது வாழ்வு

சிலுவையிலே அறையுண்ட அதே கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர் பெற்று விட்டார். அவருடைய உயிர்ப்பினால் உலகம் முழுவதும் புத்துயிர் பெறுகின்றது. தனக்குள் இருந்த உயிரை உலகம் புதுப்பித்துக் கொள்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பால் கிறிஸ்துவின் உயிர்ப்பில் அது நிகழ்கின்றது. கடவுளோடு ஒப்பரவான வாழ்வுதான் உயிர்ப்புத் தரும் புதுவாழ்வு! கடவுளோடு ஒப்புரவாகி விட்டோம், முறிந்த உறவு இணைக்கப்பட்டு விட்டது என்பதைக் காட்டும் வாழ்வுதான் கிறிஸ்துவில் நாமும் நம்மில் கிறிஸ்துவும் வாழும் வாழ்வு. இது தான் உயிர்ப்புத் தரும் புதுவாழ்வு. அப்போஸ்தலர்களே புதுவாழ்வு பெற்று கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முதன்முதலாக சான்று பகர்ந்தவர்கள். அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் மனம் மாறுகின்றனர். கிறிஸ்துவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு, கிறிஸ்துவில் அவர்கள் அறிந்திருந்த தன்மை மாறுகின்றது. இவ்வுலகில் அவருடன் வாழும்போது ஓரளவிற்குத்தான் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் புரிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது அறிவு அதற்கு மேல் போகவில்லை. ஆனால் கிறிஸ்து உயிர்த்தபின் அவரைப்பற்றிய புது அறிவு அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. அவரை விசுவசித்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் புதுத்தன்மையை, உயிர்ப்பைப் புரிந்துகொள்ள முடிந்தது. தான் முதலில் சொல்லியவைகளின் பொருளை அவர்களுக்குத் தெளிவாக்கு கின்றார் (லூக் 24:8). அவர்களது அகக் கண்களைத் திறக்கின் றார் (லூக் 24:31-35). அப் புது அறிவை முழுமைப்படுத்தும் பணி தூய ஆவியிடம் விட்டுவிடப்படுகின்றது. அவர்களின் தன்னலம் மறைந்து புதிய சகோதரத்துவம் மலர்ந்து புதுச் சமூகம் உருவாகிறது (தி.ப 2:42-46).

### திருச்சபையின் புது வாழ்வு

கிறிஸ்துவின் இடத்தைத் தூய ஆவியானவர் நிரப்புவத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் கிறிஸ்துவின் பிரிவை அப்போஸ்தலர்கள் உணர்வதில்லை. கிறிஸ்து அவர்களோடு இருப்பதாக உணர்ந்து கிறிஸ்துவில் வாழவும் கிறிஸ்துவுக்காக வாழவும் தொடங்குகின்றனர். கடவுளின் திட்டப்படி புனித சின்னப்பர் தோன்றுகின்றார். கிறிஸ்துவைச் சந்தித்த இவர் கிறிஸ்தவ சபைகளை உருவாக்குகின்றார். "கிறிஸ்துவில் வாழ்வு" பற்றி கற்றுத் தருகின்றார்.

**கிறிஸ்துவில் வாழ்வு**

"கிறிஸ்துவில்" என்ற சொற்றொடரை புனித சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தைத்தவிர மற்ற எல்லாத் திருமுகங்களிலும் பயன்படுத்துகின்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாம் கடவுளோடு ஒப்புரவாகின்றோம். அப்போது கிறிஸ்து நம்மில் குடிகொள்கிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மிலே உறைய வருகிறார். அதனால் நாம் கிறிஸ்துவின் அன்பில் சமாதானத்தில் வாழத் தொடங்குகிறோம்.

கிறிஸ்துவில் நாம் வாழத் தொடங்கும்போது அது புது அனுபவமாகிறது; படைப்பாகிறது. நம்மில் கிறிஸ்து வாழ்கிறார். இவ்வாழ்வைத்தான் புனித சின்னப்பர் "புதுப் படைப்பு" "புது வாழ்வு" என்று கூறுகின்றார். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பாகி விட்டான். பழையன கழிந்தன, இதோ புதியன தோன்றியுள்ளன (2கொரி 5:17).

**கிறிஸ்துவில் வாழ்வதால் வரும் விளைவுகள்**

புதிய வாழ்வு என்பது நாம் கிறிஸ்துவில் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையாகும். இப் புது வாழ்வு நம்மைப் புது மனிதர் களாக்கி, நம்மில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. நம்முடைய இயல்பிலே, இயற்கையிலே வாழ்விலே, வாழும் வழிகளிலே இப்புதுவாழ்வு ஊடுருவுகிறது.

**புதிய இனம்**

கிறிஸ்துவோடு நாம் புதிய வாழ்வு வாழத் தொடங்கும் போது அவரிலே முற்றிலும் உறைந்து விடுகிறோம். நம்முடைய உணர்வுகளெல்லாம் அவரில் ஒன்றிக்கின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணையும்போது புதிய இனமாகின்றோம். புதிய குலமாக உருப்பெறுவதால் நம்மிடையே முன்பிருந்த வேறுபாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தே ஆகவேண்டும். கிறிஸ்துவிலே புதுவாழ்வு வாழத் தொடங்குவதால் புதிய படைப்பாகின்றோம்.

### இறைவனின் மக்கள்

கிறிஸ்துவில் இணைந்த நாம் அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றோம். "அப்பா" என்று கடவுளை அழைக்கும் உரிமையைப் பெற்றவர்களாகின்றோம். இந்த உரிமையைப் பெறுவதற்குக் காரணம் தூய ஆவியே (உரோ 8:15).

### சாவிலிருந்தும் சட்டத்திலிருந்தும் விடுதலை

கிறிஸ்து தனது உயிர்ப்பால் சாவினை வென்று அதன் ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கின்றார். அது மட்டுமன்றி மோயீசன் சட்டத்தின் துணை கொண்டு பரிசேயர் ஏற்படுத்திய வெளிவேடங்களிலிருந்தும், ஆசாரங்களிலுருந்தும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். அன்பு ஒன்று தான் அவர் கொடுத்த கட்டளை! சட்டம்!!...?

### மனமாற்றம்

எவ்வாறு கிறிஸ்துவின் மனிதாவதாரம் நம்மிலே மாற்றத்தை, திருப்பத்தை ஆசிக்கிறதோ அவ்வாறே உயிர்ப்பும் எதிர் நோக்குகிறது. இந்த மனமாற்றம் மனிதனின் உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே இந்த மனமாற்றம் அவனது ஆன்மீக பொருளாதார, சமூக வாழ்விலே மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

### தூய்மை


மனமாற்றம் ஒரு பொழுதும் மனிதனால் நிகழ்வதில்லை. அதற்கு ஆண்டவரின் அருள் தேவை. அந்த அருளின் உதவியால்தான் புதுவாழ்வு நிலை நிற்க முடியும். விசுவசிப்போர் அனைவரும் ஒரு வகையில் தூயவர்கள்! புனிதர்கள்! (உரோ 2:7). "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும் படி அவர்களுக்காக என்னையே அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகிழ்ச்சி**

உயிர்ப்பின் மற்றொரு முக்கிய கொடை மகிழ்ச்சியாகும். கிறிஸ்தவன் வாழவேண்டிய புதுவாழ்வின் ஒரு அவசியமான தன்மையும் மகிழ்ச்சிதான். கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சி அவனைப் புது மனிதனாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுள்ளவனாக வாழ்ந்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் இருக்குமிடத்தில் மகிழ்ச்சி தெரிய வேண்டும். "மகிழ்ச்சியாய் இருங்கள்! இடை விடாது செபியுங்கள்! நன்றி கூறுங்கள்!" (1தெசலோ 5:14). "ஆண்டவரில் அகமகிழுங்கள், காரணம் ஆண்டவர் அண்மையிலுள்ளார்" (பிலிப்பியர் 4:4). எனவே மகிழ்ச்சியுடன் நாம் புதுவாழ்வை ஆரம்பிப்போம். புதுவாழ்வில் திளைத்திடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

# சிலுவை விடுதலையின் சின்னம்

சிலுவையானது இயேசு தரும் விடுதலையின் முழுமையான சரணடைவைக் குறிக்கின்றது. தமது தந்தை மீதும் அவரது மக்கள் மீதும் வைத்த மட்டற்ற அன்பின் காரணமாகவே அவர் இவ்வாறு செய்தார். இது அவர் தாமே தெரிந்து கொண்டது. "என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்ளவில்லை. நானாகவே அதைக் கொடுக்கின்றேன்" (யோவான் 10:18). மரண ஆதிக்கத்தில் இருப்போரிடம் தாமும் ஒன்றித்து தமது உயிரைக் கையளிக்க இயேசு சுயமாகத் தீர்மானிக்கின்றார். அவரது சுதந்திரம் ஆபத்தானது. அதன் விளைவு? சிலுவை மரணம்.

**இயேசு விடுதலையின் முழுமையாய்**

நற்செய்தியில் இயேசுவை ஒப்புயர்வற்ற விடுதலையின் மனிதராகச் சந்திக்கின்றோம். அவரது விடுதலையின் ஊற்றாக விளங்கியது தன் தந்தையையும், அவரது அரசையும் அவர் அனுபவித்தமை ஆகும். இயேசுவிடம் பேராசை இருக்கவில்லை. "மானிட மகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை" (லூக் 9:58). சாதிக்க வேண்டும் என்ற அவாவினால் அவர் உந்தப்படவில்லை. "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாகத் தொண்டு ஆற்று வதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்குமே வந்தார்" (மாற் 10:45).

மட்டுமீறிய பாசமும் அவரிடம் இருக்கவில்லை (மாற் 3:31:35, லூக் 41:52), அர்த்தமற்ற அச்சங்களும் அவரிடம் இருக்கவில்லை (மாற் 2:15, லூக் 15:1-2), பிறர் என்ன சொல்லுவார்கள், என்ன நினைப்பார்கள் என்பது பற்றி அவர் அஞ்சவில்லை. பழிச்சொல் உண்டாகும் என்றோ, தனது மதிப்புக் கெட்டுவிடும் என்றோ, தமது உயிரை இழக்கவோ அவர் அஞ்சவில்லை. அவரது ஒரே கரிசனை தந்தையையும் அவரது அரசையும் பற்றியதே. அவர் மக்களின் அங்கீகாரத்தையோ, பாராட்டையோ ஒரு போதும் தேடவில்லை. அதிகாரத்தில் உள்ள வர்களின் வன்முறைக்கு அவர் ஒருபோதும் அஞ்சியதில்லை (லூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13:31,33) “நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா” என்று அவரைப் பழித்தபோது அவர் இறங்கி வரவில்லை. “உன்னையே விடுவித்துக்கொள்” என்றார்கள். அதற்கும் அவர் இசையவில்லை. ஏனென்றால், தன்னைக் காப்பாற்ற முனைபவன் மற்றவர்களை காப்பாற்ற ஒருபோதும் முன்வரமாட்டான்.

தனிமனித விடுதலையை இயேசுவிடம் முழுமையாகக் காண்கின்றோம். அவரது இச் சுதந்திரமே அவரது சமகால சமூக அரசியல், சமய - கலாச்சார அமைப்புக்களை எதிர்த்து நிற்க அவருக்கு வல்லமையைக் கொடுத்தது. அவர் ஓய்வு நாள் சட்டத்தை மீறுகின்றார் (மாற்கு 2:23-36), தொழு நோயாளரைத் தொடுகிறார் (மாற் 1:41) சமூகத்தில் விலக்கப்பட்டவர்களான ஆயக்கார் பாவிகளுடன் உணவருந்துகின்றார் (மாற் 2:15-17, லூக் 15:1-2). அவர் அவ்வாறு சுதந்திரமாக வாழ்ந்து, பேசி செயற்பட்டது 1ம் நூற்றாண்டு யூதமதத்தின் சமூக, சமய சமநிலையை ஆட்டம் காணச் செய்தது. அதன் விளைவு? சிலுவை மரணம்.

### உண்மை தெரிவில் உறுதியுடன்

அவரது விடுதலை உணர்வும் அபாரத் துணிச்சலும் பார்ப்போருக்கு ஆச்சரியமூட்டும். இயேசு அவர்களுக்கு ஒரு தொல்லை. இவர் கலிலேயா தொடங்கி யூதேயா வரை இவ்விடம் முழுவதிலும் மக்களுக்குப் போதித்து அவர்களைத் தூண்டி விடுகின்றார்” (லூக் 23:5). ஆனால், இயேசுவோ விளைவுகளைப் பற்றி அஞ்சவில்லை, போற்றுவார் போற்றட்டும், தெருப்புழுதி வாரி தூற்றுவார் தூற்றட்டும். ஏற்றது என் கொள்கை என்றால் துணிந்து சொல்வேன், தொடர்ந்து செல்வேன் என்று சென்றார்.

### சுதந்திரத்தின் மறுபக்கம்

சுதந்திரம் கடுமையானது. டெஸ்ரோயெஸ்வசி எழுதிய “உயர்நீதிமன்ற உசாக் குழுத்தலைவர்” என்னும் நூலில் “சுதந்திரம் மனிதன் சுமக்க முடியாத பெரும் சுமை” எனக் கூறப்பட்டுள்ளது. “வீழ்ச்சி” என்னும் நூலில் கேமஸ் என்பவர் “நானும் சுதந்திரத்திற்குப் பயப்படுகின்றேன்” என்று கூறுகின்றார். சுதந்திரம் ஆபத்தானது, அச்சம் தருவது, பாதுகாப்பற்றது. ஆகவே நாம் பல வேளைகளில் ஒத்துப்போகிறோம்; விட்டுக் கொடுக்கிறோம்; பணிந்து போகிறோம், சமாளித்து வாழ பழகிவிடுகின்றோம்; பழகிவிட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் துணிந்து நம்பிக்கையுடன் இடரை எதிர்கொள்வோமா? அல்லது பாதுகாப்பாக பத்திரமாக திருப்தியாக இருக்க விரும்புவோமா? உனமுனோ என்ற ஸ்பானிய தத்துவ ஞானி "நான் ஒரு திருப்தி அடைந்த பன்றியாக இருப்பதைவிட கடும் துயருற்ற மனிதப் பிறவியாகவே இருக்க விரும்புகின்றேன்" என்று கூறினார். இன்று உலக மயமாக்கல் என்று அழைக்கப்படும் கூட்டாண்மை குடியேற்றவாதத்தை / புதிய ஏகாதிபத்தியவாதத்தை எதிர்க்க வேண்டிய அவசர தேவையுள்ளது. இது ஒரு கொடிய, அநீதியான ஏற்றுக் கொள்ள முடியாத உலகளாவிய அமைப்பாகும். பெரும்பான்மைப் பொதுமக்களுக்கு அடிப்படைத் தேவைகளான சுயகௌரவம், உணவு, நீர், வதிவிடம் ஆகியவற்றை மறுக்கும் கொள்கைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவர எமக்குத் துணிச்சல் வேண்டும்.

**சிலுவையில் பொதிந்த விடுதலை**

கிறிஸ்து எமக்கு விடுதலையை அளித்துள்ளார். கிறிஸ்தவத்தின் வழி விடுதலையின் வழியாகும். இந்த விடுதலை அன்புக்குப் பணிபுரியத் தயாராயிருக்கும் (கலாத்தியர் 5:13, 1கொரி 9:19). அன்பு செய்வதற்கும், பிறருக்கு வாழ்வு கொடுப்பதற்கும் விடுதலை வழி செய்யும்.


கிறிஸ்து செய்தது இதுவே, "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் 15:13). "இது உங்களுக்காகக் கையளிக்கப்பட்ட எனது உடல், உங்களுக்காகச் சிந்தப்பட்ட எனது இரத்தம்". இவ் வார்த்தைகள் இயேசுவின் அசாதாரணமான சுதந்திரத்தை, புரட்சிகரமான அன்பை, எதற்கும் பின்வாங்காத பிரமாணிக்கத்தை நினைவுபடுத்துகின்றது. நீங்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே, ஒரு முட்டாளைப்போல அன்புக்கும் வாழ்வுக்கும் இட்டுச்செல்லும் தனிமையான பாதையைத் தேர்ந்தெடுக்கின் றீர்கள். தனிமனிதனதும், மனுக்குலத்தினதும், முழு உலகத்தின தும் முழுமைக்காக தாமே சிலுவை மரணத்திற்குத் தம்மைக் கையளித்த எமது ஆண்டவரிடமிருந்து நாம் விலகிப் போகலா காது. சிலுவையில் அறையப்பட்ட எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் இறைவனின் புதல்வர் புதல்வியராக நாம் மகிமை மிக்கதோர் வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளோம். போராட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை, கைவிடப்படுதல், துன்புறுத்தப்படுதல், மரணம்கூட விடுதலையின் இன்றியமையாக் கூறுகளாகும். சிலுவை விடுக்கும் அழைப்புக்கு எனது பதில்?

சாவே, உனது வெற்றி எங்கே?
மரணமே உனது கொடுக்கு எங்கே?
ஏளனத்தோடு புனித பவுல்
எழுப்புகின்ற கேள்வி
மரணத்தின் மீது கிறிஸ்து பெற்ற
முழு வெற்றியை முழக்கமிடுகின்றது!
சாவு தோல்வி கண்டது
மரணத்தின் கொடுக்கு பிடுங்கி எறியப்பட்டது!
கிறிஸ்துவுக்கு முன் சாவு இன்று
பல் பிடுங்கப்பட்ட பாம்பாக
சிறைபிடிக்கப்பட்ட கைதியாக
கூனி, குறுகி நிற்கின்றது!
எத்தனையோ பேருக்கு வாழ்வூட்டியவர்
எத்தனை காலம்தான் வாழ்விழந்து கிடப்பார்?
கல்லறையோடு அடங்குவதல்ல
கடவுளுடைய வாழ்வு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

# செபமாலையை நாம் எப்படி செபிக்கின்றோம்?

நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது, அருட்தந்தை ஒருவர் தினந்தோறும் செபமாலை சொல்வதாக வாக்குப்பண்ண விரும்பியவர்களை அவ்வாறு செய்யுமாறு அழைத்தார். நானும் வாக்குப்பண்ணினேன். அன்று முதல் ஒவ்வொரு நாளும் நான் செபமாலை செபித்து வந்திருக்கிறேன்.

நான் வாக்குப் பண்ணியபடியே செபமாலை சொல்லி வந்தேன். பெரும்பாலும் அது மனதில் சிந்தனையின்றி வார்த்தைகளை வெறுமனே சொல்வதாக இருந்தது.

வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் நிகழ்ந்த இறையியல், ஆன்மீக புதுப்பித்தலுடன் செபமாலை என்பது சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லும் அர்த்தமற்ற செபம் என்று சிலர் குறை கூறலாயினர். வார்த்தைகளில் கருத்துச் செலுத்துவது கடினமாயிருருந்த போதிலும் நான் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

செபமாலையைப்பற்றி நான் மேலும் வாசித்து சிந்தித்த போது, செபமாலையை வெறுமனே சொல்லாமல், உண்மை யாகவும், உளப்பூர்வமாகவும் செபிப்பதற்கு மூன்று வழிகளை நான் கண்டு பிடித்தேன்.

முதலாவது

எளிமையானது. ஆனால், ஒரு விதத்தில் மிகக் கடினமானது. ஒவ்வொரு செபத்திலும், ஒவ்வொரு வரியையும், ஒவ்வொரு சொல்லையும் செபிப்பதில்தான் இது அடங்கியுள்ளது. எமது செபவாழ்வில் ஆடம்பரத்தைக் காட்டிக்கெள்ளும் நாம் செபமாலை "எளிய மக்கள் செபிப்பதற்கான இலகுவான வழி", திருப்பாடல்களுக்கும் பதிலாகப் பயன்படுத்திப் பழகுவது என்பதை மனதிற் கொள்ள வேண்டும். செபமாலையின் தோற்றம் பற்றிய மிகுந்த சான்றாதாரமுடைய நியாயமான வரலாற்றின்படி சந்தியாச மடங்களிலுள்ள துறவுச் சூழலைச் சாராத உறுப்பினர்கள் செபிப்பதற்கு உதவுவதற்காகவே செபமாலை ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவிகள் தினந்தோறும் வாசித்து வந்த திருப்பாடல்களை அவர்கள் வாசிக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் 150 "அருள் நிறைந்த மரியே" செபித்தனர். பின்னர் அவர்களுக்கு அதை இலகுவாக்கும் படியாக 150 செபங்களும் 15 பத்துக்களாக (காரணிக்கங்களாக) பிரிக்கப்பட்டன. பின்னர், இவை மூன்று 5 பத்துக்காளக (காரணிக்கங்களாக) பிரிக்கப்பட்டன.

செபமாலை செபிப்பதில் இந்த முதலாவது எளிமையான, ஆனால் மிகக் கடினமான முறை வறிய, எளிய, எழுத்தறிவற்ற அல்லது அதிகம் படிக்காத பக்தியுள்ள கத்தோலிக்கருக்கு மிகப் பொருத்தமானதாகும். ஒரு வைத்தியசாலையில் இப்படிப்பட்ட ஒருவரைச் சந்தித்தது நினைவிருக்கிறது. அந்த மூதாட்டி மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். "சுவாமி எனக்கு மனமே சரியில்லை ஒரு காரணிக்கம் சொல்வதற்கு எனக்கு அரை மணித்தியாலயம் எடுக்கிறது" என்றாள். "எனக்கு அப்படிச் செபிக்க முடிந்தால்!" என்று நான் நினைத்தேன்.

**இரண்டாவது முறை**

காரணிக்கத்துக்குரிய மறை பொருளை அல்லது மறையுண்மையைத் தியானித்து சில சமயம் அதனுடன் தொடர்புடைய ஒரு விசேஷ அருளுக்காக அல்லது உதவிக்காக செபிப்பதாகும். உதாரணமாக, முதல் மகிழ்ச்சி காரணிக்கத்தில் மரியாயின் இறைசித்தத்துக்கு பணியும் புண்ணியத்தை வேண்டுகிறோம்.

**மூன்றாவது முறை**

வார்த்தைகளையோ எண்ணங்களையோ கருதாமல் இறைவனோடு நாம் ஒன்றிப்பதற்கு செபமாலையைப் பயன் படுத்துவதாகும். இதைத்தான் ஒரு விதமான தியானம் எனலாம். "சில வேளைகளில் காரணிக்கத்துக்குப் பதிலாக அதற்குப் பொருத்தமான விவிலியப் பகுதியை வாசிப்பதுண்டு" என லெஸ்ஸர் என்னும் ஒரு அருட்தந்தை தனது செபமாலைப் பக்தியின் அனுபவம் பற்றி எழுதுகின்றார். நாமும் செபமாலையை அர்த்தமுள்ள விதமாகச் செபிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

# இயேசு இனி இயேசுக்களாக...

### அடையாளங்கள்

இறைவன் மனிதன் மட்டில் கொண்டுள்ள அற்புதமானதும் நம்புவதற்குரியதுமான அன்பு பெரும்பாலும் அடையாளங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தனது உள்ளத்தில் இருப்பதை சொற்களில் வெளிப்படுத்த முடியாத போதெல்லாம் மனிதன் அடையாளங்களைப் பயன்படுத்தியிருக்கிறான்.

அன்றாட வாழ்வில் கிறிஸ்தவனுக்கு சாதாரணமாக உயிர்ப்பு விழா தரும் அர்த்தம் என்ன? அது நம்பிக்கை எனும் அர்த்தத்தைத் தருகிறது. நம்பிக்கையில் வாழ்பவர்களுக்கே உலகம் சொந்தமானது.

எமது வாழ்வில் கிறிஸ்துவின் வாழ்வை நாம் வாழவேண்டும். இதற்கு நற்செய்தியை மிகவும் காத்திரமாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவத்தின் போதனையை ஏற்று அதன் வியத்தகு உண்மையை எவ்வாறு வாழ்வது என்பது எல்லையற்ற விடயம்.

### வாழும் இயேசுக்களாக

அவர் நேசித்தது போல் நாம் நேசிப்பதென்றால் அவரைப் போல் தாழ்ச்சியும் சாந்த குணமும் உள்ளவர்களாக நாமும் இருக்க வேண்டும். கடவுள் மன்னித்தது போல், மன்னித்துக் கொண்டிருப்பது போல் நாம் மீண்டும் மீண்டும் மன்னிக்க வேண்டும். நாம் மறுகன்னத்தைக் காட்ட வேண்டும். தேவையானால் அவரைப் போல் எமது சகோதரருக்காக எந்த விதி விலக்கோ, நியாயப்படுத்தலோ இன்றி எமது உயிரையே தியாகம் செய்ய முன்வர வேண்டும். நாம் நற்செய்தியின் ஒரு பகுதியை மட்டும் வாழ முடியாது. இவ்வளவு தூரம்தான் போவோம், இதற்குமேல் போகமாட்டோம் என்று நாம் கடவுளிடம் கூற முடியாது.

இயேசு கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் முழுமையாக அதன் சாராம்சத்தோடு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவரிடமும் அதனிடமும் சரணாகதி அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஏனெனில், அவரே "வார்த்தை" அதாவது தந்தையின் வார்த்தை அவரே. எமது தொழிநுட்ப உலகுக்கு நற்செய்தி கூறும் ஆவியைக் குறித்த விடயங்கள் நிறுக்க முடியாததாகவும் அளக்க முடியாததாகவும் இருக்கின்றன. ஆனால், மனிதன் சந்திரன் மேல் நடந்திருந்தாலும் அவன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ முடியாது.

## எமது கொல்கொத்தா

மனுமகன் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார். நாமும் அவ்வாறே எடுத்துக் கொள்ளப்படுவோம். கிறிஸ்துவை நாம் உலகுக்குக் கொண்டுவர வேண்டுமானால் எமக்கும் கொல் கொத்தா அல்லது "மண்டையோட்டின் இடம்" இருக்க வேண்டும். இறுதியில் அவரை இலகுவாகக் காணக்கூடிய இடங்கள் இரண்டு உண்டு. அதாவது பெத்லகேம், கொல்கொத்தா என்பவை. அவர் பிறந்த குகைக்கு நாம் போகலாம். ஆனால் அதற்கு முன் கொல் கொத்தாவினூடாகச் செல்ல வேண்டும். இதனை நாம் உலகுக்குக் காட்ட வேண்டும்.

நாம் தன்னுடைய முகத்தைப் பிறருக்குக் காட்டவேண்டும் என்று இயேசு விரும்புகிறார் என்ற எண்ணம் அநேக நாட்களாக எனது உள்ளத்தில் மிக வலுவாக இருந்து கொண்டிருந்தது. நாம் எம்மைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டால் அவ்வாறு செய்யத்தான் வேண்டும். இது அத்தியவசியமானது. நான் மற்றொருவருடைய கண்களில் அதைக் காணாவிட்டால், நான் நேசிக்கப்படத்தக்கவன் என்பதை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

## இன்றைய தோமையார்கள்

இன்று உலகில் தோமயாரைப்போல சந்தேகப்படுபவர்கள் நிறைய இருக்கின்றார்கள். அவர்களுக்கு நாம் கிறிஸ்துவின் காயங்களைக் காட்ட வேண்டும். இல்லா விட்டால் அவர்கள் அழிந்து போவார்கள். அவற்றை அவர்கள் காண வேண்டும். கிறிஸ்தவர் களாகிய நாம் எப்பாடுபட்டும் எமது உயிரைக் கொடுத்தாவது உலகுக்கு கிறிஸ்துவின் உண்மையான முகத்தைக் காட்ட வேண்டும். எம்மைச் சுற்றி தோமையரைப் போன்றவர்கள் வாழ்கிறார்கள். இயேசுவின் காயங்களில் தமது விரலை வைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்காவிட்டால் நம்ப மாட்டார்கள். ஆகவே, நாம் அக்காயங்களை எம்மிலே காட்டவேண்டும்.

எமக்கு அக்காயங்கள் எப்படி ஏற்படுகின்றன? மிகவும் சுலபம். நற்செய்தியை வாழ்வதன் மூலம் ஏற்படுகின்றன. ஏனெனில், சிலுவையில் அறையப்பட்ட ஆண்டவரைப் பின்பற்றும் நாமும் விசுவாசம், அன்பு, சரணாகதி என்னும் சிலுவையில் அறையப்பட வேண்டும். எமக்கும் இறைவனுக்குமிடையில் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தினால் நாம் சிலுவையில் அறைப்படுகின்றோம். ஏனெனில் விட்டுக்கொடாமல் நற்செய்தியை வாழ்வது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் நிகழும் ஒரு பெரும் போராட்டம்.

### காயங்களைக் காட்டுங்கள்

மனிதனது முழுமையான சரணாகதி மகிழ்ச்சயையும் அமைதியையும் கொண்டு வருகிறது. அதற்குமுன் நிகழும் சிலுவைப்பாடும் போராட்டமும் காயங்களை ஏற்படுத்தும். இக்காயங்களையே நாம் பிறருக்குக் காட்டவேண்டும். நாம் கிறிஸ்துவிடம் சரணாகதி அடைந்து அவரது நற்செய்தியை முழுமையாக எற்றுக்கொண்டால், நாம் எம்மையே வெறுமையாக்கிக் கொண்டமையால், எம் மூலமாக அவர் தனது குணமாக்கும் வல்லமையைச் செய்யக்கூடியதாயிருக்கும். மக்கள் மிகவும் முயற்சித்துத் தேடிக்கொண்டிருக்கும் விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவற்றை எம்மூலம் அடைந்து கொள்வார்கள். கிறிஸ்து உண்மையாகவே உயிர்த்து விட்டார் என்பதை அறிந்து கொள்வார்கள். இதற்கு எதிரான ஒவ்வொரு சிறு விட்டுக் கொடுப்பையும் நியாயப்படுத்தலையும் குறித்து நாம் ஆத்தும சோதனை செய்ய வேண்டும்.

நாம் எல்லோரும் மிகத் துன்புறுகின்றோம். எமது பலவீனங்களை, நற்செய்தியை வாழ்வதற்கு நாம் கொடுக்கும் விலையை பிறரிடமிருந்து மறைத்தலாகாது. உதாரணமாக, எமது விருத்தினர் எம்மை மேலோட்டமாகத்தான் காண்கிறார்கள். நாம் பண்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதாக அவர்கள்முன் காட்டிக்கொள்கின்றோம். விருந்தோம்பல் எமது வாழ்வின் ஓர் அம்சமாக இருப்பதால் அவர்களது வருகையையிட்டு மகிழ்ச்சி யடைகிறோம். அவர்கள் ஓர் ஆசீர்வாதமெனக் கருதுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் எமது மனக்காயங்களை அவர்கள் முன் மறைத்து விடுகிறோம். ஆனால் எமது காயங்களை ஒருபோதும் மறைக்கலாகாது. மற்றவர்கள் விரலால் தொட்டுப்பார்க்க வேண்டிய காயங்கள் கண்கூடாகத் தோன்றும்படியாக உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருங்கள்.

**குணமளிக்கும் காயங்கள்**

எமது குடும்ப வாழ்வில் ஒருவித உத்தரிப்பு ஸ்தலத்தி னூடாகச் செல்லுகின்றோம். நாம் கிறிஸ்துவின் துன்பங்களை அணிகின்றோம். அதாவது ஒருவருக்கொருவர் உறுத்தலாக உள்ளோம். நாம் வெவ்வேறு பின்புலங்கள், இனங்கள், சமூகப் படி நிலைகளிலிருந்து வருகின்றோம். ஒருவரோடொருவர் உரசுகிறோம் அல்லது உராய்கிறோம். ஆனால், அந்த உராய்வு கிறிஸ்து எம்மை நிரப்புவதற்கு எம்மைத் தகுதியற்றவர்களாக்கும் ஒரு செயற்பாடாகின்றது. நாம் ஏறக்குறைய இயேசுவின் இரண்டாம் வருகையில் இருக்கின்றோம் என்ற பொய்த் தோற்றத்தை நாம் பிறர் நம்பும்படி விடக்கூடாது. அவர்கள் எமது காயங்களைத் தொட்டுப் பார்த்தால், தங்கள் காயங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாயிருப்பர். எம் எல்லோருக்கும் காயங்கள் உண்டு. எனவே, நாம் ஒருவர் மற்றவரின் காயங்களை புரிந்து கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# மறைந்துள்ள உன் புதையல் எங்கே?

முகவுரை

வல்லமைகளை விரும்புவதும், வியப்பதும், அவற்றிற்கு விருதுகள் வழங்குவதும் இவ்வுலகத்தின் இயற்கைக் குணம், இயற்கையின் சக்திகளைக் கண்டு மிரண்டு நிற்கிறது உலகம்.

ஏழாவது அறிவை நோக்கி நகர தன்னைத் தயார் செய்கிறது மானுட அறிவியல். இந்நிலையில் ஈடிணையில்லாத வல்லமை பற்றிய உண்மையின் அறிவை இனங்காட்டும் ஒரு சக்தி பற்றிய போலிகளைத் தோலுரித்து மனிதனை ஆண்டவருக்கு ஏற்புடையவராக்கும் ஓர் ஆற்றல் பற்றிய சில எண்ணக் குறிப்புகளை உங்களோடு பகிர விழைகிறேன்.

தூய ஆவியானவர் கிறிஸ்தவனை இனங்காட்டும் ஒரு முத்திரையாக, செப ஊற்றை ஒருவனிடம் பீறிட்டெழச் செய்யும் வல்லமையாக, சாட்சிய வாழ்வின் உந்துவிசையாக, உனியல்புப் போராட்டத்தில் ஒரு போர்வாளாக, புதுப்பித்தலின் இயங்கு சக்தியாக இருக்கிறார். அவரின் வல்ல செயலாற்றல்களை சற்று இங்கே தரிசிப்போம்.

ஒரு புறத்தில் தூய ஆவியானவர் யாரென இனங்காட்டுவது கடினமான அதேவேளை, மறுபுறத்தில் தமது வாழ்வை உருமாற்றத் தூய ஆவியானவருக்கே இசைந்து கொடுக்கும் மக்களின் வாழ்வில் அவரது செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வது மிகவும் எளிது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்வை தூய ஆவியானவர் உருமாற்றி, அவனது வாழ்விலே வியக்கத்தக்க மாற்றத்தைக் கொண்டு வரும்பொழுது, அத்தகைய மாற்றத்தை நம்மில் எவராவது கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. ஒருவரை இறைமனிதன் என்று இனங்காட்டுவதற்கு திருஅவையின் திருத்தந்தையர்கள் "ஆவியைக் கொண்டிருப்பவர்" என்று அழைத்தார்கள். இத்தகைய இறைமனிதர்கள் உடன்படிக்கையை உன்னதமாகக் கருதி வாழ்ந்தவர்கள். பழைய வாழ்வில் இருந்து புது வாழ்விற்குக் கடந்து வந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு எதிர்மாறாக ஆவியைக் கொண்டிராத ஒருவர் இருளில் வாழ்கின்றார். இறைவனிடமிருந்து தொலைவில் வாழ்கின்றார். "வாக்குறுதியைக் கொண்டிருந்த உடன்படிக்கைக்கு அந்நியர்களாகவும் எதிர்நோக்கில்லாதவர்களாகவும்" (எபே 2:12) வாழ்கின்றார்.

ஆவியைப் பெற்றுக்கொண்டதினால் "இறைத்தன்மையில் பங்கு பெறுகின்றோம்" (2பேதுரு.1:4). புனிதத்தன்மை என்பது கிறிஸ்து வழியாக தூய ஆவியில், இறைதன்மையில் பங்கு கொள்ளுதலாகும். ஆவியானவர் இல்லாமல் "நாம் அந்நியர், வேற்று நாட்டினார். ஆனால் ஆவியிலோ இறை மக்கள் சமுதாயத்தின் குடிமக்கள், கடவுளின் குடும்பத்தில் சேர்ந்தவர்கள்" (எபே 2:19).

**ஆயத்தம் செய்பவராக**

இறைதந்தை தூய ஆவி வழியாக எம்மில் எவ்வாறு செயலாற்றுகின்றாரென்றால் நம் மனித உள்ளங்களில் கிறிஸ்து உறையத் தொடங்குகின்றார். "நீங்களும் உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு, அவர் மீது நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள்" (எபே 1:13). நற்செய்தி முழுவதிலும் குறிப்பாக புனித பவுலின் திரு முகங்களிலே இது தொடர்பான கருத்து நிலவுகின்றது.

அதாவது "தூய ஆவியின் வல்லமையால்" (உரோ 5:19 கலா 3:15, 1கொரி 6:16, 1தெச 1:4-5) வழங்கப்படும் விசுவாசம் என்னும் கொடையின்றி ஒருவர் தன்னை நற்செய்திக்கு அர்ப்பணிக்க முடியாது. எனவே விசுவசிப்பது என்பது இறை அருளாலும், தூய ஆவி வழங்கும் உள்ளார்ந்த உதவிகளாலும் மட்டுமே நடைபெற முடியும். இத்தகைய அர்ப்பணம் கிறிஸ்து என்னும் நபருக்கு நம்மைக் கையளித்து அவரை நம் வாழ்வின் ஆண்டவரும் குருவுமாக ஏற்றுக் கொள்வதாகும்.

**செபம் செய்ய விரும்பு**

செபம் என்பதன் உண்மையான அர்த்தம் ஆன்மா இறைவனுடன் ஐக்கியமாவதாகும். "தூய மூவொரு கடவுளின் பிரசன்னத்தில் அவரோடு உறவாடும் பழக்கமே செபவாழ்வு. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான ஆன்மாவை இறைவனை நோக்கி எழுப்புவதேயாகும்". என்று ஜோண் டமசீன் கூறுகிறார். இந்த விதத்தில் மனிதன் தானாகக் குரலெழுப்ப முடியுமேயொழிய செபிக்க முடியாது. இறைவனை நாடி அவரோடு ஐக்கியமாவதுதான் செபமாகையால் அது எப்போதும் இறைவனது கொடையாகவே இருக்கிறது.

எனவே நாம் யூதா எழுதிய திருமுகத்தில் கூறப்பட்டுள்ள அறிவுரையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. "அன்பானவர்களே, தூய்மை மிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள். தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள். கடவுளது அன்பில் நிலைத்திருங்கள்". புகழ்ச்சியோ, நன்றியோ, மன்றாட்டோ, எல்லா வகையான செபமும் எப்போதும் தூய ஆவியின் துணையுடனேயே செபிக்கப்படுகிறது.

சமாரியப் பெண்ணுக்கு இயேசு கூறுவதுபோல ஒரு கிறிஸ்தவன் உண்மையிலும் ஆவியிலும் மெய்யான வழிபாடு செய்பவனாக ஆவதற்கு இது ஒன்றே வழி.

**சாட்சிகளாய் செயலூக்கம் பெற**

கிறிஸ்துவின் சீடரைச் சாட்சிகளாக உருமாற்றுவதே தூய ஆவியின் செயலாகும். "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிட மிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் தந்தையிடமிருந்து வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்க முதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்" (யோவான் 5:26-27) என்று இயேசு ஏற்கனவே கூறியிருக்கிறார். தூய ஆவியின் வல்லமையின் துணை கொண்டு கிறிஸ்துவுக்காகச் சான்று பகர்வதென்பது, தன்னை முற்றும் உருமாற்றி, ஊடுருவி, எல்லா விடயங்களிலும் அனைவருக்கும் முன்பாக பிரகாசிக்கும் இறை வார்த்தையால் ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் சந்திக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகுந்த ஒளியோடு வெளிப்படுத்தும் எந்த சாட்சியத்திலும் மூலகாரணமாக இருப்பது தூய ஆவியின் செயற்பாடேயாகும். வேதசாட்சியாக மரிப்பது ஆதித் திருச்சபை யினாலும், திருச்சபைத் திருத் தந்தையர்களாலும் புனிதத் தன்மையின் உச்சக்கட்டமாகக் கருதப்படுவதுடன், விசுவாசி களுக்கு தூய ஆவியால் அருளப்படும் அதிமேலான கொடையாக எப்போதும் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவி தரும் வாழ்வில் வளர்ச்சி**

ஆயினும் கிறிஸ்தவனில் தூய ஆவியின் செயற்பாடு தானாக நிகழ்வதல்ல. ஏனெனில், கிறிஸ்தவன் தானாக செயலாற்றுவதில்லை. தூய ஆவியின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருக்கும் யாவற்றையும் தவிர்ப்பதன் மூலம் அவன் அவரோடு ஒத்துழைக்கிறான்.

**ஊனியல்பை உரிந்திட – கனிகள்**

தூய ஆவியின் துணையோடு செயற்படும் இந்த சுத்திகரித்தல், கலாத்தியருக்கு (5:13,16-18) எழுதிய திருமுகங்களில் ஊனியல்புகளுக்கு எதிரான போராட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது. மனிதன் ஏற்கனவே மீட்கப்பட்டு தூய ஆவியைப் பெற்றிருப்பது உண்மையாயினும், அவன் மீண்டும் ஊனியல்புக்குத் திரும்பும் சாத்தியக்கூறு எப்பொழுதும் உள்ளது. மனிதன் தனது இயல்பில் வீழ்ச்சியடைந்தவன், மீட்கப்படாதவன், தனது சுயநலத்துக்கே அடிமையானவன். தானே தலைவன் என்னும் நோக்கில் எல்லாவற்றையும் நோக்குபவன்.

இந்த முற்றும் எதிரிடையான சக்தியிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்ள தூய ஆவியானவர் துணை புரிந்து வாழ்வின் அடிப்படை விதியை இறுகப் பற்றிக்கொள்ள உதவி செய்கிறார். வாழ்வின் அடிப்படை விதியென்பது இறைவன் மட்டிலும் தனது சகோதர சகோதரிகள் மட்டிலும் திறந்த உள்ளம் கொண்டவராக இருந்து, அன்பு என்னும் அளவுகோலின்படி தமது வாழ்க்கையை நடத்துவதாகும்.

ஊனியல்புக்கும் ஆவிக்கும் இடையேயான போராட்டம் விசுவாசிகளின் உள்ளத்திலேயே நிகழ்கிறது என்பது தெளிவு.

**வாழ்வின் தூய்மையே – இறுதி இலக்காய்...**

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரிலும் தூய ஆவி ஏற்படுத்தும் புதுப்பித்தல் அவனை இறை மக்கள் கூட்டத்தில் சேர்க்கிறது. திருமுழுக்கு, உறுதிப் பூசுதல் ஆகியவற்றில் அடங்கியுள்ள செல்வங்கள், பொறுப்புகளில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு விசுவாசியும் முழுக் கிறிஸ்தவ சமுதாயத்தினதும் அருங்கொடைப் பரிமாணத்தை மீண்டும் கண்டு பிடிக்கிக்கிறான். தூய ஆவியானவரே பொது நன்மைக்காக ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசியிடமும் அநேக கொடைகளை அளித்து திருச்சபை யினுள் பணியிலும் அருங்கொடைகளிலும் உள்ள பல்வகைப்பட்ட தன்மையை வெளிப்படுத்துகிறார். தூய ஆவியினது செயற்பாட்டின் விளைவாக இறை மக்களின் அருங்கொடைச் செல்வங்கள், தனிப்பட்டோர் அல்லது குழுக்கள் (பொது நிலை அமைப்புக்கள், இயக்கங்கள் அல்லது குழுக்கள்) அனைத்திலும் வெளிப்பாடு ஆகின்றது. இவற்றின் அடிப்படை திருமுழுக்கின் அழைத்தலை மீண்டும் கண்டுபிடித்து நற்செய்தி அறிவிப்பிலும், வாழ்க்கைத் தெரிவுகளைச் செய்வதிலும் முன்னதாகவே இருந்ததாகும்.

மேற்கூறியவற்றிலிருந்து, தூய ஆவி கிறிஸ்தவ வாழ்வின் இதயமாகவும் உயிர் மூச்சாகவும் உள்ளார் என்பதையும், தூய ஆவிக்கு பக்தி செலுத்துவது என்பதை விட ஆவியை சுவாசித்து அவரில் வாழ்வதுதான் உண்மை என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். உலகம் என்றுமே கண்டிராத வல்லமை உமக்குள் உம் அழைப்புக்குள், உம் ஆற்றலுக்குள் உறங்குவதால் ஒரு புதுப்பித்தலுக்கு நீங்கள் தயாரா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

# இளைஞர் மாபெரும் செல்வங்கள்

**முகவுரை**

எமது நாட்டின் இளைஞர்களே எமது மாபெரும் செல்வங்கள். அவர்கள் புத்திக்கூர்மை உள்ளவர்கள். கடுமையாக உழைப்பவர்கள். அவர்களே எமது நம்பிக்கை. ஏனெனில் இன்றைய இளைஞர்களிடமல்லாது வேறு யாரிடம் நாம் நாளைய எமது பொறுப்புக்களை ஒப்படைக்க முடியும்?

இச்செல்வங்கள், அதைப் பேணி வளர்த்து, அவர்கள் அழகான, வலிமையுள்ள, பூரண வளர்ச்சிபெற்ற ஆண்களாகவும் பெண்களாகவும் உருவாவதற்கு அவர்களுக்குத் துணைபுரியும் படியாகவே, வளர்ந்தோராகிய எம்மிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது. அறிவுரை கூறுவதன் மூலமோ, போதிப்பதன் மூலமோ அல்ல, எமது வாழ்வின் முன்மாதிரிகையால்; அதிகாரம் செலுத்துவதாலோ, செல்வாக்கைப் பயன்படுத்துவதாலோ அல்ல சில தசாப்பதங்களுக்கு முன் நாமே சிரமத்துடன் கடந்து வந்த வாழ்க்கையின் ஒரு காலகட்டத்தில் அவர்களுக்குத் துணை போவதன் மூலமே அவர்களுக்கு உதவ முடியும்.

பல ஆண்டுகளாக இளைஞர்களுக்குத் துணைபோகும் சிறப்புரிமையையும் மகிழ்ச்சியையும் நான் கண்டனுபவித் திருக்கிறேன். ஆகவே அக்காலத்தில் நான் கற்றுக்கொண்ட பாடங்களை முக்கியமாகப் பெற்றோரோடும் வேறு கரிசனை யுள்ளவர்களோடும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**இன்றைய இளைஞர் வாழும் உலகு**

வளர்ந்தோராகிய நாம் இளைஞராக இருந்தபோது நாம் கண்டு வியக்க எத்தனையோ காரியங்கள் இருந்தன. இன்றைய இளைஞருக்கு அதற்கு மேல் உண்டு. உ-ம் ஒலிம்பிக் விளையாட் டுகள் அல்லது டெஸ்ற் கிரிக்கட் போட்டிகளை நேரடி ஒளிபரப்பில் கண்டுகளிப்பது, கணனி - தகவல் தொழில்நுட்பம் - உயர் கல்வியைத் தொடர்வதற்குக் கூடிய வாய்ப்புக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வளர்தோராகிய நாம் எமது இளைஞருக்காகப் படைத்துள்ள உலகைப் பற்றிப் பெருமைபேச நினைத்தால் அவர்கள் அதிக அழுக்கிலும் குப்பை கூளங்கள் மத்தியிலும்கூட வாழ வேண்டியிருக்கிறது என்பதை மறந்துவிடலாகாது. உதாரணமாக இன்றைய உலகில் மனித உயிர் மலிவாக மதிக்கப்பட்டு இலகுவாகப் பறிக்கப்படுகிறது. வன்முறையும் பயங்கரவாதமும் மற்றவர்களை அச்சத்திலும் கவலையிலும் வாழ வைக்கின்றன. பேராசை நாம் வாழும் உலகை ஆட்சி செய்கின்றது. இது மக்களைத் துன்புறுத்தும் அநேக அநீதிகளுக்குக் காரணமாயிருக்கிறது. பிரிந்த குடும்பங்கள் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாத உறுதிப் பாட்டையும் பாதுகாப்பையும் இளைஞர்களுக்கு கிடைக்காமற் செய்துவிடுகின்றன. கிராமப்புற இளைஞர்கள் ஓரங்கட்டப் படுகின்றனர். நம் வாழ்க்கைக்குத் தேர்ந்து கொண்ட கொள்கைகள் மனப்பான்மைகளிலிருந்து நாம் உருவாக்கிய உலகம் இதுதான் என்பதை முதிர்ந்த தலைமுறையினரான நாம் மறுக்க முடியுமா?

**இளைஞர்களைப் புரிந்து கொள்ளுதல்**

எமது இளைஞர் பெரிதும் புரிந்து கொள்ளப்படாதவர்கள். மிகவும் தூற்றப்படுபவர்கள். நாம் அடிக்கடி இதுபோன்ற கூற்றக்களைக் கேட்கிறோம். "அவர்களுக்குப் புத்தியில்லை, சுறுசுறுப்பில்லை அவர்களிடம் கட்டுப்பாடு இல்லை. அவர்கள் அடங்காதவர்கள். இரக்கமற்றவர்கள், சோம்பேறிகள்" அவர்கள் சமுதாயத்தில் செல்வங்களாயிருப்பதைவிட செலவாளியாய் இருக்கிறார்கள்.

இந்தக் குறிப்புகள் எம் இளைஞருள் சிலருக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், நான் கண்ட பெரும்பாலான இளைஞர் மட்டில் இது உண்மையல்ல.

கோபிக்கு சமஸ்கிருதம் படிப்பிக்க வேண்டுமானால் சமஸ் கிருதத்தை மட்டுமல்ல கோபியையும் அறிந்திருக்க வேண்டும் என ஒரு சமஸ்கிருதப் பழமொழி கூறுகிறது. பெற்றோர், ஆசிரியர்கள், கரிசனையுள்ள வளர்ந்தோர் ஆகிய நாம் இளைஞரைப் பேணி வளர்க்க விரும்பினால், நாம் முதலில் அவர்களைப் புரிந்து கொள்ளத் தொடங்க வேண்டியது அவசியம்.

அ) இளைஞரைப் புரிந்து கொள்வதன் முதற்படி அவர்கள் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய செல்வம் என்பதை ஏற்றுக்கொள்வதாகும். இல்லா விட்டால் அவர்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்போமா? ஆனால் அநேகர், பெற்றோர் உட்பட, இதை ஏற்றுக் கொள்வதில்லை. தம் பிள்ளைகளோடு மிகக் குறைந்த நேரத்தை அவர்கள் செலவிடுவது அவர்களுக்கு இதைவிடக் கூடிய முக்கியத்துவமும் பெறுமதியுமுள்ள வேறு விடயங்கள் உள்ளன என்பதைக் காட்டுகின்றது.

ஆ) நாம் அனைவரும் வாழ்க்கையில் - குழந்தைப் பருவம், வளரிளமை, பூப்புப்பருவம், கட்டிளமை, வயோதிபம் - எனப் பல கட்டங்களைக் கடந்து வருகிறோம். ஒவ்வொரு பருவமும் அடுத்ததற்குப் படிக்கல்லாக இருக்கிறது. இவை பல வேளைகளில் குழப்பமும் கலவரமும் நிறைந்த காலங்களாக இருக்கின்றன. அப்போது எம்மையே புரிந்து கொள்ளவோ சமாளிக்கவோ முடியாதவர்களாக இருக்கிறோம். அவ் வேளைகளில் எம்மீது கரிசனையுள்ளவர்களின் புரிந்துணர் வும், நம்பிக்கையும், அன்பும் எமக்குத் தேவைப்படுகின்றன. இளமைப் பருவம் அத்தகைய குழப்பமும் கலவரமும் நிறைந்த காலமாகும். வளர்ந்தோராகிய நாம் இதைப் புரிந்து ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் இளைஞர்களைப் புரிந்துகொள்ளவே முடியாது.

இ) நான் விளங்கிக் கொண்ட அளவுக்கு, இளைஞர் தமது காலில் உறுதியாக எழுந்து நிற்க முயற்சிப்பவர்கள், குழந்தைகளைப்போல் நிலத்தில் தவளுகிறவர்களல்ல. இன்னும் சமநிலை அடையாவிட்டாலும் தமது காலில் உறுதியாக நிற்க முயற்சிப்பவர்கள். சிலவேளைகளில் தாம் உறுதியாக இருப்பதாக உணர்கிறார்கள். உறுதியாகவே இருக்கிறார்கள். சில சமயம் தடுமாறி விழுகிறார்கள். ஆனால், சங்கடப்படுகிறார்கள். அத்தகைய நேரங்களில் நாம் அருகில் இருந்தால் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி ஒரு நல்ல வார்த்தையால் அவர்களுக்கு ஊக்கமளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இளைஞரின் குறைகளும் நிறைகளும்

### நிறைகள்

1. தமது திறமைக்கு உட்பட்ட வேலைகளைப் பொறுப்பெடுத்து நன்கு நிறைவேற்றும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. ஆனால் பதினொராம் மணித்தியாலயத்தில் மாத்திரமல்ல. 11.45 இலும் கூட அவர்கள் அதை நிறைவேற்றலாம். இது வளர்ந்தோருக்கு எரிச்சலையூட்டுகிறது.
2. அவர்கள் புத்திக்கூர்மையுள்ளவர்கள். துணிந்து முயற்சியைத் தொடங்குபவர்கள். சிறந்த உழைப்பாளிகள், பணியை ஒப்படைப்பவர்கள். பலர் இதை ஒப்புக்கொள்வதில்லை. வேறு பலர் மனமார ஒப்புக்கொள்கிறார்கள்.
3. பிறர், முக்கியமாகப் பெற்றோரின் முன்மாதிரியால் நன்கு தூண்டப்பட்டால் பிறருக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் தாராள குணம் படைத்தவர்கள்.
4. அவர்கள் அன்பானவர்கள். எம்மெல்லோரையும் போலவே தாம் பெறும் அன்பில் திளைப்பவர்கள்.
5. அவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களை முக்கிய மாக அநீதியான சமூக அமைப்புக்களால் மக்கள் நசுக்கப்படுவதை உணர்ந்து அதில் அக்கறை காட்டுபவர்கள். சிலவேளைகளில் இது அவர்களை வன்முறைகளை ஆதரிப்போரின் கைப்பொம்மையாக்கிவிடுகிறது.
6. பணத்தையோ, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையையோ பொறுத்தமட்டில் அவர்கள் நம்பகமாகனவர்கள், பொறுப்புள்ள வர்கள்.

## இளைஞரைப் பேணிவளர்த்தல் – வழிவகைகள்

இளைஞரோடு உடன் செல்லுவதன் மூலமே பெற்றோரும், ஆசிரியர்களும், மற்றும் வளர்ந்தோரும் அவர்களைப் பேணி வளர்க்கக் கூடியதாயிருக்கிறது.

இளைஞரோடு உடன்செல்வதென்றால் அதற்கு அவசிய மாயிருப்பது.

அ) அண்மையிலிருப்பது - செவிமடுப்பது, பாராட்டான ஒரு பார்வை, வேண்டினால் ஓர் உதவிக்கரம்.

ஆ) இளைஞரிடம் நம்பிக்கை வைத்து, காரியங்களைச் செய்வதில் தமது புத்தியையும், துணிவையும், ஆக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனையும் பயன்படுத்துவதற்கு சுதந்திரமளித்தல். இங்கு பெருந்தடையாக இருப்பது தவறுகள் நேரலாம் என்ற அச்சம்தான். ஆனால், தடுக்கி விழாமல் யாரால் நடக்கப் பழக முடியும்? புதியது பழையதைப்போல் நன்றாக இராது என்ற அச்சமும் உண்டு. ஆனால், இந்த அச்சங்கள் இளைஞரின் ஆக்கத்திறனைக் கெடுத்து அவர்களின் வளர்ச்சியை மழுங்கடித்து விடுகின்றன.

இ) பொறுமையாயிருப்பது - வாயை மூடிக்கொண்டிருப்பது - வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் குழப்பமும் கொந்தளிப்பும் இளைஞரைத் துரத்துகின்றன என்பதைப் புரிந்து கொள்வது.

ஈ) எமது வாழ்வின் முன்மாதிரியால் அவர்களுக்கு வழியமைத்துக் கொடுப்பது.

உ) வீட்டிலே சமயப் பற்றுள்ள சூழ்நிலையை ஏற்படுத்துதல். இதன் மூலம் தமது பெற்றோருக்கு எந்த மதிப்பீடுகளும், மனப்பாங்குகளும் முக்கியமாக இருந்தனவோ அவற்றையே இளைஞர் போற்றி தாமும் அவற்றைக் கடைப்பிடிக்க முயல்வார்கள்.

ஊ) இளைஞர்மீது மிகுதியாக அன்பு செலுத்துதல், புரிந்துணர்வாலும், கனிவான அன்பான ஆதரவினாலும் அவர்களை தொடர்ந்து தட்டிக் கொடுப்பது.

எ) அவர்களுக்கு நல்லூக்கம் அளிப்பது - அவர்களிடமுள்ள நற்பண்புகளையும், அவர்களது நல்ல செயற்பாடுகளையும் நயந்து பாராட்டுவதன் மூலம் அவர்களிடமுள்ள நல்ல அம்சங்களை வெளிக்கொணர்வது.

ஏ) எமது பாடசாலைகளிலும், பங்குகளிலும், பல்கலைக் கழகங்களிலும் உளவளத்துணை வழங்குவதற்குத் தகுதியுள்ளவர்களின் சேவைகளையும் பயன்படுத்துவது.

இளைஞரோடு உடன் செல்வது எனக்கு நிறைவு தரும் ஓர் அனுபவமாக இருந்துள்ளது. அவர்கள் என் உள்ளத்தைத் தொட்டு, நான் வளர்ச்சியடைய உதவியுள்ளனர். அவர்கள் என் வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகி, என்னை இளமையாக உணரச் செய்தனர். அவர்கள் என்மட்டில் மதிப்பைவிட அன்பையே கொண்டுள்ளனர். ஆகவே, மிகுந்த நன்றியுணர்வுடன் நான் மீண்டும் மீண்டும் அவர்களோடு உடன் செல்ல முழுமனதுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28

# தூய ஆவிக்கு எதிராக வாழலாமா?

இறைவன் நம்மைப் படைக்கும்போது எம்மீது கொண்ட பேரன்பினால் எம்மைத் தமது உருவிலும், தமது சாயலிலும் படைத்து உயிராகிய ஆவியை நமக்குள் ஊதி, தமது சொந்த இரத்தத்தை நமக்குள் ஓடவைத்து, நாம் தூயவராக வாழ வார்த்தையைத் தந்து வழிநடத்தி நாம் வழிதவறும் போதெல்லாம் நாம் மீள்வதற்காக அருட்சாதனங்களைத் தந்து, நாம் முற்றுமாயத் தவறியபோது தமது சொந்த இரத்தத்தாலேயே நம்மை மீட்டுக்கொண்டது மட்டுமல்லாமல், தமக்குப் பின் நமது தொடர் மீட்புப் பயணத்திற்காக இயேசு தூய ஆவியாரைத் துணையாளராகத் தந்ததும் விவிலியம் கூறும் உண்மை.

இறைமகன் இயேசு வாக்களித்த துணையாளராம் தூய ஆவியாரின் பொழிவை, நிரப்புதலை, அபிஷேகத்தை திருவிழிப்பு நாளிலே நாம் எதிர்பார்க்கின்றோம். அதனூடாக, நாம் தாங்கி வந்திருக்கும் பிரச்சனைகள், துன்ப, துயர வேதனைகளுக்கு தீர்வு கிடைக்குமா என்று ஏங்குகிறோம். ஆனால் தூய ஆவியின் கோவிலாகப் படைக்கப்பட்ட நாம், அந்தத் தூய்மைக்குள், பரிசுத்தத்துக்குள், வார்த்தையின் வாழ்வுக்குள் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை சீர்தூக்கிப் பார்த்தவர்களாய், நமக்குள்ளே வாழும் தூய ஆவியாரின் அனுபவத்துக்குள் நுழைவோம்.

**நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள், ஆனால் தூய ஆவியின் துணையால், உடலின் தீச் செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள். உரோ: 8:13**

இந்த வார்த்தையின் அடிப்படையிலேதான் தூயஆவியின் கனிகள், கொடைகளையும் அவற்றிற்கெதிராக அலகை விதைக்கும் நச்சுக்கனிகளின் விளைவுகளையும், நாம் பிரித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதாவது, இறைவன் நமக்கு வகுத்துத் தந்த தூய வாழ்வுக்கும், அலகை நமக்குள் விதைக்கும் பாவவாழ்வுக்கும் இடையிலான நமது இருப்பியலை நாம் உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப் படைப்பினது அடிப்படையும், அதன் வழி முறைகளும் வெறும் சரீரப் பிரகாரமான அல்லது ஊனியல்பின் செயற்பாடுகளோடு மட்டுமான ஒன்றல்ல. அவ்வாறு இருக்கு மென்றால், படைத்தவனுக்கும் படைப்புக்கும் படைப்பின் நோக்கத்துக்கும் எந்த உறவும் நிறைவும் இருக்காது. ஆனாலும், இன்றைய மனிதர்களான நமது நிலை, ஊனியல்பின் தேவைகளையும், உலக ஆசாபாசங்களையும் மட்டும் அனுபவிப்பதோடு செத்துப் போய்விடுவதாக அமைகிறது.

ஆனால் மனிதப் படைப்பின் அத்திவாரமானது, ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பொருளின் கூட்டமைப்பாக இருப்பதை உணர்ந்தும், உணர்வற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதனால் மனித வாழ்வின் உண்மைப் பொருளான, இயங்கு சக்தியான, தூயஆவியை மறந்து விடுகிறோம். வெறும் உடற் பலத்தில் மட்டும் தங்கி வாழ்வதால், உண்மை அனுபவத்தை உணர முடியாமல், உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்குகளிலே வீழ்ந்து கிடப்போராக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது ஆவியானது இன்று இந்த நேரத்தில் புதிதாக நமக்குள் வரப்போகின்ற ஒன்றல்ல. அது மனிதன் மண்ணால் படைக்கப்பட்டபோதே அவனுக்குள் ஊதப்பட்டு. ஒவ்வொரு மனிதனையும், உங்களையும், என்னையும் கூட இந்த நிமிடம் வரை இயக்கிக் கொண்டிருக்கின்ற அற்புத சக்தி. இந்த உண்மையின் இருப்பை, உயிரான, வல்லமையான ஆவியை செயலற்றதாக்கி, செயலூட்டம் (சார்ஜ்) இழந்தவர்கள் ஆகிவிட்டோம். இதற்கான காரணம், இந்த சார்ஜ்ஜை அதிகரிக்கின்ற தூய ஆவியின் கொடைகள், கனிகளை விட்டு, அலகை நம்முள் விதைக்கும் தூய ஆவியாருக்கு எதிரான பாவங்களில் வீழ்வதே என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (கலா:5:19-21). இந்த உண்மையை உணர்ந்தவர்களாய் உண்மையின் ஆவியானவரை நோக்கி, தூய்மையாக்கும் ஆவியானவரை நோக்கி, மாயைகளைக் கழுவும் ஆவியானவரை நோக்கி, எப்போது திரும்பப் போகிறோம்?

இவ்வாறான திரும்புதல்களுக்காகவே பாவக் கடலி லிருந்து விடுபட கரம் நீட்டும் அற்புத ஆயுதமான, இறைவனின் இரக்கத்தின் கரமாக, பாவ அறிக்கை அருட் சாதனம் நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலே, ஆதிப் பெற்றோர் பாவம் செய்தபோது "போ" என்று துரத்திய இறைவன் புதிய ஏற்பாட்டிலே, நாம் பாவிகளாய் இருந்தபோதும் "வா" என்று அழைத்து, தகுதிப்படுத்தி, மன்னித்து அரவணைக்கும் இறை கரமாக பாவ அறிக்கை அருட்சாதனம் நம்முன்னே நிற்கிறது. பற்றிப் பிடித்துக் கரையேற நாம் தயாரா? இல்லையென்றால், அலகை காட்டும் பேராசைகளுக்குள்ளே வீழ்ந்து, பாவத்தின் சம்பளத்தை, அதாவது சாவை சம்பாதிப்பவர்களாக, ஆன்மாவைச் சாகடிப்பவர்களாக தொடர்ந்து வாழ வேண்டியிருக்கும். இந்த உண்மையை விவிலியத்தில் பல சம்பவங்களாக நாம் காணலாம்

- ஆதிப் பெற்றோருக்கு கடவுளைப்போல் ஆகலாம் என்று அலகை ஊட்டிய ஆசையே விலக்கப்பட்ட கனியை உண்டு அதனால், இறைவன் கொடுத்த அற்புத வாழ்வை இழந்து, மனித குலத்தையே ஜென்ம பாவத்தைச் சுமக்க வைத்தது.
- நிறைவற்ற தனது காணிக்கையையும் இறைவன் ஏற்பார் என்று எண்ணிய காயீனின் ஆசை நிராசை ஆனதால், நிறை வானதைக் காணிக்கையாக்கிய ஆபேல் மீது உண்டான சினம் சகோதர இரத்தத்தைச் சிந்த வைத்தது.
- குளித்துக் கொண்டிருந்த பெண்ணின் மேல் தாவீது அரசன் கொண்ட காம இச்சை, அவளது கணவன் ஊரியாவை வஞ்சகமாய் கொல்ல வைத்தது.
- தன்னைவிட ஒரு புதிய அரசன் பிறந்துவிடக்கூடாது என்று எண்ணிய ஏரோதனின் அதிகாரவெறி, இயேசு பிறந்தபோது எண்ணற்ற பச்சிளம் குழந்தைகளை ஈவு இரக்கமின்றிக் கொல்ல வைத்தது.
- முப்பது வெள்ளிக் காசின் மேல் யூதாஸ் கொண்ட பண ஆசை அவனைத் துரோகியாக மாற்றி நம் ஆண்டவரைத் திட்டமிட்டுக் காட்டிக் கொடுக்க வைத்தது.
- தனது ஆட்சியும் பதவியும் பறிபோய்விடக்சுகூடாது என்ற பதவி ஆசையும் செசாரின் நட்பை இழந்துவிடக்கூடாது என்ற சுயநலமும் பிலாத்துவை இயேசுவுக்கு அநீதத் தீர்ப்பை வழங்க வைத்தது.

இவ்வாறு தூய ஆவியாரின் கனிகள் கொடைகளுக்கு எதிராக அலகை விதைக்கும் நச்சு விதைகளே, அனைத்துப் பாவங் களுக்கும் அடித்தளம் என்பதை விவிலியத்தில் மட்டுமல்ல, நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட வாழ்விலும் காண்கிறோம், அனுபவிக்கிறோம் திமோத்தேயு 6:8-10.

ஆம், தூயஆவியின் கனிகள் கொடைகளுக்கு எதிரான நமது செயல்கள் அடக்கி ஆளப்படாவிட்டால், அலகை நமது வாயிலிலே படுத்திருந்து நம்மை வேரறுக்கும் என்பதை உணர்ந்தவர்களாய், தூயஆவியாரின் வழிகாட்டலுக்குள் நம்மை நகர்த்த வேண்டும்; திரும்ப வேண்டும்.

தூயஆவியாருக்கு எதிராக, கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரம் காண ஒரே வழி பாவஅறிக்கை அருட்சாதனமே. எனவே, அதன் அற்புதத்தை உணர்ந்தவர்களாய் பாவங்களைச் சுட்டெரிக்கும் வல்லமைகளை உணர்ந்தவர்களாய், பாவ அறிக்கை செய்யத் துணிய வேண்டும். நம்மில் பலர் நினைப்பதுபோல், பாவ அறிக்கை இன்று நேற்று உருவாக்கப்பட்டது ஒன்றல்ல. மாறாக, பழை ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே இறைவனால் இடித்துரைக்கப் படுகிறது.

- எண்ணாகமத்தில் ஆரோனும் மிரியாமும் மோசேயிடமும்
- யோசுவா நூலில் ஆக்கான் யோசுவாவிடமும்
- 2 சாமுவேல் நூலில் தாவீது நாத்தான் ஊடாகவும்
- எஸ்தர் நூலில் மக்கள் தலைவர்களிடமும், பாவ அறிக்கை செய்வதை நாம் விவிலியத்தில் காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் பாவ அறிக்கை இறைவனின் இரக்கத்தினால் நமக்கு இலகுபடுத்தி அருட்சாதனமாகத் தரப்பட்டிருந்தால், அதை நாம் விளையாட்டாக எண்ணி விடுகிறோம்.

இயேசுவுக்குப் பின் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் திருத்தூதர்களிடமும் அவர்களைத் தொடர்ந்து வழி, வழியாக நமது குருக்கள் ஊடாகவும் வழங்கப்பட்டிருப்பதை (யோவான் 20: 20:33.) வேதம் தெளிவாகக் கூறுகிறது.

தூய ஆவியாரை ஊதிய பின்பே இந்த அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதிலிருந்து நமக்கு படைப்பின் போது இறைவனால் ஊதப்பட்டு, புதிய ஏற்பாட்டில் இயேசுவால் ஊதப்பட்டு நம்மை இயக்கும் தூயஆவி என்னும் அற்புத சக்தியே பாவங்களைச் சுட்டெரிக்கும் சக்தி என்பதையும், பாவ அறிக்கை செய்யும்போது, தூய ஆவியின் வல்லமையாலேயே, பாவங்கள் சுட்டெரிக்கப்பட்டு இறைவனின் பிள்ளைக்காக ஒப்புரவாக்கப் படுகின்றோம் என்னும் உண்மையையும் நாம் உணரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது, ஆண்டவர் சொன்னதுபோல் மகனே! மகளே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. எழுந்து நட என்பது போன்ற குரலைக் கேட்க முடியும்; அனுபவிக்க முடியும். உள்ளத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் பெறமுடியும். ஆவியின் செயலூட்டம் பெற, இதயங்களைச் சார்ஜ்பண்ண நாம் தயாரா?

திருவிவிலியம் வல்லமை மிக்கது.

படைப்பாற்றல் கொண்டது எசா 55:10-11

வாழ்வுக்கு வழிகாட்டுவது தி.பா 15:10

இறை சமுதாயத்தை வளர்க்கம் ஆற்றல் கொண்டது தி.ப 2: 45-47


வரங்கள் அனைத்தையும் அளிக்கிறது. உரோ 10:17

நீதியை நிலைநாட்டுகிறது லூக் 1:51-53

மனித வாழ்வுக்குத் தூண்டுதல் அளிக்கிறது லூ4:18-19

இறைவாக்கு வாக்குறுதி தருகிறது மத் 7:7

இறைவாக்கு ஆறுதல் அளிக்கிறது 2கொரி 1:14





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

## ஓ! இளைஞனே...!

இளமை என்பது மனித வாழ்வின் மையப் பருவம். அதற்கு முன்வரும் பருவங்கள் எல்லாம் அதற்கான தயாரிப்பு எனலாம். அதற்கான பின்வரும் பருவங்கள் எல்லாம் பெரிதும் அதன் தொடர்ச்சியாகவே அமையும் என்பர் உளவியலாளர். பதின்மப்பருவம் (Teenage) ஒருவரின் எதிர்கால நிலையை நிர்ணயிக்கும் அதி முக்கிய பருவமாகும். ஏனெனில், வாழ்வில் நிலைக்கும் நட்புறவுகள் உருவாகி, உறுதியடைவதும் முக்கிய முடிவுகள் செய்யப்படுவதும் இளமையில்தான். தமது வாழ்வை நெறிப்படுத்தும் தலையாய விழுமியங்கள், அடிப்படை நம்பிக்கைகள் என்பவற்றை ஒருவர் தேர்ந்து உறுதிப்பாடுகள் ஆக்கிக் கொள்வதும் இருப்பருவத்தில்தான். இப்பருவத்தைத் தொடங்கும் போது ஒருவர் தூய ஆவியின் திருப்பொழிவைப் பெற்று வாழ்வு பற்றிய தொலைநோக்கில் உறுதியடைகின்றார். இத்தகைய இளைஞன் அல்லது யுவதி இயேசு மத் 7:24ல் கூறுவதுபோல "பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார்".

வாழ்வில் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் இடையில் வாழ்வு முழுவதும் நீடிக்கும் கடின உழைப்பு அவசியமாகிறது. மற்றவர்களுக்காக, சிறந்த இலட்சியம், கொள்கை, குறிக்கோளுக்காகத் தம்மை அர்ப்பணிக்கத் துடிக்கும் பருவம் இளமைப்பருவம், எதையும் ஆய்வுக்கு உள்ளாக்கி அர்த்தத்தோடு தமதாக்கிக்கொள்ள ஆசிக்கும் பருவம் இப்பருவம். இந்நிலையில், இளைஞர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா, கீழ்ப் படிவுள்ளவர்களாக இருக்கின்றார்களா, ஏமாற்றம் அடைந்தவர் களாய் இருக்கிறார்களா, குருக்களை, சமுதாயப் பெரியவர்களை மதிப்பவர்களாக இருக்கிறார்களா? மதத்தில் நம்பிக்கை யுள்ளவர்களாய் இருக்கிறார்களா? சுறுசுறுப்பானவர்களா? சோம்பேறிகளா? நம்பகரமானவர்களா? போன்ற சமூக - சமய நிலையினரின் தொடர்ச்சியான கேள்விக்கணைகள் இவர்களுக்கு சவால்களாகத் தலைதூக்கி நிற்கின்றன. தமது நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மாற்றங் களைக் காணும் இவர்கள் சமூகத்திலும் மாற்றங்களைக் காணத்துடிக்கின்றனர். இவ்வாறான நிலையில் இவர்கள் தியாகத்தோடு தம்மை அர்ப்பணிக்கத் துடிக்கின்றனர். இத்தகைய தியாக நிலை தம்மை முழுவதும் இழந்து வாழும் ஒரு துறவுநிலை. ஆன்மீகப் பார்வையில் இது கடவுளின் திட்டத்திற்கு ஒருவர் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, தமக்கு முக்கியத்துவம் கொடாமல் வாழ்வது. விவிலியத்தில் ஆபிரகாம் தொடங்கி (தொ.நூல் 12:1), மோசே (வி.ப 4-13), இறைவாக்கினர்கள் ஆமோஸ் (ஆமோஸ் 7:14-15), எரேமியா (எரே 12:1-5, 2:7-18), புதிய ஏற்பாட்டில் அன்னை மரியா (லூக் 1-38), யோசேப்பு (மத் 1:19-24) என பல்வேறு ஆட்கள் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தார்கள்.

இயேசு எவ்வாறு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றத் தம்மை இழந்து வாழ்ந்தாரோ, அதேபோல அவரைப் பின்பற்றும் அவரது சீடர் வாழ்விலும் இப்பண்பு பிரதிபலிக்க வேண்டுமென்று ஆசித்தார். ஆகவேதான் "தம்மைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கவேண்டும் என்றும், தம்மைக் காத்துக்கொள்ளும் எவரும் அதை இழந்துவிடுவர், இயேசுவின் பொருட்டு அதை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வர்" என்றும் இயேசு கூறினார் (மத் 16:24-25). இவ்வாறுதான் விண்ணரசின் நிறைவாழ்வை நாம் பெறுகின்றோம். எனவே, வாழ்வின் இலட்சியங்களை அடைவதற்கு குறுக்கு வழிகள் கிடையாது, பாடுகளின் வழியில்தான் பட்டங்களைப் பெறமுடியும். இதற்கு இயேசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. "நீங்கள் வாழ்வு பெற, அதையும் நிறைவாய் பெறவே வந்தேன்" (யோவா 10:10) என்று கூறும் அவர், இவ்வாழ்வைப் பெற்றுத்தர தன்னை முழுவதும் தந்தையின் திருவுளத்திற்குக் கையளித்தார். தம்மையே முற்றும் சிலுவைப் பலியாக்கினார்.

பல்வேறு சவால்களினூடாகப் பயணித்துக்கொண்டிருக்கும் நமது இளவல்களைப் புரிந்துணர்வோடு வழிநடத்துவது எமது சமூகத்தின் பொறுப்பு. "முதுகிற்குப் பின்னே ஒரேயொரு நல்ல செயல் மட்டும் செய்யலாம். அது தட்டிக்கொடுத்தல் மட்டுமே." பல்வேறு விதமான சவால்கள், குழப்பங்களுடாகச் செல்கின்ற இவர்கள் "எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கின்றார்கள். இளைஞரோடு உடன் பயணிப்பதன்மூலமே பெற்றோரும், ஆசிரியர்களும், மற்றும் வளர்ந்தோரும் அவர்களைப் பேணி வளர்க்க முடியும். அவர்களோடு உடன் பயணிப்பதென்றால், அவர்களுக்கு அண்மையில் இருப்பது, செவிமடுப்பது, பாராட்டான ஒரு பார்வை, வேண்டினால் ஒரு உதவிக்கரம். அடுத்து இளைஞரிடம் நம்பிக்கை வைத்து, அவர்கள் தமது புத்தி, துணிவு ஆக்கத்திறனைப் பயன்படுத்திச் செயல்பட சுதந்திரமளித்தல், அடுத்து வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் குழப்பமும் கொந்தளிப்பும் இளைஞரைத் துரத்துகின்றன என்பதைப் புரிந்து கொண்டு, முடியுமான அளவு அவர்களோடு பொறுமையாய் இருப்பது, எமது முன்மாதிரியால் அவர்களுக்கு வழிகாட்டியாய் இருப்பது. இளைஞர்மீது மிகுதியாக அன்பு செலுத்துதல், புரிந்துணர்வாலும், கனிவான அன்பான ஆதரவினாலும் அவர்களைத் தொடர்ந்து தட்டிக்கொடுப்பது. அவர்களிடமுள்ள நற்பண்புகளையும், அவர்களது நல்ல செயற்பாடுகளையும் நயந்து பாராட்டுவதன் மூலம் அவர்களிடமுள்ள நல்ல அம்சங்களை வெளிக்கொணர்வது.

ஒட்டு மொத்தமாக, இளைஞர்களே நமது மாபெரும் செல்வங்கள் என்பதை உணர்ந்து அவர்களை மேற்சொன்னவாறு பேணி வளர்த்து, அவர்கள் அழகான, வலிமையுள்ள, பூரண வளர்ச்சி பெற்ற ஆண்களாகவும், பெண்களாகவும் உருவாவதற்கு அவர்களுக்குத் துணைபுரிய இந்நாள் நம் அனைவரையும் அழைத்து நிற்கின்றது. புதிய சமுதாயம் செய்வோம். - புரட்சி இயேசுவின் வழி செல்வோம்....!

கற்பனைச் சிறகடித்துக் கனவுலகில் சஞ்சரித்து
நனவுகளைச் சந்திக்கத் துடிக்கும் பருவம் இளமை!
நலிந்த மனதுக்கும் நம்பிக்கை தருவது இளமை!
துடிப்பும் துணிவும், துளிர்க்க எழுவது இளமை!
இளமை! அது மனதுக்கு இனிமை!
மனுக்குலத்தின் நம்பிக்கை!
காலத்தில் - அது வசந்தம்
கவிதையில் - அது மகரந்தம்
வரம்பினை மீறிய எல்லைக்கே, எல்லை வகிப்பது இளமை
இளமையில் சக்தி உண்டு, சலனமும் உண்டு.
அது கல்லையும் உடைக்கும், மலையையும் பிளக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# இறைவனின் திட்டம்

**இறைவனின் திட்டத்தை அறிந்து, தேடி, வாழவேண்டும்.**

"நான் உன்னை உருவாக்கியவர். நீ பிறருக்கு முன்னே எனது பாதுகாப்பில் இருந்தாய்" ஏசாயா 44:20.

எவரும் தற்செயலாக உருவாகுவதில்லை. எவருடைய பிறப்பும் எதிர்பாராத நிகழ்வல்ல. கடவுள் நம் ஒவ்வொருவருடைய பிறப்பையும் திட்டமிட்டு அதை எதிர்பார்த்திருந்தார். உம்மைப்பற்றி முதலில் நினைத்தவர் அவர்தான். கடவுள் விரும்பியபடியால்தான் நீர் உயிருடன் இருக்கின்றீர். உமது இயற்கையான திறமைகள், தனித்துவமான ஆளுமைகள் அனைத்தையும் அவரே தீர்மானித்திருந்திருக்கிறார். "என் எலும்பு உமக்கு மறைவான தன்று, மறைவான முறையில் நான் உருவானதையும் பூவுலகின் ஆழ் பகுதிகளில் நான் உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்" (திருப்பாடல் 139:15).

எனது பிறப்பு பெற்றோர், இடம் அனைத்தையும் கடவுள் திட்டமிட்டுள்ளார். எனது வாழ்க்கைச் சூழல்கள் அனைத்தையும் அவரே வடிவமைத்தார். "தம் படைப்புக்களில் நாம் முதற்கனி ஆகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார்" (யாக்கோபு 1:18). இப்படித்தான் கடவுள் எம் ஒவ்வொருவரையும் அன்பு செய்து அருமையாகப் பேணுகின்றார். "மண்ணுலகைப் படைத்து உருவாக்குபவர் அவரே. அதை நிலை நிறுத்துபவரும் அவரே. வெறுமையாக இருக்குமாறு படைக்காது மக்கள் வாழுமாறு அதை உருவாக்கினார்" (எசாயா 45:18).

கடவுள் இவை யாவற்றையும் ஏன் செய்தார்? ஏனெனில் அவர் அன்பின் கடவுள். இவ்விதமான அன்பின் ஆழத்தை அறிவது கடினம். இறைவனது சிறப்பான அன்பின் படைப்பாக படைப்புக் களின் சிகரமாக நாம் படைக்கப்பட்டிருக்கின்றோம். விவிலியம் "அன்புதான் கடவுள்" (1யோவான் 4:8) என்கிறது. தனது அன்பை வெளிப்படுத்துவதற்காகவே நம் ஒவ்வொருவரையும் இறைவன் படைத்தார். "யாக்கோப்பு வீட்டாரே... அனைத்து மக்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிகொடுங்கள்.... உங்களை உருவாக்கிய நானே உங்களைத் தாங்குவேன் நானே உங்களை சுமப்பேன், நானே விடுவிப்பேன்" (எசாயா 46:3-7). கடவுள் இல்லாதிருந்தால் பூமியில் எமது குறுகிய ஆயுளுக்கு அப்பால் எவ்வித எதிர்பார்ப்பும் இராது. ஆனால், கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பது மறுக்க முடியாத உண்மை. எமது வாழ்வுக்கு ஆழ்ந்த அர்த்தமுள்ளது. அந்த அர்த்தத்தையும் நோக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டால் மட்டுமே எம் ஒவ்வொருவருக்காகவும் இறைவன் வைத்திருக்கும் திட்டத்தைக் கண்டுகொள்ள அதற்கேற்ப வாழ முடியும். "அவரவருக்கு கடவுள் வரையறுத்துக் கொடுத்த நம்பிக்கையின் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம்மை மதித்துக் கொள்ளட்டும்" (உரோமர் 12:3).

"நானே உன்னைப் படைத்தவர் நீ பிறக்கும் முன்பே எனது பாதுகாவலில் இருந்தாய்" என்று இறைவன் கூறுகின்றார்.

**சிந்தனைக்கு**

கடவுள் என்னைத் தனித்துவமாகப் படைத்தார் என்பதை அறிந்து கொண்ட நான் எனது தோற்றம், பின்புலம், உடலின் தோற்றம் ஆகியவற்றில் எவற்றை ஏற்றக்கொள்ளத் தத்தளிக்கின் றேன்?

"கடவுள் ஒருவர் உண்டெனக் கருதாவிடில் வாழ்க்கை நோக்கம் அற்றதாகிவிடும்".

இந்தப்பூமியில் நீ இருக்கக் காரணம் என்ன என்பதை அறியவிரும்பினால், கடவுளுடன் ஆரம்பிக்கவேண்டும். உனக்கு உள்ளேயே நோக்குவதன் மூலம் உனது வாழ்வின் அர்த்தத்தை ஒருபொழுதும் கண்டுபிடிக்க முடியாது.

நீர் படைக்கப்பட்ட நோக்கத்தை எப்படிக் கண்டுபிடிப்பது? இதற்கு இரு வழிகள் மட்டுமே உள்ளன. அவை: ஊகங்கள், வெளிப்பாடுகள்.

கடவுள் எம்மை இருளில் விட்டுவிடவில்லை, விவிலியம் மூலமாக எமது வாழ்க்கையின் 5 நோக்கங்களை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். "வெளிப்படாமல் மறைபொருளாக இருக்கும் இறைஞானத்தைப் பற்றியே நாம் பேசுகிறோம்.... உலகம் தோன்றுமுன்னே கடவுள் திட்டத்தில் இருந்தது" (1கொரி 2:7). வாழ்வின் நோக்கத்தைக் கண்டுபிடிப்பதற்கு உலக ஞானத்தை தேடாது கடவுளின் வார்த்தைக்குச் செவிசாயுங்கள். "கடவுள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுள திட்டத்தின்படி அனைத்தையும் செயற்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப்பேற்றுக்கு உரியவரானோம்" (எபே 1:11).

கிறிஸ்துவுடன் உறவாடுதல் மூலம் நீர் யார் என்பதை அறிந்து கொள்வதுடன் உமது வாழ்வின் நோக்கத்தை கண்டு பிடிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31

# இறைவனின் உடனிருப்பு

இறைவன் நம்மீது கொண்ட பேரன்பையும் பாராமல், நாம் கொடுத்த துன்ப, துயர, வேதனைகள், சிலுவைச் சாவையும் தாங்கிக் கொண்டு நம்மோடு உடனிருந்து, நம்மை அழியாமல் காக்கும் உடனிருப்பின் சின்னமான, நற்கருணை ஆண்டவரின் இருப்பியலை உணர்ந்து கொள்ளும் வகையில் அவரது அன்பின் உடனிருப்பை சற்று சிந்திப்போம்.

இரண்டு உயிர்கள் அன்பில் இணைந்து ஒன்றை ஒன்று தொட்டு இணைந்திருப்பது உடனிருப்பாகும். அது வெறுமனே உடல்களின் அருகிருப்பு மட்டுமல்ல, மாறாக உள்ளங்களின் சந்திப்பு; உயிர்களின் அன்பின் தொடர்பு. தனக்குத் தானே போதும் எனும் சுய நிறைவைப் புறந்தள்ளி, ஓர் இதயம் இன்னொரு இதயத்தைத் தேடிவந்து, அதன் இன்ப துன்பங்களையும், வெற்றி தோல்விகளையும், சுகங்கள் சோகங்களையும் பகிர்ந்து, அவற்றின் பாதிப்புக்களுக்கு தன்னையும் ஆளாக்குவதே உடனிருப்பு.

உதாரணமாக கடலில் மழை விழுந்தபின் எந்தத்துளி மழைத்துளி என்று கேட்க முடியுமா? இது போன்றே கடவுளோடு நாம் சங்ககமாவதே உடனிருப்பு என்கிறோம். இதையே நம் இந்து சகோதரர்கள் கூறும் பரமாத்மாவோடு ஜீவாத்மா இரண்டறக் கலத்தல்.

உண்மையான உடனிருப்பில் ஒருவர் தனது தனித்துவத் தையோ அடுத்தவரின் தனித்துவத்தையோ அழிப்பதுமில்லை; இழப்பதுமில்லை. மாறாக, காலைக் கதிரவன் மொட்டுக்களைத் தொட்டு அவற்றை மலர வைப்பதுபோல், ஓர் ஆளுமை இன்னொரு ஆளுமையை மென்மையாகத் தொட்டு, அதற்கு உயிரூட்டி, உறுதிப்படுத்தி, வளமும் வலிமையும் சேர்த்து, வளர்ச்சியளிக்கும் வகையில் அன்புடன் அதன் அருகில் இருப்பதே உடனிருப்பு.

உடனிருப்பானது, மனித உறவை உறுதிப்படுத்து கின்றது; அவர்களது உயிர் வாழ்தலுக்கு அர்த்தம் தருகிறது. உள்ளங்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும், நினைவு களையும், கனவுகளையும் பகிர்ந்து கொள்ள உடனிருப்பு அவசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிறது. ஒவ்வொருவருடைய இயல்பான இருப்பியல் சார்ந்த தனிமை உணர்வுகளை நீக்கி, அவர்களது தனித்துவத்தை அது உறுதிப்படுத்துகிறது. நம் மகிழ்வுகளை இரட்டிப்பாகவும், துயர்களைப் பகிர்வதன் மூலம் அவற்றைக் குறைக்கவும் அது பயன்படுகிறது. நாம் அன்பு செய்கின்றவர்களின் உடனிருப்பு நம்முடன் இல்லையென்றால், மகிழ்வுதரும் விழாக்காலங்கள் கூட நமக்குச் கசந்து விடுகிறது. வாழ்வின் வெற்றிகள் நமக்கு வெறுமையாகி, தோல்விகளையும் நம்மால் தாங்கிக்கொள்ள இயலாமல் நமது வாழ்வே பொருளற்றதாகிவிடும்.

உண்மை உடனிருப்பாளரான இயேசுவைப் பற்றிப் பார்ப்போம். நமக்காகவே மனுவுருவெடுத்து, நமக்காகவே வாழ்ந்து, நமக்காகவே தமது தசைகளையும் இரத்தத்தையும் சிந்தி, நமக்காகவே இரவு பகல் பாராது காத்திருக்கும் இயேசுவின் உடனிருப்பின், அன்புருவின் அருளடையாளமே நம்முன் வீற்றிருந்து, நமக்கு அருள்பொழியக் காத்திருக்கும் நற்கருணை. நற்கருணையிலே, இயேசு ஆண்டவர் தன் முழுமையான ஆள் தன்மையுடன் நம்மோடு உடனிருக்கிறார்; நம்மைச் சந்திக்கிறார்; நம்மோடு உரையாடுகின்றார்; தமது இலட்சியத்தையும் விழுமியங்களையும் நமக்குத் தந்து, தம் சீடர்களாக இறை அரசின் ஈடுபாட்டில், முழு மனித வளர்ச்சி காண நம்மை அழைக்கிறார்; அதற்குத் தேவையான அருளையும் ஆற்றலையும் அவர் நமக்குத் தருகிறார்.

இயேசு நற்கருணையில் நம்மோடு இருப்பதன் முக்கிய நோக்கம், நமது ஆராதனைகளையும், துதிகளையும், பக்தியையும், பரிகார முயற்சிகளையும், பட்டாஸ் வெடிகளையும், ஒலிபெருக்கிப் பாடல்களின் அதிர்வுகளையும் பெறுவதற்கல்ல. அவை தேவைப்படுவது நமக்கே அன்றி அவருக்கு அல்ல. "எருசலேம் மகளீரே! நீங்கள் எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" (லூக் 23 : 28) என்று அன்று இயேசு கூறியது இன்று அதிகமாகவே பொருந்தும். இறைவனின் உடனிருப்பை மறந்து, நற்கருணை ஆண்டவரின் வல்லமையை, அவர் காட்டும் தூய வாழ்வின் பெறுமதியை உணராமல் திசைமாறிச் சென்று கொண்டிருக்கும் இளம் உள்ளங்களுக்கு விசுவாசம் மிக்க ஒவ்வொரு பெற்றோரும் உண்மையையும், நற்கருணை ஆண்டவரின் உடனிருப்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்த வேண்டும். சிறு வயதிலிருந்தே இதனை ஊட்டுவதன் மூலம் அவரது உடனிருப்பில், அவரது அன்பில், அவரது அரவணைப்பில் வாழ்வதை அவர்கள் உணர முடியும்.

ஆண்டவர் இயேசு நற்கருணையில் உடனிருந்து நம்மை நிறைவாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார். இன்றும் அவர் மக்களுக்கு அன்பு காட்டுகிறார்; ஆறுதல் அளிக்கின்றார்; அற்புதம் செய்கின்றார்; அதிசயம் செய்கின்றார்; பாவங்களை மன்னிக்கிறார்; பகிர்ந்து வாழவும், படித்தவர்களையும், பதவிகளில் இருப்பவர் களையும் பணிசெய்யவும் அழைக்கிறார். அதற்குரிய தம் ஆவியின் வல்லமையையும், அருளாற்றலையும் தருகிறார். எனவே நற் கருணையில் நிகழும் இயேசுவின் உடனிருப்பு செயலாற்றல் மிக்கது. அவரது இந்த மனநிலைகளை நாம் பெற்று, அவரது அருளாற்றலை அனுபவித்து, நம் உறவுகளோடு நம் உள்ளங் களை இணைத்து மனித சமூகத்தை அன்பால் புதுப்பித்து நிறை வாழ்வு பெறுவதே நாம் அவருக்குச் செய்யும் ஆராதனை, மன்றாட்டு போன்றவற்றின் முக்கிய நோக்கமாகும்.

கடவுளின் உடனிருப்பு ஆற்றல் இல்லாதவரைக்கூட ஆற்றல் படுத்தி, செயலூக்கம் கொடுக்கிறது. மோசே இறைவாக் கினர் ஆண்டவர் அழைப்புக்கு முன் தான் திக்குவாயன் என்று தயங்கியபோது ஆண்டவர் அவரிடம் "அஞ்சாதே! உன் வாயோடு வாயாக நான் இருப்பேன்" என்று தனது உடனிருப்பை அவருக்கு உணர்த்தி அவருக்குத் துணிவூட்டுகிறார். புதிய ஏற்பாட்டில் உயிர்த்த இயேசு தம் சீடர்களோடு உடனிருந்து, செயல்பட்டு இறைவார்த்தையின் வல்லமையை அருள் அடையாளங்களினால் உறுதிப்படுத்தி யதையும், சீடர்கள் இயேசுவின் உடனிருப்போடு துணிந்து செயல்பட்டதையும் நான்கு நற்செய்திகளிலும் நாம் காணலாம்.

பவுல் அடியார் இறை இயேசுவின் உடனிருப்பை ஆழமாக உணர்ந்து அனுபவித்ததனால், என்னை வலுப்படுத்தும் இறைவனைக் கொண்டு என்னால் எல்லாம் செய்ய முடியும் என்ற துணிவோடு செயல்படுவதையும் நாம் விவிலியத்தில் காணுகிறோம். "துணை இருந்தால் துணிவு வரும்" "தம்பி உடையான் சண்டைக்கு அஞ்சான்" என்பது பழமொழி. அதாவது யாராவது ஒருவர் துணைக்கோ உதவிக்கோ இருக்கும்போது அஞ்சாமல், கலங்காமல் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொள்ளலாம் என்பது மனித இயல்பு. மனித உடனிருப்பிலேயே இத்துணை வல்லமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றதென்றால், இறை உறவின் உடனிருப்பு எத்துணை வல்லமை பொருந்தியதாய் இருக்குமென்பதை நாம் உணர்வதில்லை. இத்தகைய உடனிருப்பின் வல்லமையால்தான், உடனிருப்பின் அனுபவத்தால்தான் சின்னஞ்சிறிய தாவீது பென்னம்பெரிய கோலியாத்தை, பேராயுதங்களுடன் நின்ற கோலியாத்தை ஒரு கல்லால் வீழ்த்தும் வல்லமையைப் பெற்றார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். புல்லையும் ஆயுதமாக்கும் வல்லமையைக் கொடுப்பதே இறைவனின் உடனிருப்பு என்பதை நாம் இன்றிலிருந்தாவது உணர்ந்து கொள்வோம். "ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு நிகழ்ந்த அரும், அடையாளங்களில் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்" (மாற் 16:20). சீடர்களுடன் அவர் உடனிருந்ததை விவிலியம் கூறுகிறது.

பாழ்வெளிப்பயணத்தில், மேகத் தூணாக, நெருப்புத் தூணாக, தொடர்ந்து வந்த இறை உடனிருப்பு பாழ் வெளிப் பயணத்துக்குத் துணிவூட்டியதை பழைய ஏற்பாட்டில் நாம் படிக்கிறோம். விவிலியம் கூறும் இறை உடனிருப்பின் செய்திகளை நாம் படித்தாலும், அவற்றை வெறும் கதைகளாகவும், சம்பவங்களாகவும் எண்ணிவிடுகிறோமே தவிர, அன்னை மரியாவைப்போல் இறைவார்த்தைகளை உள்ளத்தில் இருத்தி நாம் சிந்திப்பதுமில்லை, அனுபவமாக்குவதுமில்லை, உணர்வு பெறுவதுமில்லை. இதனால்தான் இறைவனின் உடனிருப்பை நாம் உதாசீனப்படுத்துகின்றோம். இன்றும் கூட இறைவனின் உடனிருப்புப் பற்றிய செய்தியை எத்தனைபேர் இறை உணர்வோடு உள்வாங்கிக் கொண்டிருக்கின்றோம்? நமது நடைமுறை வாழ்வைப் பார்க்கும்போது தூய யாக்கோப்பு குறிப்பிடுவதுபோல கண்ணாடியில் முகத்தைப் பார்த்தவர்போல ஆண்டவர் முன் நின்றுவிட்டு, அப்பாலே சென்றதும் தங்கள் முகத்தை தாங்களே மறந்துபோன மக்களாக நாம் மாறிவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இயேசுவின் உடனிருப்பை நாம் அனுபவிக்க வேண்டுமென்றால், அவர் நம்மோடு இருக்கிறார் என்னும் உறுதியான நம்பிக்கை நம்முள் ஆழமாக வேரூன்ற வேண்டும். இல்லையென்றால் ஆண்டவர் விரும்பும் உடனிருப்பின் நோக்கம் செயலற்றுப் போய்விடும். இதனையே வேதம் "செயலற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை" என்று குறிப்பிடுகிறது. எனவே, நற்கருணை ஆண்டவரின் உடனிருப்பை உணர்ந்த ஒவ்வொருவரும் நம் உள்ளங்களிலே அவர் குடியிருப்பதையும், வல்லமையோடு உடனிருப்பதையும் உணர்ந்தவர்களாய், நம்மை நற்கருணை ஆண்டவரின் மறுரூபங்களாக்கி அவர் நமக்கு எவற்றைச் செய்ய வேண்டுமென்று காட்டுகிறாரோ அவற்றை நாமும் செயல்படுத்தி, நமது உடனிருப்பைச் சமூகத்துக்குள் விதைக்க வேண்டும். இறையன்பினூடாகப் பிறரன்புப் பணியைச் செய்வதே இறைவன் தரும் உண்மையான கட்டளையாகும். இதனை உணர்ந்தவர் களாய் நம்மைப்போல் நம் அயலானையும் நேசிப்போம். ஏழை, எளியவர்களை அன்பால் அரவணைப்போம்; இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ்வோம்; துன்புறுவோரை ஆறுதல்படுத்துவோம்; செயலிழந்தோரை ஆற்றல்படுத்துவோம்; நீதிக்குக் குரல் கொடுப்போம். இவற்றையெல்லாம் நாம் செய்யும்போது இயேசு ஆண்டவரின் உடனிருப்பு, ஊக்கம் தரும் உடனிருப்பு, உயிரளிக்கும் உடனிருப்பு, ஆற்றல்படுத்தும் உடனிருப்பு, குணமளிக்கும் உடனிருப்பு, ஆறுதல் அளிக்கும் உடனிருப்பு, நம்மோடு கூட நடக்கும் உடனிருப்பு என்பதை நாம் ஆத்மரீதியாக உணர்ந்து கொள்ள முடியும். அனைத்திற்கும் மேலாக மேற் கூறப்பட்டவர்களோடு மனத்தால் இணைவோம். இன்று மனக்காயங்களோடு நடைப்பிணங்களாய் நடமாடுவோர் எண்ணி லடங்காத ஏராளம்! ஏராளம். எனவே, இத்தகைய மனக்காயங் களுக்குக் கட்டுப்போடுவோம். இந்த உண்மையை நம் உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்தவர்களாய் நாம் தேடிச் செல்லும், நம்மைத் தேடிக் காத்திருக்கும் நற்கருணை ஆண்டவரின் உடனிருப்பை முழுமையாக அனுபவிக்க முழு ஆசீர்வாதத்தோடும், ஆற்றலோடும் ஆண்டவருக்காக இதயங் களைத் திறந்து பங்கெடுப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலிலுள்ள

* இளைஞன் இயேசுவின் இறையரசுக் கனவுகள்
* இயேசுவின் உருவில் வளர்தல்
* இயேசுவின் பணியைத் தொடர்தல்

என்னும் ஆக்கங்கள் அருட்பணி தே.அல்போன்சுவின் கிறிஸ்தியல் தொடர்பான ஆக்கங்களின் தழுவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரின் ஏனைய ஆக்கங்கள்:
























ISBN 978-624-5500-00-0
9 786245 500000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அச்சகம், யாழ்ப்பாணம்.